

உன்னைக்
கரம் பிடித்தே...
கலைவாணி சொக்கலிங்கம்

# உன்னைக் கரம் பிடித்தே...

கலைவாணி சொக்கலிங்கம்

அறிவு நிலையம் பதிப்பகம்

எண். 32/107, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.

## நூல் குறிப்பு

| | |
|---|---|
| நூல் தலைப்பு | உன்னைக் கரம் பிடித்தே... |
| ஆசிரியர் | கலைவாணி சொக்கலிங்கம் |
| மொழி | தமிழ் |
| முதற் பதிப்பு | ஆகஸ்ட், 2011 |
| உரிமை | ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | 11.6 K.g. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | 1 × 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | 11 புள்ளிகள் |
| மொத்தப் பக்கங்கள் | 284 |
| பைண்டிங் | சாதா அட்டை |

**விலை: ரூ. 110.00**

வெளியிடுவோர் **அறிவு நிலையம் பதிப்பகம்**
எண். 32/107, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.

கணினி அச்சு மாதா பிரிண்டர்ஸ்,
சென்னை - 116. போன்: 9043558732

அச்சிட்டோர்: கே.வி.எஸ். ஆப்செட், சென்னை - 14.






# உன்னைக் கரம் பிடித்தே...

# உன்னைக் கரம் பிடித்தே...

## 1

எல்லாம் எனக்குள் இருந்தாலும்
என்னைத் தனக்குள் வைத்திருக்கும்
அன்னை மனமே என் கோவில்
அவளே என்றும் என் தெய்வம்!

'கடகட'வென ஓடிய தையல் இயந்திரத்தின் ஓசையில் உறக்கம் கலைந்து கண்களைத் திறந்தான் அமுதன். தூக்கம் கண்களை அழுத்த, சிரமமாய் விழிகளை விரித்துப் பார்த்தான்.

அறையில் எரிந்து கொண்டிருந்த விளக்கொளியில் கண்கள் கூச, கண்களைச் சுருக்கினான். சுற்றுப்புறம் இன்னும் இருட்டாகவே இருக்க, சுவரில் இருந்த கடிகாரத்தைப் பார்த்தான். விடியற்காலை நான்கு மணி.

கோபம் தொனிக்க சுவரோரமாய் திரும்பினான். மர ஸ்டூலில் அமர்ந்து கவனமாய் வேகமாய் துணியைத் தைத்துக்கொண்டிருந்தாள் மான்விழி.

அந்த அதிகாலை வேளையிலும் உறக்கம் கலைந்த கோலத்திலும் அழகாகத்தான் இருந்தாள். இடையிடையே நிமிர்ந்து அமர்ந்து முதுகை அழுத்துவதும் மீண்டும் தைப்பதுமாக இருந்தவளைப் பார்க்கையில் வெகுநேரமாய் தைத்துக்கொண்டிருக்கிறாள் என்பது புரிய, கோபம் தணிந்தவனாய் தங்கையை அழைத்தான்.

"மானு."

சட்டெனத் திரும்பினாள். கண்களில் லேசான கலக்கம் தோன்றியது. "அண்ணா! ஸாரிண்ணா. தூக்கத்தைக் கெடுத்திட்டேனா?"

"என்ன பண்றே நீ?"

"வந்து... கொஞ்சம் அவசரமா தைக்க வேண்டிய துணி..."

"அதுக்காக... இந்த நேரத்திலயா தைப்பாய்?"

"ஸாரிண்ணா."

"ஏற்கனவே பகல் முழுக்க ஹாஸ்பிடல் வீடுன்னு ஓய்வில்லாம அலையுற. நைட்டாவது கொஞ்சம் ரெஸ்ட் எடுக்க வேண்டாமா?"

"இல்லண்ணா! எதிர்வீட்டுப் பெண்ணிற்கு நாளை மறுநாள் கல்யாணமில்ல. இது முகூர்த்தப் புடவைக்கான பிளவுஸ். அதான் தைத்துக் கொடுத்திடலாம்னு..."

"ஏன் விடிஞ்ச பிறகு தைச்சா என்ன?"



"இல்லண்ணா. இன்னிக்கு ஹாஸ்பிடலுக்கு சீக்கிரம் போகணும்."

"ஏன்?"

"இன்னிக்கு வெளியே இருந்து பெரிய டாக்டர் வர்றாராம். அம்மாவ தரோவா செக் பண்ணிட்டு அம்மாவுக்கு என்ன ப்ராப்ளம்னு சொல்லிடுவாராம்."

"அம்மாவுக்கு என்ன ப்ராப்ளம்னு உனக்கோ எனக்கோ தெரியாதா? இதை அவர் வந்துதான் சொல்லணுமா?"

"இல்லண்ணா..."

"இதோ பார் மானு. அம்மா மேல எனக்கும் அக்கறை இருக்கு. ஆனா நீ பண்றது தேவையில்லாத வேலை."

"அண்ணா!"

"பார்க்கிற டாக்டர் எல்லாம் சொல்றதைத்தான் கேட்டோமே. திரும்பவும் ஏன் இப்படிச் செய்கிறாய்? இதுவரை ஆன செலவு என்ன தெரியுமா?"

கண்கள் கலங்க அண்ணனை ஏறிட்டாள். "அண்ணா! பெத்தவளுக்கு வைத்தியம் பார்க்கக் கணக்குப் பார்க்கிறியா?"

"உளறாதே மானு. அம்மா நமக்கு முக்கியம்தான். ஆனா அதைவிட முக்கியம் உன் கல்யாணம்."

"வேண்டாம். எனக்கு அம்மா இல்லாத கல்யாணம் வேண்டாம். எனக்கு அம்மா மட்டும் போதும்."

"மானு! சின்னக் குழந்தை மாதிரிப் பேசாதே. உன் கல்யாணத்திற்காக எத்தனை வருஷம் உழைச்சு நகை சேர்த்தேன். நீயானா அதை விற்று வைத்தியம் செய்கிறாயே. வெறுங்கழுத்தோடு உன்னை எந்த மாப்பிள்ளை ஏற்றுக் கொள்வான்?"

"அண்ணா! கல்யாணம் எப்பவேணா பண்ணிக் கலாம். பணத்தை எப்ப வேணா சம்பாதிக்கலாம். ஆனா அம்மா? அம்மாவை இழந்திட்டா எப்படிண்ணா மீட்க முடியும்?" - கண்கள் கசிந்தன.

"மானு! நீ ஏன் புரிஞ்சுக்க மாட்டேங்கிற? அம்மாவை... இனிமே... இனிமே ஒண்ணும் பண்ணமுடியாதும்மா."

"இல்ல. சரிபண்ணிடலாம். அம்மாவைப் பழையபடி மாத்திடலாம்னு டாக்டர் சொன்னார்."

"அவரும்தான் வருஷக்கணக்காச் சொல்லிட்டு இருக்கார்."

"நாமதாண்ணா தப்பு பண்ணிட்டோம். முதல்லயே கவனிச்சிருக்கணும். விட்டுட்டோமே!"

பெருமூச்சு விட்டான் அமுதன். "அப்பாவோட மரணம்தான் நம்ம எல்லாரையுமே முடக்கிப் போட்டிடுச்சே. பிறகெங்கே அம்மாவைக் கவனிக்க முடியும்?

பயந்து பயந்து அழுதிட்டு இருந்த உன்னைக் கவனிப்பேனா? இல்லை இடிஞ்சு போயிருந்த அம்மாவைக் கவனிப்பேனா? அடுத்த வேளை சாப்பாட்டுக்கு என்ன பண்றதுன்னு யோசிப்பேனா?" - அண்ணனின் வார்த்தையில் தெரிந்த வேதனை நெஞ்சைச் சுட்டது.

"நீதான் அண்ணா ரொம்பப் பாவம். எவ்வளவு ஆசையா காலேஜுக்குப் போன. ம்ப்ச்! எல்லாம் போச்சே! உடம்பு முழுக்க ஆயிலும் கிரீஸ் கரையுமா உன்னைப் பார்க்கும்போது என்னாலயே தாங்க முடியலியே. அம்மா ட்டும் சுயநினைவோட இருந்தா ரொம்ப வேதனைப் டிருப்பாங்க. இல்லண்ணா?"



"போனதைப் பத்திப் பேசி ஒரு பயனுமில்ல. இனி நடக்கிறதைப் பத்திப் பேசு." - அமுதனின் வார்த்தையில் விரக்தி தொனித்தது.

"அண்ணா! நமக்கு மட்டும் ஏன் சொந்தக்காரங்களே இல்ல?"

"அதெல்லாம் யாருக்குத் தெரியும். இதுவரை நம்ம வீட்டுக்கு யாருமே வந்ததில்ல. நாமும் எந்த உறவுக்காரங்க வீட்டுக்கும் போனதில்ல."

"நம்ம அப்பாவோட ஊர்ல ஒருத்தர்கூட டெத்துக்கு வரலியே!"

"நாம யாருக்கு சொல்லிவிட்டோம். பிறகெப்படித் தெரியும்? அம்மா நம்மகிட்ட யாரோட அட்ரஸையும் சொல்லல. தாத்தா பாட்டிகூட இல்லன்னுதான் சொல்வாங்க."

"ஒருவேளை அம்மாவோட கூடப்பொறந்தவங்க யாருமே இல்லியோ?"

"இருக்கலாம். அப்ப அதைப்பத்தி பேசி என்ன ஆகப் போகுது? இனிமே இந்த மாதிரி கண்ட நேரத்திலேயும் தைச்சு உடம்பைக் கெடுத்துக்காதே."

"சரிண்ணா."

"இந்த மிஷின் ஏன் இப்படிக் கத்துது?"

"கொஞ்சம் ரிப்பேரா இருக்குண்ணா... ஆயில் விட்டாலும் சத்தம் நிக்கல்ல."

"முதல்ல இதை விக்கணும்."

"ஏண்ணா?" - பதறினாள்.

"எந்த நேரம் இதில அம்மா உட்கார்ந்தாங்களோ தெரியல்ல. கடைசிவரை அம்மாவுக்கு ஓய்வே இல்லாமப் போச்சு. இப்ப நீ..."

"அண்ணா! இதுதான் நமக்கு நிறையநாள் சாப்பாடு போட்டிருக்கு."

"இப்பத்தான் நான் உழைக்கிறேனே. பிறகென்ன?"

"அண்ணா! நீயும்தான் எவ்வளவு கஷ்டப்படுறே. நானும் கொஞ்சம் ஹெல்ப் பண்ணலாம்னுதான் தைக்கிறேன்."

"அதெல்லாம் வேண்டாம். உடம்பு ரொம்ப இளைச்சுப் போயிட்டே? இந்த மாதிரி இருந்தா சீக்கிரமே வயசாகிட்ட மாதிரி இருக்கும். இப்பவே கண்ணுக்கு கீழே கருவளையம் விழுந்திருக்கு பார்."

"அது இருந்திட்டுப் போகட்டும். அண்ணா! இன்னிக்கு நீயும் என்னோட ஹாஸ்பிடலுக்கு வர்றியா?"

"எதுக்கு?"

"புது டாக்டர் என்ன சொல்றார்னு கேட்க வேண்டாமா?"

"இன்னிக்கு பத்து மணிக்குள்ள ரெண்டு பைக்கை சரிபண்ணிக் கொடுத்தாகணும். காலையில ஏழு மணிக்கே நான் கிளம்பிடுவேன்."

"அந்த டாக்டர் பதினோரு மணிக்குத்தான் வருவாராம்."

"மானு! நீ தேவையில்லாம ரிஸ்க் எடுக்கிற? எத்தனை டாக்டர் வந்து பார்த்தாலும் புதுசா ஒண்ணும் சொல்லப் போறதில்லை. பிறகெதுக்கு இப்படி அலைய வெக்கிற?"



"இல்லண்ணா! இவர் மனோதத்துவ நிபுணராம். எப்பேர்ப்பட்ட மன வியாதியையும் குணமாக்கிடுவாராம். நிறையப் படிச்சவராம்."

"சரி. உன் ஆசையை ஏன் கெடுப்பானேன்? நீ போயிட்டு வா!"

"நீ வரமாட்டியா?"

"நான் எதுக்கு அங்கே?"

"அண்ணா! என்னை விட நீ அஞ்சு வயசு பெரியவன். அம்மாவைப் பத்தி நிறைய கேள்வி கேட்கிறாங்கண்ணா. நீயும் கூட இருந்தா நல்லா இருக்கும்."

"சரி! நீ ஹாஸ்பிடலுக்குப் போ. டாக்டர் வந்ததும் எனக்கு போன் பண்ணு. நான் ஷெட்ல இருந்தே வந்திடறேன்."

"சரிண்ணா. நீ தூங்கு. எனக்கு இன்னும் ஒரு பத்து நிமிஷ வேலைதான். முடிச்சுடுறேன்."

"சரி. ஒரு ஆறு மணிக்கு எழுப்பிவிட்டுடு."

"சரிண்ணா."

"மானு. அலமாரியில இரண்டாயிரம் ரூபா இருக்கு. உன் வளையலைத் திருப்பிடு."

"அதைப் பிறகு திருப்பிக்கலாம். நாளைக்கு ஹாஸ்பிடல்ல ஏதாவது செலவு இருக்குமேண்ணா!"

"கவர்மெண்ட் ஹாஸ்பிடல் தானே. என்ன செலவு உனக்கு?"

"வெளியிலயும் மருந்து எழுதித் தர்றாருண்ணா. அப்புறம் ஸ்கேன், அது இதுன்னு செலவு ஆகும்."

"சரி. அதுக்காக இனிமே இப்படியெல்லாம் நகைகளை அடமானம் வெக்காதே."

"ம்..."

"வீட்ல இருக்க வேண்டிய நகை அடகுக் கடைக்குப் போனா பிறகு வீட்லயே தங்காது."

"சரிண்ணா. இனிமே வெக்கமாட்டேன்."

"முடிஞ்சவரை பார்ப்போம். இல்லண்ணா வீட்டுக்குக் கூட்டிட்டு வந்திடுவோம். சரியா?"

மான்விழியிடம் பதில் இல்லை. தங்கையை ஏறிட்டான்.

"என்ன மானு?"

"அம்மாவுக்கு எப்படியும் சரியாகிடும்ண்ணா. எனக்கு அந்த நம்பிக்கை இருக்கு."

"சரியானா சந்தோஷம்தான்."

"சரிண்ணா! நீ தூங்கு. டாக்டர் என்ன சொல்றாருன்னு பார்த்துச் செய்யலாம்."

"ம்..." - என்றவாறே படுத்துக் கொண்டான் அமுதன். நேரம் ஐந்து மணியைக் கடந்திருந்தது. இனித் தூங்க முடியாது. சரிந்து படுத்தவாறே தங்கையைப் பார்த்தான்.

கவனமாய் அந்தப் பட்டுத் துணியைத் தைத்துக் கொண்டிருந்தாள். கொழுகொழுவென்று இருந்த கன்னங்கள் கொஞ்சம் வற்றிப் போயிருந்தது.

அம்மாவின் நிறத்தையும் அழகையும் அப்பாவின் உயரத்தையும் அப்படியே கொண்டிருந்தாள். கருகருவென சற்றுப் பெரிய விழிகள்.



அது அவளது அழகை இன்னும் கூட்டியது. அப்பாவே ரசித்து வைத்த பெயர். அவளது கண்களுக்கு வெகு பொருத்தமான பெயர். அப்பாவிற்கு மான்விழியின் மீது கொள்ளைப் பிரியம்.

தன் தாயே தனக்கு மகளாய் பிறந்திருக்கிறாள் என நூறு முறை சொல்வார். தன் தங்கத்தைத் தரையில் விடக்கூடாது என முழு நேரமும் தோளில் மார்பில் சுமந்து கொண்டே திரிவார்.

இப்போது அந்தத் தங்கம் இளைத்து உருமாறிப் போய்விட்டது. தந்தையைப் பறிகொடுத்து, தாயை நெருங்க முடியாமல் பயந்து பதறி இன்று எப்படியாவது தாயைக் குணமாக்கியே தீருவேன் என்று முனைப்புடன் மருத்துவமனையிலேயே பழியாய்க் கிடக்கிறாள்.

எப்போது சாப்பிடுகிறாள் எப்போது உறங்குகிறாள் என்று தெரிவதில்லை. பகல் முழுக்க ஒர்க் ஷாப்பில் வண்டிகளைப் பழுது பார்ப்பதும் புதுப்பிப்பதுமாக தன் வேலை முடிந்து வீடு வந்து படுத்தால் மறுநாள் விடியும்வரை எழ முடிவதில்லை.

இவளும் ஓய்வே இல்லாமல் உழைக்கிறாள். இந்த வீட்டில் சிரிப்புச் சத்தம் கேட்டு எத்தனை ஆண்டுகள் ஆயிற்று? அப்பா போகும்போது இந்த வீட்டின் சந்தோஷம் சிரிப்பு எல்லாவற்றையுமே கொண்டு போய் விட்டாரோ!

அம்மாவும்தான் எப்படி முடங்கிப் போனாள். சிட்டுக் குருவியைப் போல் வீட்டிற்குள்ளே பறந்து திரிந்து கொண்டிருந்த அம்மாவின் சிறகுகளை யார் முறித்தது? அப்பாவையும் குழந்தைகளையும் கண்ணாய் பார்த்துக் கொண்டவள் அம்மா.

இப்போது ஒரு கண்ணை இழந்ததில் மற்ற கண்ணை மறந்தே விட்டார்களா? எப்படி முடிந்தது? ம்ஹூம். உயிராய் நினைத்த கணவனை தன் கண் முன்னே நடந்த விபத்தில் பறிகொடுத்தவளால் எப்படி மீள முடியும்?

வழக்கம் போல் வேலைக்குச் செல்பவர் அன்று என்ன நினைப்பில் சாலையைக் கவனியாமல் கடந்தார்? அவசரமோ ஆத்திரமோ படுபவரில்லை அப்பா.

பிறகேன் அன்று அத்தனை அவசரப்பட்டார். அன்று தன்னைப் பெற்றவர்களின் திருமண நாள். அம்மாவிற்காக அப்பா எடுத்திருந்த புதுப்புடவை கூட தன் உடல் முழுக்க அப்பாவின் உதிரத்தைப் பூசிக் கொண்டிருந்தது.

முழுதாய் எட்டு வருடம் ஆனபின்பும் இன்னும் அந்தக் காட்சியைத் தன்னாலே மறக்க முடியவில்லை. ஆனால் சாலையின் மறுபுறம் நின்றிருந்த அம்மா, தன் ஆருயிர் கணவன் லாரியின் அடியில் சிக்கிச் சிதைந்ததை எப்படி மறப்பாள்?

அம்மாவைப் பார்த்த உற்சாகத்தில்தான் அப்பா சாலையைக் கவனிக்க மறந்தாரா? இல்லை... இதுதான் விதியா? திருமண நாளன்று தன் அன்பு மனைவியின் கண் முன்னே உருக்குலைந்து உயிரை விடவேண்டும் என அப்பாவின் தலைவிதி எழுதப்பட்டிருந்ததோ?

இன்றுவரை அப்பா இறந்து போனதை அம்மா நம்பவே இல்லை. வேலைக்குப் போனவர் இன்னும் வரவில்லையே என்ற எதிர்பார்ப்போடு வாசலைப் பார்ப்பதும், சமைத்த சாப்பாட்டைப் பரிமாறிவிட்டு, மணிக் ணக்காய் அமர்ந்து காத்திருப்பதையும் பார்க்கையில் தலில் வித்தியாசமாய்ப் படவில்லை.



அதோடு அறியாத வயதில் தந்தையைப் பறிகொடுத்து படிக்கவும் வழியின்றி தங்கையையும் தாயையும் காப்பாற்றியே ஆகவேண்டிய கட்டாயத்தில் திணறிக் கொண்டிருந்த நேரம் அது.

அதனால் தாயின் செயல்பாடுகளைக் கவனமாய் பார்க்க முடியாமல் போனது. அதுதான் வினையாகியது. நாளடைவில் தன் கணவனைக் காணாத வருத்தம் மற்றவர்கள் மீது கோபத்தையும் வெறுப்பையும் கொட்ட வைத்தது.

முதலில் பிள்ளைகளிடம்... பிறகு வீட்டிற்கு வரும் அக்கம் பக்கத்தினர்களிடம் என அதிகரித்து, பிறகு யாரையுமே காண விடுவதில்லை அம்மா. தெருவில் உள்ளவர்கள் தங்கள் கோபத்தை அமுதனிடம் காட்ட ஆரம்பித்த போது தான் அமுதன் தாயின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தான்.

அதற்குள் பார்வதி சுத்தமாய் மாறிவிட்டிருந்தாள். தன் பிள்ளைகளையே அடையாளம் தெரியாமல் போயிருந்தது. பிள்ளைகள் நெருங்கினாலே எரிந்து விழுந்தாள்.

என்ன பேசுகிறோம்... எதற்காகக் கோபப்படுகிறோம் என சிந்திக்கும் திறனை மொத்தமாய் இழந்திருந்தாள்.

தினமும் ஏதாவது ஒரு காரணத்தை வைத்து கண்ணில் படுபவர்கள் அனைவரையும் திட்டித் தீர்த்தாள். அக்கம் பக்கத்தவரின் அறிவுறுத்தலாலும் அச்சுறுத்தலாலும் தாயை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றான்.

அனைத்து மருத்துவர்களும் கேட்ட ஒரே கேள்வி, இத்தனை நாட்களாய் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்? என்பதுதான்.

ஒருவர் மாற்றி ஒருவராய் பார்த்ததில் புதுப்புது மாத்திரை மருந்துகள் மாறியதே தவிர பார்வதியிடம் பெரிதாய் மாற்றம் தெரியவில்லை.

"எத்தனை நாள்தான் பைத்தியத்தை வீட்ல வெச்சிருப்ப? எங்கேயாவது மென்ட்டல் ஹாஸ்பிடல்ல சேர்த்து விடுப்பா. அவங்க பார்த்துப்பாங்க" – என்றவர்களிடம் சண்டைக்குப் போனாள் மான்விழி.

"பார்த்தியா? ஆத்தாளோட சேர்ந்து புள்ளைக்கும் என்னவோ ஆயிடுச்சு. அமுதன்! எங்களுக்காக இல்லேன்னாலும் உன் தங்கைக்காக்வேணும் உன் அம்மாவை நல்ல ஆஸ்பத்திரியாப் பார்த்துச் சேர்த்திடு."

"இல்லேன்னா உன் தங்கையும் இப்படியே ஆகிடுவா!" – என ஒருவர் மாற்றி ஒருவராய் சொன்னதும், மனமே இன்றி மனநல மருத்துவமனையில் கொண்டு சேர்த்து விட்டான்.

அழுது ஆர்ப்பாட்டம் செய்தாள் மான்விழி.

அன்றிலிருந்து இன்று வரை நடையாய் நடக்கிறாள். கோவில் கோவிலாய் ஏறி இறங்குகிறாள்.

ஆனால் இன்று வரை அன்னையின் நிலையில் எந்த மாற்றமும் இல்லை.

அதையே காரணம் காட்டி திருமணப் பேச்சைத் தட்டிக்கொண்டே போகிறாள். பெருமூச்சுடன் எழுந்து கொண்டான்.

அம்மா எப்போது குணமாவது? இவள் எப்போது மணம் முடிப்பது? இந்த வாழ்க்கையில் விடிவு பிறக்குமா?



## 2

இது குழந்தை பாடும் தாலாட்டு
இது இரவு நேர பூபாளம்
இது மேற்கில் தோன்றும் உதயம்
இது நதியில்லாத ஓடம்!

கலைந்த தலையோடு சுவரோரமாய் அமர்ந்திருந்த தாயை நெருங்கினாள் மான்விழி. சாப்பாட்டுக் கூடையை ஓரமாய் வைத்துவிட்டு அன்னையின் கூந்தலை ஒதுக்கி விட்டாள்.

திடுக்கிட்டு நிமிர்ந்த பார்வதி மகளைக் கண்டு ஒதுங்கினாள். கைகளைத் தட்டிவிட்டு கோபமாய் எழுந்து கட்டிலில் அமர்ந்தாள். வேதனை படிந்த முகத்தோடு தாயை நெருங்கி அவளது கூந்தலை ஒதுக்கிப் பின்னலிட்ட மான்விழியின் கண்களில் நீர் சுரந்தது.

கருகருவென இடைவரை நீண்டு அடர்த்தியாய் இருந்த அன்னையின் சுருள் கேசம் இப்போது நிறையக் கொட்டியிருந்தது. பாதிக்கு மேல் வெளுத்திருந்தது.

எப்போதும் படிய வாரி தலையில் பூவோடு காட்சியளித்த கூந்தல் கலைந்து காற்றிலாடி சிக்கல் பிடித்துப் போயிருந்தது. மெதுவாய் வலிக்காமல் விரல்களால் கோதிப் பின்னலிட்டு முடித்தாள்.

"அம்மா! சாப்பாடு கொண்டு வந்திருக்கேன் சாப்பிடுறியாம்மா?" தாயின் முகத்தைப் பற்றியவாறே கேட்டாள் மான்விழி. கோபமாய் முகத்தைத் திருப்பி கொண்டாள் பார்வதி.

"ஏம்மா! எம்மேல என்ன கோபம்?"

"முதல்ல வெளியே போ. இங்க எதுக்காக வந்தே?" - முகத்தைக் கடுப்பாய் வைத்துக் கொண்டாள் பார்வதி.

"அம்மா! நான் உம் பொண்ணும்மா!"

"இல்ல. எனக்கு யாரும் கிடையாது. நீ போ!"

"அம்மா! ஏம்மா இப்படிப் பேசுற? சாப்பிடும்மா."

"அதான் வேண்டாம்னு சொல்றேனில்ல. எம்மேல உனக்கு என்ன அக்கறை? நீ யாரு?"

"நான் மானும்மா. உன் பொண்ணம்மா" - கண்ணீரோடு சொன்ன மகளை உற்றுப் பார்த்துவிட்டு, எதையோ சிந்தித்தாள். பிறகு மறுப்பாய் தலையை அசைத்தாள்.

"இல்ல. நீ எனக்கு ஊசி போடத்தான் வந்திருக்க. நான் கையைத் தரமாட்டேன். போ."

"இல்லம்மா... நான்..."

"போடி வெளியே. ஏன் என்னை எல்லோருமா சேர்ந்து சித்திரவதை பண்றீங்க? போ. போயிடு. என்னைத் தனியா இருக்க விடு. போ." - வெறி வந்தாற்போல் மகளைப் பிடித்துத் தள்ளினாள் பார்வதி.

தடுமாறி விழப்போனவளை அப்போதுதான் அறைக்குள் நுழைந்து கொண்டிருந்த மருத்துவர் பிடித்துக் கொள்ள, கூடவே வந்த நர்ஸ் அதட்டினாள்.

"பார்வதிம்மா! என்ன பண்றீங்க? இவங்க உங்க பொண்ணு."

கோபமாய் நிமிர்ந்த பார்வதி வரிசையாய் ஆண் மருத்துவர்கள் வருவதைக் கண்டதும் புடவைத் தலைப்பால்



போர்த்திக் கொண்டு அமைதியாய் தரையில் அமர்ந்து கொண்டாள்.

"மிஸ் மான்விழி. ஆர் யூ ஓ.கே." - கேட்ட மருத்துவரிடம் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டாள்.

"எனக்கு ஒன்னும் இல்ல டாக்டர். அம்மா இன்னிக்கு ஏன் இவ்வளவு கோபமா இருக்காங்க டாக்டர்?"

"காரணம் புரியல்ல. பட் இன்னிக்கு மார்னிங் டாக்டர் ஷ்யாம் வந்தபிறகு செக்-அப் ரூமுக்கு கூட்டிட்டுப் போனோம். அப்போ இருந்தே இப்படித்தான் இருக்காங்க."

"புது டாக்டரா டாக்டர்?"

"யா... மீட் மிஸ்டர் ஷ்யாம் ராகவ். நேற்று சொன்னேனே..." - என அருகே வந்து நின்ற இளம் மருத்துவரை அறிமுகப்படுத்தினார் டாக்டர் சுரேஷ்.

"வணக்கம் டாக்டர்."

"வணக்கம். நீங்கதான் இந்த அம்மாவோட பொண்ணா?"

"ஆமா டாக்டர்."

"கூட யாரும் வரவில்லையா?"

"டாக்டர்..."

"வீட்ல பெரியவங்க யாரும் இல்லியா?"

"இல்ல டாக்டர். அப்பா இல்ல. அண்ணன் மட்டும் தான்."

"அவரையும் கூட்டிட்டு வந்திருக்கலாமே!"

"போன் பண்ணிட்டேன் டாக்டர். இப்ப வந்திடுவார். என்ன டாக்டர், எதுவும் பிரச்சனையா? அம்மாவை செக்-அப் பண்ணிட்டீங்களா?"

"ம்... எல்லா டெஸ்ட்டும் பண்ணியாச்சு."

"டாக்டர்... அம்மாவுக்கு குணமாகிடுமில்ல?" – தயக்கமாய் ஆவலாய்க் கேட்ட பெண்ணைப் பார்த்துப் புன்னகைத்தான் ஷ்யாம்.

"உங்க அம்மாவுக்கு எந்த நோயும் இல்ல."

"டாக்டர்?"

"யெஸ்! மனசளவில பாதிக்கப்பட்டிருக்காங்க. அவங்க மனசு விட்டுப் பேசிட்டாலே போதும். எல்லாம் சரியாகிடும்."

"டாக்டர்!"

"நான் கேட்கிற கேள்விக்கு நீங்க முதல்ல பதில் சொல்லுங்க."

"கேளுங்க டாக்டர்!"

"மார்னிங் நான் உங்க அம்மாவைப் பார்க்கும் போது ரொம்ப அமைதியா இருந்தாங்க. நல்லாப் பதில் சொன்னாங்க. செக்-அப் ரூம்ல உள்ள காலண்டரைப் பார்த்த பிறகுதான் அவங்க பார்வை, பேச்சு எல்லாமே மாறிப்போச்சு."

புருவம் சுருக்கினாள் மான்விழி. "ஏன்? அதுல என்ன இருந்தது?"

"ம்ப்ச்! நோ ஐடியா. நீங்கதான் பார்த்துச் சொல்லணும்."

"எங்கே இருக்கு அந்தக் காலண்டர்?"

ஷ்யாம் பக்கவாட்டில் திரும்பினான். "சிஸ்டர்! அதை எடுத்திட்டு வாங்க!"

"எஸ் டாக்டர்!" – என்றவாறு நர்ஸ் விலகிவிட, பார்வதியை நெருங்கினர்.



"பார்வதிம்மா, சாப்பிட்டீங்களா?"

பதிலில்லை. மௌனமாய் எங்கோ பார்த்துக் கொண்டிருந்தாள். மான்விழியிடம் திரும்பினான் ஷ்யாம்.

"உங்களைக் கூட நினைவில்லையா?"

"ம்ஹும். ஆனா சாப்பாடு கொடுத்தா தலைவாரிவிட்டா அமைதியா இருப்பாங்க. இன்னிக்குத்தான் இப்படி..." – சொல்லிக்கொண்டிருக்கும்போதே கையில் சிறிய காலண்டரோடு வந்து நின்றாள் நர்ஸ்.

மான்விழி சற்று குழப்பமாய் அதைக் கையில் வாங்கிப் பார்த்தாள். எந்த சாமி படமும் இல்லாத காலண்டர். ஏதோ மெடிக்கல் விளம்பரம் மட்டுமே இருந்தது.

இதைப் பார்த்து அம்மா ஏன் டென்ஷனாக வேண்டும் என்று குழப்பமாய் பார்வையைக் கீழே இறக்க, விழிகள் விரிந்தது. முகம் பலவித பாவனைகளைக் காட்ட, டாக்டர் ஷ்யாம் அவளை நெருங்கினான்.

"என்னாச்சு? ஏதாவது தெரிஞ்சதா?" – குரலில் ஆர்வம் தொனித்தது.

"டாக்டர்! டாக்டர்... இன்னிக்கு ஜூன் ஒன்பது..."

"யா..."

"இது... என் பேரண்ட்ஸோட திருமண நாள்!"

"ஈஸிட்?"

"யெஸ் டாக்டர்."

"வெரிகுட். அப்போ உங்க அம்மாவோட ஞாபகங்கள் சுத்தமா மறந்து போகல்ல. அவங்களோட நினைவடுக்குகள் உலர்ந்து போகல்ல."

"அம்மா இந்த நாளை மறக்க மாட்டாங்க டாக்டர்..."

"கண்டிப்பா. யாருமே தன்னோட திருமண நாளை மறக்கிறதில்லையே."

"இல்ல டாக்டர். இது என் அம்மாவோட திருமண நாள் மட்டுமில்ல..." - இறுகிய குரலில் மான்விழி சொல்ல, புரியாமல் பார்த்தான் ஷ்யாம்.

"பின்னே?"

"என் அப்பாவோட இறந்த நாளும் இன்னிக்குத் தான்."

"என்ன?" - லேசாய் அதிர்ந்தான்.

"யெஸ் டாக்டர். வெட்டிங் டே அன்னிக்கு எங்க அம்மா கண் முன்னால நடந்த விபத்திலதான் என் அப்பா இறந்தாங்க."

"மை காட்" - என அதிர்ந்தவன் தன் அருகிலிருந்த மருத்துவரிடம் திரும்பினான்.

"டாக்டர் சுரேஷ். எனக்கு இந்த அம்மாவோட மெடிக்கல் ரிப்போர்ட் வேணும். எல்லா ரிப்போர்ட்டும்..."

"ஷ்யூர் டாக்டர்."

"ஓ.கே. மிஸ்... மிஸ்..."

"மான்விழி" - மென்மையாய் சொன்னவளை வியப்பாய் பார்த்தான் ஷ்யாம்.

"வித்தியாசமான பெயர்."

"என் அப்பா வைத்தது."

"நைஸ் நேம். ஓ.கே. மிஸ் மான்விழி. நீங்க உங்க பிரதர் வந்ததும் எங்க கேபினுக்கு அழைச்சிட்டு வாங்க. நிறைய பேசணும்."



"சரி டாக்டர்."

"நர்ஸ். இந்த அம்மாவுக்கு வழக்கமாக் கொடுக்கிற டோஸ் போடுங்க. இன்னும் ஒன் அவர் கழிச்சு பார்த்திட்டு செக் பண்ணிடலாம்."

"ஓ.கே. டாக்டர்."

"மிஸ் மான்விழி. உங்க அம்மாகிட்ட இப்ப எதுவும் பேசவேண்டாம்."

"டாக்டர்..."

"இப்ப அவங்களுக்குத் தேவை அமைதி. அந்த அமைதிதான் அவங்க ஞாபகங்களை மேலே கொண்டு வரும்."

"சரி டாக்டர்."

"தட்ஸ் குட். சுரேஷ்! போலாமா?" - என்றவாறு அறையை விட்டு வெளியேறுகையில், வியர்த்த உடம்போடு வந்து சேர்ந்தான் அமுதன்.

"அண்ணா! ஏண்ணா லேட்டு?"

"கொஞ்சம் டயமாயிடுச்சும்மா. ஸாரி டாக்டர்."

"டாக்டர்! இவர் என் அண்ணன். பேரு அமுதன்" - மான்விழி அறிமுகம் செய்ய, இயல்பாய் புன்னகைத்தான் ஷ்யாம்.

"மிஸ்டர் அமுதன்! ப்ளீஸ் கம்" - என்றவாறு முன்னே நடக்க, அண்ணனும் தங்கையும் பின்தொடர்ந்தனர். முகங்களில் கலவரம் தெரிந்தது.

தங்கள் அறைக்குள் நுழைந்ததும் இருக்கையில் அமர்ந்தவாறே மற்றவர்களையும் அமரச் சொன்னான் மலர்விழியைப் பார்த்துப் புன்னகையோடு,

"நீங்க கொஞ்சம் வெளியே வெயிட் பண்ணுங்களேன்" - என்றதும் முகம் மாறினாள்.

"ஏன் டாக்டர்?"

"நாங்க கொஞ்சம் பேசணும்."

"நானும் இருக்கேனே!"

"இல்லம்மா. நீங்க சின்னப் பொண்ணா இருக்கீங்க. உங்களைப் பார்த்தா எதுவும் சொல்ல முடியாது."

"எதுவா இருந்தாலும் சொல்லுங்க டாக்டர். எங்கிட்ட எதையும் மறைக்க வேண்டாம். ப்ளீஸ் டாக்டர்" - தங்கையின் கெஞ்சுதல் அமுதனை அசைத்தது.

"டாக்டர்! நாலு வருஷமா என் அம்மாவை மானுதான் பார்த்துக்கிறா. எதுவா இருந்தாலும் பரவாயில்ல. அவளையும் வெச்சிட்டே சொல்லிடுங்க டாக்டர்."

ஷ்யாம் தோளைக் குலுக்கினான். "ஓ.கே. ஒரு பைவ் மினிட்ஸ் வெயிட் பண்ணுங்க. சுரேஷ்! அந்த அம்மாவோட ரிப்போர்ட் கேட்டேனே!"

"இதோ டாக்டர்" - என நீட்டிய பைலை வாங்கி மேலோட்டமாய்ப் பார்த்தான். சில இடங்களில் திரும்பவும் பார்த்து நிதானமாய் வாசித்து விட்டு நிமிர்ந்தான்.

"மிஸ்டர் அமுதன்!"

"சொல்லுங்க டாக்டர்!"

"உங்க அம்மாவுக்கு எப்போ இப்படி ஆச்சு?"

"டாக்டர்! ஏழெட்டு வருஷம் முன்னாடி என் அப்பா இறந்த விபத்தை அம்மா நேர்ல பார்த்தாங்க. அப்பவே இந்தப் பாதிப்பு ஏற்பட்டதா டாக்டர் எல்லாம் சொல்றாங்க. பட்.



எங்களுக்குத்தான் அது தெரியாம இருந்திருக்கு. எப்படியோ கவனிக்காம விட்டுட்டோம்."

"ஏன் வீட்ல பெரியவங்க யாரும் இல்லையா?"

"அப்படியெல்லாம் யாரும் இல்லை டாக்டர்!"

"உங்க அப்பாவோட பாடியைப் பார்த்திட்டு உங்க அம்மா அழுதாங்களா?"

"இல்ல டாக்டர். போஸ்ட் மார்ட்டம் முடிஞ்சு வீட்டுக்கு வந்து பத்து நிமிஷம் கூட வெக்கலே. உடனே எடுத்திட்டாங்க. அம்மா அப்போ மயக்கத்திலேதான் இருந்தாங்க. அப்பாவைப் பார்க்கவே இல்ல."

ஷ்யாம் யோசனையாய் நெற்றியைத் தேய்த்தான். "தப்பு பண்ணிட்டீங்க அமுதன். உங்க அம்மாவைப் பார்க்க வெச்சிருக்கணும். கதறியழ வெச்சிருக்கணும். உங்க அம்மா அன்னிக்கே வாய்விட்டு அழுதிருந்தா இப்போ இந்த நிலைமை வந்திருக்காது."

அமுதனின் கண்கள் கசிந்தன. "டாக்டர்! அப்பா திடீர்னு போயிட்டதால நாங்க நிலைகுலைஞ்சு போயிட்டோம். இவளுக்குப் பதினைஞ்சு வயசு. நான் அப்பத்தான் காலேஜ்ல சேர்ந்திருந்தேன். எங்களுக்கு அழ மட்டும்தான் தோணிச்சு. வேறு எதுவும் தெரியாது. எல்லாம் அக்கம்பக்கம் உள்ளவங்கதான் செய்தாங்க. அப்பாவோட கடைசிக் காரியம் முடியுற வரைக்கும் அம்மாவைப் பார்க்கவே முடியல்ல."

"உங்க தாத்தா பாட்டி ரிலேஷன்னு யாரும்..."

"இல்ல டாக்டர். நாங்க பொறக்கும் முன்னாடியே தாத்தா பாட்டி இறந்திட்டாங்களாம்."

"ஓ.கே. உங்க அம்மாவை எப்போ கவனிச்சுப் பார்த்தீங்க?"

"அப்பா போனபிறகு அம்மாவோட பேச்சு சுத்தமா நின்னுபோச்சு. வருத்தத்தில இருக்காங்கன்னு அவங்களை தொந்தரவு பண்ணாம எங்க வேலையை நாங்களே செய்துப்போம். அம்மாவை வற்புறுத்தி சாப்பிட வைப்போம். பிறகு பக்கத்து வீட்டு ஆயாகிட்ட சொல்லிட்டு நான் வேலைக்கும் இவ ஸ்கூலுக்கும் கிளம்பிப் போயிடுவோம். கொஞ்ச நாள் கழிச்சுதான் அம்மாவோட நடவடிக்கைகள் வித்தியாசமாப் பட்டது."

"வித்தியாசம்னா, எப்படி?"

"அம்மாவே சமைச்சாங்க. அப்பா எங்கே உட்கார்ந்து சாப்பிடுவாங்களோ அந்த இடத்தில சாப்பாட்டை எடுத்த வெச்சிட்டு வாசலைப் பார்த்திட்டு வெயிட் பண்ண ஆரம்பிச்சாங்க."

"ஓ...!"

"அப்புறம் அப்பாவோட போட்டோவில உள்ள மாலையைக் கழட்டி வீசிட்டு எங்ககிட்ட சண்டை போட ஆரம்பிச்சிட்டாங்க."

"ஏன்?"

"தன் புருஷனோட போட்டோவில எப்படி மாலை போடலாம்னு திட்டித் தீர்த்திட்டாங்க. தன்னோட தாலியைக் காணோம்னு சொல்லி அழுதாங்க" - சின்ன விசும்பலோடு அமுதன் சொல்ல, வேதனையாய் கண்களை மூடிக் கொண்டான் ஷ்யாம்.

சில கண நேர அமைதிக்குப் பின் பெருமூச்சோடு கண்களைத் திறந்தான்.



"ஸோ! உங்க அப்பா இறந்ததை உங்க அம்மா - ஐ மீன் அவங்க மனது, மூளை ஏத்துக்கல்ல இல்லியா?"

"ஆமா டாக்டர்!"

"இப்போ அதுதான் பிரச்சனை. தன் கணவர் இறந்துட்டார்ன்னு உணர்ந்து உங்க அம்மா அழுதாப் போதும். அவங்க பழைய மாதிரி ஆயிடுவாங்க. மத்தபடி அவங்களுக்கு எந்த நோயும் இல்ல. ஆனா..." - என அவன் தயங்க, இருவரும் கலக்கமாய் நிமிர்ந்தனர்.

## 3

தாய்விழி அழுதால் - சூரியன்
அழுமே பாறையும் நீர்
கசிந்திடுமே அம்மாவே தெய்வம்
ஆகாய தீபம் தாய் சிந்தும்
கண்ணீர் நெஞ்சைச் சுடும்!

"டாக்டர்! என்ன ஆனா... ப்ளீஸ் சொல்லுங்க டாக்டர்!" அமுதனை முந்திக்கொண்டு பதட்டமாய்க் கேட்டாள் மான்விழி.

"இப்படியே விட்டா உங்க அம்மாவோட நினைவுகள் சுத்தமா மறைஞ்சிடும். அப்புறம் எதுவும் பண்ண முடியாது."

"டாக்டர்...!"

"யெஸ்! தான் யாருன்றதே அவங்களுக்கு மறந்திடலாம். இப்போ தன்னோட தேவைகளை செய்துக்கிற மாதிரி அவங்களால செய்ய முடியாது. நான் சொல்றது புரியுதா?"

"ம்..." - கண்ணீரோடு தலையசைத்தாள்.

"ஒரு டூ இயர்ஸ் பேபி மாதிரி பிஹேவ் பண்ண ஆரம்பிச்சுடுவாங்க. பசிச்சாக்கூட சொல்ல முடியாது. சாப்பாடு. குளியல்... மத்த தேவைகள் எல்லாமே செய்ய அவங்களுக்கு நீங்கதான் தேவைப்படும்."

"நோ டாக்டர். இல்ல... என் அம்மாவுக்கு அப்படி ஏதும் ஆகாது. ஆகக்கூடாது."

"அது உங்க கையிலதாம்மா இருக்கு."

"சொல்லுங்க டாக்டர். நாங்க என்ன பண்ணணும்? எதுவா இருந்தாலும் சொல்லுங்க."

"உங்க அம்மாவைப் பேச வையுங்க. நிஜத்தைப் புரிய வையுங்க. அப்பா உயிரோட இல்லன்றத உணரவையுங்க. கூட இருந்து பேசிட்டே இருங்க. மொத்தத்தில அவங்க அழணும். அந்த அழுகைதான் அவங்க மனசை அழுத்திட்டு இருக்கிற சோகம், வெறுப்பு எல்லாத்தையும் வெளியேற வைக்கும். அப்படி நடந்திட்டா அவங்க கம்ப்ளீட்டா குணமாகிடுவாங்க."

"டாக்டர் நாங்க எவ்வளவோ பேசித்தான் பார்க்கிறோம். பட், எங்ககூட பேச விரும்பாம ரூம்ல போய் கதவைப் பூட்டிக்கிறாங்க."

"ஐ ஸீ..." - சில கண நேர யோசிப்பிற்குப் பின் அமுதனை ஏறிட்டார்.

"மிஸ்டர் அமுதன்! உங்க அம்மாவோட சொந்த ஊர் எது?"

"அது... தென்காசிக்கு பக்கத்திலே ஏதோ கிராமம்னு சொல்வாங்க."

"குட். நீங்க அவங்க பிறந்த வீட்டுக்கு கூட்டிட்டுப் போங்களேன்."



"டாக்டர்."

"இங்கே ஒரே இடத்தில் அடைஞ்சு கிடக்கிறதை விட வெளி இடத்துக்கு அழைச்சிட்டுப் போறது ரொம்ப நல்லது. அதுவும் அவங்க பிறந்து வளர்ந்த இடமா இருந்தா இன்னும் பெஸ்ட்."

"டாக்டர்! நாங்க... இதுவரை அங்கெல்லாம் போனதே இல்லையே." தயக்கமாய் தங்கையை ஏறிட்டான்.

"ஏன்? உங்க பேரண்ட்ஸ் கூடப் போனதில்லையா?"

"இல்லை டாக்டர்."

"உங்க பேரண்ட்ஸ்கூடப் பொறந்தவங்க யாரும்...?"

"இருக்காங்களான்னு தெரியாது டாக்டர். எங்க வீட்டுக்கு யாரும் இதுவரை வந்ததில்ல."

"இட்ஸ் ஓ.கே. தென்காசி பக்கத்திலேதானே குற்றால அருவி இருக்கு. நீங்க ரிலேஷன் வீட்டுக்குன்னு போக வேண்டாம். ஜஸ்ட் ஒரு டூர் மாதிரி போயிட்டு வாங்க. குற்றாலம் பகுதியில நிறைய அருவி இருக்கு. எல்லாமே மூலிகைத் தண்ணீர். எவ்வளவு குளிச்சாலும் ஜலதோஷம் பிடிக்காது. அதோட மலை மேல இருந்து தண்ணீர் வர்றதால நிறைய வகை மூலிகை குணம் கொண்டது.

இப்பக்கூட கொஞ்சம் மனநலம் சரியில்லாதவங்களை அங்கே போய் குளிக்க வைப்பாங்கன்னு கேள்விப்பட்டிருக்கிறேன். மூளையைக் குளிரச் செய்யற சக்தி அந்தத் தண்ணிக்கு இருக்குதாம்."

"டாக்டர்! நீங்க சொல்ற ஊரைக் கேள்விப்பட்டிருக்கோம். ஆனா எப்படிப் போறதுன்னு கூடத் தெரியாது."

"என்ன அமுதன் நீங்க? யாதும் ஊரே யாவரும் கேளிர்ன்னு படிச்சதில்லையா நீங்க? இதோ இருக்கிற திருநெல்வேலிதானே. மொதல்ல திருநெல்வேலிக்குப் போங்க. அங்கே இருந்து தென்காசி, குற்றாலம், பாபநாசம் எல்லாமே பக்கம்தான்."

"சரி டாக்டர்."

"மிஸ்டர் அமுதன். நீங்க அங்கேதான் போகணும்னு சொல்லல. வெளியிடம் ஏதாவது ஹில் ஸ்டேஷன் போனாலும் சரி. உங்க வசதிப்படி போயிட்டு வாங்க. நாலு இடம் போனா புது மனுஷங்களை, இடங்களைப் பார்த்தா உங்க அம்மாகிட்ட மாற்றம் வரலாம். அவங்க பேச ஆரம்பிச்சிட்டாப் போதும். படிப்படியாக் குணமாக்கிடலாம். அதுக்காகத்தான் சொல்றேன்."

"நீங்க சொல்றது புரியுது டாக்டர். ட்ரை பண்றேன்."

"ஓ.கே. பாருங்க. மத்தபடி மெடிஸன்ஸ் அதிகம் தேவைப்படாது. ஸோ நீங்க எப்ப வேணா உங்க அம்மாவை டிஸ்சார்ஜ் பண்ணிக் கூட்டிட்டுப் போகலாம்."

அமுதன் தங்கையைப் பார்த்தான். "என்னம்மா சொல்றே?"

"ஒரு ரெண்டு நாள் போகட்டும் அண்ணா. நாம மத்த ஏற்பாடு எல்லாம் பண்ணிட்டு அப்புறமா அம்மாவைக் கூட்டிட்டுப் போலாம்."

"ஓ.கே. அப்போ நீங்க கிளம்புங்க."

அமுதன் எழுந்து கொண்டான். "டாக்டர்! இப்படி யெல்லாம் செய்தா அம்மாவுக்கு சரியாகிடுமா?"

"மிஸ்டர் அமுதன்! உங்க அம்மாவோட உடம்புல எந்த வியாதியும் இல்லை. மனசுதான் பாதிப்படைஞ்சிருக்கு.



அதுக்கு மருந்து தேவையில்ல. உங்க அன்பான கவனிப்பும் கனிவான பேச்சும்தான் முக்கியம். நம்பிக்கையோட போங்க. நம்பிக்கைதானே வாழ்க்கை.

அவங்க நினைவுகளைத் தட்டி எழுப்பினாப் போதும். பரிபூரணமாக் குணமாயிடுவாங்க."

"இதுக்கு முன்னால பார்த்த டாக்டர் எல்லாம், காலம் கடந்து போச்சு. அப்படி, இப்படின்னு சொன்னாங்களே!"

"அது தப்பு அமுதன். உங்க அம்மாவுக்கு இன்னும் நினைவுகள் மறையல."

"டாக்டர்..."

"யெஸ்! இன்னிக்குக்கூட காலண்டர்ல தேதியப் பார்த்துட்டு ரொம்ப நேரமா அப்செட்டா ஆயிட்டாங்க. உங்க சிஸ்டர்கிட்ட கூட கடுமையா நடந்துக்கிட்டாங்க."

"மானு...!"

"ஆமாண்ணா! இன்னிக்கு ஜூன் ஒன்பதண்ணா."

"வாட்? இன்னிக்கு நம்ம அப்பாவோட நினைவு நாளேச்சே!"

"அதோட உங்க பேரண்ட்ஸோட வெட்டிங் டேயும் தான்!"

"ஆமா டாக்டர்!"

"உங்க அம்மா இன்னும் அதை மறக்கல்ல. ஸோ! உங்க அம்மாவைத் தாராளமா குணப்படுத்திடலாம். டோண்ட் வொர்ரி." - ஷ்யாம் உறுதியாகச் சொல்ல, அமுதனின் முகம் மலர்ந்தது.

"தேங்க்யூ டாக்டர். தேங்க்யூ ஸோ மச்."

"இட்ஸ் ஓ.கே. சொன்னதெல்லாம் நினைவிருக்கட்டும். வெளியே அழைச்சிட்டு போகும்போது இதுக்கு முன்னால நடந்த சம்பவங்களையெல்லாம் பேசிட்டே இருங்க... சரியா?"

"சரி டாக்டர்."

"ஓ.கே. கிளம்புங்க. நான் மாதம் இரு முறைதான் இங்கே வருவேன். இது என்னோட போன் நம்பர். எதுவும் டவுட்னா ஹெல்ப் வேணும்ன்னா என்னைக் காண்டாக்ட் பண்ணுங்க." – என்றவாறே ஒரு அட்டையை நீட்டினான்.

"தேங்க்யூ டாக்டர். மானு போலாமா?"

"நீ வேலைக்குப் போண்ணா. நான் நைட் வரைக்கும் அம்மாகூட இருந்திட்டு வர்றேன்."

"சரி. அப்ப நான் கிளம்புறேன்." – என்றவன் மீண்டும் மருத்துவர்களிடமும் விடைபெற்றுக்கொண்டு வெளியேற, அண்ணனைத் தொடர்ந்து வந்தாள் மான்விழி.

"அண்ணா!"

"என்ன மானு?"

"ஈவ்னிங் வரும்போது அப்பா போட்டோவுக்கு ஒரு மாலை வாங்கிட்டு வர்றியா?"

"சரிம்மா. வேற எதுவும் பலகாரம் வாங்கணுமா?"

"வேண்டாண்ணா. படையல் போட்டப்புறம் நாமதானே சாப்பிடணும். அதெல்லாம் வேண்டாம்."

"சரி. நான் கிளம்பட்டுமா?"

"அம்மாவைப் பார்க்க வேண்டாமா நீ?"

"வந்த உடனே பார்த்திட்டேன் மானு. தூங்கிட்டு இருந்தாங்க. திரும்பத் திரும்ப அம்மாவை அந்தக்



கோலத்தில பார்க்க என்னால முடியல்ல." – அமுதனின் தொண்டை அடைத்தது.

"சரிண்ணா! நீ கிளம்பு. நான் பார்த்துக்கிறேன்."

"நைட் ரொம்ப லேட்டாக்கிடாதே மானு. சீக்கிரம் வந்திடு."

"சரிண்ணா..." – என்றவாறு அமுதன் போகும்வரை வெளியே நின்றவள், மனம் கனக்க தாயின் அறைக்குள் நுழைந்தாள்.

மருந்தின் உதவியால் அயர்ந்து தூங்கிக் கொண டிருந்தாள் பார்வதி. கை கழுத்து நெற்றி என அனைத்தும் வெறுமையாய் முகத்தில் அறைந்தது.

ஒவ்வொரு திருமண நாளின் போதும் அப்பா வாங்கித் தரும் புதுப் புடவையிலும் தலை நிறைய மல்லிகையும் சூடி அம்மா பேரழகாய்த் திகழ்வாள். அப்பா தன்னுடைய இறுதி நாள் வரை அம்மாவிற்கு ஒரு குறை வைத்ததில்லை.

அதட்டிக்கூடப் பேசமாட்டார். அம்மா என்ன சொன் னாலும் அப்படியே கேட்டுக் கொள்வார். அம்மாவின் மீது அத்தனை பிரியம் அப்பாவிற்கு.

அந்தப் பிரியம்தான் அம்மாவை இந்த நிலையில் தள்ளி விட்டதோ! இறைவா! ஒற்றுமையாய் வாழ்ந்த அன்றில்களை ஏன் பிரித்தாய்? இணையை இழந்து என் தாய்ப் பறவை துடிக்கிறதே!

கண்களில் மின்னிய கண்ணீரோடு தாயின் அருகே அமர்ந்தாள். தாயின் நெற்றியில் முத்தமிட்டுப் பரிவாய் தலையை வருடினாள்.

"அம்மா! என்கூடப் பேசும்மா. உன் பாரத்தை என்னிடம் இறக்கி வையம்மா. என்னோட பழைய அம்மாவா

எனக்கு நீ கிடைக்கனும்மா. உன் திருமண நாளை மறக்காமல் வைத்திருக்கிறாயே.

என்னை, அண்ணனை எப்படியம்மா மறந்தாய்? எங்களைப் பற்றிய நினைவு உனக்கு எப்போதம்மா வரும்? எப்படி உன்னைக் குணமாக்கப் போகிறேன்? எங்கே அழைத்துப் போவேன்?

எனக்கு ஒன்றுமே புரியவில்லையே. அம்மா இத்தனை வருடமாய் உங்கள் பிறந்த ஊரைப் பற்றிக்கூடச் சொல்லவில்லையே. நாங்களும் கேட்காமல் விட்டு விட்டோமே.

இப்போது போக்கிடம் இன்றி ஆதரவிற்கு ஆளின்றி நாங்கள் தவிக்கிறோமே. எங்களின் தவிப்பு உன் மனதைத் தொடவில்லையா அம்மா. கண் விழித்துப் பாரேன். ஒரே ஒரு முறை மானு என்று கூப்பிடேன்."

"மானு" – திடுக்கிட்டுத் திரும்பினாள். அறை வாசலில் பக்கத்து அறை நோயாளியின் மனைவி நின்றிருந்தாள். சட்டென கண்களைத் துடைத்துக் கொண்டு புன்னகைத்தாள்.

"வாங்க சுந்தரிக்கா. உள்ளே வாங்க."

"மானு! எனக்கொரு உதவி செய்யணுமே!"

"சொல்லுங்க அக்கா!"

"சுடுதண்ணி தீர்ந்து போச்சு. பக்கத்து டீக்கடையில போய் வாங்கிட்டு வரணும். நீ கொஞ்சம் இவரையும் பார்த்துக்குறியா?"

"சரிக்கா..." – மான்விழி பதில் சொல்லிக் கொண்டிருக்கும் போதே சுந்தரியின் கணவனின் சத்தம் கேட்டது. ஏதேதோ பேசி கத்திக் கொண்டிருந்தான்.



"அக்கா! அவர் விழிச்சுத்தான் இருக்காரா?"

"ஆமாம்மா. சுடுதண்ணி வாங்கிட்டு வந்து ஹார்லிக்ஸ் கரைச்சு அதிலதான் மாத்திரை போட்டுக் கொடுக்கணும். தனியாக் கொடுத்தா துப்பிடுறாரு."

"நீங்க அவர் பக்கத்தில இருங்க அக்கா. பிளாஸ்க்கை எங்கிட்ட கொடுங்க. நான் போயி சுடுதண்ணி வாங்கிட்டு வர்றேன்."

"நீயா?"

"பரவாயில்லக்கா. ஒருத்தருக்கு ஒருத்தர் செய்யுற உதவிதானே. கொடுங்க, நான் போறேன்."

"ரொம்ப நன்றிம்மா." – என்றவள் கையில் பிளாஸ்க்கோடு வந்தாள்.

"அம்மாவையும் கொஞ்சம் பார்த்துக்கங்க அக்கா."

"நான் பார்த்துக்கிறேம்மா. நீ பார்த்துப் போயிட்டு வா."

"சரிக்கா..." – என்றவாறு பிளாஸ்க்கை வாங்கிக் கொண்டு அறையை விட்டு வெளியேறினாள்.

நடைபாதை முழுக்க கூட்டம் நிரம்பி வழிந்தது. நோயாளிகளைப் பார்க்கவென்று ஆட்கள் வருவதும் போவதுமாக ஒரே சலசலப்பு. கூட்டத்தைக் கடந்து விபத்து சிகிச்சைப் பிரிவைத் தாண்டினாள்.

வலியோடும் காயங்களோடும் ஓலம் எழுப்பிக் கொண்டிருந்தவர்களைப் பார்க்கையில் உள்ளம் பதறியது. எத்தனை மாதங்களாய் இவற்றைப் பார்த்தாலும் ஒவ்வொரு முறையும் உடலும் உள்ளமும் பதறத்தான் செய்கிறது.

தன் தந்தைகூட இப்படிக் கொஞ்சம் காயத்தோடு உயிர் பிழைத்திருக்கலாம். காலோ கையோ போயிருந்தால்

கூட உயிரோடு இருக்கிறார் என்ற நிம்மதியும் ஆறுதலும் கிடைத்திருக்குமே.

பெருமூச்சோடு வாசலை அடைந்து பக்கவாட்டில் திரும்பி சின்னதாய் இருந்த டீக்கடையை நெருங்கினாள். டீக்கடையில் கூட்டம் மொய்த்தது.

ஆண்களும் பெண்களுமாய் இருந்த கூட்டத்தைக் கண்டு தயங்கி நின்றாள். இந்தக் கூட்டத்திற்குள் நுழைந்து எப்படி வெந்நீர் கேட்பது? இதுவரை இப்படி வந்தும் பழக்கம் இல்லையே.

தயங்கி நின்றவள் கூட்டம் குறையாமல் கூடிக்கொண்டே போக, பேசாமல் சுந்தரி அக்காவையே வரச் சொல்லி விடலாம் என்ற எண்ணத்துடன் திரும்ப, எதிரே வந்தவரின் மீது மோதிக்கொண்டாள்.

"அயம் ஸாரி... ஸாரி..." - என பதட்டமாய் கேட்டவளிடம் அந்தப் பெரியவர் புன்னகையோடு தலையாட்டினார்.

'பரவாயில்லம்மா. கூட்டத்தில இதெல்லாம் பார்க்க முடியுமா?'"

"ஸாரி ஸார். நான்தான் கவனிக்கல" - என்றாள் மன்னிப்புக் கோரும் குரலில்.

"பரவாயில்லடா கண்ணு. நீ போம்மா..." - என பரிவாய்ச் சொன்னவரைப் பார்த்துப் புன்னகைத்தாள். அந்தப் புன்னகையின் வசீகரத்தில் கன்னத்தில் விழுந்த குழியைக் கண்ட பெரியவரின் முகம் மாறியது. பார்வையில் தீவிரம் கூடியது.

கூட வந்த நபரிடம் திரும்பினார் கணேசன். "ராகவா! இந்தப் பொண்ணைப் பாரேன்" - என்றார் அவசரமாய்.



"யாரு அண்ணா இது?" - சற்று விலகி நடக்க ஆரம்பித்த மான்விழியைப் பார்த்தவாறே கேட்டார் ராகவன்.

"ராகவா! இது... இந்தப் பெண்ணோட முகத்தைப் பாரேன்."

"ஏன் அண்ணா இப்படிப் பதறுறீங்க?"

"ராகவா! இது... இந்தப் பொண்ணு... நம்ம பார்வதி மாதிரி இல்ல..."

மருத்துவமனைக்குள் நுழைந்துவிட்டவளைப் பார்த்து விட்டுத் திரும்பினார் ராகவன்.

"அண்ணா! உங்களுக்கு எப்பவுமே அவ நினைப்பு தான். அதான் யாரைப் பார்த்தாலும் அவ மாதிரியே தெரியுது."

"இல்லடா! நான் நல்லாப் பார்த்தேன். இது நம்ம பார்வதியோட பொண்ணாத்தான் இருக்கணும். அதே கண்ணு, அதே கூர் நாசி. கன்னத்தில கூட அழகா குழி விழுமே நம்ம தங்கைக்கு. அதே மாதிரி இந்தப் பெண்ணுக்கும் விழுந்ததுடா."

"அண்ணா! சும்மா நீங்களா ஏதாவது கற்பனை பண்ணிக்காதீங்க. இது யாரோ எவரோ?"

"இல்லடா. இது நிச்சயமா நம்ம ரத்தம்தான்டா. என் மனசு கிடந்து துடிக்குதே."

"ஏன் அண்ணா! செத்துப்போனவ எப்படி இங்க வந்து அதுவும் குழந்தை குட்டிகளைப் பெத்துகிட்டு வாழுவா. நம்ம தங்கச்சி ஆத்துல குதிச்சு செத்துப்போயி இன்னியோட முப்பத்திரெண்டு வருஷமாகுது. மறந்து போச்சா உங்களுக்கு?" - ராகவன் சற்று வேதனையோடு கேட்க, கணேசனின் முகம் மாறியது.

திடீரென தோன்றிய உற்சாகம் சட்டென வடிந்துவிட, கண்களில் வேதனை குடிகொண்டது. 'ஆமா! பார்வதிதான ஆத்தோட போயிட்டாளே' - மனம் அழுதது.

## 4

கண்ணே நான் அண்ணன் அல்ல
உன்னை ஈன்ற அன்னை நானே
கண்ணீரில் முத்துத் தொங்கல்
கட்டித் தந்தேனே விடிகாலை வெள்ளி
நீயே என் வாழ்வே உன்னால்தானே!

**அ**சைவற்று நின்றவரை அசைத்தார் ராகவன். "அண்ணே! என்ன அண்ணே?"

"தம்பி!"

"என்ன அண்ணே?"

"எனக்கு என்னவோ அந்தப் பெண்ணைப் பார்த்ததில இருந்தே மனசு படபடப்பா இருக்கு."

"விடுங்கண்ணே! நாம வந்த வேலையைப் பார்ப்போம்."

"இல்லடா! நான்... நான் ஒரு தரம் அந்தப் பொண்ணைப் பார்த்திட்டு வந்திடுறேனே."

"அண்ணே!"

"என்னைத் தடுக்காதேடா. ஒரே ஒரு தரம் பார்த்திட்டு வர்றேன்."

"ஏண்ணே, அது யாருன்னே நமக்குத் தெரியாது."

"இருக்கட்டும்டா. தூரமா நின்னு பார்க்கிறேனே. என்னவோ தெரியல்ல. எனக்கு அந்தப் பொண்ணைப்



பார்த்த உடனே பார்வதியே திரும்பக் கிடைச்ச மாதிரி இருக்குடா."

"சரிண்ணே! அவளை எங்கேன்னு போய்த் தேடுவீங்க?"

"இந்த ஆஸ்பத்திரிக்குள்ளதான்டா போச்சு அந்தப் புள்ள. வா, போய்ப் பார்த்திட்டு வந்திடலாம்."

"அண்ணே! நாம மாப்பிள்ளையைப் பார்க்க வேண்டாமா?"

"இன்னிக்கு இல்லன்னா இன்னொரு நாள் அவரைப் பார்த்துக்கலாம்டா. ஆனா இந்தப் பொண்ணை இனிமேப் பார்க்க முடியுமா?"

"அது சரிண்ணே! ஆஸ்பத்திரியில கூட்டத்தைப் பார்த்தீங்களா? இதுல அந்தப் பொண்ணை எப்படித் தேடுறது?"

"தம்பி! அந்தப் பொண்ணு கையில சுடுதண்ணிப் பாத்திரம் இருந்ததுடா. கண்டிப்பா அவளுக்கு வேண்டிய வங்க யாரோ இங்க தங்கியிருப்பாங்க. வா. ஒவ்வொரு ரூமா போய்ப் பார்த்திடலாம்.

"அண்ணே! எனக்கென்னவோ இது சரியாப் படல்ல. இது ஒண்ணும் நம்ம ஊர் இல்ல."

"ஏன்டா?"

"ஏதாவது ஒண்ணுன்னா பிரச்சனை ஆகிடும்ணே!"

"நான் என்ன அந்தப் பொண்ணுகிட்ட போய் வம்பு பேசவா போறேன். சும்மா பார்த்திட்டு வந்துடுறேன்டா!"

"என்னவோ செய்யுங்க!" - என்றார் ராகவன் அரை மனதாய்.

பாரு. நான் போய் அந்தப் பொண்ணை..."

"வேண்டாம், வேண்டாம். அந்தப் பேச்சே வேண்டாம். சேர்ந்தே போவோம்."

"ஏன்டா?"

"பின்னே, மதினிகிட்ட போய் யார் பதில் சொல்றதாம். பெண்ணோட அப்பா நீங்க. நீங்க பார்க்கலன்னு சொன்னா மதினி எப்படி ஒத்துகிடுவாங்க."

"நீ மட்டும் பார்த்தேன்னு ஏன் அவகிட்ட சொல்லணும்?"

"அண்ணே! மதினிகிட்ட எல்லாம் பொய் சொல்லித் தப்பிக்க முடியாது. எப்படியும் நீங்க மாட்டிப்பீங்க. அதனால மாப்பிள்ளையை நாம சேர்ந்தே போய்ப் பார்க்கலாம்."

"சரி! அப்போ வா. முதல்ல அந்தப் பொண்ணைப் பார்த்திட்டு வந்திடலாம்."

"வாங்க." - என்றவாறு வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு ராகவன் நடக்க, பரபரவென கண்களால் தேடிக்கொண்டே நடந்தார் கணேசன்.

மனம் பேரிரைச்சலோடு ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தது. அந்தப் பெண் யாராக இருக்கும்? அவளைப் பார்த்த உடன் என் உடலும் உள்ளமும் பதறுகிறதே, என் மனம் துடிக்கின்றதே!

அந்த முகம்... அந்தக் கண்கள்... அது பார்வதிதான். என் தங்கையின் முகம்தான். தினம் தினம் அவள் புகைப்படத்தில்தானே கண் விழிக்கிறேன். பார்த்துக் கொண்டே இருக்கும் முகம்.



பார்க்கப் பார்க்க சலிக்காத முகம். என் கண்கள் என்னை ஏமாற்றாது. இது என் தங்கையின் முகம்தான். அந்தச் சிரிப்பும்கூட.

ஆனால் இது எப்படிச் சாத்தியம்? ஆற்றில் குதித்ததைப் பார்த்துவிட்டு வந்து சொன்னார்களே. ஊரார் முழுக்க ஆற்றில் இறங்கித் தேடிப் பார்த்தும் அவளது புடவை மட்டும்தானே கிடைத்தது.

உடலை மீன் தின்றிருக்கும் என்றனர். எங்காவது கரையில் ஒதுங்கும் என்றனர். சுழலில் சிக்கியிருக்கலாம் என்றனர். ஆனால் கடைசி வரை தங்கையின் உடல் கிடைக்கவே இல்லை.

அருமை பெருமையாய் வளர்த்த தங்கையைக் கடைசியில் முகத்தைக்கூடக் காணமுடியாமல் நீருக்குத் தாரை வார்த்து விட்டோமே.

இன்று வரை அவளது சாவிற்கு விடை கிடைக்கவில்லை. பெற்றவர்கள் பார்த்த மாப்பிள்ளையைப் பிடிக்காமலா போய்விட்டாள். இந்த அண்ணன்களால் எதுவும் முடியாது என எண்ணிவிட்டாளா?

அப்பாவும் கொஞ்சம் இறங்கி வந்திருக்கலாம். ஜாதி, அந்தஸ்து, வசதி என்று பார்த்தாரே தவிர தன் பெண்ணுக்கு மாப்பிள்ளை பொருத்தமாய் இருப்பானா என்று பார்க்கவில்லையே!

ஆனால் அதற்காகத் தன்னைப் பெற்றவர்களை - வளர்த்தவர்களைக் கூட மறந்துவிட்டு உயிரை மாய்த்துக் கொண்டாளே. மகள் கிடைக்கவில்லை என்றதுமே அம்மாவின் மூச்சும் நின்று போனது.

குடும்ப மானமும் போய் கட்டிய மனைவி, பெற்ற ஒரே மகள் செல்ல மகள் உடலைக்கூட காணமுடியாமல் போன துக்கம் அனைத்தும் சேர்ந்து ஒட்டுமொத்தமாய் தகப்பனை முடக்கிப் போட்டது.

என்னாலதான்டா உன் தங்கை போயிட்டா. மக போன இடத்துக்கே உன் அம்மாவும் போயிட்டா. நான் மட்டும் இருந்து எதுக்குடா? பூமிக்குப் பாரமா நான் இருக்கணுமா? என தினம்தோறும் புலம்பிய அப்பா, இரண்டே வருடங்களில் நிரந்தரமாய் கண்களை மூடிக்கொண்டார்.

பிறகு வந்த நாட்களில் திருமணம் குழந்தைகள் அவர்களின் படிப்பு, திருமணம் என காலங்கள் பல கடந்தும் பார்வதியின் மரணமும் நினைவுகளும் மனதை விட்டு மறையவே இல்லை.

நெஞ்சில் செருகிய முள்ளாய் நறுக் நறுக்கென குத்திக்கொண்டே இருந்தது. இரண்டு அண்ணனுக்கும் ஒரு தம்பிக்கும் பிறகு பிறந்த ஒரே பெண் பார்வதி.

வீட்டிற்கு மட்டுமல்ல ஊருக்கே செல்லப் பெண். அத்தனை துறுதுறுப்பு, கலகலப்பு. பேரழகு. ஒரு பெண் வளர்ந்து நின்ற பிறகு அவளைப் பெண் கேட்டு வருபவர்களின் எண்ணிக்கையை வைத்து தங்கள் குடும்பப் பெருமையைப் பறைசாற்றும் குடும்பங்கள் வாழும் ஊர்.

அதிலும் தட்சிணாமூர்த்தி குடும்பம் பெரிய குடும்பம். அதில் பிறந்த ஒற்றைப் பெண் வாரிசை பெண் கேட்க வென்று வரிசையாய் படி ஏறி வந்த மாப்பிள்ளை வீட்டாரைப் பார்த்து நிறையவே கர்வம் கொண்டார் தட்சிணாமூர்த்தி.



என் மகளைப் பெண் கேட்டு எத்தனை கூட்டம், எத்தனை பெரிய இடங்கள் என்ற இறுமாப்புடன் நடை போட்டார். உயர்ந்த இடமாய்த்தான் மாப்பிள்ளையும் பார்த்தார்.

பெண் எடுத்து பெண் கொடுப்பதாய் பேச்சு. எல்லாம் நல்லபடியாய்த் தானே நடந்தது. பிறகேன் பார்வதிக்கு மாப்பிள்ளையைப் பிடிக்காமல் போனது.

அவர்கள் ஊர் வழக்கப்படி மாப்பிள்ளையைப் பெண்ணிடம் காட்டுவதில்லை. பெண் பார்க்க அனுமதிப்பதில்லை. திருமணம் வரை பார்க்கவும் முடியாது.

பிறகெப்படி மாப்பிள்ளையைப் பிடிக்கவில்லை என்று உயிரை மாய்த்துக் கொண்டாள் தங்கை என்று இன்றுவரை அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை.

வெகுநாட்களாய் சிந்தித்து தலையைப் பிய்த்துக் கொண்டு இறுதியில் தங்கையே போய்விட்டாள்; இனி அதற்கான காரணத்தை ஆராய்ந்து என்ன ஆகப் போகிறது என்று விட்டுவிட்டனர்.

தங்கையோடு தங்கையின் மரணத்திற்கான காரணமும் மரித்தே போய்விட்டது. ஆனால் இத்தனை வருடங்கள் கழித்து திடீரென இப்படி ஒரு பெண்ணைக் கடவுள் ஏன் என் கண்ணில் காட்டினான்?

ஒரு வேளை தன் தங்கை மரித்துவிட்டு அடுத்த பிறவியெடுத்து இன்னொரு பெண்ணுக்கு ஜனித்திருப் பாளோ? மான்விழியைத் தன் தங்கை என்றே எண்ணிக் கொண்டு ஒவ்வொரு அறையாய் தேடிக்கொண்டே இருந்தார் கணேசன்.

அனைத்து அறையிலும் விதவிதமான நோயாளிகள். வருத்தமான முகங்கள். வேதனை தொனிக்கும் முனகல்கள். எதிலுமே அவர்கள் தேடி வந்த பெண் இல்லை.

கால் கடுக்க நின்று விட்டார் ராகவன். கூடவே வந்த கணேசன் தம்பியைப் பார்த்தார்.

"என்னடா நின்னுட்டே?"

"ஏண்ணே! அதான் எல்லாம் தேடிப் பார்த்தாச்சே. வேற எங்கே போக?"

"எதிர்பக்க வரிசையிலே இன்னும் பார்க்கலியே ராகவா?"

"அண்ணா! இது வேண்டாத வேலைன்னு தோணுது."

"ஆனது ஆச்சுடா. இன்னும் ஒரு நாலு ரூம்தானே. பார்த்திட்டு வந்திடுவோமே!"

"அண்ணே! இது புத்தி சுவாதீனம் இல்லாதவங்க இருக்கிற இடமாம். இங்கே அந்தப் பொண்ணு எப்படி இருக்கும்?"

"உடம்பு சரியில்லாத யாரையாவது பார்க்க வந்திருக்கும் தம்பி."

"சரி. இந்தப் பொண்ணை பார்க்கிறால என்ன லாபம் நமக்கு?"

"என்னடா இப்படிக் கேட்கிற? பதினெட்டு வருஷமா உள்ளங்கையில வெச்சுப் பார்த்த நம்ம தங்கையோட முகத்தைக் கடைசியா நம்மால பார்க்க முடிஞ்சுதா?"

"அண்ணே!"



"இப்பவும் நம்ம மனசுல அந்த வேதனை இருக்குல்ல. இல்லன்னு சொல்ல முடியுமா உன்னால?"

"அ... அதெப்படிண்ணே சொல்ல முடியும். அவ... நம்ம சாமி. நம்ம அம்மா..." – கண்கள் கசிந்தன.

"அதான்... அந்த முகத்தை ஒரு தரமாவது பார்த்திட மாட்டோமான்னு எம் மனசு கிடந்து தவிக்குதடா."

"அண்ணே!"

"நீ வேணாப் பாரேன். எப்படியும் நாம பார்த்திடலாம். வா என்கூட."

"வாங்கண்ணே. பார்த்திடலாம். நீங்க இவ்வளவு உறுதியாச் சொல்லும்போது எனக்கே ஆசையா இருக்குண்ணே."

"இருக்கில்ல. வா... வா... என்கூட." – துளிர்த்த கண்ணீரை அவசரமாய் துடைத்துவிட்டு எதிர்வரிசையை நோக்கி நடக்க ஆரம்பித்தார் கணேசன்.

சற்றே ஆவலும் எதிர்பார்ப்புமாய் அண்ணனைப் பின்தொடர்ந்தார் ராகவன்.

"அண்ணே!"

"ம்..."

"ஒருவேளை இப்படி எதுவும் நடந்திருக்குமோ?"

"எப்படி?"

"நம்ம தங்கை... பிழைச்சிருப்பாளோ?' – தயக்கமாய் ராகவன் கேட்க, கணேசனின் நடை தடைப்பட்டது.

"தம்பி...! நீ என்ன சொல்றே?"

"அண்ணே! கடைசி வரை அவளோட பிரேதம் நமக்குக் கிடைக்கவே இல்லையே. ஒருவேளை ஏதாவது ஒரு ஊர்ல ஒதுங்கி யாராவது பார்த்துக் காப்பாத்தி இருப் பாங்களோ?"

அவசரமாய் மறுத்தார். "இல்ல... அப்படியெல்லாம் இருக்காது."

"ஏன் அண்ணே அப்படிச் சொல்றீங்க?"

"அப்படி ஒரு வேளை பிழைச்சிருந்தா நம்மைத் தேடி வராம இருந்திருப்பாளா? நம்மைத் தவிக்க விட்டிருப்பாளா?"

"ஆமா! நம்மைப் பார்க்க வந்திருப்பா இல்ல?"

"கண்டிப்பா வந்திருப்பா. நம்மள பார்க்காம அவளால இருக்க முடியாது. அதோட நாமும் சுத்துபட்டி எல்லாம் தேடி அலைஞ்சோமே. அப்படி எதுவும் நடந்திருந்தா நமக்குத் தெரிஞ்சிருக்கும்."

"ம்ப்ச்.. ஆமா. நான் இதை யோசிக்கலையே." - தலையில் தட்டிக் கொண்டார் ராகவன்.

"சரி தம்பி, வா. இந்த ரூமையும் பார்த்திட்டு நாம போகலாம்."

"ம்..." - என்றவாறு முதல் அறையின் வாசலை அடைந்தனர். எதிரே கையில் பிளாஸ்க்கோடு வந்தாள் சுந்தரி.

"யாருங்க?" - இருவரையும் பார்த்து சுந்தரி கேட்க, கணேசன் சற்றுத் தயங்கினார்.

"அம்மா! இங்க ஒரு பொண்ணு... சுடுதண்ணி வாங்கிட்டு வந்ததே..."



"யாரு? மானுவையா கேட்கிறீங்க?"

"யாரும்மா?"

"அதாங்க மான்விழி!"

"பேர் சரியாத் தெரியலம்மா. ஆனா அந்தப் பொண்ணைப் பார்க்கணுமே."

"நீங்க யாருங்க?" - சந்தேகமாகக் கேட்டாள் சுந்தரி.

"உறவுக்காரங்கம்மா!"

"உறவா? அப்படி இதுவரை யாரும் வந்ததில்லையே?"

"நாங்க கொஞ்சம் தூரத்து உறவும்மா."

"அப்படியா? இதோ இந்த ரூம்தான். போய்ப் பாருங்க." - என அடுத்த அறையைக் காட்டினாள்.

"ரொம்ப நன்றிம்மா." - என அவர்கள் ஆவலாய் நகர, கூடவே வந்த சுந்தரி,

"மானு! உன்னைத் தேடி யாரோ வந்திருக்காங்க பாரு" - என குரல் கொடுத்தாள்.

தாயின் அருகே அமர்ந்திருந்த மான்விழி குழப்பமாய் எழுந்தாள். வாசலை நோக்கி வந்தாள். "யாருக்கா?"

"பார்த்தா பெரிய மனுஷங்க மாதிரி இருக்கு. மானு! இவரைக் கொஞ்சம் பார்த்துக்கிறியா? நான் சுடுதண்ணி வாங்கிட்டு வந்திடுறேன்."

"சரிக்கா." - என்றவாறு அவளுக்குப் பின்னே நின்று கொண்டிருந்தவர்களைப் பார்த்து புருவம் சுருக்கினாள்.

சற்று முன்னே பார்த்தவர்கள் அல்லவா? இவர்கள் ஏன் என்னைத் தேடி வர வேண்டும். யார் இவர்கள்? குழப்பமாகப் பார்த்தவள் இன்னும் மிரண்டாள்.

வந்திருந்தவர்களின் பார்வை பயமூட்டியது. காணக் கிடைக்காத பொக்கிஷம் நேரில் கிடைத்ததுபோல் விழிகளில் ஆசையும் அன்பும் தொனிக்க நம்பமுடியாமல் பார்த்துக் கொண்டிருந்தனர்.

தொண்டையைச் செருமினாள் மான்விழி. "ஹலோ! யார் சார் நீங்க? யார் வேணும் உங்களுக்கு?"

மான்விழியின் கேள்வி அவர்களை அசைக்க வில்லை. இருவருமே பிரமித்து நின்றிருந்தனர். அதெப்படி இந்தப் பெண் தன் தங்கையை உரித்துக்கொண்டு பிறந் திருக்கிறாள். இது எப்படி சாத்தியமாகும்?

உருவம் மட்டுமல்ல குரல் கூட தன் தங்கையின் குரல்தான். அதே கொஞ்சும் குரல். ராகவனால் இன்னும்கூட நம்பமுடியவில்லை. மான்விழியிடம் இருந்து பார்வையை நகர்த்தாமலேயே அண்ணனை அழைத்தார்.

"அண்ணே!"

"என்ன தம்பி?"

"இது... இது எப்படி சாத்தியம்? இது கனவில்லையே!"

"பார்த்தியா? நான் சொன்னப்போ நீ நம்பலையில்ல."

"ஆமாண்ணே. இப்பவும் கூட என்னால நம்ப முடியல்ல. ஆனா கண் முன்னால பார்க்கிறப்போ நம்பாம இருக்கவும் முடியலியே."

"ராகவா! நம்ம கேசவனும் கூட வந்திருந்தா ரொம்ப சந்தோஷப்பட்டிருப்பான். வராம இருந்திட்டானே!"

"அண்ணே! குரல் கூட அப்படியே நம்ம பார்வதியோட குரல்தான். கேட்டீங்களா அண்ணே!"



அண்ணன் தம்பி இருவரையும் குழப்பமாய்ப் பார்த்துக் கொண்டிருந்த மான்விழி, தன் தாயின் பெயரைக் கேட்டதும் துணுக்குற்றாள்.

"ஸார்! உங்ககிட்ட தான் கேட்கிறேன். யார் நீங்க?"

"பாப்பா! தப்பா நினைச்சுக்காதேம்மா. நாங்க வெளியூர்க்காரங்க. இங்க ஒரு வேலை விஷயமா வந்தோம். உன்னைப் பார்த்தா அப்படியே என் தங்கையைப் பார்த்த மாதிரியே இருக்கும்மா. அதனால்தான் உன்னைப் பார்த்திட்டுப் போகலாம்னு வந்தோம். மத்தபடி எங்களைத் தப்பா நினைச்சுடாதம்மா" - என்றார் கணேசன்.

"ஏதோ பேர் சொன்னீங்களே?"

"பார்வதிம்மா. அது என் தங்கையோட பெயர். ஆனா இப்போ அவ உயிரோட இல்லம்மா" - என்றார் கண்கள் பனிக்க.

"அட! எங்க அம்மா பேரும் பார்வதிதான்" - இயல்பாய் அவள் சொல்ல, இருவரும் திடுக்கிட்டனர்.

5

கண்ணின் மணிபோல மணியின்
நிழல்போல கலந்து பிறந்தோமடா
இந்த மண்ணும் கடல்வானும்
மறைந்து முடிந்தாலும் மறக்க முடியாதடா
உறவைப் பிரிக்க முடியாதடா!

கணேசனும் ராகவனும் வியப்பாய் தவிப்பாய் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

"பாப்பா! நீ என்னம்மா சொல்ற? உங்க அம்மா பேரு...?"

"பார்வதி!"

"உண்மையாவா? உங்க அம்மாவுக்கு... எந்த ஊரும்மா?"

"அம்மாவுக்கு சொந்த ஊரு தென்காசி பக்கத்தில ஏதோ ஒரு கிராமம். ஆனா பேர் சரியாத் தெரியல்ல."

"என்ன?" - இருவரின் குரலும் உற்சாகமாயின.

"ஆமா! நான் பொறந்ததுல இருந்து அங்கெல்லாம் போனதே இல்ல."

"உங்க அப்பா யாரும்மா?"

"அப்பா பேரு நீலகண்டன்."

"நீலகண்டனா? அண்ணே! ஒருவேளை அவனா இருக்குமோ!" - ராகவன் மெல்லிய குரலில் கேட்க, கணேசன் மான்விழியை ஏறிட்டார்.

"உங்க அம்மா இப்போ எங்கேம்மா இருக்காங்க?"

"இங்கேதான்!"

"என்ன? இங்கேயா?"

"ம்... இவங்கதான் என் அம்மா!" - சற்றே விலகி நின்று கட்டிலைக் காட்டினாள் மான்விழி. இருவரும் அதிர்ந்து போனவர்களாய் மெல்ல அந்த அறைக்குள் நுழைந்தனர்.

குழப்பமான முகத்தோடு மான்விழியும் அவர்களைத் தொடர, முன்னே சென்ற கணேசன் கட்டிலில் சுருண்டு கிடந்த பார்வதியை உற்றுப் பார்த்தார்.

பாதிக்கு மேல் நரைத்து விட்ட கூந்தல், குங்குமமும் மஞ்சள் பூச்சும் இல்லாத வெறுமையான முகம், கம்மல் மூக்குத்தி என பொட்டுத் தங்கம்கூட இல்லாமல் குழி விழுந்த



கண்களோடு உறங்கிக் கொண்டிருந்தவளை எளிதாய் அடையாளம் கண்டுகொண்டது அவரது கண்கள்.

தங்கையின் கோலம் கண்டு தடுமாறியவரைத் தோள் பற்றி அருகே இருந்த நாற்காலியில் அமர வைத்தாள் மான்விழி. ராகவனும் சிலையாய் நின்றிருக்க, தவிப்பாய் இருவரையும் பார்த்தாள்.

"ஸார்! எங்க அம்மாவை உங்களுக்குத் தெரியுமா?"

"ம்..." இருவரும் கண்ணீரோடு தலையசைத்தனர்.

"தெரியுமா? எப்படி? உங்களுக்கு எங்க அம்மாவோட ஊரா?"

"ஊர் மட்டுமில்லம்மா... இருந்த இடம், வளர்ந்த வீடு... எல்லாமே ஒண்ணுதாம்மா."

"என்ன?"

"நாங்க பொறந்த வயித்திலதாம்மா உங்க அம்மாவும் பொறந்தா" - கலங்கிய கண்களோடு கணேசன் சொல்ல, துல்லியமாய் அதிர்ந்தாள் மான்விழி.

"ஸார்! நீங்க... என்ன சொல்றீங்க?"

"இது எங்க தங்கை பார்வதிதாம்மா. நாங்க உன் மாமனுங்க."

"உங்க தங்கை இறந்துட்டதா சொன்னீங்களே...!"

"அப்படித்தாம்மா நினைச்சி இத்தனை வருஷமா என் தங்கைக்கு திதி கொடுத்திட்டு இருந்தோம். ஆண்டவா! உயிரோட இருந்த புள்ளைக்கா இத்தனை வருஷமா மாலை போட்டு பூசை பண்ணிட்டு இருந்தோம். ராகவா! இது என்னடா கொடுமை? நம்ம தங்கையைப் பாருடா! காய்ந்த

சருகாக் கிடக்கிறாளே. இவ்வளவு காலமா நம்மைத் தேடி வரவே இல்லையே. ஏன்டா? ஏன்டா வரல்ல?"

"அண்ணே! பதறாதீங்க. உங்க உடம்புக்கு ஆகாது. அதான் இப்போ பார்த்திட்டோமே!"

"அம்மாடி ராஜாத்தி! இவளுக்கு என்னம்மா ஆச்சு? ஏன் இப்படி இருக்கா? இந்த இடத்தில ஏன் இவளைக் கொண்டு வந்து வெச்சிருக்கீங்க? இவ புருஷன் – அதான் உங்க அப்பா எங்கே? நான் அவனைப் பார்க்கணும். உடனே பார்க்கணும்." – படபடத்த கணேசனை இன்னும் நம்பமுடியாமல் பார்த்தாள்.

"என்ன கண்ணு அப்படிப் பார்க்கிற. உனக்கு எங்க மேல நம்பிக்கை வரலியா? நாங்க உன் தாய்மாமனுங் கம்மா. நான் கணேசன், இவன் ராகவன். கேசவன்னு சின்ன மாமா ஒருத்தன் ஊர்ல இருக்கான்.

உங்க தாத்தா பேரு தட்சிணாமூர்த்தி. நம்ம ஊரு வாழைத் தோட்டம்மா. உன் அம்மா பிறந்து வளர்ந்த வீடு அங்கேதாம்மா இருக்கு.

உனக்கு நம்பிக்கை இல்லேன்னா உன் அம்மாவையே கேளும்மா. பார்வதி! அண்ணனுங்க வந்திருக்கோம். எழுந்திரும்மா. எங்களைப் பாரும்மா. இத்தனை வருஷமா உன்னைத் தொலைச்சிட்டு நின்ற பாவிங்க வந்திருக்கோம்.

கண் திறந்து பாரும்மா. உன் புள்ளை, எங்களை நம்பல. நாங்க யாருன்னு குழந்தைகிட்ட சொல்லும்மா. பாரு! எழுந்திரும்மா! " – பார்வதியின் தோளைத் தொட்டு அசைத்தார் கணேசன்.



சடக்கென கண்களைத் திறந்தாள் பார்வதி. அருகில் நின்றவர்களைக் கண்டு மிரண்டு எழுந்து பின்வாங்கினாள். அவளது முகபாவம் கண்டு இருவரும் குழம்பினர்.

"பாரு! பாரும்மா! நான் அண்ணன் வந்திருக்கேன்டா. என்னைத் தெரியலையா? இதோ ராகவன் வந்திருக்கான் பாரு! கண்ணம்மா! உனக்கு என்னடா ஆச்சு?"

"பார்வதிக் கண்ணு! எங்களை மறந்திட்டியாடா? நாங்க உன் அண்ணன்மா. எங்க முகம்கூட மறந்து போச்சா?" – ராகவனும் பரிதாபமாய்க் கேட்க, மான்விழி தாயைப் பற்றிக் கொண்டாள்.

"உங்களை மட்டுமில்ல ஸார். எங்க அம்மாவுக்கு என்னைக்கூட அடையாளம் தெரியாது" – என்றாள் அமைதியாய்.

"என்ன?" – இருவரும் பலமாய் அதிர்ந்தனர்.

"ஆமா! ஏழெட்டு வருஷமா இப்படித்தான் இருக்காங்க."

"ஐயோ! இதென்ன கொடுமை. இதுக்காகவா – இவளை இந்த நிலைமையில பார்க்கவா கடவுள் எங்களை இங்கே வரவழைச்சான்."

"எப்படிம்மா? இதெல்லாம் எப்போ நடந்தது? என் தங்கை ஏன் இப்படி ஆனாள்?"

"என் அப்பா ஒரு விபத்தில சிக்கி இறந்திட்டாங்க."

"ஐயோ!"

"அதை நேர்ல பார்த்ததால அம்மாவுக்கு இப்படி ஆகிப் போச்சு."

"கடவுளே! என்னம்மா என்னவெல்லாமோ சொல் கிறாயே. ராகவா! இதெல்லாம் கேட்டும் இந்த உசிர்

சருகாக் கிடக்கிறாளே. இவ்வளவு காலமா நம்மைத் தேடி வரவே இல்லையே. ஏன்டா? ஏன்டா வரல்ல?"

"அண்ணே! பதறாதீங்க. உங்க உடம்புக்கு ஆகாது. அதான் இப்போ பார்த்திட்டோமே!"

"அம்மாடி ராஜாத்தி! இவளுக்கு என்னம்மா ஆச்சு? ஏன் இப்படி இருக்கா? இந்த இடத்தில ஏன் இவளைக் கொண்டு வந்து வெச்சிருக்கீங்க? இவ புருஷன் – அதான் உங்க அப்பா எங்கே? நான் அவனைப் பார்க்கணும். உடனே பார்க்கணும்." – படபடத்த கணேசனை இன்னும் நம்பமுடியாமல் பார்த்தாள்.

"என்ன கண்ணு அப்படிப் பார்க்கிற. உனக்கு எங்க மேல நம்பிக்கை வரலியா? நாங்க உன் தாய்மாமனுங் கம்மா. நான் கணேசன், இவன் ராகவன். கேசவன்னு சின்ன மாமா ஒருத்தன் ஊர்ல இருக்கான்.

உங்க தாத்தா பேரு தட்சிணாமூர்த்தி. நம்ம ஊரு வாழைத் தோட்டம்மா. உன் அம்மா பிறந்து வளர்ந்த வீடு அங்கேதாம்மா இருக்கு.

உனக்கு நம்பிக்கை இல்லேன்னா உன் அம்மாவையே கேளும்மா. பார்வதி! அண்ணனுங்க வந்திருக்கோம். எழுந்திரும்மா. எங்களைப் பாரும்மா. இத்தனை வருஷமா உன்னைத் தொலைச்சிட்டு நின்ற பாவிங்க வந்திருக்கோம்.

கண் திறந்து பாரும்மா. உன் புள்ளை, எங்களை நம்பல. நாங்க யாருன்னு குழந்தைகிட்ட சொல்லும்மா. பாரு! எழுந்திரும்மா! " – பார்வதியின் தோளைத் தொட்டு அசைத்தார் கணேசன்.



சடக்கென கண்களைத் திறந்தாள் பார்வதி. அருகில் நின்றவர்களைக் கண்டு மிரண்டு எழுந்து பின்வாங்கினாள். அவளது முகபாவம் கண்டு இருவரும் குழம்பினர்.

"பாரு! பாரும்மா! நான் அண்ணன் வந்திருக்கேன்டா. என்னைத் தெரியலையா? இதோ ராகவன் வந்திருக்கான் பாரு! கண்ணம்மா! உனக்கு என்னடா ஆச்சு?"

"பார்வதிக் கண்ணு! எங்களை மறந்திட்டியாடா? நாங்க உன் அண்ணன்மா. எங்க முகம்கூட மறந்து போச்சா?" – ராகவனும் பரிதாபமாய்க் கேட்க, மான்விழி தாயைப் பற்றிக் கொண்டாள்.

"உங்களை மட்டுமில்ல ஸார். எங்க அம்மாவுக்கு என்னைக்கூட அடையாளம் தெரியாது" – என்றாள் அமைதியாய்.

"என்ன?" – இருவரும் பலமாய் அதிர்ந்தனர்.

"ஆமா! ஏழெட்டு வருஷமா இப்படித்தான் இருக்காங்க."

"ஐயோ! இதென்ன கொடுமை. இதுக்காகவா – இவளை இந்த நிலைமையில பார்க்கவா கடவுள் எங்களை இங்கே வரவழைச்சான்."

"எப்படிம்மா? இதெல்லாம் எப்போ நடந்தது? என் தங்கை ஏன் இப்படி ஆனாள்?"

"என் அப்பா ஒரு விபத்தில சிக்கி இறந்திட்டாங்க."

"ஐயோ!"

"அதை நேர்ல பார்த்ததால அம்மாவுக்கு இப்படி ஆகிப் போச்சு."

"கடவுளே! என்னம்மா என்னவெல்லாமோ சொல் கிறாயே. ராகவா! இதெல்லாம் கேட்டும் இந்த உசிர்

என்னைவிட்டுப் போகலையே!" - வாய்விட்டு அழுதார் கணேசன்.

ராகவனும் உடல் பதறி கண்ணீர் விட, மான்விழி அவர்கள் இருவரையும் மாறி மாறிப் பார்த்தாள். இவர்கள் நிச்சயம் அம்மாவின் உடன் பிறந்தவர்களாகத்தான் இருக்க வேண்டும். இல்லையெனில் இத்தனை கண்ணீர் வராது.

இவர்களது கண்ணீர் உண்மை. துடிப்பு உண்மை. வேதனை நிஜம். அப்படியென்றால் இவர்கள்தான் என் மாமாவா?

இத்தனை வருடங்களுக்குப் பிறகு எனக்குத் தாய்வழிச் சொந்தங்கள் கிடைத்துவிட்டதா! யாருமே இல்லையென்று நினைத்து வருந்தினோமே.

இதோ மாமாக்கள் வந்துவிட்டனர். இவர்கள் குடும்பம், தாத்தா, அம்மா பிறந்த வீடு, ஊர் என எல்லாமே இருக்கிறது. அப்படியென்றால் இனி அம்மாவை எளிதாய்க் குணமாக்கிவிடலாம்.

பிறந்த வளர்ந்த இடத்திற்கு அழைத்துப் போனால் அந்த இடங்களைப் பார்க்கும்போது உறவுகளின் பாசத்தில் நெருக்கத்தில் நிச்சயமாய் அம்மாவின் மனம் தெளிய வாய்ப்பு இருக்கிறது.

என் அம்மா குணமாகிவிடுவார். என்னை, அண்ணனை அடையாளம் கண்டு கொள்வார். என் அம்மா எனக்குத் திரும்பக் கிடைத்து விடுவார். எல்லா உறவுகளோடும் இனி நாங்கள் சந்தோஷமாக வாழப்போகிறோம்.

நாங்கள் அநாதையில்லை. எங்களுக்கென்று ஆயிரம் உறவுகள் இருக்கிறது. "அம்மா! நீ மறந்து விட்ட



உறவுகள் உன்னைத் தேடி வந்திருக்கிறதம்மா. அம்மா! பாரேன். இது... உன் அண்ணன்தானே...!" - தாயின் முகத்தைப் பற்றியவாறே கேட்டாள்.

பயமாய் அவர்களைப் பார்த்த பார்வதியின் முகம் லேசாய் மாறியது. கண்களை விரித்து அவர்களை நிதானமாய்ப் பார்த்தாள். இருவரையும் மாறிமாறிப் பார்த்தாள்.

"பார்வதிக் கண்ணு! அண்ணன்டா. நான் பெரியவன். என்னைத் தெரியுதாடா?" - கணேசன் தவிப்பாய்க் கேட்க, அவரை இமைக்காமல் பார்த்தாள் பார்வதி.

அவளது முகத்தில் எந்த உணர்வுமே இல்லை. ஆனால் பார்ப்பதை மட்டும் நிறுத்தவே இல்லை.

"என்னடாம்மா! இப்படிப் பார்க்கிற? ஒரே ஒரு வாட்டி என்னை அண்ணான்னு கூப்பிடும்மா!"

"ம்?"

"அண்ணான்னு கூப்பிடும்மா. நான் உன் அண்ணன்தானே?" - குழந்தையிடம் கெஞ்சுவது போல் அவர் கெஞ்ச, பரிதாபமாய்ப் பார்த்தாள் மான்விழி.

"மாமா!" - தயக்கமாய் அழைத்தாள். இருவரும் திரும்பினர்.

"கண்ணு! நீயா கூப்பிட்டே?"

"ஆமா மாமா! அம்மாவால இப்ப உங்களை அடையாளம் கண்டுகொள்ள முடியாது. ஆனா... உங்க மேல அம்மாவுக்கு வெறுப்பு இல்ல."

"என்னம்மா சொல்ற?"

"வேற யாரைப் பார்த்தாலும் அம்மாவுக்குக் கோபம் வந்திடும். கண்டபடி திட்டி கூச்சல் போட ஆரம்பிச்சிடுவாங்க."

"என்ன?"

"ஆமா மாமா. ஆனா உங்களைப் பார்த்து இவ்வளவு அமைதியா இருக்காங்களே... அப்போ உங்களை சுத்தமா மறக்கலன்னுதானே அர்த்தம்?"

"அம்மா... ஏம்மா இப்படி இருக்கா? என்ன நடந்தது? பழையபடி மாறிடுவாளா என் தங்கை?" – ராகவன் கேட்க, பெருமூச்சோடு நடந்தவற்றைச் சொல்லத் துவங்கினாள் மான்விழி.

அனைத்தையும் மனம் பதற கேட்டவர்கள், இறுதியில் நம்பிக்கையோடு அவளைப் பார்த்தனர்.

"நீ கவலைப்படாதே கண்ணு. இனி அம்மாவைப் பார்த்துக்க நாங்க இருக்கோம். வாங்க... எல்லோரும் நம்ம வீட்டுக்குப் போயிடலாம்."

"மாமா?"

"ஆமாம்மா. எங்க குடும்பத்துக்கு இவ ஒரே வாரிசு. இவளை இத்தனை வருஷம் தவிக்க விட்டதே பெரிய பாவம். எங்க தங்கையை – உன் அம்மாவை நாங்க குணமாக்குறோம்மா."

"ஆமாங்கண்ணு! டாக்டர் சொன்ன இடம் நம்ம ஊர்ப் பக்கம்தான். நம்ம ஊரைச் சுற்றி அருவிங்க இருக்கு. நாங்க அழைச்சிட்டுப் போறோம்.

உங்க அம்மா நடந்த – விளையாடிய இடத்தை எல்லாம் பார்த்தாலே போதும். அவளுக்கு எல்லாம்



சரியாகிடும். நம்ம ஊர் காத்து அவ மேல பட்டாலே குணமாயிடுவா.

வாங்கம்மா. நம்ம ஊருக்குப் போயிடலாம். நம்ம ஊரு, நம்ம வீடு, நம்ம சனங்க இருக்கும்போது நீங்க ஏம்மா இங்கே தனியாக் கிடந்து தவிக்கணும்?"

"மாமா! இத்தனை உறவுகள் இருந்தும் ஏன் மாமா இவ்வளவு நாளா எங்களைத் தேடாம இருந்தீங்க?"

"கண்ணு! உங்க அம்மா செத்துப் போயிட்டதாத்தான் நாங்க நினைச்சுட்டு இருந்தோம். இன்னிக்கு மட்டும் உன்னைப் பார்க்கலேன்னா... நாங்க இன்னும் அப்படித் தான் நினைச்சிட்டு இருப்போம்."

"மாமா! இத்தனை அன்பான உங்களை எல்லாம் விட்டுட்டு அம்மா எப்படி மாமா சாக முடிவெடுத்தாங்க?"

"இன்னிக்கு வரைக்கும் அதுக்கான காரணம் புரியல்லம்மா. உன் அம்மா தெளிஞ்சு வந்து சொன்னாத் தான் தெரியும்."

"தாத்தா பாட்டி எல்லாம்?"

"எல்லாருமே அம்மாவோட இழப்பைத் தாங்காம போயிட்டாங்கம்மா. இந்நேரம் தாத்தா இருந்திருந்தா ரொம்ப சந்தோஷப்பட்டிருப்பாங்க."

"நாங்களும்தான் மாமா. சின்ன வயசுல இருந்தே இந்த சொந்தக்காரங்களுக்காக ரொம்ப ஏங்கியிருக்கோம். ஆனா அம்மா ஏன் உங்களையெல்லாம் பார்க்க வராம இருந்தாங்க?"

பெருமூச்சு விட்டார் கணேசன். "நீ சொன்ன நீலகண்டன் நாங்க நினைக்கிற ஆளா இருந்தா உன்

அம்மாவோட செயலுக்கு அவன்தான் காரணமா இருக்கணும்."

"மாமா! அப்பா..."

"ஆமாம்மா! எங்க வீட்ல வண்டி ஓட்டின ராசய்யாவோட புள்ளதான் நீலகண்டன்."

"மாமா?" – அதிர்ச்சியாய் நிமிர்ந்தாள்.

"அம்மா சரியான பிறகு எல்லாம் பேசிக்கலாம்மா. இப்ப இந்த நிமிஷம் என் தங்கையைப் பார்த்ததே போதும் எங்களுக்கு. அவ குணமாகுறது மட்டும்தான் இப்போ முக்கியம்."

"சரி மாமா! டாக்டர்கிட்ட பேசிட்டு அண்ணனை வரச் சொல்லட்டுமா?"

"முதல்ல அண்ணனை வரச் சொல்லும்மா. பார்க்கணும்னு ஆவலா இருக்கு."

"ஒரு நிமிஷம் மாமா. வெளியே போன் பாக்ஸ் இருக்கு. அண்ணனுக்கு போன் பண்ணிட்டு வந்திடுறேன்."

"சரிம்மா!"

"அம்மாவைப் பார்த்துக்க..."

"நாங்க பார்த்துக்கிறோம். நீ போயிட்டு வாம்மா."

"சரி மாமா!" – என்றவள் அறையை விட்டு வெளியேற...

பார்வதி இன்னும் இமைக்காமல் தன் சகோதரர்களையே பார்த்துக் கொண்டிருந்தாள்.



# 6

உறவுகள் தொடர்கதை ஒரு
கதை அங்கு முடியலாம் – பின்
முடிவிலும் ஒன்று தொடங்கலாம்
இனியெல்லாம் சுகமே!

அமுதனைப் பார்த்ததுமே அது நீலகண்டனின் வாரிசுதான் என சொல்லாமலேயே தெரிந்து கொண்டனர். மான்விழி தாயின் சாயல் என்றால் அமுதன் தந்தையை உரித்துக் கொண்டு பிறந்திருந்தான்.

அதே உயரம் அதே களையான முகம். யாருக்கும் அஞ்சாத நிமிர்வு. ஆராயும் கண்கள். அலட்டிக் கொள்ளாத கம்பீரம்.

அமுதனைக் கண்டதும் நிறைவாய் புன்னகைத்தனர் அண்ணன் தம்பி இருவரும்.

ஆனால் அமுதனின் முகத்தில் துளியும் சிரிப்பு வரவில்லை. அவனது கண்கள் சந்தேகமாக இருவரையும் அளவெடுத்தது. நம்பிக்கையில்லாமல் தங்கையிடம் திரும்பினான்.

"ஏன் மானு? படிச்சவதானே நீ? யார் வந்து என்ன சொன்னாலும் நம்பிடுவியா?" – குரலில் கோபம் தொனித்தது.

"என்ன அண்ணா?"

"இவங்க யாரு, என்னன்னு தெரியாம நீ பாட்டுக்கு உள்ள கூப்பிட்டு பேசிட்டு இருக்க. முக்கியமான வேலையில இருந்த என்னையும் கூட்டிட்டு வந்து என் வேலையைக் கெடுக்கிற?"

"அண்ணே! அதான் இவ்வளவு நேரமா எல்லாம் சொன்னேனே!"

"என்ன சொன்னே? உனக்கு உலக நடப்பு எதுவுமே தெரிய மாட்டேங்குது."

"ஏன் அண்ணா?"

"இப்பல்லாம் எவ்வளவோ சாமர்த்தியமா பேசி ஏமாத்துறாங்க தெரியுமா? யாரையும் நம்பிடக்கூடாதுன்னு உனக்கு எத்தனை முறை சொல்லியிருக்கேன்."

"தம்பி..." - கனிவாய் அழைத்தார் கணேசன்.

"என்ன?"

"எங்களைப் பார்த்தா ஏமாத்துற ஆட்கள் மாதிரியா தெரியுது?"

"உருவத்தைப் பார்த்து ஏமாற நான் ஒண்ணும் முட்டாள் இல்ல."

"தெரியுது தம்பி. உன் புத்திசாலித்தனம், அறிவுள்ள பேச்சு எல்லாமே நீ அறிவான புள்ளன்னு சொல்லுது. என் தங்கச்சி மகன் இவ்வளவு புத்திசாலியா இருக்கிறதுல எங்களுக்குப் பெருமைதான்."

"இதோ பாருங்க... நாங்க ஒண்ணும்..."

"பொறுப்பா... நீ ஒண்ணை யோசிச்சியா? இந்த வயசில் மனநிலை சரியில்லாம இருக்கிற உன் அம்மாவை ஏமாத்தி நாங்க கூட்டிட்டுப் போக வேண்டிய அவசியம் என்னப்பா எங்களுக்கு?"

"ஹலோ! நீங்க கூட்டிட்டுப் போக நினைக்கிறது எங்க அம்மாவ மட்டுமில்ல. எந்தங்கையையும் தான்."



"இல்லப்பா! உன்னையும்தான்!"

"என்ன?"

"என் தங்கையும் தங்கையோட புள்ளைங்களும் இங்க ஏன் இப்படி அநாதையா நிக்கணும்? எங்ககூட வந்திடுங்கய்யா!"

"ஆமா தம்பி! ஊர்ல நம்ம வீடு சொத்து சுகம் எல்லாம் இருக்கு. ஊர் முழுக்க நம்ம சொந்தக்காரங்க தான் இருக்காங்க. வாங்கப்பா. உன் அம்மாவையும் குணப் படுத்திடலாம்.

உன் தங்கைக்கும் நம்ம சொந்தத்திலேயே எத்தனையோ மாப்பிள்ளைங்க இருக்கு. அதில ஒரு அருமையான பையனாப் பார்த்து ஜாம் ஜாம்ன்னு கல்யாணம் பண்ணி வெச்சிடலாம்" - ராகவன் தன் பங்காய் பேசக் கோபமானான் அமுதன்.

"உங்களையே யாருன்னு தெரியாதுன்னு சொல்றேன். நீங்க என் தங்கைக்கு மாப்பிள்ளை பார்க்கிறீங்களா?

என் தங்கைக்கு எப்போ எதைச் செய்யணும்னு எனக்குத் தெரியும்!" - அமுதனின் பேச்சைக் கேட்டு இருவரும் முகம் மலர்ந்தனர்.

"ரொம்ப சந்தோஷமா இருக்குப்பா. என் தங்கை மேல நாங்க மூணு பேரும் வெச்சிருந்த அன்பைவிட நீ உன் தங்கை மேல அதிகமா வெச்சிருக்க. பார்க்கவே ரொம்பப் பெருமையா இருக்குப்பா."

"அண்ணே! அவங்கதான் எல்லாமே சொன்னாங்களே. இன்னும் ஏன் உனக்கு நம்பிக்கை வரல்ல?"

“மானு! குழந்தை மாதிரிப் பேசாதே. இவங்க சொல்றதெல்லாம் உண்மைன்னு எப்படி நம்புறது?”

“நீ நம்பணும்னா நாங்க என்னப்பா செய்யணும்?”

“எங்க அம்மா சொல்லாம எனக்கு நம்பிக்கை வராது.”

“அண்ணா! அண்ணாவுக்கு நம்மையே தெரியலியே. பிறகெப்படி அம்மா சொல்வாங்க? உனக்கு அம்மா குணமாகணுங்கிற எண்ணம் இல்லையா?”

“மானு! என்ன சொல்ற நீ?”

“அண்ணா! எனக்கு நம்பிக்கை இருக்கு. இவங்க ஒண்ணும் நம்மை ஏமாத்தணும்னு பிளான் பண்ணி வரல்ல. திடீர்னு என்னைப் பார்த்திட்டு என் முகத்தில அம்மாவோட ஜாடை தெரிஞ்சதால தேடி வந்திருக்காங்க.”

“அதெல்லாம் சரி மானு. ஆனா...”

“கேளுண்ணா. அம்மாவைப் பார்த்து இவங்க எப்படித் துடிச்சாங்க தெரியுமா? அம்மா முகத்துல கூட ஏதோ மாற்றம் தெரியுதுண்ணா. நீயே பாரேன்.” - என பார்வதியைச் சுட்டிக் காட்டினாள்.

அப்போதுதான் தாயைக் கவனித்தான் அமுதன். பார்வதியின் கண்கள் லேசாய் கலங்கியிருக்க, உதடுகள் ஏதோ பேச முயற்சிப்பதைப் போல் துடித்துக் கொண்டிருந்தது.

கணேசனின் முகத்தை விட்டு அசையாமல் நின்றது பார்வை. அந்தப் பார்வையில் ஆயிரம் தேடல் தெரிந்தது. எதையோ கண்டுகொண்ட தெளிவு தெரிந்தது.

தாயை நெருங்கினான். “அம்மா! ஏம்மா பேசாம நிக்கிற? எதையாவது பேசும்மா!” - பார்வதி அசையவில்லை.



“இவங்க யாரும்மா? நீ சொன்னாத்தானே எங்களுக்குத் தெரியும். சொல்லும்மா. அம்மா பேசும்மா.” - அமுதன் பேசப்பேச பார்வதியின் கலங்கிய கண்களில் இருந்து நீர் இறங்கியது.

பேச முடியாமல் தவித்தாள்.

“பழைய நினைவுகள் எதையாவது பேசிட்டே இருங்க. அப்பத்தான் உங்களோட நினைவுகளைத் தட்டியெழுப்ப முடியும்னு டாக்டர் சொன்னார்.

எத்தனை வயசு ஆனாலும் சின்ன வயசுல நடந்த நினைவுகள் யாருக்குமே அவ்வளவு சீக்கிரமா மறக்காது. அது நிச்சயமா மனசுல ஆழமாப் பதிஞ்சிருக்கும். மாமா! ஏதாவது ஒரு சம்பவத்தை அம்மாகிட்ட சொல்லுங்க மாமா.

படிக்கும் போதோ விளையாடும் போதோ இல்லே ஏதாவது விசேஷம் நடக்கும் போதோ ஏதாவது ஒரு விஷயத்தைச் சொல்லுங்க மாமா. திரும்பத் திரும்பப் பேசினாத்தான் அம்மாவுக்கு அதை நினைவுக்குக் கொண்டு வர முடியும்.

பேசுங்க மாமா. உங்க வாழ்க்கையில நடந்த ஏதாவது ஒரு விஷயத்தைப் பத்தி பேசுங்க மாமா.” - அவசரமாய் உந்தினாள்.

கணேசன் பார்வதியை நெருங்கினார். “பாரு! நான் உன் அண்ணன்டா. என்னைத் தெரியலையா? உனக்கு ஒரு பதிமூணு வயசு இருக்கும்.

அப்போ மாட்டுப் பொங்கல். அன்னிக்கு நம்ம புளியந்தோப்புல ஊஞ்சல் கட்டியிருந்தோம். உன்னை உட்கார வெச்சு நான்தான் ஆட்டிவிட்டேன், ஞாபகமிருக்கா?

நீ வேகமா ஆட்டச் சொன்னே. நானும் ஆட்டி விட்டேன். அப்போ நீ ஊஞ்சல்ல இருந்து வழுக்கி கீழே விழுந்திட்டியே. உன் கையில உள்ள கண்ணாடி வளையல் உடைஞ்சு உன் கையைக் கிழிச்சதே.

நிறைய இரத்தம் வழிஞ்சுதே. ரொம்ப நேரம் அழுதியே. அண்ணன்கிட்ட ஒரு வாரமாப் பேசாம இருந்தியேடா. நினைவு இருக்கா?" – ஆர்வமாகக் கேட்க, குழப்பமாய் புருவம் சுருக்கினாள் பார்வதி.

"சரி! அதை விடு. ஏன்டா கண்ணு. உனக்கு அந்த சதாசிவத்தை ஏம்மா பிடிக்கல்ல?" – இந்தக் கேள்விக்கு விழிகளை விரித்தாள்.

"உனக்குப் பிடிக்கலன்னா நீ எங்ககிட்ட சொல்லியிருக்கலாமில்ல. நீ ஏன்டா ஆத்துல குதிச்ச?"

பார்வதியின் முகம் வெளிறியது. தலையை ஆட்டி மறுத்தாள்.

"உனக்கு நீலகண்டனைத்தான் பிடிச்சிருக்குன்னு சொல்லியிருந்தா நாங்களே கல்யாணம் பண்ணி வெச்சிருப்போமே. நீ ஏம்மா உசிரை விடத் துணிஞ்ச? நீலகண்டனை உனக்கு எப்படியம்மா தெரியும்?

எங்களை, நம்ம அம்மாவை அப்பாவை ஒரு நிமிஷமாவது நினைச்சுப் பார்த்தியா?

உன்னைத் தேடித் தேடி எத்தனை நாள் துடிச்சோம் தெரியுமா? ஏன்டா ஆத்தில குதிச்ச? உன்னை யாரும்மா காப்பாத்தினாங்க?" – கணேசன் திரும்பத் திரும்ப அதே வார்த்தையைக் கேட்க, பார்வதி மறுப்பாய் தலையாட்டினாள்.



"இல்ல... இல்ல... நான்... நானா ஆத்துல குதிக்கல்ல. இல்ல" – திணறலாய் அவள் பேச, அனைவரின் முகமும் பிரகாசமானது. மான்விழி அவசரப்படுத்தினாள்.

"மாமா! கேளுங்க. ஏதாவது கேளுங்க மாமா?"

"நீ குதிக்கலையா? இல்லையே... நீதான் குதிச்சேன்னு துணி துவைச்சிட்டு இருந்தவங்க பார்த்திட்டு வந்து சொன்னாங்களே."

"இல்ல... நான் வேணும்னு குதிக்கல்ல. அவன்தான்... அவன்... அவன்தான்..."

"யாரும்மா?"

"அவன்தான்... அந்த மாப்பிள்ளை..."

"யாரு? ச... சதாசிவமா?"

"ம்... அவன்தான்... அவன்தான்..."

"அவன் என்னம்மா செய்தான்? எப்போ உன்னைப் பார்த்தான்? சொல்லுடா கண்ணு. அவன் எப்படி நம்ம ஊருக்கு வந்தான்?" – கணேசனும் ராகவனும் மாறிமாறிக் கேட்க, பார்வதி தலையை அழுந்தப் பற்றிக் கொண்டாள்.

கண்கள் பயத்தில் வெளிறியது. பார்க்கக்கூடாத எதையோ நேரில் பார்த்தது போல் பயந்து நடுங்கினாள். இரு கரங்களாலும் தன் மேனியை இறுக மூடிக்கொண்டே தரையில் அமர்ந்து கொண்டாள்.

அவளது உடல் இன்னும் நடுங்கிக் கொண்டே இருக்க, அமுதன் தாயை நெருங்கிப் பரிவாய் தோளைத் தொட்டான். விருட்டென கையைத் தட்டி விட்டாள் பார்வதி.

"தொடாதே... தொடாதே!" – கத்தினாள்.

"அம்மா...! ஏம்மா! நான் உன் புள்ளம்மா."

"தொடாதேன்னு சொல்றேனில்ல. தொட்டா செத்திடுவேன்." - பார்வதி குரல் கடினமாய் ஒலித்தது.

மற்றவர்களின் முகம் சட்டென மாறிவிட, மான்விழி தாயை அணைத்துக் கொண்டாள்.

"அம்மா! என்னம்மா? ஏன் பயப்படுறே?"

"விடு என்னை. தொடாதே. என் உயிரே போனாலும் சரி. என்னைத் தொட விடமாட்டேன். போ... போயிடு." - வெறி வந்தவள் போல் மான்விழியை அடிக்கத் தொடங்கினாள் பார்வதி.

அமுதன் பதறித் தடுத்தான். "அம்மா! என்ன பண்றே நீ?"

"டேய்! நீதான்டா இதுக்கெல்லாம் காரணம். உன்னால தான் என் குடும்பத்தையே இழந்திட்டேன். போ. போடா... போடா." - கத்திக்கொண்டே மயங்கிச் சரிந்த அன்னையை மடியில் ஏந்திக் கொண்டான்.

"அம்மா! அம்மா! உனக்கு என்னம்மா ஆச்சு? கண்ணைத் திறம்மா. அம்மா!" - குரல் கொடுத்துக் கொண்டே கன்னத்தைத் தட்டினான்.

"அண்ணா! நான் போய் டாக்டரைக் கூட்டிட்டு வர்றேன்..." - என வெளியே ஓடினாள் மான்விழி.

கணேசனும் ராகவனும் பதறிப் போனார்கள். "பார்வதி! கண்ணைத் திறம்மா! அண்ணனைப் பாரும்மா. கண்ணு. பாரும்மா." - கண்ணீரோடு கெஞ்சியவரைப் பார்க்கையில் மனம் கனிந்தான் அமுதன்.



"தம்பி! அம்மா ஏன் இப்படி மயங்கிட்டா. இதுக்கு முன்னால இப்படி எதுவும் ஆகியிருக்கா?" - பதறியவாறே கேட்டவரைப் பார்த்துத் தலையசைத்தான்.

"இல்ல மாமா! கோபமாப் பேசுவாங்க. திட்டுவாங்க. ஆனா இப்படி மயங்கினதில்ல. கூடுமானவரை யார்கிட்டயும் பேசமாட்டாங்க."

"தம்பி! நீ... என்னை மாமான்னா கூப்பிட்டே?"

"ஆமா மாமா! அம்மாகிட்ட நீங்க பேசினதெல்லாம் உண்மைன்னு உங்க கண்ணே சொல்லிடுச்சி. அதோட அந்தப் பேரை நானும் கேட்டிருக்கேன்."

"எந்தப் பேரை?"

"சதாசிவம்ன்ற பேரை. சின்ன வயசில நான் தூங்கிட்டேன்னு நினைச்சுகிட்டு அப்பா அம்மாகிட்ட இந்தப் பேரைச் சொல்லி நிறைய நாள் அழுதிருக்காங்க."

"என்ன?"

"ஆமாம் மாமா. ஏன் அழுதாங்கன்னு எனக்குத் தெரியாது. ஆனா இந்தப் பேரைச் சொல்லித்தான் அழுவாங்க. என்னால இந்தப் பேரை மறக்க முடியாது."

"தம்பி! இது உன் அம்மாவிற்காக எங்கள் அப்பா பார்த்த மாப்பிள்ளையின் பெயர்!"

"அந்த ஆளிடம்தான் ஏதோ தப்பு இருக்கு. அதான் அந்தப் பேரைக் கேட்டதும் அம்மா இப்படி டென்ஷனாயிட்டாங்க."

"என்னவெல்லாமோ பேசினாளேப்பா. எனக்குப் புரியுற மாதிரியும் இருக்கு. புரியாத மாதிரியும் இருக்கு."

"மாமா! அந்த ஆள்... அதுதான் அந்த சதாசிவம் உங்கள் ஊர்க்காரரா?"

"இல்லப்பா! ஸ்ரீவைகுண்டம் அவனுக்கு. உன் அத்தையின் - அதாவது என் மனைவியின் அண்ணன்."

"இப்போது அவர் எங்கே இருக்கிறார்?"

"அவன் செத்துப் போய் நாலு வருஷம் ஆச்சுப்பா."

"என்ன? செத்துட்டாரா? எப்படி?"

"ஏதோ நோயின்னு படுத்தான். ரெண்டு வருஷமா படுக்கையில் கிடந்து ரொம்ப கஷ்டப்பட்டுத்தான் செத்தான்."

"ச்சே..."

"ஏம்ப்பா?"

"மாமா! அந்த ஆள்கிட்டதான் ஏதோ தப்பு இருந்திருக்கு. அவன் உயிரோட இருந்தா விசாரிச்சா ஏதாவது தகவல் கிடைக்கும்னு பார்த்தேன்."

"அப்படியா சொல்ற?"

"ஆமா மாமா. ஏன்னா அம்மா இந்த நிலைமை யிலயும் அந்தப் பேரை மறக்கலேன்னா அவரால ஏதோ பாதிப்படைஞ்சிருக்காங்கன்னு தானே அர்த்தம்."

"ஆமா! நீ சொல்றது வாஸ்தவம்தான். ஆனா... உங்க அம்மா இறந்திட்டதா நாங்க தேடினப்போ அவனும்தானே தேடினான். வேற கல்யாணமே பண்ணிக்க மாட்டேன்னு கூட அழுதானே."

"கல்யாணம் பண்ணிக்கவே இல்லையா?"

"ஒரு ரெண்டு வருஷம் கழிச்சு நாங்கதாம்ப்பா பேசி சமாதானம் பண்ணி கல்யாணம் செய்து வைச்சோம்."



"ஓஹோ!" - யோசனையாய் அமுதன் கேட்டுக் கொண்டிருந்த போதே, மான்விழி டாக்டரோடு பரபரப்பாய் உள்ளே நுழைந்தாள்.

பார்வதியைத் தூக்கி கட்டிலில் படுக்க வைத்தான் அமுதன்.

"நீங்க வெளியே வெயிட் பண்ணுங்க!" என டாக்டர் கூறியதும் அனைவரும் வெளியேறி தவிப்பாய் காத்திருக்க ஆரம்பித்தனர்.

## 7

*மலர்களில் ஆடும் இளமை புதுமையே*
*மனதிற்குள் ஓடும் நினைவு இனிமையே*
*புதிய சுகமே பூங்காற்றே நீ பாடு!*

முகம் முழுக்கப் புன்னகையோடு காரின் பின் இருக்கையில் அமர்ந்திருந்தாள் மான்விழி. இனம்புரியாத இன்பத்தில் மனம் நெகிழ்ந்திருந்தது. கண்ணில் காணக் கிடைத்த காட்சிகளையெல்லாம் ரசிக்கத் தோன்றியது.

விபரம் தெரிந்த நாளிலிருந்து அழுத்திய மனபாரங்கள் அனைத்தும் ஒரே நாளில் விலகியதுபோல் மனம் லேசாகி மிதந்தது. எப்போதும் எதையோ வெறித்துக் கொண்டும் இல்லையென்றால் எதற்காகவோ திட்டிக்கொண்டே இருக்கும் அம்மாவின் முகம் இப்போது தெளிவாக இருந்தாள்.

அடையாளம் தெரிகிறதோ இல்லையோ ஆனால் மாமாக்கள் பேசும் வார்த்தைகளைக் காது கொடுத்துக் கேட்கிறாள். "ம்" கொட்டுகிறாள். மகனிடமோ மகளிடமோ வெறுப்பான பார்வையை வீசாமல் புன்னகைக்கிறாள்.

இதுவே பெரிய அதிசயமாகப் பட்டது மான்விழிக்கு. அதைவிடவும் பெரிய அதிசயம் அம்மாவின் ஊருக்குச் செல்ல அமுதன் சம்மதித்ததுதான்.

இரண்டு நாட்களுக்கு முன் மாமாவின் பேச்சைக் கேட்டு மயங்கிய பார்வதியைப் பரிசோதித்த டாக்டர் மலர்ந்தார்.

"மிஸ் மான்விழி! உங்க அம்மாகிட்ட நல்ல மாற்றம் தெரியுது. இவங்களுடைய பழைய நினைவுகள் ஞாபகம் வர ஆரம்பிச்சிருக்குன்னு நினைக்கிறேன்."

"ஆமா டாக்டர்! மாமா பேசினதுக்கு அம்மா ஏதோ பதில் பேசினாங்க. ரொம்ப உணர்ச்சிவசப்பட்டாங்க."

"வெரிகுட். இனி பயமில்லை. இப்படியே பேசிட்டே இருங்க. மறந்து போனதை எல்லாம் நினைவுபடுத்துங்க. சீக்கிரமே குணமாக வாய்ப்பு இருக்கு."

"டாக்டர்! எங்க தங்கையை எங்க ஊருக்கு அழைச்சிட்டுப் போகலாமா?" – கணேசன் கேட்டார்.

"நீங்க யாரு?"

"பார்வதியோட அண்ணன். இவ எங்களோட ஒரே தங்கை."

"தாராளமா அழைச்சிட்டுப் போகலாம். அவங்க நடமாடிய இடங்களைப் பார்க்கும்போது சீக்கிரமே க்யூராகிடுவாங்க."

"டாக்டர்! ட்ராவல் பண்ணினா அம்மாவுக்கு எதுவும் கஷ்டமா இருக்காதா?"

"நோ ஸார்! அவங்க உடம்புக்கு எந்த வியாதியும் இல்ல. நீங்க தாராளமா அழைச்சிட்டுப் போகலாம்."



"தேங்க்யூ டாக்டர்."

"மார்னிங் வந்த டாக்டர் சொன்னதெல்லாம் நினைவிருக்கட்டும்."

"இருக்கு டாக்டர்." – என்றதோடு மாமன்களிடம் தங்கையையும் தாயையும் அனுப்பி வைக்க சம்மதமும் சொன்னான் அமுதன்.

"அப்போ உடனே கிளம்புங்க." – அவசரப்படுத்தினார் ராகவன்.

"மாமா! நான் தைச்சுக் கொடுக்க வேண்டிய துணியெல்லாம் கொஞ்சம் இருக்கு. அதோட கரண்ட் பில் கட்டணும். கொஞ்சம் வேலைகள் எல்லாம் இருக்கு."

"ஆமா மாமா! எனக்கும் ஷெட்ல நிறைய வேலைகள் இருக்கு. அப்படியே போட்டுட்டு வரமுடியாது. உங்க வீட்டு அட்ரஸை கொடுத்திட்டுப் போங்க. ஒரு நாலு நாள்ல எல்லா வேலையும் முடிச்சுட்டு நானே இவங்களைக் கூட்டிட்டு வந்து விடுறேன்."

"வந்து விடுறியா? அண்ணா! அப்போ நீ மாமா வீட்ல எங்க கூட இருக்க மாட்டியா?"

"என்ன மானு இப்படிக் கேட்கிற? நான் அங்கே வந்தா என் வேலை கெட்டுப் போயிடுமே!"

"அப்போ நானும் அம்மாவும் மட்டுமா போகணும்?" – மான்விழியின் முகம் வாடிப்போனது.

"இல்லம்மா. நான்தான் உங்களை வந்து விட்டுட்டு உடனே கிளம்பிடுறேன். நீ அம்மாவுக்கு குணமாகிற வரைக்கும் அங்கேயே இரு. நான் அப்பப்போ போன் பண்றேன்."

"என்ன அண்ணா நீ? நீ மட்டும் இங்கே தனியா சாப்பாட்டுக்கு என்ன பண்ணுவே?"

"ஏம்மா! கடையைச் சுத்தி எத்தனையோ ஹோட்டல் இருக்கு. நான் சாப்பிட்டுக்க மாட்டேனா?"

"நீ வேலை வேலைன்னு சாப்பிடவே மாட்டியே!"

"மானு! என் சாப்பாட்டை விட நம்ம அம்மா குணமாகிறதுதானே முக்கியம்?"

"ம்..."

"அப்போ உன் வேலையை எல்லாம் முடிச்சுட்டு கிளம்பு. நான் என் பிரண்ட்ஸ்கிட்ட இருந்து கார் வாங்கிட்டு வந்திடுறேன். கார்லயே போயிடலாம்."

"ஏம்பா... இங்கே இருந்தே கார்லயா போகணும்?"

"ஆமா மாமா! அம்மாவை இப்படி வெச்சுகிட்டு ஏன் ட்ரெயின்லேயோ பஸ்லயோ கூட்டிட்டுப் போய் கஷ்டப் படணும்? பேசாம கார்லயே போயிடலாம்."

"நீ கார் ஓட்டுவியா?"

"லைசன்ஸ்கூட இருக்கு மாமா. தைர்யமா என் கூட கார்ல வரலாம்." – என்றான் அமுதன் புன்னகைத்தவாறே.

கணேசன் ராகவனைப் பார்த்தார். "தம்பி! ரொம்ப வருஷத்துக்குப் பிறகு தங்கையையும் புள்ளைங்களையும் பார்த்திருக்கோம். பேசாம இவங்க கூடவே ரெண்டுநாள் இருந்திட்டு இவங்களையும் அழைச்சிட்டே போய்டுவோமே."

"சரிண்ணே! அப்படியே செய்திடலாம்."

"மாமா! நீங்க ஏதோ வேலையா வந்தேன்னு சொன்னீங்களே... வீட்டுல தேட மாட்டாங்களா?"



"போன் பண்ணி சொல்லிடலாம்மா. மத்த வேலைகளைப் பார்க்க அங்க ஒரு மாமன் இருக்கான். எங்க புள்ளைங்க அவன் புள்ளைங்கன்னு எல்லாரும் பார்த்துப்பாங்கம்மா."

"மாமா! நீங்க எல்லாருமே ஒரே வீட்லயா இருக்கீங்க?" – மான்விழி வியப்பாய்க் கேட்டாள்.

"ஆமா! நம்ம வீடு ரொம்ப பெரிய வீடும்மா. தாத்தா காலத்தில கட்டின வீடு. அப்பவே எல்லாரும் மொத்தமா சேர்ந்து வாழணும்னு முடிவு பண்ணிக் கட்டின வீடு.

தனித்தனி அறைகளா இருந்தாலும் சமையலறையும் தலைவாசலும் ஒண்ணுதான். அப்போ இருந்து இப்போ வரை நாங்க ஒத்துமையாத்தான் இருக்கோம்.

எனக்கு நாலு புள்ளைங்க. ராகவனுக்கு மூணு புள்ளைங்க. சின்ன மாமா கேசவனுக்கு ஒரே ஒரு பொண்ணு. அவங்க எல்லாரும் கூட ரொம்ப ஒத்துமையா இருப்பாங்க. எதுக்கும் சண்டை போட மாட்டாங்க." – பெரிய மாமா கனிவோடும் பெருமையோடும் சொல்ல, மான்விழிக்கு அப்போதே ஊருக்குச் செல்லும் ஆசை எழுந்தது.

பிறந்தது முதலே தன் வீட்டில் நால்வர் மட்டுமாய் வாழ்ந்தவள். அதிலும் இடையில் தந்தையை இழந்து, தாயும் முடங்கிப் போனதில் பெரும்பாலும் தனிமையில் இருந்து அந்தத் தன்மையையே வெறுத்தவள்.

இப்போது ஒரு பெரிய கூட்டுக் குடும்பத்திற்கு போகப் போகிறோம் என்ற எண்ணமே உற்சாகமூட்டியது. சினிமாக்களில் மட்டுமே பார்த்து ரசித்த கூட்டுக் குடும்ப வாழ்க்கையை நேரிடையாய் காணப் போகிறோம்; அதில் ஒருத்தியாய் வாழப் போகிறோம் என்ற எண்ணம் இனித்தது.

**கா**ரை சீரான வேகத்தில் செலுத்திக் கொண்டிருந்தான் அமுதன். அவனருகே ராகவன்.

பின் இருக்கையில் பார்வதியை நடுவே அமர வைத்துவிட்டு இருபுறமும் மான்விழியும் கணேசனும் அமர்ந்திருந்தனர்.

மான்விழி வெளியே தெரிந்த இயற்கைக் காட்சிகளை ரசித்துக் கொண்டே வர, கணேசன் மெல்லிய குரலில் பார்வதியிடம் பேசிக்கொண்டே வந்தார்.

"பார்வதி! உம் பிள்ளை நான் எத்தனை முறை சொல்லியும் என் பேச்சைக் கேட்கவே இல்லை..." - என புகார் செய்ய, பார்வதியிடமிருந்து புன்னகை மட்டுமே பதிலாய் வந்தது.

'மாமா! என்ன அம்மாகிட்ட கம்பளெயிண்ட் பண்றீங்க?'" - காரை செலுத்திக் கொண்டே கேட்டான் அமுதன்.

"உண்மையைத்தான் சொல்கிறேன்."

"என்ன உண்மை?"

"ஏம்பா... நம்ம ஊர்ல வீடு வாசல் எல்லாம் இருக்கும்போது நீங்க ஏன் இங்கே தனியாக் கிடந்து கஷ்டப்படணும்?"

"இது ஒண்ணும் கஷ்டமில்ல மாமா."

"அப்படிச் சொல்லாதப்பா. இதுவரைக்கும் எங்க கண்ல நீங்க படல்ல... இப்போத்தான் சொந்தம் கூடிப் போச்சே. பேசாம நம்ம ஊருக்கே வந்திடுங்கப்பா."

"தொழிலை விட்டுட்டு வரமுடியாது மாமா."



"என்ன பெரிய தொழில். இந்த மெக்கானிக் வேலையில என்னப்பா சம்பாதிக்கப் போறே? நம்ம தோட்டத்தில எவ்வளவோ வேலை இருக்கு. ஆளுக்கு ஒரு தோப்பை கவனிச்சிட்டாலே போதும். யார்கிட்டயும் கையேந்த வேண்டாம்."

"மாமா! திரும்பவும் சொல்றேன். நான் இவங்களை அங்கே அனுப்ப முழுக்காரணம் அம்மா மட்டும்தான். அம்மா குணமான உடனே நான் வந்து அழைச்சிட்டு வந்திடுவேன்."

"இதைத்தான் நூறு தடவை சொல்லிட்டியே!"

"கேளுங்க மாமா. இதையே காரணமா வெச்சிகிட்டு இந்தத் தோப்பை வெச்சுக்க. இந்த வீட்டை வெச்சுக்கன்னு என் தலையில பாரத்தை ஏத்திடாதீங்க."

"ஏய்! என்னப்பா பேசுற?" - ராகவன் பதறினார்.

"உண்மைதான் மாமா. அம்மாவுக்கு அவங்க அண்ணனுங்களும் தாய் வழி சொந்தங்களும் வேணும். மானுக்கு எப்பவுமே சொந்தக்காரங்க மேலே ரொம்ப ஈடுபாடு உண்டு.

நம்ம வீட்டுக்கு மட்டும் விருந்தாளே வரமாட்டேங்குதுன்னு ஏங்கிப் போவா! ஸோ... அவளுக்கு இந்த சொந்தங்கள் தேவைதான். எனக்கு உங்க அன்பும் அக்கறையும் மட்டும் போதும்."

"அது எப்பவுமே உண்டுப்பா."

"அதுக்காகத்தான் சொல்றேன். நீங்க பாட்டுக்கு சொத்து அது இதுன்னு பேசினா, என்னடா இது புதுசா இவன் பங்குக்கு வந்திருக்கானேன்னு உங்க வீட்ல யாரும் கோவிச்சுக்கப் போறாங்க."

"அண்ணா! என்ன பேசுற நீ? அது நம்ம வீடுன்னா

"இல்ல மானு! அது நம்ம அம்மாவோட வீடு. நம்ம வீடு சென்னையில இருக்கு."

"ஏம்ப்பா இப்படிப் பிரிச்சுப் பேசுற?"

"இல்ல மாமா. இவ்வளவு காலம் சென்னையில வாழ்ந்திட்டா இவ. இப்போ போறது கிராமம். அதுவும் விருந்து வீடு. அங்கே போய் இவ அதிகம் உரிமை எடுத்துக்கக் கூடாதில்ல."

"அமுதன்! அது என் தங்கை வீடு. அவ வீட்ல அவ பொண்ணுக்கு இல்லாத உரிமையா? இதோ பாரு. நீ என்ன சொன்னாலும் சரி. இவ என் மருமக. இவளை நாங்களே வெச்சுப்போம்."

"மாமா!"

"ஆமான்டா. எங்களுக்கு மொத்தம் நாலு மகனுங்க இருக்கானுங்க. நாலு பேருமே சிங்கக் குட்டிகள். அதுல எந்த சிங்கக் குட்டியை இந்த மான் குட்டிக்கு பிடிச்சிருக்கோ அவனையே கட்டி வெச்சு எங்க மருமகளை எங்க வீட்டோட வெச்சுக்குவோம்."

"அண்ணா! இது நல்ல யோசனை." - முன் இருக்கையில் இருந்த ராகவன் உற்சாகமாய் கூவினார்.

மான்விழி இதையெல்லாம் எதிர்பார்க்கவில்லை. சட்டெனத் தடுமாறினாள். இதுவரை இருந்த உற்சாகம் மறைந்து லேசாய் பயம் எட்டிப் பார்த்தது. கல்யாணமா? எனக்கா?

தன்னைச் சுற்றிலும் கோரைப் பற்களோடு நான்கு சிங்கங்கள் நிற்பதைப் போலவும் நடுவே மிரண்ட



பார்வையோடு ஒரு குட்டி மானாக தான் நிற்பதைப் போலவும் கற்பனை செய்து பார்த்தாள்.

நினைப்பே பயமுறுத்தியது. இப்போது போவது கிராமத்திற்கு. கிராமத்து இளைஞர்கள் எப்படி இருப்பார்கள்? வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு, தலை நிறைய எண்ணெய் தேய்த்துப் படிய வாரிவிட்டு, முறுக்கு மீசை யோடு...

ஐயோ! வேண்டாம். முறுக்கு மீசை என்றாலே பயம். பேசாமல் அண்ணனைக் காரைத் திருப்பச் சொல்லி விடலாமா? பதறியபோதே அமுதன் குரல் கொடுத்தான்.

"மாமா! என்ன இது? ஏதோ திட்டம் போட்டுத்தான் எங்களை அழைச்சிட்டுப் போறீங்களா?"

"திட்டமும் இல்ல ஒண்ணும் இல்ல..."

"பின்னே? இப்போ எதுவோ சொன்னீங்களே?"

"நீ சும்மா பிரிச்சுப் பேசினியே. அந்தக் கடுப்பில சொன்னேன். ஆனா நான் சொன்னதுல எந்தத் தப்பும் இல்லையே!"

"வேணாம் மாமா! அப்படி எந்தக் கற்பனையும் பண்ணிட்டு ஏமாந்திடாதீங்க!"

"ஏன்டா?"

"நான் என்னால முடிஞ்ச அளவுக்கு கொஞ்சம் வசதியானதா ஒரு மாப்பிள்ளை பார்த்து வெச்சிருக்கேன்."

"என்ன?" - மற்றவர்களோடு சேர்ந்து மான்விழியும் அதிர்ந்தாள்.

"மாப்பிள்ளை எனக்குத் தெரிஞ்ச பையன்தான். நம்ம குடும்பத்தைப் பத்தியும் தெரியும். எல்லாம் பே

வெச்சிட்டேன். இவதான் அம்மாவுக்கு குணமாகாம கல்யாணமே பண்ணிக்க மாட்டேன்னு சொல்லிட்டு இருக்கா."

"அண்ணா! இப்ப ஏன் தேவையில்லாததை எல்லாம் பேசுற?"

"ஏம்மா! மாமாகிட்ட சொல்ல வேண்டாமா? அப்புறம் அவங்க பாட்டுக்கு ஏதாவது ஒரு மகனைக் காட்டி உன்னைக் கட்டிக்கச் சொன்னா..."

"நிறுத்துண்ணா! எனக்கு... இதெல்லாம் பிடிக்கல்ல." – கோபமாய் கத்தினாள்.

"மானு!"

"அண்ணா. ப்ளீஸ்! நீயா எதையாவது பேசி என்னைக் கஷ்டப்பட வைக்காதே."

"மானு! என்னம்மா சொல்றே?"

"எனக்கு இப்போதைக்கு கல்யாணம் பண்ற எண்ணமோ ஆசையோ இல்லை. முதல்ல அம்மா குணமாகட்டும். இத்தனை நாளா எனக்குக் கிடைக்காத தாயன்பு கிடைக்கட்டும்.

அந்த அன்பைத் திகட்டத் திகட்ட அனுபவிச்ச பிறகு நீ என்ன சொன்னாலும் கேட்கிறேன். அதுக்கு முன்னால எனக்குத் தெரியாம எதுவும் பண்ணிடாதே. சொல்லிட்டேன்." – உறுதியாய் கூறினாள்.

தங்கையின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு, "சரிம்மா" – என்றான்.

"ராகவா!" – கணேசன் அழைத்தார்.

"அண்ணே!"



"பார்த்தியா? கடைசியில இந்தப் பய மான்குட்டிகிட்ட பணிஞ்சிட்டான். நம்மையே நாம பார்த்த மாதிரியில்ல."

"எனக்கும் அப்படித்தான் தோணுது."

"நாமளும் இந்தக் குட்டிகிட்ட ஜாக்கிரதையா இருக்கணும்டா. இல்லன்னா இது நம்மையே மிரட்டிடும்" – என்றார் பயமாய்.

"மாமா! நீங்க ஒண்ணும் பயப்படாதீங்க. இதோட மிரட்டல் எல்லாம் என்கிட்டதான். வெளியாளை யாரைக் கண்டாலும் மிரண்டுடுவா."

"நிசமாவா?"

"ஆமா! அதட்டினாலே அழுதிடுவா. பாவம். அதனால தான் நான் இதை அழவைக்கிறதே இல்லை." – அமுதன் கனிவாய்ச் சொல்ல, மான்விழி பூரிப்பாய் புன்னகைத்தாள்.

ஆனால் அவள் ஆசைப்பட்டுப் போகும் இடத்தில் அவளைத் தினமும் அழவைக்கப் போகிறார்கள் என்பதை அண்ணனோ தங்கையோ அறிந்திருக்கவில்லை.

## 8

பொன்னை வைத்த இடத்தினிலே
பூவை வைத்துப் பார்ப்பதற்கு
அண்ணன் அன்றி யாருமுண்டோ
இன்னுமொரு சொந்தம் உண்டோ
அதன் பேர் பாசம் அன்றோ!

**கா**ரை விட்டு இறங்கிய பார்வதியின் விழிகள் மிரட்சியாய் சுற்றிலும் பார்த்தன.

தன் வீடு என்ற உணர்வு தோன்றியதோ... மெல்ல நடந்து வாசல் கதவருகே சென்று சுவர், கதவு, ஜன்னல் என ஒவ்வொன்றாய் வருடிப் பார்த்தாள்.

காரிலிருந்து இறங்கிய மற்றவர்கள் வியப்பாய் அவளைப் பார்த்துக் கொண்டு நிற்க, பக்கவாட்டு அறையிலிருந்து ஓடி வந்தார் கேசவன்.

“அண்ணே! வந்திட்டீங்களா? நம்ம பாரு எங்கேண்ணே?”

“இதோ!” – என கைகாட்டிய கணேசனின் கண்கள் கலங்கியிருந்தது. ஆவலாய் தங்கையை நெருங்கினார் கேசவன்.

“அம்மாடி! என் தங்கமே! இத்தினி வருஷமா எங்கேடா போயிருந்தே? எங்களை எல்லாம் எப்படி மறந்தே?” – கேட்ட இளைய சகோதரனைப் புரியாமல் பார்த்தாள் பார்வதி.

கேசவனின் முகம் மாறியது. “பாரு! என்னைத் தெரியலியா உனக்கு? என் முகம் கூட உனக்கு நினைவில்லையா?” – இதற்கும் பார்வதியிடம் பதில் இல்லாமல் போகவே கணேசனிடம் திரும்பினார் கேசவன்.

“அண்ணே! என்ன இது? தங்கச்சி என்னை யாரையோ பார்க்கிற மாதிரி பார்க்கிறா. என்னை அவளுக்கு அடையாளம் தெரியலையா?” – தவிப்பாய்க் கேட்ட தம்பியின் தோளைத் தட்டினார் ராகவன்.

“கேசவா! அவளுக்கு எங்களையே அடையாளம் தெரியலப்பா.”

“என்ன?” – கேசவனின் முகம் அதிர்ந்தது.



“ஆமாம்ப்பா. எல்லாத்தையும் நேர்ல சொல்லிக்கலாம்னு அண்ணன் சொன்னதால நாங்க வர்றதை மட்டும் சொன்னேன்.”

“ஏண்ணே! பார்வதிக்கு என்ன ஆச்சு?”

“கேசவா! முதல்ல உள்ளே போவோம். அப்புறம் எல்லாம் தெளிவாச் சொல்றேன். ஏன் கண்ணுங்களா வெளியே நிற்கிறீங்க? வாங்க! இது உங்க வீடு. உள்ளே வாங்க.”

முகமெங்கும் புன்னகையோடு அவர்கள் அழைத்த போதும் மான்விழிக்கு ஏனோ வெறுமையாய்த் தோன்றியது.

எத்தனை பெரிய வீடு. ஆனால் ஏன் ஒருவர் முகம்கூடத் தென்படவில்லை. நாங்கள் வருவது தெரியுமே. தெரிந்தும் ஏன் வாசலில் வந்து வரவேற்கவில்லை?

நாங்கள் வருவது ஒருவருக்கும் பிடிக்கவில்லையோ? விருந்தினரை உபசரிப்பதில் கிராமத்தினரை மிஞ்ச முடியாது என்பார்களே. ஆனால் இங்கு அப்படி ஒன்றும் நடக்கவில்லையே.

யோசனையாய் நின்றவளை அசைத்தான் அமுதன்.

“மானு! எவ்வளவு நேரம்தான் நின்று இந்த வீட்டை ரசிப்பாய்? இனி இங்குதானே இருக்கப் போகிறாய். நிதானமாய் ரசிக்கலாம். உள்ளே வா.”

“அ... அண்ணா!”

“ம்...”

“நீ... இன்னிக்கே ஊருக்குப் போகணுமா?”

"ஆமா! நைட் கிளம்பினாத்தானே காலையில கடையைத் திறக்க முடியும்."

"அண்ணே! எனக்கு என்னவோ பயம்மா இருக்கு. பேசாம நானும் உங்கூட வந்திடவா?" – என்றவளை வியப்பாய் பார்த்தான்.

"மானு! என்ன சொல்ற நீ?"

"என்னன்னு தெரியலண்ணா. மனசுக்கு ஒரு மாதிரி இருக்கு."

"ஏன்?"

"ஏன்னு தெரியல்ல. பயம்மா இருக்கு."

"புது இடமில்ல. அதான் அப்படியிருக்கும். பயப்படாதே."

"அண்ணா! மாமா வீட்ல எல்லாருக்கும் நம்மைப் பிடிக்குமா?"

"பிடிக்கும். பிடிக்காமலா நம்மை இவ்வளவு தூரம் வற்புறுத்திக் கூட்டிட்டு வந்திருக்காங்க."

"ஆனா... யாருமே வெளியே வரலியே. ஒரு வேளை..." – மான்விழி பேசும்போதே வெளியே வந்தார் கேசவன்.

"என்னம்மா. இங்கேயே நின்னுட்டீங்க. உள்ளே வாங்க." – என அழைத்ததும் சங்கோஜமாய் வீட்டினுள் நுழைந்தாள்.

வீடு முழுக்க வெகு சுத்தம். பளபளப்பாய் இருந்த தரையில் கால் வைக்கவே தயக்கமாய் இருந்தது. நான்கு புறமும் இருந்த பெரிய ஜன்னல்கள் காற்றையும் வெளிச்சத்தையும் தாராளமாய் வழங்கின.



மர நாற்காலிகள், மர மேஜைகள், மூங்கில் கூடைகள் என அனைத்தும் பழமையானதாகவும் புதுமையாகவும் இருந்தன. ஹாலின் நடுநாயகமாய் வெண்கலச் சங்கிலியால் பிணைக்கப்பட்ட கனமான உறுதியான ஊஞ்சல்.

நிச்சயமாய் பத்து பேர் ஏறி அமர்ந்தாலும் தாங்கும். ஹாலின் ஓரமாய் இரு பக்கங்களிலும் வளைவான மாடிப்படிகள். மரத்தால் ஆன கைப்பிடிகள் பளபளப்பாய் மின்னியது.

சுவரோரங்களில் பித்தளை பூச்சாடிகளில் காகிதப் பூக்கள் பல நிறங்களில் பல வகைகளில் செருகப்பட்டிருந்தன. ஹாலின் சுவரில் ஆறடி உயரத்தில் பெரிதாய் கடிகாரம். பெண்டுலம் ஊஞ்சலாடிக் கொண்டிருக்க, அது பெரிய தோசைக் கரண்டியை நினைவுபடுத்தியது.

சுவர்களில் முழுக்க புகைப்படங்கள். அனைத்தும் கருப்பு-வெள்ளைப் புகைப்படங்கள். நேர்த்தியாய் வரிசையாய் மாட்டப்பட்டிருந்தது.

நிறைய தெரியாத முகங்கள். ஒன்றிரண்டில் மாமாக்கள் சிலருடன் சேர்ந்தும் தனியாகவும் இருந்தனர். பார்த்துக்கொண்டே வந்தவளின் கண்கள் ஓர் புகைப்படத்தில் நிலைத்தன.

நம்பமுடியாமல் விழிகளை விரித்துப் பார்த்தாள். கம்பீரமான முறுக்கு மீசையுடன் ஒரு பெரியவர்... அவர் அருகே வெட்கமாய் அவரது மனைவி. அவர்களுக்குப் பின்னால் வாலிப வயதில் இருந்த மாமாக்கள்.

அவர்களின் நடுவில் பாவாடை தாவணி அணிந்து இரட்டைப் பின்னலிட்ட அந்தப் பெண் யார்? அப்படியே

என்னைப்போல். கண்களில் நீளமாய் மை தீட்டி நெற்றியில் கண் மை பொட்டிட்டு, கன்னங்கள் குழி விழ புன்னகைத்த கோலம் அசத்தியது.

"என்னம்மா பார்க்கிற? இதுதான் உன் அம்மா!" - ராகவன் சொல்ல, சிலிர்த்தது மான்விழிக்கு.

தாய்க்கும் தனக்கும் எத்தனை ஒற்றுமை. இந்த ஒற்றுமைதான் இன்று பிரிந்தவர்களை ஒன்றாய்ச் சேர்த்திருக்கிறது. இல்லையென்றால் இத்தனை உறவுகள் இருப்பது தெரியாமலேயே போயிருக்கும்.

அப்படியென்றால் என் அம்மா இத்தனை அழகா? நான்கூட இத்தனை அழகாய் இருக்கிறேனா?

பொட்டு வைக்க மட்டுமே கண்ணாடியைப் பார்க்கும் நான் என்னை ஒருமுறை கூட நிதானமாய் ரசித்துப் பார்க்கவில்லையே.

இத்தனை அழகான அம்மா ஏன் இப்படித் துரும்பாய் இளைத்து உருமாறிப் போனாள்? கணவனின் பிரிவைத் தாளமுடியாமலா? ஒருவரின் இழப்பு, பிரிவு இத்தனை பாதிப்பை ஏற்படுத்தி விடுமா?

கூடவே நின்ற அமுதன் அழைத்தான். "மானு!"

"என்ன அண்ணா?"

"அம்மா எவ்வளவு அழகு பாரேன் அந்தக் காலத்து நடிகை தேவிகா மாதிரி."

"ஆமாண்ணா. ரொம்ப அழகு."

"கண்ணு அப்படியே உன் கண்ணுதான்."

'இல்லண்ணா. அம்மா கண்ணுதான் எனக்கு.'"



"சரி, சரி. போட்டோவைப் பார்த்தது போதும். அம்மாவைப் பாரு." - எனக் கைநீட்டிக் காட்டினான் அமுதன்.

வாசலுக்கு நேராய் இருந்த சுவற்றில் பெரியதாய் இருந்த புகைப்படத்தின் முன் நின்றிருந்தாள் பார்வதி. மிடுக்கான உடையில் ராஜகம்பீரமாய் நின்றிருந்த பெரியவரின் புகைப்படத்தில் சந்தன மாலை தொங்கியது.

அந்தப் புகைப்படத்தை விழியெடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்த பார்வதியின் விழிகளில் லேசாய் ஈரம் கசிந்திருந்தது. விரல்களால் புகைப்படத்தை வருடிக் கண்களில் ஒற்றினாள்.

வியப்பாய் கணேசனை ஏறிட்டான் அமுதன். "மாமா... இது?"

"உங்க தாத்தா தட்சிணாமூர்த்திப்பா. எங்க அப்பா."

"மாமா! அம்மாவுக்கு தாத்தாவை அடையாளம் தெரியுது."

"யாருன்னு புரிபடலை. ஆனா ஏதோ ஒரு உணர்வு அவளை ஆட்டிப்படைக்குது."

"மாமா?"

"அப்பான்னு தெரிஞ்சிருந்தா வாய்விட்டு அழுதிருப்பா. யாரோ ஒரு உறவு... அது இங்க இப்ப இல்லன்னு உணர்ந்துதான் கண் கலங்குது." - என்ற மாமா தாயின் தோள் பற்றி வீட்டினுள் அழைத்துச் சென்றார்.

இப்போது மூன்று பெண்களும் இரண்டு ஆண்களும் தென்பட்டார்கள். பார்த்த உடனே புரிந்து போனது.

பணியாட்கள். அனைவரும் புன்னகையோடு வணங்க, சின்னச் சிரிப்போடு கைகூப்பினாள் மான்விழி.

"சாப்பாடு எல்லாம் ரெடிங்கய்யா. எடுத்து வெக்கட்டுமா?" - என ஒரு பெண் கேட்க, துணுக்குற்றாள் மான்விழி.

'என்ன இது? வாசலில் வந்து நின்று வரவேற்க வேண்டாம்... சாப்பாடு கூடவா பரிமாற இந்த வீட்டில் ஒருவரும் வரவில்லை. மரியாதையோ நாகரிகமோ இல்லாதவர்களா?

மாமாவின் பேச்சை நம்பி இங்கே வந்தது தவறோ? வீட்டிற்குள் அழைத்து இவ்வளவு நேரமாயிற்று. வாங்க என வரவேற்கவோ ஒரு வாய் தண்ணீர் தரவோ தோன்றவில்லையே!'

"வேண்டாம் சரசு. எல்லாரும் வந்திடட்டும். சேர்ந்தே சாப்பிட்டுக்கிறோம்." - என்றார் கேசவன்.

"சரிங்கய்யா" - என அந்தப் பெண் விலகிவிட, யோசனையாய் கேசவனை ஏறிட்டாள் மான்விழி.

"மாமா! வீட்ல யாரும் இல்லையா?"

"ஆமாம்மா. உங்க பெரிய அத்தை சொந்தக்காரங்க வீட்ல ஒரு விசேஷம். அதுக்காக எல்லாரும் போயிருக்காங்க."

"அப்படியா?" - பெரிய நிம்மதி உணர்வோடு புன்னகைத்தாள். நல்லவேளை வெளியே போயிருக்கிறார்கள். நாம் நினைத்தது போல் எதுவும் இல்லை.

"நானும் போகவேண்டியதுதான். நீங்க வர்றீங்கன்னு உங்களுக்காக நின்னுட்டேன்."



"ரொம்ப தேங்க்ஸ் மாமா."

"எதுக்கும்மா?"

"எங்களை வரவேற்கன்னு நின்னீங்களே..."

"பின்னே? எத்தனை வருஷம் கழிச்சு உங்களையெல்லாம் பார்க்கிறோம். உங்களைவிட வேறென்ன முக்கியம்?"

"உங்களை எல்லாம் பார்த்ததில எங்களுக்கும் ரொம்ப சந்தோஷம் மாமா."

"இருக்காதா? எல்லாம் ஒரே இரத்தமாச்சே!"

"அவங்க எல்லாம் எப்போ வருவாங்க மாமா?"

"அண்ணியோட அண்ணன் மகளுக்கு வளைகாப்பு. சாயங்காலம்தான் விசேஷம் நடக்கும். முடிஞ்சதும் கிளம்பி வந்திடுவாங்க. இன்னும் கொஞ்ச நேரத்தில வந்திடுவாங்க."

அமுதன் கணேசனை ஏறிட்டான். "மாமா! அந்த விசேஷத்துக்கு நீங்க போகணுமே."

"ஆமாம்ப்பா! ஒரு வாரம் முன்னாடியே சொல்லிட்டாங்க. நான்தான் உங்களைப் பார்த்த சந்தோஷத்தில இதை மறந்திட்டேன்."

"அத்தை கோவிச்சுக்க மாட்டாங்களா?"

"இதுல கோவிச்சுக்க என்ன இருக்கு? பெண்களோட விசேஷம். நான் இருந்து என்ன பண்ணப் போறேன்?" - என்றவாறே தம்பிகளைப் பார்த்தார்.

அவரது பார்வையின் பொருள் புரிந்து இருவரும் அமைதியாய் நின்று கொள்ள, புன்னகைத்தார் கணேசன்.

"சரி... நாம சாப்பிடலாமே. ரொம்ப தூரம் பயணம் செய்ததுல எல்லாருக்குமே அலுப்பு இருக்குமே."

"இல்ல மாமா. அவங்க வந்திடட்டுமே!"

"இல்லம்மா. அவங்க அங்கேயே சாப்பிட்டுட்டு வந்திடுவாங்க. நாம சாப்பிட்டுட்டு உட்கார்ந்து பேசுவோம். அவங்க வந்த பிறகு பார்க்கலாம்."

"சரி மாமா. எனக்கும் நேரமாகுது. நானும் கிளம்பணுமே" – என்றான் அமுதன்.

"அமுதன்! மணி எட்டாகுதே. இனிமே சாப்பிட்டு கிளம்ப நேரமாகுமே. இன்னிக்கு நைட் தங்கிட்டு நாளைக்குப் போலாம்ப்பா."

"இல்ல மாமா. நைட் ட்ராவல்னா ப்ரீயா இருக்கும். நானும் காலையில போய் கடையைத் திறப்பேன். நாளைக்குக் கிளம்பினா போய்ச் சேரவே நைட் ஆயிடும்."

"இல்லப்பா. இவ்ளோ தூரம் கார் ஓட்டிட்டு வந்திருக்கே. அலுப்பா இருக்குமே."

"அதெல்லாம் ஒண்ணுமில்ல மாமா. எனக்குப் பழக்கம் தான்."

"ராத்திரி வண்டி ஓட்டும்போது கண் அசந்திட்டாப் போச்சே!"

சிரித்தான் அமுதன். "நாலு நாள்கூட நான் தூங்காம வேலை செய்திருக்கேன் மாமா."

மூவரின் முகமும் வாடியது. "என்னாச்சு மாமா?"

"ஏம்ப்பா! இப்படிக் கண்விழிச்சு கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கணுமா? பேசாம இங்கேயே எங்ககூடவே இருந்திடேன்."



"ஐயோ மாமா! திரும்பவும் ஆரம்பிச்சுடாதீங்க."

"என்னப்பா நீ! நான் ஏன் சொல்றேன்னு..."

"இல்ல மாமா! சென்னையில இருக்கிறது என் அப்பா கஷ்டப்பட்டு உழைச்சு சம்பாதிச்சு வாங்கின வீடு. என் அம்மாவும் அப்பாவும் வாழ்ந்த வீடு. என் அப்பா இன்னமும் வாழ்ந்திட்டு இருக்கிற வீடு. எத்தனை கோடி கிடைச்சாலும் அந்த வீட்டையையோ ஊரையோ விட்டுட்டு வரமாட்டேன். ஸாரி மாமா! என்னை வற்புறுத்தாதீங்க."

"சரிப்பா. உன் உணர்வுகளும் புரியுது. நீயாவது இங்க வந்து போய் இருப்பியா?"

"கண்டிப்பா மாமா. மாதம் ஒருமுறை வந்திட்டுப் போறேன். அப்பப்ப போன் பண்றேன். அட! போன் பேச்சு வந்ததும்தான் ஞாபகம் வருது." – என்றவன் தன் பாண்ட் பாக்கெட்டிற்குள் கைவிட்டு அந்த செல்போனை எடுத்தான்.

"மானு! இந்தா இதை வெச்சிக்க. உனக்கு எப்பத் தோணுதோ அப்ப போன் பண்ணு." – என தங்கையிடம் கொடுத்தான்.

"அண்ணா! இது ஏது உனக்கு? எப்போ வாங்கின?"

"நேற்றுதாம்மா வாங்கினேன். என்னோட கஸ்டமர் ஒருத்தர் புது போன் வாங்கிட்டாராம். இதை வித்துத் தரச் சொன்னார். நான்தான் உனக்குத் தேவைப்படும்னு வாங்கினேன்."

"தேங்க்ஸ் அண்ணா!"

"இருநூறு ரூபாய்க்குக் கார்டு போட்டிருக்கேன். பேசிக்கோ. காசு தீர்ந்து போச்சுன்னா சொல்லு. நான் ரீசார்ஜ் பண்ணி விடுறேன்."

"சரிண்ணா!"

"இந்தா! இதை செலவுக்கு வெச்சிக்க." – என கொஞ்சம் பணத்தை எடுத்துக் கொடுத்தான்.

ராகவனுக்குக் கோபம் வந்தது. "ஏம்ப்பா! உன் தங்கையை என்ன ஹாஸ்டல்யா விட்டுட்டுப் போறே?"

"ஏன் மாமா?"

"பிறகு... நீ பாட்டுக்கு காசு கொடுக்கிற, போன் கொடுக்கிற?"

"இல்ல மாமா! இது புது இடம். அவளுக்கு என்கிட்ட பேசணும்னு தோணினா யார்கிட்ட கேட்டுட்டுப் போன் பண்றதுன்னு தயங்குவா. நானும் நினைச்ச நேரம் போன் பண்ண முடியாது. யார் போனை எடுப்பாங்களோ? என்ன நினைப்பாங்களோன்னு கொஞ்சம் கஷ்டமா இருக்கும். அதான் போன் வாங்கிட்டு வந்தேன்"

"சரி, போன் கொடுத்தே. இப்ப எதுக்காக காசு கொடுக்கிற? எங்க வீட்டுப் பெண்ணுக்கு நாங்க செலவு பண்ண மாட்டோமா?"

"அதானே! உன் மாமனுங்களை என்ன செலவு பண்ண கணக்குப் பார்க்கிற கஞ்சப்பயங்கன்னு நினைச்சியா?"

"ஐயோ! அப்படியெல்லாம் எதுவும் இல்ல மாமா."

"வேற எதுக்காகக் காசு கொடுக்கிறே?"

"மாமா! என் தங்கைக்கும் என் அம்மாவுக்கும் என்ன தேவைன்னு பார்த்துப் பார்த்துச் செய்வீங்கன்னு எனக்குத் தெரியும் மாமா. இருந்தாலும்..."



"என்ன இருந்தாலும்...?"

"கோபப்படாதீங்க மாமா! வெளியே நாலு இடத்துக்கு போகும்போது அவளுக்குப் பிடிச்ச ஏதாவது ஒரு பொருளை வாங்கணும்னு ஆசைப்பட்டா உங்களைத்தானே அவ எதிர்பார்க்கணும்?"

"என்ன?"

"என் தங்கை எப்பவும் யார் கையையும் எதிர்பார்த்து நிக்கக்கூடாது மாமா. வீட்ல கூட அவ கேட்கும் முன்பாகவே பணம் கொடுத்திடுவேன். ஏன்னா அவ எங்கிட்டகூட கையேந்திக் கேட்க விரும்ப மாட்டாள்." – அமுதன் தணிந்த குரலில் சொல்ல, மற்றவர்கள் வாயடைத்துப் போயினர்.

மான்விழியின் கண்கள் குளமாகியது. பேச்சு வராமல் நின்றவளின் தலையில் கைவைத்து அழுத்தினான். அவன் கண்ணிலும் லேசாய் ஈரம்.

"மாமா!"

"என்னப்பா?" – கணேசனின் குரல் நெகிழ்ந்திருந்தது.

"எந்தச் சூழல்லயும் என் அம்மாவோ தங்கையோ கண் கலங்கிடாம நீங்கதான் பார்த்துக்கணும்."

"அது என் கடமைப்பா."

"ஒரு வேளை இவங்களால உங்களுக்கு சிரமம்னு நினைச்சா..."

"அமுதன்! என்ன வார்த்தைப்பா இது?"

"இல்ல மாமா. ஒரு பேச்சுக்கு சொல்றேன். அப்படி உங்களுக்குத் தோணினா உடனே எனக்குப் போன் பண்ணிடுங்க. நான் வந்து கூட்டிட்டுப் போயிடுறேன்."

"எங்க உடம்புல உயிர் இருக்கிற வரைக்கும் அப்படி ஒரு சூழல் வராது. நீ தைரியமா போயிட்டு வா. அம்மாவையும் பாப்பாவையும் நாங்க பார்த்துக்கிறோம்."

"ரொம்ப நன்றி மாமா."

"இது எங்க கடமைப்பா. இதுக்கு ஏன் நன்றி சொல்ற?"

"அப்புறம் மாமா! இங்கே அருவியெல்லாம் இருக்குதாமே. அதில அம்மாவை குளிக்க வெச்சா..."

"அதெல்லாம் நாங்க பார்த்துக்கிறோம்ப்பா. சீக்கிரமா உன் அம்மாவை குணமாக்கி உன்கிட்ட தந்திடுறேன்... சரியா?"

"அது போதும் மாமா."

"மானு! நீயும் அத்தை மாமா மனசு கோணாம நடந்துக்கணும்."

"சரிண்ணா!"

"யாரும் ஒரு குறை சொல்ற மாதிரி நடந்துக்கக் கூடாது."

"சரிண்ணா!"

"அம்மாவைப் பத்திரமாப் பார்த்துக்க."

"சரிண்ணா!"

"என்ன அவசரம்னாலும் எனக்குப் போன் பண்ணிடு."

"சரிண்ணா!"

"உன் உடம்பையும் பார்த்துக்கம்மா."

"சரிண்ணா!"



"இது வெளியிடம். மாமாவைக் கேளாமல் எங்கேயும் வெளியே போகக்கூடாது, என்ன?" - என்றவனிடம் இடைமறித்தார் கணேசன்.

"அட என்னப்பா! அது என்ன ஸ்கூலுக்குப் போற பொண்ணா? என் மருமகளுக்கு எல்லாம் தெரியும். நீ வா... சாப்பிட்டுக் கிளம்பு. நேரமாகுதே..." - என்றவாறு கைகளைப் பற்றி சாப்பிட அழைத்துப் போனார்.

சாப்பிட்டு முடித்துவிட்டு ஒரு மணி நேரமாய் காத்திருந்துவிட்டு உறவினர்கள் வரவில்லையென்றதும் மாமாவிடமும் தாய் தங்கையிடமும் சொல்லிக்கொண்டு கிளம்பினான் அமுதன்.

அதன் பிறகும் வெகுநேரம் விழித்திருந்த போதும் ஊருக்குச் சென்றவர்கள் வரவே இல்லை. மான்விழிக்கு ஏமாற்றமாய் இருந்தது.

## 9

அதிகாலைக் காற்றே நில்லு
அழகான தூது சொல்லு
இதயம் பறக்கிறதே இனிமை
பிறக்கிறதே இது ஒரு புதுசுகமே!

'கீச்கீச்' - என்ற குருவிகளின் கொஞ்சும் குரலில் உறக்கம் கலைந்தாள் மான்விழி. மாடியறையின் ஜன்னல் வழியே பனிக்காற்று சிலுசிலுவென வந்து தழுவியது. அதன் குளிர்ச்சியில் மீண்டும் சுகமாய் கண்களை மூடினாள்.

பறவைகளின் ஒலியைத் தொடர்ந்து காகங்களின் கரைதலும் புதிய இசையாய் ஒலிக்க, வாசல் தெளிக்கும் சத்தமும் கேட்டது. சட்டென கண்களைத் திறந்தாள்.

பார்வையில் பட்ட பொருள்கள் வித்தியாசமாய் பட, எழுந்து அமர்ந்தாள். கட்டிலில் அருகே படுத்திருந்த பார்வதி ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தாள். முகம் புன்னகைக்க, குனிந்து அன்னையின் நெற்றியில் முத்தமிட்டாள்.

கட்டிலை விட்டு இறங்கி, ஜன்னலருகே சென்றாள். இரவில் மலர்ந்திருந்த முல்லை மலர்கள் பளிச்சென சிரித்துக் கொண்டிருந்தன. இருள் முழுவதும் விலகிவிடாத அதிகாலை.

கீழே ஏதோ நடமாட்டம் தெரிய, லேசாய் எட்டிப் பார்த்தாள். விருந்திற்குப் போனவர்கள் வந்து விட்டார்களா? எப்போது வந்தார்கள்? பதினோரு மணி வரையிலும் வரவில்லையே.

பார்வையை உன்னிப்பாக்கினாள். சரசுதான் வாசல் தெளித்துக் கொண்டிருந்தாள். மாமா வீட்டில் அதிகாலையிலேயே எழுந்து விடுவார்களோ. இனி நாமும் இதே நேரத்தில் எழுந்துவிட வேண்டும்.

பறவைகளின் ஒலி தாயின் உறக்கத்தைக் கலைத்துவிடும் என்று தோன்ற, கண்ணாடி ஜன்னலை இழுத்து மூடினாள். பெட்டியைத் திறந்து துணிகளை எடுத்துக் கொண்டு குளியலறைக்குள் நுழைந்தாள்.

பற்களைத் தேய்த்து, முகம் அலம்பி, தலையைப் பிரித்து உதறி, சில்லென்று குளிர்ந்த நீரைத் தலைக்கு ஊற்ற, உடல் மொத்தமும் குளிரில் நடுங்கியது. மளமளவென குளித்து ஆடை மாற்றிவிட்டு கீழே இறங்கி வந்தவளைப் பார்த்து அதிசயித்தாள் சரஸ்வதி.

"அம்மோவ்! என்ன இம்புட்டு சீக்கிரம் எழுந்திட்டீக?"



"வீட்ல எப்பவும் எழுந்துக்கிற நேரம்தான் சரசு."

"ஆச்சர்யம்தான். பட்டணத்துப் புள்ளைக பத்து மணிக்கு முன்ன எழுந்துக்காதுன்னு பெரியம்மா சொன்னாகளே."

"யாரு?"

"அதாம்மா, உங்க பெரிய அத்தை."

"அப்படியெல்லாம் இல்ல சரசு. நம்ம வீட்டு வேலை செய்ய நாம சீக்கிரம்தானே எழுந்துக்கணும்?"

"அதுவும் சரிதான். அம்மோவ்! தலைக்கா குளிச்சீக?"

"ஆமா!"

"அச்சோ! பச்சைத் தண்ணிய ஊத்துனீகளா? எங்கிட்ட சொன்னா சுடுதண்ணி வெச்சித் தந்திருப்பேனே?"

"பரவாயில்ல சரசு. சுடுதண்ணி வெக்கிற நேரத்தில குளிச்சே முடிச்சிடுவேன் நான்."

"வித்தியாசமான பொண்ணாத்தான் இருக்கீங்கம்மா."

"ஏன்? என் தலையில ரெண்டு கொம்பு, இந்தப் பக்கம் ரெண்டு பல்லுன்னு விகாரமா இருக்கேனா?" – என்றாள் கண்களை உருட்டியவாறே.

"யம்மோய்... ரொம்ப வேடிக்கையாத்தான் பேசுறீக."

"சரசு! நீகூட ரொம்ப அழகாப் பேசுற. கேட்கவே இனிமையா இருக்கு."

"எங்க ஊர்ப்பக்கம் இப்படித்தான் பேசுவோம்."

"நீ இங்கேயேதான் தங்கியிருப்பியா?"

"ஆமாம்மா! மாசத்துல ஒரு தரம் ஊருக்குப் போயிட்டு வருவேன்."

"உன் ஊர் எது?"

"நயினார்பத்து."

"அப்படி ஒரு ஊரா? அது எங்கே இருக்கு?"

"திருச்செந்தூர் பக்கத்துல இருக்குதும்மா."

"எது? அறுபடை வீடுகள்ல வருமே அந்த திருச்செந்தூரா?"

"ஆமாம்மா. முருகன் கோவில். பெரிய கோவில். வள்ளி குகை, நாழிக் கிணறு, சரவணப் பொய்கைன்னு எல்லாமே இருக்கு."

"வாவ்! சரசு! என்னையும் ஒரு நாள் கூட்டிட்டுப் போறியா அங்கே?"

"அய்ய! என்கூட எதுக்கும்மா? நீங்க கேட்டா ஐயாவே கார்ல கூட்டிட்டுப் போவாக. ஐய்யோ! நேரமாச்சும்மோவ். வாசல்ல கோலம் போட்டுட்டு பாலைக் காய்ச்சணும்."

"இரு... இரு. கோலமாவு இருந்தாக் கொடு. நானே கோலம் போடுறேன்."

"யம்மோவ்! நீங்க கோலமெல்லாம் கூடப் போடுவீங்களா?"

"என்ன சரசு? நானும் உன்னாட்டம் பொண்ணுதானே! இதுகூடத் தெரியாமலா இருப்பேன். கோலமாவைக் கொடு."

"இந்தாங்கம்மா" – கையிலிருந்த கோலமாவுக் கிண்ணத்தைக் கொடுத்தாள் சரசு.



"சரசு! கோலம் எப்படிப் போடணும்? கம்பிக் கோலமா? பூக்கோலமா? இல்ல ரங்கோலியா?"

"யம்மோவ்! நான் ஏதோ அவசரத்தில நாலு கம்பியை இழுத்து விடுவேன். உங்களுக்கு என்ன தோணுதோ, அதைப் போடுங்கம்மா."

"ம்... ரங்கோலி போடலாமா?"

"தாராளமாப் போடுங்கம்மா. எனக்கு அதெல்லாம் தெரியாது."

"கலர் பொடி இருக்கா?"

"அதெல்லாம் தட்டாம இருக்கும்மா. அதோ அந்த ஷெல்பிலே இருக்கு."

"சரி! சரசு, நீ போய் உன் வேலையைப் பாரு. சரசு!"

"என்னங்கம்மா?"

"சாணம் கிடைக்குமா?"

"நம்ம வீட்டுலயே எட்டு பசு மாடு இருக்குதும்மா. சாணி எதுக்கு?"

"கோலம் போட்டுட்டு நடுவிலே சாணி உருண்டை வெச்சு பூசணிப்பூ செருகினா அட்டகாசமா இருக்கும்."

"பூசணிப்பூவுக்கு நம்ம தோட்டத்துக்கில்ல போகணும்."

"அதனால என்ன? இதோ வீட்டு முன்னாலயே ரோஜாச் செடி பூத்திருக்கு. இதுல ஒண்ணைப் பறிச்சுச் செருகிடலாம்."

"சரிங்கம்மா! நீங்க கோலம் போடுங்க. நான் சாணி எடுத்திட்டு வர்றேன்."

“சரி.”

“முதல்ல தலையை உலர்த்துங்கம்மா. ஈரத்துணியோட கொண்டை போட்டா தடுமம் பிடிச்சிக்கும்.”

“என்ன பிடிக்கும்?”

“அதாம்மா... சளி பிடிச்சிக்கும்.”

“ஓ! நான் கோலம் போட்ட பிறகு உலர்த்திக்கிறேன். நீ போய் வேலையைப் பாரு.” - என்றவாறு தலைவாசலை அடைந்தாள்.

**பெ**ரிய முற்றம். நான்கைந்து பேர் மொத்தமாய் அமர்ந்து கோலம் போடும் அளவிற்கு பரந்து விரிந்திருந்தது. சரசு கெட்டியாய் சாணம் கரைத்து தெளித்திருந்தாள்.

துடப்பத்தை எடுத்து மேலாகப் பெருக்கிவிட்டு, குனிந்து கோலம் போட ஆரம்பித்தாள். சின்னதாய் தொடங்கிய ரங்கோலி மேலே மேலே பல டிஸைன்களில் விரிய, உற்சாகமாய் போட்டுக் கொண்டே இருந்தாள் மான்விழி. இருள் மறைந்து நன்றாய் விடியத் துவங்கியது.

சென்னையில் சிறிய முற்றம். அதுவும் மழை நேரங்களில் குண்டும் குழியுமாய் மாறிவிடும். கோலம் போடும் எண்ணமே வராது. ஆனால் இந்தத் தரையும் நைஸான கோலமாவும் வேறு வேலைதான் இல்லையே என்ற பொறுமையும் ரசனையுமாய் முற்றம் முழுக்க கோலம் விரிந்திருந்தது.

சரசு காட்டிய அலமாரியில் இருந்து சின்ன சின்ன மண் குவளையில் இருந்த வண்ணப் பொடிகளை எடுத்து நுணுக்கமாய் இட்டுக் கொண்டிருந்த போது, எழுந்து வந்த கேசவன் அசந்து போனார்.



“ஏங்கண்ணு. நீ ஏம்மா இப்படிப் பனியில உட்கார்ந்து கோலம் போடுற. சரசு எங்கே போயிட்டா?”

“நான்தான் மாமா போடுறேன்னு சொன்னேன். ஏன் கோலம் நல்லா இல்லையா?”

“அருமையா இருக்கும்மா. ஆனா இவ்வளவு பெரிசு எதுக்கும்மா? முதுகு வலிக்குமே.”

“இல்ல மாமா. இதுவும் ஒரு உடற்பயிற்சிதான். குனிந்து நிமிர்ந்து கோலம் போட்டா உடம்புக்கு ரொம்ப நல்லது.”

“என்னவோம்மா. நீ சொன்னா சரிதான். சரிம்மா... நான் தோட்டம் வரைக்கும் போயிட்டு வர்றேன்.”

“சரி மாமா. மாமா! அத்தை எல்லாம் எப்போ வருவாங்க?”

“நேத்து வளைகாப்பு முடிய நேரமாகிப் போச்சாம். ராத்திரியில வரவேண்டாம்ன்னு அங்கேயே தங்கிட்டாங்களாம். காலையில எழுந்து கிளம்பியிருப்பாங்க.”

“அப்போ இப்போ வந்திடுவாங்களா?”

“ம்... வர்ற நேரம்தான். நீ கோலம் போட்டுட்டு காபி குடிம்மா. நாங்க ஒரு எட்டு மணிக்கெல்லாம் வந்திடுவோம்.”

“யாரெல்லாம் மாமா?”

“நானும் அண்ணன்களும்தான். அவங்கல்லாம் அஞ்சு மணிக்கு முன்னாலயே போயிட்டாங்களே.”

“அவ்வளவு சீக்கிரமா?”

“தண்ணி பாய்கிறதை கவனிக்கணும்மா. எப்பவுமே விடியும் முன்னே தோட்டத்துக்குப் போயிடுவோம்.”

"காபி?"

"அதெல்லாம் சாப்பிடும்போது குடிச்சுப்போம். இப்போ பழைய தண்ணி குடிச்சிட்டு கிளம்பிடுவோம். அதுதான் உடம்புக்கு குளிர்ச்சி. வரட்டுமா?"

"சரிங்க மாமா."

கேசவன் நகர்ந்து தனது புல்லட்டை உசுப்பிக் கொண்டு தடதடவென புறப்பட, கையில் நுரை பொங்கும் காபியோடு வந்தாள் சரசு.

"யம்மோய்! காபி குடிங்க. சூடா இருக்கு."

"இரு சரசு! கோலத்தை முடிச்சுடுறேன்."

"அதான் முடிஞ்சு போச்சே. அம்மாடி! எவ்ளோ பெரிய கோலம்?" - வாயைப் பிளந்தாள்.

"இன்னும் அவுட் லைன் கொடுக்கணும் சரசு. அப்பத்தான் சூப்பரா இருக்கும்."

"முதல்ல காபியக் குடிங்கம்மா. சூடு ஆறிடும். நான் அம்மாவுக்கு காபி கொடுக்கணுமே."

"அம்மா எழுந்தாச்சா?"

"இன்னும் கீழே வரல்ல. நான் எடுத்திட்டுப் போய் எழுப்புறேன்."

"வேணாம் சரசு. நேத்து நைட் அம்மா தூங்கவே இல்லை. லேட்டாத்தான் தூங்கினாங்க. அதனால நல்லாத் தூங்கட்டும்." - என்றவாறே காபியை வாங்கிக் கொண்டாள்.

"சரிங்கம்மா! அம்மா காலையில சாப்பாட்டுக்கு இட்லியும் வெந்தயக் களியும் செய்யிறேன். உங்களுக்குப் பிடிக்குமா? வேற எதுவும் செய்யணுமா?"



"நோ. நோ. எங்களுக்குன்னு தனியா எதுவும் செய்ய வேண்டாம். ஆமா, அதென்ன களி?"

"வெந்தயக் களிம்மா. உடம்புக்கு ரொம்ப நல்லது."

"எப்படி இருக்கும் சரசு?"

"பச்சரிசியையும் வெந்தயத்தையும் அரைச்சு தேங்காய் துருவிப் போட்டு கருப்பட்டியை நொறுக்கிப் போட்டு கிளறணும். பூண்டு பல் நாலு போட்டா ரொம்ப நல்லது."

"வெந்தயம் போட்டா கசக்குமே?"

"அதான் கருப்பட்டி போடுறோமே. இன்னிக்கு செய்து தர்றேன். சாப்பிட்டுப் பாருங்கம்மா. சும்மா அல்வா மாதிரி இருக்கும்."

"அப்படின்ற? சாப்பிட்டுப் பார்க்கலாமா?"

"எங்க ராசா ஐயாவுக்கு வெந்தயக் களின்னா உசுரு. அவுகளுக்காகவே வாரத்தில நாலு நாள் இதைச் செய்வோம்."

"அது யாரு ராசா ஐயா?"

"அதாம்மா. பெரிய ஐயாவோட புள்ள."

"ஓ! அவர் பேர் ராஜாவா?"

"ராசா இல்லம்மா. ராசேந்திரன். இளைய மகன் பேரு கசேந்திரன்."

"பெரிய மாமாவுக்கு இரண்டு பொண்ணு ரெண்டு பையனா?"

"ஆமாம்மா. பெரியம்மா பேரு லதா ராணி. சின்னம்மா பேரு உமா ராணி. படிச்சிட்டு இருக்காக."

"சின்ன மாமா பசங்க?"

"ராகவன் ஐயாவுக்கு ரெண்டு புள்ள. ஒரு பொண்ணு. மூத்தவர் நரேந்திரன். சின்னவர் சுரேந்திரன். அந்தம்மா பேரு வசந்த ராணி."

"என்ன? எல்லாம் குடும்பப் பேரா? ஒரே மாதிரி இருக்கு?"

"கடைசி ஐயாவுக்கு ஒரே பொண்ணுதான். பேரு சுதா ராணி."

"எல்லாமே ராணிங்கதானோ... ம்... நைஸ் நேம்."

"அம்மா! உங்க பேரு என்னங்கம்மா?"

"எம் பேரு மான்விழி."

"என்ன பேரும்மா?"

"மான்விழி. மானுன்னு கூப்பிடுவாங்க. நீகூட அப்படியே கூப்பிடு சரசு."

"அடி ஆத்தி! அதெல்லாம் தப்பும்மா."

"ஏன்? என்ன தப்பு? என்னை ஏன் இப்படி அம்மான்னு கூப்பிடுறே! சும்மா பேரைச் சொல்லியே கூப்பிடு."

"அம்மாடி! பெரியம்மா காதுல விழுந்தாப் போச்சு." – சரசுவின் குரலில் பயம் தெரிந்தது.

பெரிய அத்தை எப்படி இருப்பார்கள்? அதட்டி மிரட்டி வேலை வாங்குவார்களோ? அதனால்தான் இப்படிப் பயப்படுகிறாளா?

சரசுவிடம் அத்தையைப் பற்றிக் கேட்கலாமா? வேண்டாம். அதுதான் இப்போது வந்துவிடுவார்களே. நேரிலே பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். வரட்டும்.



அனைத்து இந்திரர்களும் ராணிகளும் எப்படித்தான் இருப்பார்கள் என்று பார்த்து விடலாம். அத்தைகள் எப்படி இருப்பார்கள்? மாமாக்கள் பார்ப்பதற்கு எளிமையாய்த்தான் இருக்கிறார்கள்.

அத்தைகளும் இப்படியே இருப்பார்களா? இல்லை சினிமாக்களில் சீரியல்களில் வருவதுபோல் பட்டுப் புடவை கட்டி நகைக்கடை விளம்பரம் போல் வருவார்களா?

ஏனோ மாமாவின் குடும்பத்தாரைப் பார்க்க வேண்டு மென்ற ஆவல் அதிகரித்தது. ஹாலில் அவர்களின் போட்டோ எதுவும் இல்லை. ஒருவேளை அவரவர் பிரிவு அறைகளில் இருக்கலாம்.

நேற்று எதையும் பார்க்கவில்லை. அதோடு அனைத்து அறைகளையும் பூட்டிவிட்டுப் போயிருந்தனர். மாமாகூட ஹாலில்தான் படுத்திருப்பாரோ. மாடியில் யாரெல்லாம் தங்கியிருக்கிறார்கள்?

மாமாவின் பெண்கள் தன் வயதையொத்தவர்களாக இருப்பார்களா? மூத்தவர்களாக இருப்பார்களா? நான் அவர்களிடம் எப்படிப் பேச வேண்டும்?

இயல்பாய் பேசுவார்களா? இல்லை ஒதுங்கிப் போவார்களா? பலவித எண்ணங்களோடு காபியை அருந்திவிட்டு காலி டம்ளரை சரசுவிடம் நீட்டினாள்.

"தேங்க்ஸ் சரசு! காபி நல்லா இருந்தது."

"அம்மா! நீங்க சீக்கிரமா கோலத்தை முடிங்க. நான் போய் சாணியை எடுத்திட்டு வர்றேன்."

"சரி" – என்றவள் மீதமுள்ள வேலைகளை முடித்து விட்டு நிமிர்ந்தபோது முதுகு வலிக்கத்தான் செய்தது.

என்றாலும் கோலம் மிக அற்புதமாய் வந்திருக்க, அந்த அழகில் வலி மறந்து போனது.

சற்று நகர்ந்து நின்று வேறு ஏதேனும் குறைகள் இருக்கிறதா என ஆராய்ந்து கொண்டிருக்கையில், காதைப் பிளக்கும் ஹாரனுடன் அந்தக் கார் கோலத்தை நோக்கி வந்தது.

திடீரென கேட்ட சத்தத்தில் மிரண்டு நிமிர்ந்தவள் காரின் வேகத்தைக் கண்டு நிச்சயமாய் இது கோலத்தின் மீதுதான் ஏறி நிற்கப் போகிறது என்று தோன்ற, முகத்தைச் சுருக்கி கண்களை மூடிக்கொண்டாள்.

## 10

எனக்கென ஏற்கனவே பிறந்தவள்
இவளோ இதயத்தைக் கயிறு கட்டி
இழுத்தவள் இவளோ ஒளிசிந்தும்
இருகண்கள் உயிர்வாங்கும் சிறுஇதழ்கள்
என்னுள்ளே ஏதேதோ செய்கிறதே!

**கா**ர் வந்து நின்ற பிறகும் யாரும் இறங்கியது போலவோ காரைத் திறக்கும் ஓசையோ கேளாமல் மெல்லக் கண்களைத் திறந்தாள் மான்விழி.

திறந்த விழிகளில் முதலில் பட்டது கோலம்தான். கோலம் முழுதாய் தெரிய, கோலத்திற்கு சற்று தள்ளியே காரின் டயர்கள் நின்றன.

ஒருவித நிம்மதியோடு மெல்ல அந்த பால்நிற காரை ஏறிட்டுப் பார்த்தாள்.

ஓட்டுநர் இருக்கையில் மட்டும் ஒருவன் அமர்ந்திருக்க, மற்றபடி காரில் யாரும் இருப்பதைப் போல் தோன்ற



வில்லை. முழுவதும் கண்ணாடியால் மூடப்பட்டிருக்க, மான்விழி தயங்கியவாறு நின்றாள்.

இப்போது நான் என்ன செய்ய வேண்டும்? காரில் வந்து இறங்குபவர்களை வரவேற்க வேண்டுமா... இல்லையென்றால் பேசாமல் வீட்டிற்குள் போய் விடலாமா? அது அத்தனை மரியாதையாய் இருக்காதே.

இந்த ஆள் இன்னும் காருக்குள் உட்கார்ந்து என்ன செய்கிறான்? காரை நிறுத்தினால் இறங்க வேண்டியது தானே. ஒருவேளை டிரைவராய் இருப்பானோ?

காருக்குள் அமர்ந்திருந்த ராஜேந்திரனோ இறங்கவும் மறந்து அப்படியே அமர்ந்திருந்தான்? யாரிவள்? இவள்தான் சென்னையிலிருந்து வந்து இறங்கிய அத்தை பெண்ணா?

அட! போட்டோவில் பார்த்த அதே முகம். கண்களா இது? தலை குளித்து ஈர டவலோடு லேசாய் தூக்கிச் செருகிய புடவையோடு கையில் கோலமாவுக் கிண்ணத்தோடு நின்றவளை நிதானமாய் பார்த்தான்.

லேசாய் உலர்ந்த கூந்தல் முன் நெற்றியில் புரண்டு கொண்டிருந்தது. கட்டியிருந்த இளம் மஞ்சள் நிற புடவை அவளது உடலைப் பாந்தமாய் தழுவியிருந்தது.

காரைக் கண்டதும் முகத்தை சுருக்கி கண்களை மூடி நின்ற கோலமும் மெல்ல இமைச் சிப்பியை திறந்த அழகும் பிரமிக்க வைத்தன.

கோலத்தைப் பார்த்தான். மிகவும் பெரிதாய் அழகாய் பளிச்சென கண்ணைப் பறித்தது. நிச்சயமாய் ரொம்ப நேரம் கஷ்டப்பட்டுப் போட்டு இருக்கிறாள் என்று புரிந்தது. இதனை அழித்தால் அவள் மனம் வருந்தும்தானே.

நல்ல வேளை தன் கார் முதலில் வந்தது. அதைவிட முக்கியம் அம்மா தன் காரில் வரவில்லை. ஏற்கனவே இவர்களால்தான் அப்பா தன் உறவினர் வீட்டு விசேஷத்திற்கு வரவில்லை என்று இரண்டு நாளாய் பொரிந்து தள்ளிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில் இந்தப் பெண் இப்படி உரிமையாய் கோலம் போட்டுக் கொண்டு நிற்பதைப் பார்த்தால் போதும். அவ்வளவுதான். அப்பா மீதுள்ள மொத்தக் கோபத்தையும் இவள் மீது கொட்டி விடுவார்கள்.

லதா, உமா, வசந்தி, சுதா எல்லாருமே நிச்சயமாய்ப் பொறாமைப்படப் போகிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை ஏதோ சோற்றுக்கு வழி இல்லாத அத்தை தன் பெண்ணை அழைத்துக் கொண்டு வருகிறாள் என்று மட்டுமே தெரியும்.

ஆனால் அத்தை பெண் இத்தனை அழகாய் கோவில் சிலை போல் வந்து நிற்பாள் என எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். இது என்ன கண்? காட்டில் திரியும் மிரளும் மான்குட்டியின் கண்களா? ஆற்றில் துள்ளும் மீன்களா? நேற்றுப் பிறந்த கன்றுக்குட்டியின் கண்களா?

அத்தை பெண் என்றால் ஏதாவது ஒரு சொத்தைப் பெண்ணாய் இருக்கும் என்றானே சுரேன். இவள் என்னடா வென்றால் உலகில் உள்ள மொத்த அழகையும் வாங்கிக் கொண்டு வந்திருக்கிறாளே.

தேவதைப் பெண்ணே! இத்தனை நாளாய் எங்கே இருந்தாய்? எதற்காக இந்தத் தரிசனம்? ஆனால் அற்புதமான தரிசனம்.

தனக்குள் புன்னகைத்துக் கொண்டான்.



அதற்குள் காரின் ஓசை கேட்டு, கையில் சாணி உருண்டையோடு ஓடிவந்தாள் சரசு. சரசுவைக் கண்டதும் காரைத் திறந்து கொண்டு இறங்கினான் ராஜேந்திரன்.

இவன் யாராய் இருந்தால் நமக்கென்ன என்ற எண்ணத்தோடு வீட்டிற்குள் நுழையத் திரும்பிய மான்விழி யிடம், "அம்மா! இதுதான் ராசா ஐயா." - என கிசுகிசுத்தாள் சரசு.

என்ன? பெரிய மாமன் மகனா? என்று திரும்பியவள் சற்று மிரண்டு போனாள். அவள் கற்பனை செய்து வைத்திருந்த முரட்டு உருவம் மடித்துக் கட்டிய வேட்டி முறுக்கு மீசை எதுவும் இல்லை.

மாறாக ஜீன்ஸ் பேண்ட் ஷார்டில் அளவான அடர்த்தியான மீசையோடு ஜம்மென்று இறங்கி நின்றவனை விழிகள் விரியப் பார்த்தாள். பேச நா எழவில்லை.

காரை விட்டு இறங்கியவனின் கூர்மையான பார்வையைத் தாளமுடியாமல் சரசுவின் பின்னே பதுங்கினாள். உடல் முழுக்க வெடவெடத்தது.

"வாங்கய்யா! அம்மா எல்லாம் வரலியா?" - என்றாள் சரசு.

"எல்லாரும் மத்த கார்ல வர்றாங்க. நான் வெளியே ஒரு வேலையாப் போயிட்டு வர்றேன்."

"காபி தரட்டுமாய்யா?"

"ம்... சரசு! இது யார்?" - தன்னையே ஆராயும் அவன் விழிகளைக் காணமுடியாமல் நழுவ முயன்ற மான்விழி அவனது கேள்வியில் நின்றாள்.

"ஐயா! இவுகதான் பட்டணத்துல இருந்து வந் விருந்தாளி."

"ஓஹோ! எப்போ வந்தாங்க?"

"நேத்து இருட்டிப் போன பிறகு வந்தாங்கய்யா."

"சரி... நீ போய் காபி போடு. நான் வந்திடுறேன்."

"சரிங்கய்யா..." – என்றவள் கையிலிருந்த சாணி ரோஜாத் தொட்டிக்குள் போட்டுவிட்டு, வேகமாய் விலகி செல்ல, அவளைப் பின்தொடர முயன்றவளை ராஜேந்திரனின் குரல் நிறுத்தியது.

"ஏய் நில்லு." – சற்று அதட்டலாய் ஒலித்த குரலில் நின்றாள்.

"இங்கே திரும்பு." – மெல்லத் திரும்பினாள். கண்களில் கலவரம். உடலில் நடுக்கம்.

"என்ன இது?"

"எது?"

"இதோ போட்டிருக்கியே... இதைக் கேட்டேன்." – கோலத்தைக் காட்டினான்.

"இது... இது கோலம்." – குரல் தந்தியடித்தது.

"அதுகூட எனக்குத் தெரியாதா?"

"வேற என்ன கேட்டீங்க?"

"இங்க என்ன கோலப் போட்டியா நடக்குது?"

"ம்ஹூம்..."

"பிறகேன் இவ்வளவு பெரிசாப் போடணும்?"

"அது... சும்மா... அழகா இருக்கும்னு."



"என்னது?"

"ஏன்... நல்லா இல்லையா?" – தயக்கமாய் அவள் கேட்க, தன்னையும் மீறி புன்னகைத்தான்.

"எது?"

"கோ... கோலம்தான்."

"ம்... நல்லா இருக்கு."

"தேங்க்ஸ்!"

"இப்போ காரை எங்கே விடுறதாம்?"

"ம்...!"

"காரை எங்கே நிறுத்துறதுன்னு கேட்டேன்."

"ஸாரி! கார் வரும்னு எனக்குத் தெரியாது."

"வேறென்ன தெரியும்?"

"ம்..." – பயமாய் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

"நான் யாருன்னு தெரியுமா?"

"ம்..."

"யாரு?"

"பெரிய மாமா பையன்."

"பேர் தெரியுமா?"

"ம்... ரா... ராஜேந்திரன்."

"இல்ல... ஜி. ராஜேந்திரன்." – அவன் சிரிக்காமல் சொல்ல, லேசாய் புன்னகைத்தாள்.

"நீங்க மிலிட்டிரியில இருக்கீங்களா?"

"இல்லையே..."

"பிறகேன் இவ்வளவு விரைப்பாப் பேசுறீங்க?"

"என்னது?"

"ஸாரி, ஸாரி. சும்மாதான் கேட்டேன்."

"ம்... நக்கலு?"

"ம்ஹூம்." - தலையாட்டி மறுத்தாள்.

"சரி, உம் பேர் என்ன?"

"மானு!"

"என்ன?"

"ம்... மா... மான்விழி."

"இது என்ன பேரு? மான்விழி தேன்விழின்னு..."

"ஏன், இந்தப் பேர் நல்லா இல்லியா?"

"பேர் நல்லாத்தான் இருக்கு. ஆனா பொருத்தமா இல்லையே!"

"என்ன?"

"உன் கண்ணைப் பார்த்தா மான் கண்ணு மாதிரி இல்லையே." - என அவளது கண்களை ஆராய, பதில் பேசாமல் பயமாய் விழித்தாள்.

"முட்டைக் கண்ணுன்னு வெச்சிருக்கலாம்."

"ம்..."

"ஆமா! உன் கண்ணு அப்படித்தான் இருக்கு."

"முட்டை மாதிரியா இருக்கு?" - கேட்கும்போதே அழுகை வந்தது.

"ஆமா! ஏன் உன் கண்ணைக் கண்ணாடியில பார்த்ததே இல்லையா?"



"ம்ஹூம்..."

"இனிமேப் பாரு. நான் சொன்னது உண்மைன்னு புரியும்." - என்றதும் இன்னும் விழிகளை விரித்தாள்.

"யேய்! கண்ணை இப்படி உருட்டாதே. பயம்மா இருக்கு."

"ஏன்?"

"இப்படி டப்பா மைய எடுத்துத் தீட்டினா?"

"ம்ஹூம்... நான் கண்ணுக்கு மை எல்லாம் போடுறதில்ல."

"ஏன்?"

"மை இல்லாமலே என் கண்ணு அழகா இருக்குன்னு அம்மா சொல்வாங்க."

"காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு."

"ம்..."

"காக்கா குஞ்சு பார்த்திருக்கியா?"

"ம்ஹூம்..."

"முள்முள்ளா முடியோட கருகருன்னு ஒரு மாதிரி இருக்கும். தாய் காக்கா சொல்லுமாம், என் பிள்ளை மாதிரி அழகு எதுவுமே இல்லன்னு..."

"நான் அவ்வளவு அசிங்கமாவா இருக்கேன்?" - உண்மையிலே அவள் அழ ஆரம்பிக்க, கேலியாய் சிரித்தான்.

"இதே கேள்வியை கண்ணாடியைப் பார்த்துக் கேளு."

"எதுக்கு?"

"கண்ணாடியில உன் முகம் தெரியுமில்ல."

"ம்..."

"உன் முகம் எப்படி இருக்குதுன்னு நல்லாப் பார்த்திட்டு நாளைக்கு எங்கிட்ட சொல்லு."

"ம்..."

"ஆமா! உன்னை வீட்ல எப்படிக் கூப்பிடுவாங்க?"

"மானுன்னு கூப்பிடுவாங்க."

"என்னை எப்படிக் கூப்பிடணும்னு தெரியுமா?"

"எப்படிக் கூப்பிடணும்?"

"நான் யாரு உனக்கு?"

"மாமா பையன்."

"அத்தான்னு கூப்பிடணும்."

"என்ன? அத்தானா?"

"ஆமா! நீ என் அத்தை பொண்ணுதானே! இப்படி முறை சொல்லித்தான் கூப்பிடணும்."

"ம்ஹூம்... மாட்டேன்."

"ஏன்? ஏன் கூப்பிடமாட்டே?"

"அது... ஒரு மாதிரியா இருக்கும்."

"உதை வாங்குவே. ஒழுங்கா நான் சொல்லித்தந்த மாதிரி கூப்பிடணும். புரியுதா?" – மிரட்டலாய்க் கேட்க தலையசைத்தாள்.

"ம்..."



"வெரிகுட். எங்கே? ஒரு வாட்டி கூப்பிடு?"

"ம்..."

"ஒரு வாட்டி கூப்பிடுன்னு சொன்னேன்."

"நா... நானா?"

"வேற யாரு? கூப்பிடு." – அவன் மிரட்டிக் கொண்டிருந்தபோதே அடுத்த காரின் ஓசை கேட்டது.

"இப்போ தப்பிச்சிட்ட! உன்னை அப்புறமா கவனிச்சிக்கிறேன். வரட்டுமா?" – லேசாய் கன்னத்தைத் தட்டிவிட்டு அவன் செல்ல, வெலவெலத்துப் போனாள்.

இது என்ன கஷ்டம்? மாமா மகன் என்றால் இப்படியெல்லாம் பேசுவார்களா? இவன் பேசுவதே மிரட்டுவது போலிருக்கிறதே. ஒருவனே இப்படியென்றால் மற்றவர்கள்...?

உள்ளத்தில் ஏற்பட்ட நடுக்கத்தோடு வாசலைத் திரும்பிப் பார்த்தாள்.

இரண்டு கார்கள் வந்து நிற்க, காரின் நான்கு பக்கக் கதவுகளையும் திறந்து கொண்டு இறங்கியவர்களைக் கண்டு இன்னும் மிரண்டு போனாள்.

உயரம் உயரமாய் இறங்கிய ஆடவர்களையும் சுரிதாரிலும் காக்ரா சோளியிலும் இறங்கிய இளம் பெண்களையும், பட்டுப் புடவை சகிதமாய் இறங்கிய அத்தைகளைக் கண்டதும் பயத்தில் உடம்பு ஆட்டம் கண்டது.

இவர்களுக்கு முன்னால் சிறு துரும்பைப் போல் தன்னை உணர்ந்தாள். கிராமத்தில் உள்ளவர்கள்

எப்படியெல்லாம் இருப்பார்கள் என்று எண்ணியிருந்த கற்பனைகள் உடைந்து தூளாயின.

நவநாகரிக யுவதிகள் போல் காட்சியளித்த மாமா பெண்களைப் பார்க்கையில், ஐயோ சுரிதார்கூட எடுத்து வரவில்லையே என்று தோன்றியது.

முதலில் வந்து நின்ற காரின் முன்பக்கக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்த வசுந்தரா தேவி, தன் முன்னே நின்று பேந்த பேந்த விழித்துக் கொண்டிருந்தவளைப் பார்த்து சற்று அதட்டலாய்க் கேட்டாள்.

"ஏய்! யார் நீ? உன்னை யார் வீட்டுக்குள்ள விட்டது?" – கேள்வியில் அதிகாரத் தொணி பறந்தது.

ஏற்கனவே ராஜேந்திரன் மிரட்டியதில் சுத்தமாய் ஒடுங்கிப் போயிருந்தவள் அடுத்த அதிகாரக் கேள்வியில் சுத்தமாய் தளர்ந்து போனாள். பேச்சு வராமல் தடுமாறி நின்றவளைப் பார்த்து இன்னும் கோபமானாள் வசுந்தரா தேவி.

"ஏய்! உன்னைத்தானே கேட்கிறேன். காதுல விழலை? யார் நீன்னு கேட்டேன்."

– இப்போதும் பேச இயலாமல் தவித்தவளுக்கு உதவி செய்தாள் கேசவனின் மனைவி பாமா.

"அக்கா! இது... நம்ம பார்வதி அண்ணியோட பொண்ணுக்கா. பாருங்க. அதே ஜாடை. ஏம்மா! நீ அவங்க பொண்ணுதானே?" – சற்றே மென்மையான குரலில் பாமா கேட்டதும் வேகமாய் தலை அசைத்தாள் மான்விழி.

"ம்...ம்..."



"ஏன்? உனக்கு வாய் பேச வராதா? நான் கேட்கும்போது வாயில என்ன இருந்தது?"

"வ... வந்து... ஸாரி... அத்..."

"இங்கே என்ன பண்றே?"

"அத்தே! நான் கோலம் போடலாம்னு..."

"போதும். உன் அம்மா பண்ணிய கோலம் போதாதுன்னு இப்ப உன்னைக் கூட்டிட்டு வந்திருக்காங்களா உன் மாமன்காரங்க."

அனைவரின் முன்னால் அறை வாங்கியது போல் இருந்தது. சட்டென கண்களில் கண்ணீர் துளிர்த்துவிட, எச்சில் விழுங்கினாள்.

"அத்தே! நான்..."

"இந்தா! இந்த உறவு முறை எல்லாம் நீ கொண்டாட வேண்டாம். வந்தோமா ரெண்டு நாள் இருந்திட்டுக் கிளம்பினோமான்னு இருக்கணும். புரியுதா? போ உள்ளே." – வசுந்தராவின் அதட்டலில் உடலும் மனமும் குன்றிப் போய்விட, எவரையும் நிமிர்ந்து பார்க்க முடியாமல், விடுவிடு வென வீட்டிற்குள் நுழைந்தாள்.

ஹாலின் சோபாவில் அமர்ந்த காபி குடித்துக் கொண்டிருந்த ராஜேந்திரனைப் பார்த்ததும் கண்ணீர் உடைப்பெடுத்துக் கொள்ள, வேகமாய் படியேறி தன் அறைக்குள் நுழைந்து கொண்டாள்.

கட்டிலில் கிடந்த செல்போன் வீறிட, உறக்கம் கலைந்த பார்வதி மகளின் கண்ணீரைக் கண்டு முகம் சுருங்கினாள்.

# 11

இடது விழியில் தூசி விழுந்தால்
வலது விழியும் கலங்கிவிடுமே
இருட்டில்கூட இருக்கும் நிழல்நான்
இறுதி வரைக்கும் தொடர்ந்து வருவேன்!

**தா**யின் முகமாற்றத்தைக் கண்டதும் அவசரமாய்க் கண்களைத் துடைத்துக் கொண்டாள் மான்விழி.

"அம்மா எழுந்துட்டீங்களா? காபி தரட்டுமா?" என்றாள் லேசான புன்னகையோடு.

மகளின் முகத்தைக் கூர்ந்து பார்த்தாள் பார்வதி. பிறகு சலனமற்ற பார்வையோடு வீறிட்டுக் கொண்டிருந்த செல்போனைப் பார்த்தாள். அப்போதுதான் அதைக் கவனித்த மான்விழி அவசரமாய்ப் போனை எடுத்தாள். திரையில் அண்ணனின் போன் நம்பரைக் கண்டதும் மீண்டும் கண்கள் நீரைச் சுரக்க ஆரம்பித்தது. போனைக் காதிற்குக் கொடுத்தாள்.

"அண்ணா...!"

"மானு! என்னம்மா தூங்கிட்டு இருந்தியா?"

"இல்லண்ணா... எப்பவோ எழுந்திட்டேன்."

"நான் மூனுவாட்டி போன் பண்ணினேன். ஏன் எடுக்கலை?"

"அண்ணா! மாடி ரூம்ல எங்களைத் தங்க வைச்சாங்க. போனைக் கட்டில்ல வைச்சிட்டு கீழே போய் கோலம் போட்டுட்டு இருந்தேன்."

"ஆரம்பிச்சிட்டியா... உன் வேலையை! சரி... மாமா வீடு பிடிச்சிருக்கா?"



"ம்..."

"அத்தை பசங்க எல்லாரும் வந்தாச்சா?"

"வந்திட்டாங்க அண்ணா...!"

"எல்லாரும் நல்லாப் பேசுறாங்களா? அம்மாகிட்ட எப்படி நடந்துக்கிறாங்க...?" – அமுதனின் ஆர்வம் இன்னும் கண்ணீரை வரவழைத்தது.

இங்குள்ள சூழலைச் சொன்னால் அண்ணன் உடனே வீட்டிற்கு வந்துவிடு என்பான். பிறகு அம்மாவின் நிலை? அம்மாவிற்காகத்தானே இங்கு வந்தோம்.

வந்த இடத்தில் எல்லாரும் அன்பாய் இருப்பார்கள் என எண்ணியது தன் தவறு. மாமாதானே அழைத்து வந்தார். அவர்களுக்காகவேணும் இங்கு இருந்துதான் ஆகவேண்டும்.

அம்மாவிற்கு குணமாகி விட்டால் போதும்... பிறகு இங்கு நமக்கு என்ன வேலை? அதுவரை யார் என்ன பேசினாலும் கேட்டுக் கொள்ள வேண்டியதுதான்... வேறு வழி?

"மானு! நான் பேசுறது கேட்குதா?"

"ம்... கேட்குது அண்ணா...! எல்லாரும் ரொம்ப அன்பா நடந்துக்கிறாங்க... அதிலும் அத்தை ரொம்ப அன்பா இருக்காங்க..."

"பார்த்தியா...? நீதான் ரொம்ப பயந்து போய் இருந்தே...!"

"ஆமாண்ணா... நான் என்னவோ கற்பனை பண்ணியிருந்தேன். ஆனா இங்கே எல்லாமே வேற மாதிரி இருக்கு..."

"மானு?"

"அண்ணா...! நீ எப்போ போய் சேர்ந்தே? ஏதாவது சாப்பிட்டியா?"

"ம்... ஆச்சும்மா... நான் நாலு மணிக்கெல்லாம் வந்துட்டேன். இப்போ ஷெட்லதான் இருக்கேன்..."

"வேளா வேளைக்கு சாப்பிடுண்ணா...!"

"அதெல்லாம் சாப்பிடுவேன். நீ உன்னையும் அம்மாவையும் பார்த்துக்க... வேற எதைப் பத்தியும் கவலைப்படாதே...!"

"சரிண்ணா...!"

"மானு! திரும்பவும் சொல்றேன். அங்கே யாராவது ஒரு வார்த்தை முகம் கடுத்துப் பேசினா உடனே எனக்குப் போன் பண்ணு... நம்ம வீட்டுக்கு வந்துடலாம்..."

"சரிண்ணா...!"

"அப்புறம் மானு! சொல்ல வந்த விஷயத்தையே மறந்திட்டேன் பாரு..."

"என்ன அண்ணா?"

"உன் போனோட சார்ஜர் கார்லயே வெச்சிட்டேன்மா... உன்கிட்ட தர மறந்திடுச்சு..."

"இப்போ என்ன அண்ணா பண்றது?"

"ஒண்ணும் பிரச்சனை இல்லை. மாமா கிட்டயோ அவங்க பசங்க கிட்டயோ காசைக் கொடுத்து ஒரு சார்ஜர் வாங்கித் தரச் சொல்லு..."

"ச... சரிண்ணா...!"



"சரிம்மா... நிறைய வேலை இருக்கு. வைச்சிடவா... நாளைக்குப் பண்றேன்."

"சரிண்ணா..." - என்றவாறு போனை வைத்தாள்.

'யாரிடம் சார்ஜர் வாங்கித் தரக் கேட்கலாம்?' என்ற யோசனையோடு அன்னையை நெருங்கினாள்.

"அம்மா! பாத்ரூம்ல பேஸ்ட், சோப் எல்லாமே இருக்கு. பிரஷ் பண்ணிட்டுக் குளிச்சிட்டு வர்றீங்களா?"

"ம்..." - எனத் தலையாட்டியவாறே பார்வதி குளியலறைக்குள் செல்ல, சோர்வாய் கட்டிலில் அமர்ந்தாள்.

அத்தையின் பேச்சு நினைவில் வர உடல் அதிர்ந்தது. இந்த அத்தைக்கு ஏன் என்மேல் இவ்வளவு கோபம்?

பொது இடம் என்றும் பாராமல் அனைவரின் முன்னால் முகத்தைக் கடுகடுப்பாய் வைத்துக் கொண்டு ஏன் அப்படிப் பேசினார்கள்? இந்த மாமா போனில் என்ன சொன்னார்? அம்மாவின் நிலை பற்றி எதுவும் சொல்லவில்லையா? விருந்துக்கு வந்தால் இரண்டு நாளில் கிளம்பி விட வேண்டும் என்று அத்தை சொன்னார்களே?

மாமா வந்ததும் கேட்க வேண்டும்.

'கூடுமான வரை அம்மாவுடனே இருந்து கொள்ள வேண்டும். யார் கண்ணிலும் படாமல் இருந்தால் யாரும் கோபப்பட அவசியம் இருக்காதே...' என்ற எண்ணத்தோடு தாய் கட்டுவதற்கான மாற்றுத் துணியை எடுத்து பாத்ரூம் கதவில் போட்டுவிட்டுத் திரும்பும் போது கதவு தட்டப்பட்டது.

யாராய் இருக்கும்? மாமா வந்திருப்பார்களோ. யோசனையோடு கதவை நெருங்கும் முன் பலமா கோபமாய்த் தட்டப்பட்டது.

மான்விழிக்கு மீண்டும் பயம் தோன்றியது.

யார் இத்தனை வேகமாய் கதவைத் தட்டுவது? சற்றே நடுங்கிய விரலால் கதவைத் திறக்க, அங்கே நின்று கொண்டிருந்து மாமாவின் மூத்த பெண் லதாராணி.

அழகான முகம்தான். ஆனால் கடுகடுவென்றிருந்தது. எடுத்த எடுப்பிலேயே கோபமாய்க் கேட்டாள்.

"என் ரூமில் நீ என்ன செய்கிறாய்?" – லதாவின் கேள்வியில் இன்னும் அதிர்ந்தாள்.

"என்ன...? இது... உன்... உங்கள் அறையா?"

"ஏன்? பார்த்தாத் தெரியலையா? ஒரு நாள் வீட்ல இல்லைன்னதும் உனக்குக் கொடுத்திட்டாங்களா அப்பா...?" – சிடுசிடுத்தவாறே தன் அறைக்குள் நுழைந்து கையிலிருந்து சிறிய கைப்பையைக் கட்டிலில் தூக்கிப் போட்டாள்.

கழுத்தைச் சுற்றியிருந்த துப்பட்டாவை எடுத்து வீசிவிட்டு சுவரோடு பதிந்திருந்த அலமாரியைத் திறந்து இரவு உடையை உருவிக் கொண்டு, சுவரில் மாட்டியிருந்த ஹேங்கரில் தொங்கியிருந்த பூத்துவாலையை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டே, குளியலறையை நோக்கி அவள் செல்ல... பதறினாள் மான்விழி.

"அம்மா... குளிச்சிட்டு இருக்காங்க..."

"வ்வாட்...?"

"அம்மா! உள்ளே குளிச்சிட்டு இருக்காங்க..."

"நான்சென்ஸ்... யாரைக் கேட்டு இதெல்லாம் செய்கிறாய்? நீ கூட இங்குதான் குளித்தாயா?"



"ஆ... ஆமாம்."

"என் சோப்பை யூஸ் பண்ணினாயா?"

"வந்து... ஆமாம்..."

"யூ ஸ்டுப்பிட். என் அறையில் வந்து படுத்ததே தப்பு. அதோட என் பொருளையும் யூஸ் பண்ணினாயா? அவுட்! வெளியே போ...!" – வாசலை நோக்கி கைநீட்டியவாறே அவள் கத்த, மான்விழிக்குக் கண்ணீர் முட்டியது.

"ஸாரி! மாமாதான் இந்த ரூம்ல தங்கிக்க..."

"இந்த அப்பாவுக்குக் கொஞ்சமும் அறிவே கிடையாது. வர்றவ... போறவளை எல்லாம் வீட்டுக்குக் கூட்டிட்டு வந்திட வேண்டியது... ச்சே...!"

முகத்தில் அறை வாங்கியது போல் துடித்துப் போனாள். அதற்குள் குளித்து முடித்துவிட்டு பார்வதியும் வெளியே வர, இன்னும் ஆத்திரமானாள் லதாராணி.

"இதென்ன வீடா? இல்லை... கார்ப்பரேஷன் கக்கூஸா? ஷிட்! அம்மா... அம்ம்மா...!" – ஆவேசமாய்க் கத்தினாள்.

கீழேயிருந்து வசுந்தரா தேவியின் குரல் கேட்டது. "என்னடி? ஏன் இப்படிக் கத்துற?"

"இங்கே மேல வந்து பாருங்க... அப்பா என்ன வேலை செய்து வெச்சிருக்காங்கன்னு...!"

"ஏன்... என்னாச்சு?"

"என் ரூமே நாறிப் போச்சு... கண்டவங்களையும் தங்க வைக்க என் ரூம்தான் கிடைச்சுதா?"

"என்ன... உன் ரூம்லயா இருக்காளுங்க...?"

"ஆமா! வந்து பாருங்க... என் பாத்ரூமுக்குள்ள என்னால போக முடியலை... ஒரே பேட் ஸ்மெல்...!" - முகத்தைச் சுளித்தவாறே அவள் சொல்ல...

வசுந்தராதேவி படி ஏறி வருவதை உணர்ந்த மான்விழியின் உடல் பதறியது.

தன் தாயின் முன்னே அத்தை என்ன வார்த்தை சொல்லப் போகிறாளோ என்ற பதைப்புடன் அன்னையின் கைகளை இறுகப் பற்றிக் கொண்டாள்.

மாடி ஏறி வந்த அத்தை இருவரையும் மேலிருந்து கீழாக ஒரு பார்வை பார்த்துவிட்டு நேராகப் பார்வதியிடம் வந்தாள்.

"வாங்க நாத்தனாரே! ஏது இவ்வளவு நேரம்?" - கேள்வியில் நக்கல் தொனிக்க, பார்வதி அமைதியாய் நின்றாள்.

"நீ செத்துப் போயிட்டேன்னு உன் போட்டோவில மாலையெல்லாம் போட்டிருந்ததே... இப்ப எப்படிம்மா... உயிரோட வந்தே? இத்தனை வருஷமா செத்துப் போனதா நாடகமாடி உன் அண்ணன், தம்பிகளை மட்டுமில்ல... இந்த ஊரையே ஏமாத்தியிருக்க..."

பார்வதி மகளைத் திரும்பிப் பார்த்தாள். "ரொம்பப் பசிக்குது. காபி தர்றியா?" - குழந்தை போல் அவள் கேட்க, ஆங்காரமானாள் அத்தை.

"என்ன திமிருடி உனக்கு...? நான் ஒருத்தி பேசிட்டு இருக்கேன். அதைக் காதுல வாங்காம காபி கேட்கிறியா... காபி?"



"அத்தே! தயவு செய்து கோபப்படாதீங்க... அம்மாவுக்கு..."

"ஏய்! வாயை மூடுடி. உன்கிட்ட ஏற்கனவே சொல்லியிருக்கேன். இந்த உறவு முறையெல்லாம் வேண்டாம்னு..."

"ஸாரி அத்தை!"

"அத்தையா? உன் அம்மா என்ன என் அண்ணனையா கட்டிக்கிட்டா...?"

"அத்தே...!"

"வாயை மூடுடி. என் அண்ணனை வேண்டாம்னு சொல்லிட்டுப் போனவதானடி உன் அம்மா...

சும்மாவா போனா? தற்கொலை நாடகம் ஆடி எல்லாரையும் அழவெச்சிட்டு இல்லே போனாள்...?

கடவுள் இருக்கான்டி... என் அண்ணனை ஏமாத்திட்டுப் போனாளே... வாழ்ந்தாளா? புருஷனோட பூவும் பொட்டுமா வாழ்ந்தாளா?"

மான்விழி கைகூப்பினாள்.

"அத்தே! வேணாம் அத்தே... என் அம்மா ஏற்கனவே மனநிலை சரியில்லாம இருக்காங்க.

நீங்க வேற இப்படி எல்லாம் பேசி எங்களைக் காயப் படுத்தாதீங்க..." - கண்ணீரோடு மான்விழி சொல்ல, வாயைப் பிளந்தாள் வசுந்தரா தேவி.

"என்ன? மூளையும் கலங்கிப் போச்சா...? போகணுமில்ல... இங்கே எத்தனை பேரைக் கலங்க வெச்சிட்டுப் போனா?

தாயி, தகப்பனை மண்ணுக்குள்ளே அனுப்பினா... என் புருஷனை... என் கொழுந்தன்களை நடைப்பிணமா ஆக்கினா...

என் அண்ணனைக் கேவலப்படுத்திட்டுப் போனா... இதெல்லாம் நினைச்சு எத்தனை நாள் நான் வயிறு எரிஞ்சிருப்பேன். அந்த வயித்தெரிச்சல் சும்மா விடுமா? உங்க அம்மாவுக்கு இன்னும் இருக்குடி..." – கறுவினாள்.

"வேண்டாம் அத்தே...! எங்க அம்மா இதுவரை அனுபவிச்ச வேதனை போதும். இப்படி சபிக்காதீங்க..."

"ஆமா! என்ன திட்டத்திலே இங்கே வந்தீங்க... ரெண்டு பேரும்?"

"ஐயோ! அப்படி எல்லாம் எதுவும் இல்லே அத்தே! மாமாதான் கூட்டிட்டு வந்தாங்க.... அம்மாவுக்கு சீக்கிரம் குணமாக்கிடலாம்னு இங்கே கூப்பிட்டாங்க..."

"அவுக கூப்பிட்டா நீங்க வந்துடுறதா? நான் என்ன பைத்தியக்கார ஆஸ்பத்திரியா வைச்சு நடத்துறேன்...!"

"அத்தே! நாங்க..."

"இந்தா! முதல்ல இந்த அத்தே... செத்தேன்றதை நிறுத்து!"

"அம்மா! நான் எதுக்குக் கூப்பிட்டேன்... நீங்க என்ன பண்ணிட்டு இருக்கீங்க...?" – லதாராணி சீறினாள்.

"ஏன்டி?"

"நான் இப்போ குளிக்கணும்..."

"குளிடி.... சரசுவைக் கூப்பிட்டு பாத்ரூமை டெட்டால் போட்டுக் கழுவி விடச் சொல்லு... அப்புறமா குளி!"



"இவங்க லக்கேஜ் எல்லாம் இங்கே இருக்கு... எடுத்திட்டுப் போகச் சொல்லுங்க!"

"அதான் சொல்றா இல்லே... உங்க பெட்டி படுக்கையை எடுங்க... இதுக்கெல்லாம் நான் யாருக்கும் சம்பளம் கொடுக்க முடியாது."

அமைதியாய் சென்று கழற்றிப் போட்ட துணிகளை எடுத்துப் பையுள் திணித்தாள் மான்விழி.

பெட்டியையும் பையையும் எடுத்துக் கொண்டு அறையை விட்டு வெளியே வந்தாள். தாயைக் கைபற்றி அழைத்தாள்.

"அத்... வந்து... நாங்க எங்கே போகணும்?"

"எங்கேயாவது போ... என்கிட்ட கேட்டுட்டா வந்தே? வந்திட்டாளுக... ஆத்தாளும் மகளுமா பெட்டியைத் தூக்கிட்டு..." – எனச் சத்தமாய்ப் புலம்பியவாறே அவள் கீழே இறங்கிச் செல்ல...

லதாராணி அறையின் கதவைப் படாரென்ற சத்தத்தோடு மூடிக் கொள்ள, தனியே நின்றனர் இருவரும்.

மான்விழி கண்ணீர் ததும்பிய விழிகளோடு சுற்றிலும் கீழேயும் பார்த்தாள். ஒருவரும் கண்ணில் படவில்லை. அநாதையாய் நிற்பதைப் போல் உணர்ந்தாலும் மனதின் ஓரமாய்த் துளி நிம்மதி பரவியது

நல்லவேளை! அத்தை இத்தனை பேச்சுக்களையும் தனியே பேசினாள். வீட்டில் உள்ளவர்களை எல்லாம் மொத்தமாய் வைத்துக் கொண்டு பேசியிருந்தால் அவமானத்தில் உயிரே போயிருக்கும்.

இப்போது எங்கே போவது? யாரிடம் கேட்பது? இத்தனை மரியாதையான வீட்டில் இன்னும் இருக்க வேண்டுமா? இந்த வீட்டில் பச்சைத் தண்ணீர் கூட குடிக்க முடியாதே... அது விஷமாய்த் தோன்றுமே...!

என்ன செய்யப் போகிறேன்? வழி தெரியாத ஊரில் வந்து மாட்டிக் கொண்டோமே... அண்ணன் இதையெல்லாம் யூகித்துத்தான் இங்கே அனுப்பத் தயங்கினானோ? பேசாமல் நம் வீட்டிலேயே இருந்திருக்கலாம்.

மீண்டும் கண்ணீர் உடைப்பெடுக்க... அதைத் துடைக்கவும் தோன்றாமல் நின்ற மகளை அசைத்தாள் பார்வதி.

"பசிக்குதுன்னு சொன்னேனே..." – தாயின் கெஞ்சலில் சுத்தமாய் உடைந்து போனாள்.

'ஐயோ அம்மா...! உனக்கு ஒரு வாய் காபி தரக்கூட இங்கு யாருக்கும் மனமில்லையே... அம்மா! நீ பசி தாங்க மாட்டாயே...' – வாய்விட்டு அழுதாள் மான்விழி.

பார்வதி மகளின் கண்ணீரைத் துடைத்தாள்.

"ஏன் அழுவுற?"

"ஒண்ணுமில்லம்மா...! அம்மா... நாம நம்ம வீட்டுக்கே போயிடலாமா?"

"ம்..."

"வாங்க..." – எனப் பெட்டியை எடுத்துக் கொண்டாள்.

"ரொம்ப பசிக்குதே...!"

"வெளியே ஏதாவது கடை இருந்தா டிபன் வாங்கித் தர்றேன். வாம்மா...!" – என்றவாறே நடக்க ஆரம்பித்தாள்



மான்விழி. கூடவே வந்த பார்வதி மகளின் கையிலிருந்த பையை வாங்கிக் கொண்டாள்.

"நாம இங்கே இருக்க வேண்டாமா?"

"வேண்டாம்மா...!"

"ஏன்? எனக்கு இந்த வீடு ரொம்பப் பிடிச்சிருக்கு...!" – தாயின் பதிலில் மனம் நொந்தது.

"ஆனா... இந்த வீட்ல உள்ளவங்களுக்கு நம்மைப் பிடிக்கலையேம்மா...!"

"ஏன் பிடிக்கலை?"

"அதை நீதாம்மா சொல்லணும்... எனக்கு என்ன தெரியும்?"

"நானா?"

"உனக்கு என்ன நடந்தது? நீ ஏன் தற்கொலை பண்ணிக்கப் போனே... இது எல்லாமே நீதாம்மா சொல்லணும்...!" – படியிறங்கிக் கீழே வரவும், வெளி வாசலில் ஏதோ பைக் வந்து நிற்பது கேட்டது.

சட்டென நிமிர்ந்து வாசலைப் பார்த்தாள். உயரமாய் ஒருவன் கையில் பைக் சாவியைச் சுழற்றிக் கொண்டே வந்தான். இவர்களைக் கண்டதும் நின்று புன்னகைத்தான்.

"ஹாய்!" – என்றான் சிநேகமாய்.

'யார் இவன்?' என்பதாய் மான்விழி பார்க்க... வந்தவன் அவனே தன்னை அறிமுகம் செய்து கொண்டான்.

"நான் நரேந்திரன்...!"

"ஓ... ராகவன் மாமாவின் பையனா?"

"யா... எப்படி இருக்கீங்க அத்தே! நல்லா இருக்கீங்களா?"

இருவரும் மௌனமாய்த் தலையாட்ட, அவர்களின் முகத்தையும் கையில் இருந்த பெட்டியையும் பார்த்தவனின் புன்னகை மறைந்தது.

"எங்கே... வெளியே கிளம்புறீங்களா?"

"ம்... ஆமாம்!"

"எங்கே?"

"ஊருக்குக் கிளம்புறோம்..."

"ஊருக்கு... சென்னைக்கா?" - என்றவனின் குரலில் அதிர்ச்சி தெரிந்தது.

"ஆமாம். வீட்டுக்குப் போகணும்..."

"ஏங்க! நேத்து நைட்தானே வந்தீங்க? அதுக்குள்ளே ஏன்...?"

"நரேந்திரன்! நாங்க சும்மா மாமா வீட்டைப் பார்த்துட்டுப் போயிடலாம்னுதான் வந்தோம்.

வந்தாச்சு... பார்த்தாச்சு... இனி கிளம்ப வேண்டியது தானே...!" - என்றாள் சமாளிப்பாய்.

நரேந்திரன் நம்பவில்லை என்று அவன் பார்வையே சொன்னது.

ஒரு நாள் வந்து போவதற்கா இவ்வளவு லக்கேஜ்! மான்விழியின் கண்களை உற்றுப் பார்த்தான்.



கலங்கிச் சிவந்திருந்த விழிகளை அவசரமாய்த் தழைத்துக் கொண்டாள்.

இங்கு என்னவோ நடந்திருக்கிறது. நிச்சயம் அது பெரியம்மாவின் வேலையாகத்தான் இருக்கும் என யூகித்தவன்... இயல்பாய்ப் புன்னகைத்தான்.

"எதுவா இருந்தாலும் அப்பா வந்த பிறகு பேசிக் கொள்ளலாம்... உள்ளே வாருங்கள்."

"இல்லை... இனி பேசுவதற்கு ஒன்றும் இல்லை. நாங்கள் கிளம்புகிறோம். மாமா வந்தால் சொல்லி விடுங்கள்..."

"இப்படிச் சொல்லிக் கொள்ளாமல் கிளம்புவதற்கா அப்பா தன் பெண்ணிற்கு மாப்பிள்ளை பார்க்கும் வேலையைக்கூட ஒதுக்கி வைத்துவிட்டு உங்களை அழைத்துக் கொண்டு வந்தார்கள்?" - வெளியே இருந்து கேட்டுக் கொண்டே வந்தவனைக் கண்டதும் மீண்டும் உடல் நடுங்கியது.

இவனா? கடவுளே! இவன் எங்கே இருந்து வந்தான்? இத்தனை நேரம் எங்கே இருந்தான்?

தாய் பேசியவற்றைக் கேட்டிருப்பானா? கேட்டும் அமைதியாய் இருந்தானா? என்ன மனிதன் இவன்?

சட்டென வெறுப்புத் தோன்ற, "அதுதான் மாமா செய்த தவறு. அவர்களுடன் கிளம்பி வந்தது நாங்கள் செய்த பெரிய தவறு. வாம்மா போகலாம்!" - என வாசலை நோக்கிச் சென்றவளின் வலக்கையை இறுகப் பற்றினான் ராஜேந்திரன்.

# 12

கண்களின் ஈரம் காய்ந்திடும்
நேரம் காயங்களும் ஆறிடுமே
மாறிடும் நெஞ்சம் சேர்ந்திடும்
சொந்தம் மான்விழியே என்னுயிரே!

**ப**ற்றிய கரத்தை வேகமாய் உதறினாள் மான்விழி. கண்களில் நெருப்பு மின்ன ராஜேந்திரனை நேராய்ப் பார்த்து ஒற்றை விரலை நீட்டி எச்சரித்தாள்.

“இந்த மாதிரி வேலையெல்லாம் என்கிட்ட வெச்சுக்க வேண்டாம்.”

ராஜேந்திரனின் முகம் புன்னகைத்தது. “அடேங்கப்பா! பூனைக் குட்டிக்கு எப்படி இவ்வளவு தைரியம் வந்தது?”

“அவசியம் ஏற்படும்போது பூனையும் சீறுமே பார்த்ததில்லையா?” – என்றாள் வெடுக்கென.

“ம்... நன்றாய் பேசத் தெரிகிறதே...! இதே பேச்சை என் அம்மாவிடமும் பேசியிருக்கலாமே...?”

“ம்ஹூம்... தலைக்கு மேல் வளர்ந்த பிள்ளைகளே தாயிடம் தட்டிக் கேட்க முடியாமல் அடங்கித்தானே கிடக்கிறார்கள்?” – என்றாள் வெறுப்பாய்.

“நோ மானு! நீ நினைப்பது தவறு. உண்மையில் நாங்கள் யாருமே வீட்டில் இல்லை.”

“என்ன?”

“நாங்கள் வீட்டில் இருந்தால் அம்மாவின் குரல் வெளியே கேட்காது.”

“இதை நான் நம்பணும்?”



“கண்டிப்பா... நானும் நரேனும் இப்போதுதானே வெளியில் இருந்து வருகிறோம். நீகூடப் பார்த்தாயே!”

“ஆமாம் மான்விழி! நாங்கள் தோப்பில் நிற்கும் போதுதான் உமாவிடம் இருந்து போன் வந்தது. அதனால் உடனே கிளம்பி வந்தோம்...” – நரேந்திரன் சொன்னபோதும் மான்விழி நம்பவில்லை.

“நான் மாடிக்குப் போகும்போது நீங்க ஹாலில் இருந்தீர்களே?”

“ஆமா! நீ உன் அண்ணனுடன் போனில் பேசிக் கொண்டிருக்கும் போதுதான் வெளியே சென்றோம்.”

“உமா?”

“உமாராணி. என் இளைய தங்கை. அவளுக்கு அதிர்ந்து பேசவோ எதிர்த்துப் பேசவோ பிடிக்காது. அதனால அம்மாகிட்ட பேசுறதைவிட எங்ககிட்ட சொல்லலாம்னு போன் பண்ணியிருக்கா...”

“ஸாரி மான்விழி! அம்மா சத்தம் கேட்டபோது குளிச்சிட்டு இருந்தேன். அதனாலதான் வந்து ஹெல்ப் பண்ண முடியலை... ஸாரி!” – என ஃப்ரெஷ்ஷாய் வந்து நின்ற உமாவைப் பார்க்கையில் பேச்சு நின்று போனது.

சின்னஞ்சிறு அழகு முகம். குளித்து விட்டு வந்ததி பளிங்காய் ஜொலித்தது. சிறிய வாயில் நிரந்தரமா புன்னகை. குச்சியாய் நீண்ட கரங்கள். விழிகளில் நிஜமா அன்பு... கனிவு.

மான்விழி தன்னையும் மீறி புன்னகைத்த “பரவாயில்லை... தப்பு எங்க போல்தான் இருக்கு!”

“நீங்க என்ன தப்பு பண்ணீங்க?”

"மாமா ஏதோ மரியாதைக்காகக் கூப்பிட்டிருக்கலாம். நாங்கதான் நாசூக்கா மறுத்திருக்கணும். ஏதோ ஒரு நினைப்புல வந்திட்டோம். அது உங்க குடும்பத்துல இவ்வளவு குழப்பத்தை உண்டு பண்ணும்னு நினைக்கலை...!"

"இல்லை மானு! நீங்க வந்தது சரிதான்... இது உங்க வீடு. உன் அத்தையின் வீடு. இதில உங்களுக்கு எல்லா உரிமையும் இருக்கு."

"வேண்டாங்க... எங்களுக்கு எந்த உரிமையும் வேண்டாம். நாங்க கிளம்புறோம்..."

"ஏங்க! நாங்க இவ்வளவு சொல்றோம்... திரும்பவும் நீங்க அதே வார்த்தையிலயே நிக்கிறீங்களே...!" - என நரேந்திரன் சொல்ல...

பின்னால் மாமாவின் குரல் கேட்டது.

"பாரு! சாப்பிட்டியாம்மா?" - என்றவாறே கணேசன் முன்னே வர, அதுவரை அமைதியாய் நின்ற பார்வதி அண்ணனை ஏறிட்டாள்.

"ரொம்பப் பசிக்குது."

தங்கையின் பரிதாபக் குரலில் மூவரும் பதறிப் போயினர்.

"என்னம்மா நீ? அம்மாவைச் சாப்பிட வைக்கலையா?"

"இ... இல்லை... மாமா. நாங்க... வெளியே போயி..."

"என்ன...?" - என்றவர் கீழே இருந்த பெட்டியைப் பார்த்தார். முகம் மாறிவிட, மகளிடம் திரும்பினார்.

"உமாம்மா... அத்தையைக் கூட்டிட்டுப் போயி சாப்பிட வையும்மா!"



"சரிப்பா... அத்தே! வாங்க... சாப்பிடலாம்..." - என பார்வதியின் கைகளைப் பற்றி வீட்டினுள் அழைத்துச் செல்ல, மூக்கு விடைக்க, அமைதியாய் நின்று கொண்டிருந்தாள் மான்விழி.

"என்னம்மா? என்ன இதெல்லாம்?"

"மாமா! நாங்க... நாங்க போயிடுறோம்... மாமா!"

"எங்கே?"

"எங்க வீட்டுக்கு..."

"அப்போ இது யார் வீடும்மா?"

"மாமா! மன்னிச்சிடுங்க மாமா... நாங்க போயிடணும்..."

"அதான் ஏன்ம்மா...?" - கணேசன் பரிவாய் அவளது தோளைத் தொட கண்ணீரோடு நிமிர்ந்தாள்.

"மாமா! அம்மா குணமாகணும்னுதானே நாங்க இங்கே வந்தோம்?"

"ஆமா..."

"ஆனா... நாங்க இங்கே இருந்தா அது நடக்காது மாமா...!"

"ஏன் கண்ணு... அப்படிச் சொல்றே?"

"வேண்டாம் மாமா! என்னை எதுவும் கேட்காதீங்க..."

"ஏன்ம்மா! உன்னை யாராவது எதுவும் சொன்னாங்களா?" - ராகவன் கேட்க, பதிலின்றி விசும்பினாள்.

"சொல்லு தாயீ! ஏன்ம்மா இப்படி அழறே?"

"அப்பா! நான் சொல்றேன்..." - எனத் தொடங்கிய ராஜேந்திரனை அவசரமாய்த் தடுத்தாள்.

"வேண்டாம்... என்னால உங்க குடும்பத்தில எந்தப் பிரச்சனையும் வேண்டாம்..." - என்றவளை வியப்பாய்ப் பார்த்தான்.

ஆனால் அவள் எதுவும் சொல்லாமலேயே கணேசனுக்குப் புரிந்து போனது.

"வசுந்தரா... ஏய் வசுந்தரா...!" - என அவர் கூப்பிட்ட குரலுக்கு வசுந்தரா, சீதாலக்ஷ்மி, பாமா என மூவருமே வந்தனர்.

"என்ன?" - எங்கோ பார்த்துக் கொண்டு கேட்டாள்.

"புள்ளையை ஏதாவது சொன்னியா?"

"யாரு புள்ளையை...?"

"இந்தப் புள்ளையை... என் தங்கை மகளை..."

"இத்தினி வருஷம் இல்லாத தங்கை இப்போ எங்கிருந்து வந்தா?"

"அதான் போன்ல எல்லாம் சொன்னேனே... ராஜா சொல்லவில்லையா?"

"அவன் சொன்னது இருக்கட்டும். நீங்க எதுக்குச் சென்னைக்குப் போனீங்க? என்ன காரியம் செய்துட்டு வந்து நிற்கிறீங்க?"

"வசு! மாப்பிள்ளையை இன்னொரு நாள்கூடப் பார்த்துக்கலாம். இல்லை... அவர் வீட்லகூடப் போய் பார்த்துக்கலாம். என் தங்கையைப் பார்த்ததுலே நாங்க எல்லாருமே எவ்வளவு சந்தோஷமா இருக்கோம் தெரியுமா?"



"ஆனா... நான் சந்தோஷமா இல்லை..."

"ஏன்?"

"என்ன ஏன்? உங்க தங்கை யாரு? என் அண்ணனை வேண்டாம்னு சொல்லிட்டுப் போனவதானே?"

"அறிவு இருக்கா உனக்கு. பழைய கதை பேசுற நேரமா இது?"

"நீங்க வேணா உங்க தங்கையைப் பார்த்ததும் எல்லாத்தையும் மறந்திடலாம். ஆனா என்னால எதையும் மறக்க முடியாது. மறக்கவும் மாட்டேன்..."

"அம்மா! இது என்ன பிடிவாதம்? மாமா என்ன... பார்வதி அத்தை நினைவிலேயே கல்யாணம் பண்ணாமலா இருந்தாங்க... கல்யாணம் பண்ணிக் குழந்தைங்களைப் பெத்துட்டு சந்தோஷமாத்தானே வாழ்ந்தாங்க..."

"உனக்கு ஒண்ணும் தெரியாதுடா... இவ என்ன மாயம் பண்ணினாளோ? சாகுற வரைக்கும் என் அண்ணன் இவளை மறக்கவே இல்லை... தெரியுமா?"

"அதுக்கு என் தங்கை என்ன செய்வா? அவ ஏன் உயிரை விடத் துணிஞ்சான்னே எங்களுக்குத் தெரியலை... எப்படியோ நீலகண்டன் பார்த்துதான் அவளைக் காப்பாத்தியிருக்கான்..."

"யாரு?"

"அதான் நம்ம வீட்ல வண்டி ஓட்டினானே... அவன் மகன்!"

"நாசமாப் போச்சு... இப்பத்தான் புரியுது... உங்க தங்கை ஒண்ணும் சாகணும்னு தண்ணியில விழல்ல...

அந்தப்பய கூட ஓடிப் போகத்தான் அப்படி நாடகம் ஆடியிருக்கா...?"

"வாயை மூடடி. என் தங்கையைப் பற்றி எங்களுக்குத் தெரியும்."

"என்ன தெரியும்? இதோ வண்டிக்காரன் புள்ளையோடு குடும்பம் நடத்திப் புள்ளையும் பெத்திருக்காளே...!"

"ஏன்டி வண்டிக்காரன்னு அலட்சியமாச் சொல்றே... அவனும் நம்ம சொந்தக்காரன்தான்."

"என்ன... சொந்தக்காரனா?"

"ஆமா! எங்க பாட்டிவழி சொந்தம். தூரத்து உறவு. பொழைக்க வழி இல்லாம வந்தவனை எங்க அப்பாதான் வீட்டோட வைச்சிருந்து வண்டி ஓட்டுற வேலையைக் கொடுத்தாங்க..."

"சொந்தக்காரன்தானே! அப்போ நீங்களே இவளை அவனுக்குக் கட்டி வைக்க வேண்டியதுதானே... எதுக்காக எங்க வீட்டுக்குச் சம்பந்தம் பேச வந்தீங்க?"

"என் தங்கை விரும்பியிருந்தா நாங்களே கட்டி வைச்சிருப்போம். ஆனா அவ மனசில அப்படி எந்த எண்ணமும் இல்லை..."

"எந்த எண்ணமும் இல்லாமத்தான் அவனைக் கூட்டிட்டுக் குடும்பம் நடத்தினாளாக்கும்... உங்க கண்மூடித்தனமான அன்புக்கு அளவே இல்லையா? உங்க கூத்துல நஷ்டப்பட்டது நாங்கதானே...?"

"அப்படி என்ன நஷ்டப்பட்டுப் போயிட்டீங்க?"

"வெத்தலைப் பாக்கு மாத்தின பிறகு பொண்ணு போயிட்டான்னா... மாப்பிள்ளை வீட்டுக்கு அவமானமில்லையா?"



"இதோ பாரு... அது நடந்து காலம் கடந்து போச்சு... இப்போ உன் அண்ணனும் உயிரோட இல்லை. அதனால அந்தப் பிரச்சனையை அப்படியே விடு."

"அதெப்படி விடுவேன்... என் அண்ணன் உசுரோட இருந்தாக்கூட பரவாயில்லை... என் மனசு ஆறுமா?"

"உன் அண்ணனோட நல்ல நேரம்... சீக்கிரமாப் போயிட்டான். இல்லண்ணா விஷயம் வேற மாதிரி போயிருக்கும்..." - என்றார் ஒரு மாதிரி குரலில்.

"என்ன... என்ன மாதிரி போயிருக்கும்?"

"பொறு! என் தங்கைக்கு பழைய நினைவுகள் திரும்பட்டும். அப்போ தெரியும் எல்லாம்...?"

"அப்போ... உங்க தங்கை இங்கேதான் இருக்கப் போறாளா?"

"ஆமாம்."

"நான் இதுக்கு அனுமதிக்க மாட்டேன்..."

"இது அவ வீடு. இதுல உன் அனுமதி எதுக்கு?"

"அப்போ... நான் யாரு? இந்த வீட்ல எனக்கு என்ன உரிமை இருக்கு...?" - ஆவேசமாய் அவள் கேட்க, அதைக் கவனியாமல் தம்பியிடம் திரும்பினார்.

"தம்பி!"

"அண்ணே...!"

"தங்கச்சி சீதாவோட பொறுப்பில இருக்கட்டும். ஏன்னா அவளுக்கு இப்போ அமைதியும் நிம்மதியும்தான் தேவை. என் வீட்ல அது கிடைக்காது."

"தாராளமா இருக்கட்டும் அண்ணே... சீதாலக்ஷ்மி!" என்ற குரலில் சீதாலக்ஷ்மி ஓடி வந்தாள்.

"அண்ணி... என்கூடவே இருக்கட்டும் அத்தான்!"

கணேசன் தம்பி மனைவியை நன்றியோடு பார்த்தார். "சீதா! இவ எங்க உசுரும்மா... ரொம்ப வருஷம் கழிச்சு அது திரும்பக் கிடைச்சிருக்கு. அதைப் பத்திரமா பார்த்துக்கம்மா..."

"கவலைப்படாதீங்க அத்தான்! அண்ணியைக் கவனிச்சுக்கிறது என் பொறுப்பு!"

"ரொம்ப நன்றிம்மா... இவங்க ரெண்டு பேரையும் ஏதாவது ஒரு அறையில தங்க வையும்மா...!"

"அப்பா! இவங்க என்னோட ரூம்ல இருக்கட்டும். நான் கஜாகூட இருந்துப்பேன்..." – என்றான் ராஜேந்திரன்.

"ராஜா! இவங்க நமக்கு ரொம்ப முக்கியம்ப்பா..."

"புரியுதுப்பா... அவங்களுக்கு ஒரு குறை வராம நாங்க பார்த்துக்கிறோம். அம்மா இனி இப்படிப் பேச மாட்டார்கள்!" – என்றான் தாயைப் பார்த்துக் கொண்டே...

"பாமா!"

"அத்தான்?"

"ஆம்பிளைங்க நாங்க வெளியே போயிடுவோம். நீங்கதான் கொஞ்சம் இவங்களைக் கவனிச்சிக்கணும்..."

"கவலைப்படாதீங்க அத்தான்... நாங்க பார்த்துக் கிறோம்."

"உங்க அக்கா எதுவும் பேசிடாம பார்த்துக்கம்மா...!"



"அத்தான்! அக்காவோட கோபம் நியாயமானது. போகப் போக அது சரியாயிடும். நீங்க எதைப் பத்தியும் கவலைப்படாதீங்க..."

"சரிம்மா..."

"முதல்ல அக்காவைச் சமாதானப்படுத்துங்க... அக்காவோட கோபத்துக்கு காரணம் நேத்து நீங்க வளைகாப்பு வீட்டுக்கு வரல்லைங்கிறதுதான்... அங்கே எல்லாரும் உங்களைத்தான் கேட்டாங்க...

அதோடு நீங்க இல்லாம அக்கா இதுவரை எந்த விசேஷத்திற்கும் போனதில்லையே...! அந்த வருத்தமும் இருக்கு. நீங்க சமாதானம் செய்தாலே பாதிக் கோபம் போயிடும். போங்க அத்தான்!" – என்றாள் புன்னகையோடு.

பதிலுக்கு லேசாய் புன்னகைத்து விட்டு, "சரிம்மா! நீங்க போய் சாப்பிடுங்க..." என்றார்.

"அப்பா! நான் வேணுமின்னா மல்லிப்பூவும் அல்வாவும் வாங்கிட்டு வரட்டுமா?" – சீரியஸாய்க் கேட்ட மகனின் முதுகில் செல்லமாய் அறைந்தார்.

"டேய்! என் மனைவிக்கு அதெல்லாம் தேவையில்லை... நான் பேசினாலே போதும்!" – என்றார் பெருமையாய்.

"ம்... கொடுத்து வைத்த அப்பா... நரேன்! வா... நாம சாப்பிடலாம் மானு... கம்... கம்... ரொம்பப் பசி எங்களுக்கு..." – என அவன் அவசரப்படுத்த... மான்விழி பெட்டியைத் தூக்கக் குனிந்தாள்.

"பரவாயில்லை... நாங்க எடுத்துக்கிறோம். நீங்க டைனிங் ஹாலுக்குப் போங்க..." – என்றவாறு நரேந்திரன் கையில் எடுத்துக் கொண்டான்.

லேசாய்ப் புன்னகைத்து விட்டு பாமாவுடன் அவள் செல்ல, மற்றவர்களும் விலகிவிட...

கணேசன் தன் அறையை நோக்கிச் சென்றார். உள்ளே முகத்தை தூக்கி வைத்துக் கொண்டு கட்டிலில் அமர்ந்திருந்தாள் வசுந்தரா.

"வசு! சாப்பிடுவோமா?" - என்றவாறு அவள் அருகில் அமர்ந்தார்.

"போய் சாப்பிடுங்க..." - என்றாள் திரும்பாமலே...

"நீ பரிமாறாம நான் என்னிக்குச் சாப்பிட்டு இருக்கேன்...?"

"ம்க்கும்... இந்தப் பேச்சுக்கு ஒரு குறையும் இல்லை."

"வேறு எதிலம்மா உனக்குக் குறை வைத்தேன்...?" - குழைவாய் அவர் கேட்க, விசுக்கெனத் திரும்பினாள்.

"நமக்குக் கல்யாணமாகி முப்பது வருஷம் ஆச்சு!"

"ஆமா! சரியா நினைவு வெச்சிருக்கியே...?"

"பேச்சை மாத்தாதீங்க... இத்தனை வருஷத்தில நமக்குள்ள என்னிக்காவது சண்டை வந்திருக்கா?"

"இல்லே...!"

"இன்னிக்கு முதன்முறையா சண்டை போட்டிருக் கோம். அதுவும் அத்தனை பேர் முன்னால என்னைத் தூக்கியெறிஞ்சு பேசுறீங்க?" - என்றாள் கோபமாய்.

"நீயும் முதன்முறையா இவ்வளவு கோபப்படுறியே... வசு?"

"எல்லாம் அவ வந்ததாலதான்... அவளை ஏன் இங்கே அழைச்சிட்டு வந்தீங்க?"



"வசு! அவ என் தங்கை. அவளை அந்த ஊர்ல அப்படிப் பரிதாபமாப் பார்த்த உடனே என் உடம்பே ஆடிப் போச்சு. அப்படியே விட்டுட்டு வரச் சொல்றியா? அப்படி வந்தா நான் மனுஷனா?"

"தங்கச்சி... தங்கச்சின்னு உருகுறீங்களே...? அவதான் பிழைச்சிட்டாளே... உடனே ஏன் உங்களைத் தேடி வரலை? மாமா... அத்தைன்னு எல்லாரும் போனப்போ நீங்க எப்படித் தவிச்சீங்க? அப்பல்லாம் ஏன் அவ வரலை?"

"வசும்மா! எனக்கும் இதேபோல நிறைய கேள்வி இருக்கு... ஆனா இதையெல்லாம் நான் யார்கிட்ட கேட்கிறது? அவளுக்குத்தான் சுயநினைவே இல்லாம இருக்காளே...!

அவ பொறந்து வளர்ந்த இடத்தைப் பார்த்தா அவளுக்குச் சீக்கிரமா குணமாகிடும்னு டாக்டர் சொன்னதாலதான் இங்கே அழைச்சிட்டு வந்தோம். அதுக்குக்கூட அவ மகன் சம்மதிக்கலை... நாங்கதான் பேசிச் சமாதானம் பண்ணி அழைச்சிட்டு வந்தோம்."

"அதுக்காக...?"

"பொறும்மா... அவ குணமானதும் நம்ம கேள்விக்கெல்லாம் விடை தெரிஞ்சிடும். ஒருவேளை பார்வதி மேல எந்தத் தப்பும் இல்லைன்னு வை... நீ பேசினதெல்லாம் பாவக் கணக்கில சேர்ந்திடுமே வசு...!

நமக்கும் பெண் குழந்தைங்க இருக்கு... நீ அவளோட பெண்ணை அழ வைச்சா அது நமக்கே திரும்பிடாதா? காரணமே இல்லாம அந்தப் பொண்ணு மேல ஏன் வெறுப்பைக் காட்டுற?" - இதமாய்க் கேட்ட கணவரைப் பார்த்தாள்.

"எனக்கு அவளைப் பார்த்தாலே எங்க அண்ணனை உதாசீனப்படுத்தினதுதான் நினைவு வருதுங்க. பிறகெப்படி வெறுப்பு வராம இருக்கும்?"

"தப்பும்மா... சதாசிவத்தை என் தங்கை பார்த்தது கூட இல்லை... பார்க்காத மாப்பிள்ளையை எப்படி அவ வெறுப்பா? பிடிக்கலைன்னு சொல்லுவா?"

"யாரு கண்டது? அதான் அந்தப் பயலை மனசில நினைச்சிருந்தாளோ என்னவோ?"

"இல்லே வசு! நீலகண்டன் சின்ன வயசுலயே தாயை இழந்தவன். அதனால அவனோட அம்மாவழிப் பாட்டி வீட்லதான் வளர்ந்தான். எங்க வீட்டுப் பக்கமே வந்ததில்லை அவன்...

அவனுக்குத் தேவையான பணம்... படிப்புச் செலவு எல்லாம் நாங்கதான் கொடுத்திருக்கோமே தவிர, அவன் ஒரு நாள் கூட நம்ம வீட்டுக்கு வந்ததே இல்லை..."

"அப்போ எப்படி அவனைக் கல்யாணம் பண்ணினா?"

"தெரியலை... ஒருவேளை தண்ணியில விழுந்தவளைக் காப்பாத்தினானா... என்ன ஏது... எதுவுமே புரியலை... பார்வதிக்கு மட்டும்தான் அது தெரியும்!" – வேதனையாய் அவர் சொல்ல, வசு அமைதியானாள்.

"வசு..."

"என்னங்க?"

"பார்வதியை நீ பார்க்கும் போதுதான் உனக்குக் கோபம் வருது. அதனால அவ சீதாகூட இருக்கட்டும்..."

"ம்..."



"கொஞ்சம் பொறுமையா இரும்மா... ஆயிரம் இருந்தாலும் அது நம்ம வீட்டுப் பொண்ணு. அதைக் கலங்க வெச்சிடாதே!"

"ம்..."

"பார்வதிக்குக் குணமானதும் அவங்க சென்னைக்கே போயிடுவாங்க. அது வரை நீ கொஞ்சம் பொறுமையா இருக்கணும்... எனக்காக...!"

"சரிங்க..."

"நான் நாளைக்கு மாப்பிள்ளை வீட்டுல போய் பார்த்துப் பேசிட்டு வர்றேன். முடிஞ்சா போட்டோவும் வாங்கிட்டு வர்றேன்..." – என்றதும் முகம் மலர்ந்தாள்.

"நாளைக்குப் போறீங்களா?"

"ம்... நானும் ராகவனும் போறோம். அப்படியே உன் அண்ணன் மகளையும் பார்த்திட்டு வர முடியாததைச் சொல்லிட்டு வர்றோம்."

"சரிங்க... மதினிதான் உங்களையெல்லாம் கேட்டுட்டே இருந்தாங்க... மறக்காம போயிட்டு வாங்க.

போகும்போது ஏதாவது வாங்கிட்டுப் போங்க... புள்ளைத்தாச்சிப் பொண்ணு வீட்ல இருப்பாளே..."

"இதையெல்லாம் நீ சொல்லணுமா?" – எனக் கேட்ட கணவரைப் பார்த்து புன்னகைத்தாள்.

மனைவியைச் சமாதானம் செய்துவிட்ட நிம்மதியில் கணேசனும் சிரித்தார்.

# 13

நிலவு தூங்கும் நேரம் – நினைவு
தூங்கிடாது இரவு தூங்கினாலும்
உறவு தூங்கிடாது – இது ஒரு
தொடர்கதை தினம் தினம் வளர்பிறை!

இரவின் அமைதியில் முற்றத்துத் தோட்டத்தில் போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்திருந்தாள் மான்விழி.

நேரம் நள்ளிரவு பன்னிரண்டைக் கடந்து போயிருக்க... துளியும் தூக்கம் வராத கண்களால் வானில் தெரிந்த வளர்பிறை நிலவைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இந்த வீட்டிற்கு வந்து இன்றோடு நான்கு நாட்கள் ஆகிறது. முதல் நாள் தாறுமாறாய்த் திட்டிய அத்தை இப்போதெல்லாம் வெகு அமைதியாய் இருக்கிறாள்.

மாமாவின் மந்திரமா? இல்லை... அவளது இயல்பே இதுதானா... எனப் புரியாமல் ஒதுங்கியே இருந்தாள்.

பாமாவும் சீதாலக்ஷ்மியும் தங்கள் பெண்ணாகவே எண்ணிக் கொண்டதில் மனம் ஆறுதல் அடைந்தது. அம்மாவிடம் கூட நிறைய மாறுதல் தெரிகின்றது.

மாமாவை 'அண்ணா...!' என்கிறாள். மாமாவின் பிள்ளைகளிடம் அன்பாய்ப் பேசுகிறாள். அத்தைகூட நின்று சில வேலைகளையும் செய்கிறாள். இதை எல்லாம் பார்க்கும்போது நிம்மதியாகத்தான் இருக்கிறது.

என்றாலும் தன்னால் இயல்பாய் இவர்களுடன் பழக முடியவில்லையே... லதாராணியைத் தவிர மற்ற இருவரும் கலகலப்பாய் நெருங்கினாலும் அவர்களிடம் இருந்து விலகி நிற்கத்தான் தோன்றுகிறது.



என்னதான் உறவுகள் சூழ இருந்தாலும் மனம் என்னவோ... தன் அண்ணனைத்தான் தேடியது. அண்ணனுடன் ரெண்டு வார்த்தை பேசினால் நன்றாய் இருக்குமே என்று தோன்றியது.

போனில் சுத்தமாய் சார்ஜ் நின்று போயிருந்தது. சார்ஜர் வாங்கித் தா என யாரிடமும் கேட்க மனமில்லை... மாமாகூட ஏதோ கல்யாண விஷயமாய் எப்போதும் பிஸியாகவே இருந்தார்.

லதாராணிக்கு இன்னும் இரண்டு மாதத்திற்குள் திருமணம் செய்து விடவேண்டும் என அனைவரும் பேசிக் கொண்டது காதில் விழுந்ததுதான்.

நல்ல காரியம்... நல்லபடியாய் நடக்கட்டும்... என நினைத்ததோடு சரி!

மாப்பிள்ளை யார் என்ன வேலை செய்கிறார் என எந்த ஆர்வமும் தோன்றவில்லை. இந்த வீட்டில் தான் மட்டும் தனித்திருப்பது போலவே தோன்றியது.

தனிமையில் இப்படி மணிக்கணக்காய் அமர்வதும் பிடித்திருந்தது. வெளி வாசலில் நின்ற பெரிய பன்னீர் மரம் பன்னீர்ப் புஷ்பங்களைத் தரை முழுக்க வாரியிறைத் திருந்தது. மணம் கும்மென்று நாசியை வருடியது.

இதமான தென்றல் வீச... வான் நிலவும் மலர்களின் மணமும் மயக்கியது. அந்த ரம்மியமான சூழலில் மெய்மறந்து அமர்ந்திருந்தபோது வெகு அருகே காலடி ஓசை கேட்க, கலைந்து திரும்பினாள்.

பனியனும் லுங்கியுமாய் ராஜேந்திரன் வந்து கொண்டிருக்க, அவசரமாய் எழுந்தாள். எல்லாவற்றையும்

விட இவனைச் சமாளிப்பதுதான் பெரிய விஷயமாய்த் தோன்றியது.

வீட்டிற்குள் போய் விடலாம் எனத் திரும்புமுன் அருகே வந்து நின்றான்.

"என்ன மான்குட்டிக்குத் தூக்கம் வரலியா? தோட்டத்தில் உலாவிட்டு இருக்கு...!" - இரவின் அமைதியில் மென்மையாய்ச் சிரித்தவாறே கேட்டான்.

பதில் பேசாமல் அமைதியாய் நின்றவளைக் கூர்ந்து பார்த்தான்.

"என்னாச்சு? நிலவு முகம் வாடியிருக்கு...!"

இதற்கும் பதில் இல்லை.

"மானு! உடம்பு எதுவும் சரியில்லையா? ஏன் இப்படிக் கொட்டுற பனியில தனியே வந்து நிற்கிற?" - குரலில் கனிவும் பரிவும் தொனித்தது.

"சும்மாதான்... காத்து வாங்கலாம்ன்னு..."

"வாங்கிட்டியா?"

"ம்...?"

"எவ்வளவு வாங்கின?"

"என்ன...?"

"காற்றை எவ்வளவு ரூபாய்க்கு வாங்கினேன்னு கேட்டேன்?"

"ச்சே! உங்களைப் பார்த்தாலே பயம்மா இருக்கு..." - என நகர முயன்றவளைக் கை நீட்டித் தடுத்தான்.

"ஏன்? நான் என்ன பேயா பிசாசா...?"



"அதுகளைக் கூட சமாளிச்சுடலாம். உங்க கேள்விக்கு பதில் சொல்லி மாளாது. நான் போகணும். வழியை விடுங்க..."

"ஏன் மானு? நான் பேசுறது பிடிக்கலையா?"

"அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை...!"

"பின்னே ஏன் என்னைப் பார்த்தாலே ஒதுங்கிப் போற?"

"எனக்கு இப்படியெல்லாம் அடுத்தவங்ககூட பேசிப் பழக்கமில்லே..."

"நான் உன் அத்தான் மானு... உன் மாமாவின் மகன்! என்கூடப் பேச உனக்கு என்ன தயக்கம்?"

"உண்மையைச் சொல்லட்டுமா?"

"ம்... சொல்லு!"

"உங்களைப் பார்த்தாலே எனக்கு உங்க அம்மாவோட நினைப்புத்தான் வருது. பயம்மா இருக்கு...!" - சொல்லும்போதே அவளது குரல் நடுங்கிற்று.

"மானு! நீ அம்மாவைப் பற்றி தப்பா நினைச்சிட்டு இருக்கே... அம்மா! ரொம்ப நல்லவங்க மானு. அன்னிக்கு ஏதோ கோபத்தில பேசியிருக்காங்க..."

"அன்னிக்கு உங்க அம்மா பேசினதை எல்லாம் உமா சொன்னாளா?"

"இல்லை... ஏதோ பிரச்சனை பண்றதா சொன்னா...!"

"அதான் இப்படிச் சொல்றீங்க... அவங்க பேசினதைக் கேட்டது நான்தானே...!"

"ஓ.கே. அவங்க சார்பா நான் மன்னிப்புக் கேட்டுக்கிறேன். ஸாரி மானு!"

"எதுக்கு?"

"இன்னிக்கு மார்னிங் அப்பா உன்னைப் பார்த்து ரொம்ப வருத்தப்பட்டாங்க மானு...!"

"மாமாவா...? ஏன்?"

"எப்பவும் ஒதுங்கியே இருக்கியே...! உன் முகத்தில சிரிப்பையே பார்க்க முடியலைன்னு வருத்தப்பட்டாங்க... ஏன் மானு எங்களையெல்லாம் உனக்குப் பிடிக்கவே இல்லையா?" - ராஜேந்திரனின் குரலில் வருத்தம் தெரிய, அவசரமாய் மறுத்தாள்.

"இல்லை... அப்படியெல்லாம் இல்லை...!"

"மானு! நீயும் அத்தையும் பட்ட கஷ்டத்தையெல்லாம் அப்பா சொன்னாங்க... சின்ன வயசில இருந்து எவ்வளவு வேதனையை அனுபவிச்சிருக்க...

இனிமேலாவது நீ சிரிக்கணும்னுதான் உன்கிட்ட கொஞ்சம் உரிமையாப் பேசுறேன்...

அப்படியாவது கூடகூடப் பேசி கலகலப்பா மாறிட மாட்டியான்னு ஒரு ஏக்கம்... ஆனா இதெல்லாம் உனக்குப் பிடிக்கல்லைன்னா இனிமே இப்படிப் பேசலை... ஸாரி!" - ராஜேந்திரனின் வார்த்தையில் அவனது முகவாட்டத்தில் சங்கடமாகிப் போனாள் மான்விழி.

"ஸாரி! நான் ஏதோ கஷ்டத்துல இருந்தேன். நான் பேசினதைத் தப்பா எடுத்துக்காதீங்க...!" - என்றாள் தயக்கமாய்.



"இட்ஸ் ஓ.கே. மானு! அம்மா பேசின எதையும் மனசில வைச்சிக்காதே ப்ளீஸ்! அவங்க அண்ணன் மேல உள்ள பிரியத்துல தன் அண்ணனை ஒதுக்கினதா நினைச்சிட்டு இருந்த... உன் அம்மா மேல உள்ள வெறுப்புல... அப்படிப் பேசியிருக்கலாம். அம்மா நல்லவங்க மானு!"

"உங்க அம்மாவை நீங்க விட்டுக் கொடுப்பீங்களா?"

"நான் அதுக்காக மட்டும் சொல்லலம்மா... அடுத்தவங்களோட மனசில உள்ள வருத்தத்தையும் புரிஞ்சுதான் சொல்றேன்... இப்போ நீயே இருக்க... உன் அண்ணனை யாராவது ஏதும் சொன்னா சும்மா இருப்பியா?"

"அதெப்படி? இப்ப எதுக்கு ஏன் அண்ணனை இழுக்குறீங்க?"

"பார்த்தியா? ஒரு பேச்சுக்குத்தான் கேட்டேன்... அதுக்குள்ளே உனக்கு எவ்வளவு கோபம் வருது? இதே கோபம்தான் அம்மாவுக்கும் இருக்கு. இப்பப் புரியுதா?"

விழிகளை விரித்து அவனைப் பார்த்தாள். "ம்... பெரிய ஆள்தான்..." - என்றாள் இயல்பான புன்னகையோடு.

"இந்த ஒரு புன்னகைக்காக எத்தனை நாள் தவம் செய்வது?" - என்றான் கேலியாய்.

"என்ன?"

"இல்லம்மா... சும்மா ஒரு பேச்சுக்கு...!"

"ம்... அந்த பயம் இருக்கட்டும்."

"பாருடா... யாரை யார் மிரட்டுறதுன்னே இல்லாமப் போச்சு...!"

"எங்களுக்கும் மிரட்டத் தெரியும்."

"ம்... ம்... நானும் கேள்விப்பட்டேன். அமுதன் பாவம்தான்!" – அவன் கேலியாய்ச் சொன்னதும் அண்ணனின் நினைவில் முகம் வாடினாள்.

"என்னாச்சு மானு?"

"அண்ணன்கிட்ட பேசணும் போல இருக்கு... அண்ணன் குரலைக் கேட்டு நாலு நாளாகுது...!"

"ஏன்? உன்னோட போன் என்னாச்சு?"

"சுத்தமா சார்ஜ் இல்லை... சார்ஜரும் அண்ணன்கிட்ட இருக்கு. புதுசு வாங்கிக்கச் சொல்லிச்சு...!"

"இதை ஏன் சொல்லலை?"

"அன்னிக்கு நடந்த பிரச்சனையில எனக்கு யார் கிட்டயும் எதுவும் கேட்கப் பிடிக்கல்ல...!"

"என்கிட்டகூட கேட்கத் தோணலையா?"

"உங்களைத்தான் பார்க்கவே கூடாதுன்னு..." – எனத் தொடங்கியவள் சட்டென நிறுத்திவிட,

"ம்... சொல்லுங்க மேடம்! ஏன் நிறுத்திட்டீங்க?" – என்றான் கைகளைக் கட்டிக் கொண்டே.

"அது... வந்து...?"

"என் மேல உள்ள கோபத்தில நீ அண்ணன்கிட்ட பேச முடியாமப் போச்சு. அவன் என்னன்னா என்கிட்ட போன் பணணிக் கத்துறான். என் தங்கைக்கு ஒரு சார்ஜர்கூட உன்னால வாங்கித் தர முடியாதான்னு கேட்கிறான்..."



"என்ன? அண்ணன் போன் செய்ததா? எப்போ...? ஏன் என்னைக் கூப்பிடலை?" – முகமெல்லாம் பிரகாசிக்க ஆவலாய்க் கேட்டவளை ரசனையாய்ப் பார்த்தான்.

"அடேயப்பா! அண்ணனைப் பத்தி பேசின உடனே முகம் முழுநிலவாப் பிரகாசிக்குதே...! இப்படின்னு தெரிஞ்சா வந்தவுடனே மேட்டரைச் சொல்லியிருப்பேனே...!"

"விளையாடாதீங்க... அண்ணன் எப்போ போன் பண்ணினாங்க?"

"ஈவினிங்தான் போன் வந்தது... நான்தான் அட்டெண்ட் பண்ணினேன்.

உன்னைத் தேடினேன்... என் கண்ணில் படவில்லை. ஸோ... நாங்களே பேசிட்டு வெச்சிட்டோம்..."

"அண்ணன் என்ன சொல்லிச்சு?"

"எவ்வளவோ சொன்னான்... எல்லாம் உன் புராணம்தான். உன் அண்ணன் என்ன பாசமலர் சிவாஜியா?"

"என் அண்ணனைப் பத்தி கிண்டல் பண்ணினா எனக்குக் கோபம் வரும்..."

"அம்மாடி! நான் ஒண்ணும் கேலி பேசவில்லை... உண்மையில் பெருமையாகத்தான் இருந்தது. அமுதன் உன்மேல வைச்சிருக்கும் அன்பைப் பார்த்து எனக்கே பொறாமை வருது..."

"அண்ணன்தான் எனக்கு எல்லாம்... அப்பா போனப்புறம் அவன்தான் எனக்கு அப்பாவா... அம்மாவா.. இருந்து பார்த்துக்கிட்டான்."

"நான்கூட அப்படி உன்னைப் பார்த்துப்பேன் மானு...!"

"ம்... என்ன சொன்னீங்க?"

"இல்லை... இங்கே இருக்கிற வரைக்கும் நான் உன்னை..."

"போதும்... நான் போறேன். தூக்கம் வருது!" – நகர்ந்தாள்.

"ஒரு நிமிஷம். சொல்ல வந்த விஷயத்தை நான் இன்னும் சொல்லலியே...?"

"எ... என்ன?"

"நாளைக்கு நாம குற்றாலம் போறோம்."

"என்ன... குற்றாலமா?" – கண்களில் மின்னல் தெறித்தது.

"ம்... போறோம். எல்லா அருவியிலயும் குளிக்கிறோம்..."

"ஹய்யோ...! யாரெல்லாம் போறோம்? எல்லாருமா?"

"ம்ஹூம்... நான்... நீ, அத்தை, கஜேந்திரன்..."

"நாம மட்டுமா?" – ஏமாற்றமானாள்.

"ம்... ஒரே கார்ல போயிட்டு வந்திடலாம். மத்தவங்களுக்கு இங்கே வேலையிருக்கு... காலையில ஏழு மணிக்கெல்லாம் ரெடியா இரு."

"ம்... உமாவை மட்டுமாவது கூட்டிட்டுப் போகலாமா?" – தயக்கமாய்க் கேட்டாள்.

"அவளுக்கு காலேஜ் இருக்கு..."

"அப்போ சுதாராணியை...?"



"அவளுக்கு எக்ஸாம் நடந்திட்டு இருக்கு... ஏன்... எங்ககூட வர உனக்குப் பயமா?"

"அப்படின்னு இல்லை... கூட ஒரு லேடீஸ் வந்தா பேச்சுத் துணையா..."

"நாங்கள்லாம் பேச மாட்டோமா?"

"பேசுங்க... இருந்தாலும்..."

"சரி... அப்போ லதாவைக் கூட்டிட்டுப் போலாமா?"

"ஐயோ! வேணாம் வேணாம்... நாமளே போலாம்."

"ம்... உன்னைப் பயமுறுத்த இது போதும். போ... போய்ப் படு. காலையில எழுந்து அத்தையையும் ரெடி பண்ணிட்டு என்னைக் கூப்பிடு. குளிச்சிட்டுத் துணி மாத்திக்க டிரெஸ் எடுத்து வெச்சிக்க...!"

"ம்..."

"ரூம்ல அலமாரியில உன் போனுக்கு சார்ஜ் போட்டு வைச்சிருக்கேன். காலையில உன் அண்ணனோட பேசிடு... போனைக் குற்றாலத்துக்கெல்லாம் எடுத்திட்டுப் போக வேண்டாம்."

"ம்... சரி... தேங்க்ஸ்!"

"எதுக்கு?"

"எல்லாத்துக்கும்தான்..."

"தேங்க்ஸ் எல்லாம் நான் எதிர்பார்ப்பதில்லை... கொஞ்சம் சிரிச்ச முகமா கலகலப்பா இருந்தாப் போதும்..."

"ம்..."

"எது தேவைன்னாலும் என்கிட்ட கேட்கணும்... வாங்கிட்டு வாடான்னா வாங்கித் தரமாட்டேனா?"

"சரிடா..."

"என்னது?"

"ஐயோ! ஸாரி... ஸாரி...!"

"சரி... என்னை எப்படிக் கூப்பிடணும்னு சொல்லித் தந்தேனே... ஒருமுறையாவது கூப்பிட்டியா? இப்போ ஒரு வாட்டிக் கூப்பிடு!" – என்றான் மிரட்டலாய்.

"நான் கூப்பிட மாட்டேன்..."

"கூப்பிடாமல் உன்னை விடமாட்டேன்."

"அதையும் பார்க்கலாம்..." – உதட்டைச் சுளித்தவாறே விலகி வேகமாய் வீட்டிற்குள் நுழைந்து மறைந்தாள்.

தனக்குள் புன்னகைத்துக் கொண்டான் ராஜேந்திரன். மனம் மிருதுவாகி காற்றில் மிதக்கும் இலவம் பஞ்சாய் பறக்கத் துவங்கியது.

அவளுடன் பேசிய வார்த்தைகளை அசை போட்டவாறே நடந்தவனுக்கு தூக்கம் தூரமாய்ப் போனது.

## 14

கொட்டுகிற அருவியும் மெட்டுக்
கட்டும் குருவியும் அடடா!
அதிசயம் கற்பனையில் மிதக்குது
கண்டதையும் ரசிக்குது – இதில்
என்ன புதுசுகம்!

**பே**ரிரைச்சலோடு தபதபவென விழுந்த அருவியைப் பார்க்கையில் கொஞ்சம் பயமாகவும் உற்சாகமாகவும் இருந்தது.



ஏராளமான ஆண்களும் பெண்களும் உற்சாகக் குளியல் போட்டுக் கொண்டிருக்க, ஓரமாக நின்று கொண்டு இயற்கையை ரசித்துக் கொண்டிருந்தாள் மான்விழி.

எவ்வளவு வேகம்? எத்தனை இரைச்சல்... எங்கே இருந்து வருகிறது இந்த அருவி... கீழே விழும் நீரில் சில துளிகள் பட்டுத் தெறிக்க உடல் சிலிர்த்தது. சுத்தமான தெளிந்த நீர். கீழே விழுந்து அதே வேகத்துடன் ஓடிக் கொண்டிருந்தது.

சுற்றிலும் பசுமை... விதவிதமான மரங்கள்... பூக்கள்... புற்கள்.. பசுமை படர்ந்த மலைகள்... என கண்ணுக்கெட்டிய தூரம் வரை பசுமையாய் இருந்தது. நாற்புறமும் திரும்பிப் பார்த்துக் குதூகலித்தாள்.

இறைவனின் படைப்பில் அனைத்துமே அதிசயம்தான். அதிலும் இந்த இயற்கை பெரிய அதிசயம். ஆயுள் முழுக்க பார்த்தாலும் சலிக்காத அழகு. குளுமை... எத்தனை அழகு இந்த இடம்... அண்ணனும் வந்தால் நன்றாய் இருந்திருக்கும்.

அடுத்தமுறை வரும்போது அண்ணனையும் அழைத்துக் கொண்டு வரவேண்டும். கேமராவையும் கொண்டு வரவேண்டும். பார்க்கும் இடங்களை எல்லாம் படம் பிடிக்க வேண்டும்.

"அண்ணி! என்ன நின்னுட்டீங்க? குளிக்க வேண்டாமா?" – தண்ணீரின் இரைச்சலைத் தாண்டிச் சத்தமாய்க் கேட்டான் கஜேந்திரன். பின்னால் திரும்பினாள்.

"குளிக்கிறதா? இந்தக் கூட்டத்திலா?"

"ஆமா! நாம இன்னும் நிறைய இடம் போகணுமே...!"

"கொஞ்சம் கூட்டம் குறையட்டுமே... நிறைய ஆம்பிளைங்க இருக்காங்க..." என்றாள் கூச்சமாய்.

"சரியாப் போச்சு... கூட்டம் குறையணும்னா இன்னும் ஆறு மாசம் நீங்க வெயிட் பண்ணணுமே...!"

"என்ன?"

"ஆமா அண்ணி... நாம காலையில வந்தே இவ்வளவு கூட்டம்னா இன்னும் நேரமாக ஆக... கூட்டம் அதிகரிக்குமே தவிர குறையாது..."

"ஐயோ! அப்போ... குளிக்க வேண்டாம்."

"என்ன விளையாடுகிறாயா? அத்தையை அழைத்துக் கொண்டு எதற்காக இங்கு வந்திருக்கிறோம். வேடிக்கை பார்க்கவா?" - அருகே நின்ற ராஜேந்திரன் அதட்டினான்.

"அ... அம்மாவை மட்டும் குளிக்கச் சொல்வோமா?"

"தனியாகவா? பேசாமல் வா. அத்தையைக் கையில் பிடித்துக் கொள்!" என முன்னே நடக்க... தயங்கி நின்றாள் மான்விழி.

"என்ன... கிளம்பு..." - என அவசரப்படுத்தியவனுக்கு பதில் சொல்ல முடியாமல், தயக்கமாய்க் குனிந்து தன் ஆடையைப் பார்த்தாள்.

வெள்ளை நிறத்தில் ரத்தச் சிவப்பு நிறத்தில் பூவேலைப்பாடு செய்த மெல்லிய புடவை அது. இப்போதே உடம்போடு ஒட்டியிருந்த புடவை நீரில் நனைந்தால் எப்படி இருக்கும்?

அவளது தயக்கத்தைப் புரிந்து கொண்டாற்போல் லேசாய்ச் சிரித்தான்.



"இதுக்குத்தான் ஒருத்தர் சொன்னாக் கேட்டுக்கணும்... கிளம்பும்போது உமா என்ன சொன்னாள்?"

"என்ன சொன்னாள்?"

"தன்னோட சுரிதார் தந்தாள்ல... வாங்கிப் போட்டிருந்தா இப்போ இந்த அவஸ்தை இருக்காதில்லே...!" என்றான்.

"ஆமாம்!"

புறப்பட்டு காருக்குப் போகும் நேரம் உமா ஓடி வந்தாள்.

"அண்ணி... புடவையோடயா போறீங்க?"

"ஆமா! நான் புடவை மட்டும்தான் கொண்டு வந்தேன்... ஏன்?"

"புடவையோட குளிச்சா எல்லாரும் உங்களைத்தான் பார்ப்பாங்க..." என்றாள் நமட்டுச் சிரிப்போடு.

"ஏன்?" - புரியாமல் கேட்டாள் மான்விழி.

"அது அங்கே போனதும் புரியும். ஒரு நிமிஷம் இருங்க... நான் என்னோட டிரஸ் எடுத்திட்டு வர்றேன்..."

"இல்லை வேண்டாம்... நான் புடவையே கட்டிக்கிறேன்..."

"அண்ணி! சொன்னாக் கேளுங்க... அண்ணனுங்க எல்லாம் நிற்கிறாங்க... அதனால ஓபனா எதுவும் சொல்ல முடியாது. புரிஞ்சுக்கங்க...!" - என்றாள் மெல்லிய குரலில்.

"பரவாயில்லை உமா... கேட்டதுக்கு நன்றி! நான் போயிட்டு வரவா?"

"அப்புறம் உங்க இஷ்டம்... ஆனா இன்னிக்கு நிறைய பேரு ஓசியில படம் பார்க்கப் போறாங்க..." - என்றாளே... 'கடவுளே! இதைத்தான் சொன்னாளா?'

நெற்றியிலறைந்து கொண்டவளைப் பார்த்துப் புன்னகைத்தான்.

"என்ன? இப்பத்தான் புரியுதா?" - கிண்டலாய்க் கேட்டவனை முறைத்தாள்.

"நான் என்ன முன்ன பின்னே இங்கே வந்திருக்கேனா? இவ்வளவு கூட்டம் இருக்கும் பொது இடத்திலதான் குளிக்கணும்னு எனக்கு எப்படித் தெரியும்?"

"அப்போ அடுத்தவங்க சொன்னதையாவது கேட்கணும்."

"அண்ணா! வம்பு வளர்க்கிற நேரமா இது? அண்ணி! கொஞ்சம் வெயிட் பண்ணுங்க. இதோ வர்றேன்." - என்றவாறு விலகினான் கஜேந்திரன்.

பார்வதி நன்றாய் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க, மெல்ல தன் அருகே நின்றவளிடம் நிமிர்ந்தாள்.

"உங்ககிட்ட ஒண்ணு கேட்கணுமே!"

"ஒண்ணு என்ன, எத்தனை வேணும்னாலும் கேளு."

"என்னை ஏன் எல்லாரும்... வந்து... அண்ணின்னு ஏன் கூப்பிடுறாங்க?" - தயங்கித் தயங்கிக் கேட்டவளை குறுகுறுவெனப் பார்த்தான்.

"யாரெல்லாம் கூப்பிட்டாங்க?"

"உமா, சுதாராணி, அப்புறம் கஜேந்திரன். எல்லாருமே இப்படித்தான் கூப்பிடுறாங்க."



"அண்ணியை அண்ணின்னு தானே கூப்பிடணும்?"

"என்ன? என்ன சொல்றீங்க?"

"பதறாதேம்மா. எங்க ஊர்ப்பக்கம் எப்பவுமே முறை சொல்லித்தான் கூப்பிடுவோம். இவங்கெல்லாம் உன்னைவிட சின்னவங்க. அதனால அத்தை மகளை அண்ணின்னுதான் கூப்பிடுவாங்க."

"அப்படியா?" - நிம்மதியாய் அவள் சிரிக்க, அவளைக் கூர்ந்து பார்த்தான்.

"நீ என்னன்னு நினைச்சே?"

"நானா... நான் ஒண்ணும் நினைக்கலியே!"

"நிஜம்மா?"

"நிஜமாத்தான்."

"அப்பச்சரி." - என்றான் சிரித்துக் கொண்டே.

"அப்போ நான் கஜேந்திரனை எப்படிக் கூப்பிடணும்?"

"பெரியவனா இருந்தா அத்தான்னு கூப்பிடணும். சின்னவன்னா கொழுந்தன்னு சொல்வாங்க. அப்படிக் கூப்பிட கஷ்டமா இருந்தா சும்மா பேர் சொல்லிக் கூப்பிடு. தப்பில்லை."

"அப்போ நிஜமாவே பெரியவங்களை அத்தான்னு தான் கூப்பிடணுமா?"

"ஆமா! சித்தி எல்லாம் அப்பாவைக் கூப்பிடுறதைப் பார்த்திருப்பியே!"

"அவங்கள்லாம் பெரிய ஆளுங்க."

"ஹலோ! நானும் பெரியவன்தான். உன்னை விட ஆறு வயசு பெரியவன். நினைவிருக்கட்டும்."

"ஆறு வயசு பெரியவங்களை எல்லாம் அத்தான்னு கூப்பிட முடியாது."

"பின்னே?"

"ஒரு இருபது முப்பது வயசு மூத்தவங்களா இருந்தாக் கூப்பிடலாம்."

"அவ்வளவு மூத்தவங்களை நீ தாத்தான்னுதான் கூப்பிடணும்."

"ஏம்மா! நடுவழியில நின்னா பேசுவே. ஓரமா நில்லும்மா. நாங்க போக வேணாமா?" – என்றவாறே ஒரு கும்பல் வர, அவளது கையைப் பற்றி இழுத்து தன் அருகில் நிறுத்திக் கொண்டான் ராஜேந்திரன்.

அவனது அருகாமை அவஸ்தையைத் தர, மேற்கொண்டு எதுவும் பேச இயலாமல் மான்விழி தடுமாறிக் கொண்டிருக்க, கையில் ஜவுளிக் கடை பார்சலோடு வந்தான் கஜேந்திரன்.

"அண்ணி! இந்தாங்க. இந்த டிரஸ்ஸ போட்டுட்டு குளிக்கப் போங்க." – என நீட்டினான்.

"கஜா! இது என்னது?"

"சுடிதார்தான் அண்ணி! குத்துமதிப்பா வாங்கிட்டு ...ந்தேன். பிடிச்சிருந்தா வெச்சிக்கங்க. இல்லன்னா குளிச்சு ...ச்சதும் இங்கேயே போட்டுட்டுப் போயிடலாம்."

"சேச்சே! இருக்கட்டும்." – என்றாள் அவசரமாய்.



"போய் மாத்திட்டு வாங்க அண்ணி! அதோ அந்தப் பாறைக்குப் பின்னால லேடீஸ் எல்லாம் போறாங்க பாருங்க."

"ம்..." – என நடந்தவள், நின்று கஜேந்திரனைப் பார்த்துப் புன்னகைத்தாள். "தேங்க்யூ கஜா!"

"இருக்கட்டும் அண்ணி. இதுல என்ன இருக்கு?"

நிமிர்ந்து பெரியவனைப் பார்த்தாள். "சும்மா வார்த்தைக்கு வார்த்தை பேசினாப் போதுமா? என் கொழுந்தனுக்கு உள்ள சாமர்த்தியமும் அக்கறையும் உங்களுக்கு இல்லையே." – என்றாள் உதட்டைச் சுளித்தவாறே.

"அக்கறை இல்லாமல் இல்லை. ஆனா நான் போகாததற்குக் காரணம் இருக்கு."

"என்ன பொல்லாத காரணம்."

"நான் வாங்கித் தந்தா நீ வாங்கியிருப்பியா? வீம்புக்காகவேணும் போட மாட்டேன் என்று அடம் பிடிப்பாய்."

"இதெல்லாம் சும்மா சாக்கு போக்கு..."

"அப்போ நான் வாங்கித் தந்தா மறுக்கமாட்டியா?"

"அதான் என் கொழுந்தன் வாங்கித் தந்தாச்சே!"

"ஸ்டாப் இட்! என்ன நீங்க? எப்ப பார்த்தாலும் எலியும் பூனையும் மாதிரி சண்டை போட்டுட்டே இருக்கீங்க?"

"உங்க அண்ணன்தான் எங்கிட்ட வம்பு பண்றார்."

"அத்தை பொண்ணு மாமன் பொண்ணுகிட்ட வம்பு பேசுறது சகஜம்தான் அண்ணி. நீங்க இதைப் பெரிசா எடுத்துக்காதீங்க?"

ராஜேந்திரனை நிமிர்ந்து பார்த்தாள் மான்விழி. அவன் புருவங்களை உயர்த்தி என்னவென்று கேட்க, முகத்தைத் திருப்பிக் கொண்டு பாறையை நோக்கிச் சென்றாள்.

கஜேந்திரன் வாங்கித் தந்த உடை கச்சிதமாய் பொருந்தியது. கருநீல நிறத்தில் வட்ட வட்டமாய் கண்ணாடி வேலைப்பாடுடன் கூடிய சுடிதார். அவள் உடம்பிற்கேற்ப அளவெடுத்துத் தைத்தது போலிருந்தது. உற்சாகமாய் உடையை மாற்றிவிட்டு, புடவையை மடித்து அதே கவரில் வைத்துக்கொண்டு வந்தாள்.

பாராட்டுதலாய்ப் பார்த்த மூத்தவனின் பார்வையைக் கவனியாததுபோல் தாயை நெருங்கினாள்.

"அம்மா! குளிக்கலாமா?"

"ம்..." - ஆர்வமாய்த் தலையசைத்தாள் பார்வதி. நால்வருமாய் நீளமான வரிசையில் நின்று அருவியில் குளித்து முடித்து அடுத்ததாய் பழைய குற்றாலம், ஐந்தருவி என அனைத்து அருவியிலும் களைக்காமல் நீராடியதில் உடல் பளபளவென மின்னியது.

கூந்தல் பஞ்சாய் பறக்க, நுனியில் முடிச்சிட்டுக் கொண்டாள். உடம்பு மிகவும் மிருதுவாய் இருக்க, கஜேந்திரனைப் பார்த்தாள்.

"கஜா! இந்தத் தண்ணி ரொம்ப நல்லாயிருக்கே. இவ்வளவு நேரம் குளிச்சிருக்கோம். முடியில ஒரு பிசுபிசுப்பு கூட இல்லை."

"அண்ணி! இது மலை மேல இருந்து வர்றதால ரொம்ப சுத்தமானதா இருக்கும். அதோட மூலிகைகள் எல்லாம் கலந்து வர்றதால உடம்புக்கும் மனசுக்கும் ரொம்ப



உற்சாகமா இருக்கும். எவ்வளவு கூட்டம் பார்த்தீங்களா? எனக்கு விபரம் தெரிந்த நாள்ல இருந்து பார்க்கிறேன். கூட்டம் இல்லாம இந்த இடம் இருந்ததே இல்லை. ஒவ்வொரு வருஷமும் கூட்டம் அதிகமாகுமே தவிர குறையாது."

"ம்... ரொம்ப நல்லா இருக்கு. இனிமே நாங்களும் வருஷா வருஷம் வந்திடணும்"

"வாங்க அண்ணி! இது மட்டுமில்ல பாபநாசம், நம்பி மலை இப்படி நிறைய இடம் இருக்கு. நாங்க அழைச்சிட்டுப் போறோம்."

"நீங்கள்லாம் கொடுத்து வெச்சவங்க. குளுகுளுன்னு எப்பவும் பசுமையா இருக்கிற இடத்தில இருக்கீங்க."

"இப்ப என்ன? நீங்களும் எங்க கூடவே இருந்திடுங்க."

"அதெல்லாம் இருப்பாள். இப்ப வாங்க பழத்தோட்ட அருவிக்குப் போகலாம்." - என முன்னே நடந்தான் ராஜேந்திரன்.

"பழத்தோட்ட அருவியா? அது எங்கே இருக்கு?"

"அதுக்குக் கொஞ்ச தூரம் நடக்கணும். மலை மேல ஏறணும். வா."

"அம்மா அவ்வளவு தூரம் நடக்க முடியுமா?"

"உன்னை விட அத்தைதான் உற்சாகமா இருக்காங்க. அத்தே போலாமா?"

"ம்... போலாம்." - என்றாள் பார்வதி கூந்தலை உதறிக்கொண்டே.

"அண்ணா! அவங்களுக்குப் பசிக்குமே. ஏதாவது சாப்பிட்டுட்டுப் போலாமா?"

"இல்லடா. அப்புறம் ரொம்ப வெயில் ஏறிடும். நடக்க கஷ்டமா இருக்கும். முதல்ல போயிட்டு வந்து அப்புறமா சாப்பிடலாம்."

"சரி, அண்ணி! உங்களுக்குப் பசிக்குதா?"

"இல்ல. போகலாம். கொஞ்சம் காபி குடிச்சா நல்லா இருக்கும்."

"போற வழியில காபி ஷாப் இருக்கும். அங்கே குடிச்சுக்கலாம். வா." - என்றவாறு நடந்தவனை மூவரும் பின்தொடர்ந்தனர்.

போகும் வழியெல்லாம் இருந்த அழகை ரசிக்கவே நேரம் போதுமானதாய் இருக்க, அங்கே பேச அவசியமில்லாமல் போனது. அடர்ந்த புதர்களும் விதவிதமான பூக்களோடு கூடிய கொடிகளும், பருத்த மரங்களும், கனிகளோடு தெரிந்த மரங்களுமாய் அந்த இடம் குளுகுளுவென்றிருந்தது.

பேரிக்காய் மரங்கள், மாமரங்கள், பைன் மரங்கள் என பாதையின் இருபுறமும் மரங்கள் செழிப்பாய் வளர்ந்திருந்தன. மரங்களில் தொங்கிய கனிகளைக் கண்டு அதிசயித்தாள்.

"இவ்வளவு பழங்கள் பழுத்துத் தொங்குதே. யாரும் பறிக்க மாட்டாங்களா?"

"இது வனத்துறையின் பார்வையில் உள்ள இடம். இங்க சுத்திப் பார்க்க வரலாம். குளிக்கலாம். ஆனா வேறு எதையும் தொடக்கூடாது."



"அப்போ நம்மை பாரஸ்ட் ஆபீஸர்ஸ் கவனிச்சிட்டே இருப்பாங்களா?"

"ம்... அதோட உன்னோட சொந்தக்காரங்க நிறைய பேர் இங்கதான் இருப்பாங்க. நீ பழத்தைப் பறிச்சேன்னு வை.... எல்லாருமே சேர்ந்து உன்னை மொய்ச்சிடுவாங்க."

"யாரு? என்னோட சொந்தக்காரங்களா? இங்கேயா?"

"ம்... நீ பார்க்கணுமா?"

"ஆமாம். யாரு அவங்க?" - ஆவலாய் மான்விழி கேட்க, கஜேந்திரன் குரல் கொடுத்தான்.

"அண்ணி! வேண்டாம். அண்ணன் என்ன சொல்றான்னு தெரிஞ்சா..."

"டேய்! சும்மா இரு. அவளே ஆசைப்படுறா. நீ ஏன் தடுக்கிறே? மானு! நீ பார்க்கணுமில்ல..."

"ம்...ம்..."

"அதோ பாரு. எல்லாருமே கிட்டத்தட்ட உன் சாயல்லதான் இருப்பாங்க." - என அவன் கைகாட்டிய திசையில் ஆர்வமாய் பார்த்தவளின் முகம் கடுத்தது.

ஏழெட்டு குரங்குகள் தங்கள் குட்டிகளோடு மரக்கிளையில் தொங்கிக் கொண்டும் விளையாடிக் கொண்டும் இருந்தது. ஆவேசமாய்த் திரும்பினாள்.

"இது... இதுவா என் ரிலேட்டிவ்ஸ்?"

"ஆமா! உன்னை மாதிரியே அழகா இருக்கில்ல. அதோ பார்... உன்னைத்தான் பார்க்குது. இனம் இனத்தோட சேரும்னு சொல்வாங்களே. அது இதைத்தானோ?" - ராஜேந்திரன் சீரியஸாய்க் கேட்க, பற்களைக் கடித்தாள்.

"ஏய்! இதுக்கு மேல ஏதாவது சொன்ன கடிச்சிடுவேன்." – என்றதும் இன்னும் சிரித்தான்.

"சந்தேகமே இல்லை. கன்பார்ம் ஆகிடுச்சு. நீ இவங்க ரிலேஷன் தான்."

"ஏய்ய்..." – இரு கரங்களாலும் அவனை அடித்துப் பிராண்ட, பார்வதி இடையில் வந்து தடுத்தாள்.

"ஏய்! புள்ளய ஏன் அடிக்கிற?"

"அம்மா! உன் அண்ணன் மகனை வாயை மூடிக்கொண்டு வரச்சொல். இல்லே நான் என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது."

"அத்தே! குற்றாலத்துல குளிச்சா எல்லாருக்கும் குணமாகும்னு சொல்வாங்க. ஆனா இவளுக்கு கலங்கிப் போச்சு போலிருக்கு."

"அத்தான்! எங்கிட்ட அடி வாங்காதே. நீ என்னை ரொம்பக் கடுப்பேத்துற?"

"வாடி என் அத்தை மகளே! பார்த்தியா. உன் வாயால என்னை அத்தான்னு கூப்பிட வெச்சிட்டேன் பார்த்தியா?" – என்றான் வெற்றிச் சிரிப்போடு.

"ம்ஹூம்... இதெல்லாம் கணக்குல வராது." – செல்லமாய் சிணுங்கியவளின் தலையில் குட்டினான்.

"அதெல்லாம் கிடையாது. சொன்னா சொன்னதுதான். ஆக நீ தோத்துட்ட. இனி என்னை எப்போதுமே அத்தான்னு தான் கூப்பிடணும்."

"மாட்டேன்... மாட்டேன்."

"இல்லன்னா உன்னைக் குற்றாலத்துலயே விட்டுட்டுப் போயிடுவேன்."



"நான் கஜாகூட வீட்டுக்குப் போவேன்."

"என் தம்பி என் பேச்சை மீறி உன்னை கூப்பிட்டுப் போகமாட்டான்."

"உண்மையாகவா கஜா?"

"உங்க சண்டையில என்னை இழுக்காதீங்கப்பா. நான் ஒரு அப்பாவி."

"இப்போ என்ன சொல்றே?"

"என்ன ஆனாலும் சரி. நான் அப்படிக் கூப்பிட மாட்டேன்."

"நீ கண்டிப்பா கூப்பிடுவ! பார்க்கலாமா?"

"அப்படி என்னதான் இருக்கு அந்த வார்த்தையில?" – சலிப்பாய்க் கேட்டாள்.

"கூப்பிட்டுப் பார். உனக்கே தெரியும்." – என்றான் விஷமமாய்.

"கஜா! இனிமே உன் அண்ணனோட எங்கேயும் போகக்கூடாது. வெரி டேஞ்ஜரஸ் மேன்."

"இல்ல அண்ணி. அண்ணன் ரொம்ப இன்ட்ரெஸ்டிங் மேன். நைஸ் மேன். பழகிப் பார்த்தா விடவே மனசு வராது."

"ஐயோ! எனக்குத் தலைய ரொம்ப வலிக்குது..." – தலையைப் பற்றிக் கொண்டு பாதையோரமாய் கிடந்த பாறையின் மீது அமர்ந்தாள் மான்விழி.

"ஏய், ஸாரிம்மா. இனிமே இப்படிப் பேசல்ல. வா போலாம்."

"எனக்கு நிஜமாவே தலை வலிக்குது. ரொம்ப..."

“அண்ணா! அவங்க அப்பவே காபி கேட்டாங்களே...!”

“அட, ஆமாம். சரி, கஜா... நீ இவங்களகூட நில்லு. ரெண்டு ஸ்டெப் இறங்கினா ஒரு காபி ஷாப் இருக்கு. நான் போய் வாங்கிட்டு வர்றேன்.”

“நான் போகட்டுமா அண்ணா?”

“வேண்டாம் கஜா. அவரே போகட்டும். இங்கு நின்றால் பேசியே என் தலைவலிய அதிகமாக்கிடுவார்.”

“வாழ்நாள் பூரா இந்தத் தலைவலியை நீ சகிச்சுத் தான் ஆகணும். வேற சான்ஸே இல்ல.” – என்றவாறு ராஜேந்திரன் விலகி நடக்க...

அவன் பேச்சின் அர்த்தம் புரியாமல் விழித்தாள் மானவிழி.

## 15

உள்ளக்கதவை நீ மெல்லத்
திறந்தாய் அந்நாளே பொன்
நாளாய் என் ஜென்மம் விடியும்
எந்நாளும் பன்னீரில் என்நெஞ்சம்
நனையும் என் ஆசை முல்லை!

முழுதாய் இருபது நிமிடம் ஆனபின்னும் ராஜேந்திரனைக் காணாமல் லேசாய் கலக்கமடைந்தாள் மான்விழி. சாலையோரமாய் விளையாடிக் கொண்டிருந்த சில குரங்குகளைப் பார்வதி வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க, சற்று தள்ளி கைகளைக் கட்டிக்கொண்டு நின்றிருந்தான் கஜேந்திரன்.

“கஜா!”



“என்னங்க அண்ணி?”

“உங்க அண்ணனை இன்னும் காணோமே?”

“டூரிஸ்ட் ப்ளேஸ் அண்ணி இது. கூட்டம் ஜாஸ்தியா இருக்கும். டோக்கன் வாங்கி வரிசையில நின்னுதான் காபி வாங்கணும்.”

“அடடா! இப்படின்னு தெரிஞ்சா காபி வேணாம்னு சொல்லியிருப்பேனே.”

“இருக்கட்டும் அண்ணி! இப்ப வந்திடும் அண்ணன்.”

“எதுக்கும் ஒருமுறை பார்த்திட்டு வந்திடுறீங்களா?”

“இல்ல அண்ணி! இந்தப் பக்கம் நிறையப் பசங்க அலையுறாங்க. நீங்க தனியா இருந்தா அது சரிவராது. அண்ணன் வரட்டும்.”

“அதான் அம்மா என்கூட இருக்காங்களே?”

“வேண்டாம் அண்ணி. உங்களைத் தனியா விட்டுட்டுப் போனா அண்ணன் என்னைத் திட்டுவான்.”

“சரி வாங்க. எல்லாருமே போலாம். கடையில உட்கார்ந்து காபி சாப்பிடலாம்.” – என எழுந்து நின்றவளின் மீது நான்கு பேர் அடங்கிய கும்பல் வந்து மோதியது.

சரேலென விலகிக் கொண்டாள் மான்விழி. “ஏய்! கண்ணு தெரியல்ல. இப்படி வந்து விழுறியே?” – என சீறினாள்.

“அட! ஆமாங்கண்ணு. உன் முகம் பளபளன்னு மின்னுதே. அந்த ஒளியில என் கண்ணு கூசுது. அதான் வந்து மோதிட்டேன். ஸாரி.” – என்றான் ஒருவன். குடித்திருக்கிறான் என்று புரிய முகத்தைச் சுளித்தாள் மான்விழி.

"அண்ணி! என்னாச்சு?" - என பதட்டமாய் நெருங்கினான் கஜேந்திரன்.

"கஜா! வேணுமுன்னே வந்து மேலே விழறான்."

"அட! கரெக்ட்டா கண்டுபிடிச்சிட்டியேம்மா. வேணுமுன்னுதான் நீ... வேணுமுன்னுதான் விழுந்தோம்."

"ஏய்! யாருடா நீ? என்ன குடிச்சிருக்கியா?" - முன்னே வந்த கஜேந்திரனைப் பார்த்து நக்கலாய்ச் சிரித்தனர் நால்வரும்.

"ஏய்! நீ யாருப்பா குறுக்கே வர்ற? இவ்வளவு நேரம் ஓரமாத்தானே நின்னே? இப்ப என்ன? போ. அப்படி ஓரமா நில்லு. நாங்க பாப்பாகிட்ட கொஞ்சம் விளையாடணும்." - என்றான் போதையோடு.

"யூ... இடியட். யார்கிட்ட வந்து என்ன பேசுற?" - பளாரென அறைந்தான் கஜேந்திரன். மான்விழி மிரண்டு பின்வாங்க, மற்ற மூவரும் அவனைச் சூழ்ந்து கொண்டனர்.

"ஏய்! யார் மேல கைய வெச்ச? இவளுக்காக எங்க மேலே கைவெக்கிறியா? நீயே இதற்காகத்தானடா இவளை ஒதுக்குப்புறமா கூட்டிட்டு வந்திருக்க?"

"ச்சீ! வாயை மூடு. இவங்க என்னோட அண்ணி!"

"ஆஹா! நம்ம இராமாயண லட்சுமணர்டா இவர். அப்படின்னா இவ சீதையா? ஏம்மா சீதை! உன்னோட ராமர் எங்கேம்மா?"

"இதோ இருக்கேன்." - என்ற குரலில் மற்றவர்கள் திரும்ப, கையில் இரண்டு காபி கோப்பையோடு நின்றிருந்தான் ராஜேந்திரன். எந்தவிதப் பதட்டமும் இன்றி



மான்விழியிடம் அதைக் கொடுத்துவிட்டுத் தம்பியிடம் திரும்பினான்.

"கஜா! என்னாச்சு?"

"சார்! நான்... நான் சொல்றேன்." - என்றவாறு லேசாய் தள்ளாடிக் கொண்டு வந்தான் ஒருவன்.

"என்ன விசயம்?"

"ஸார் நாங்கள்லாம் மேலே அருவியில குளிச்சிட்டு வந்தோமா. எங்ககிட்ட கண்ணாடி இல்ல."

"என்ன?"

"எங்க தலை கலைஞ்சிருக்கில்ல. அதை வாரிவிட கண்ணாடி பார்க்க வேண்டாமா?"

"அதுக்கு?"

"இந்தப் பொண்ணு எத்தனை கண்ணாடி வெச்சிருக்கா பாருங்க. அதைப் பார்த்து தலை வாரலாம்னு கிட்ட வந்தா கத்துறா. இவன் அடிக்கிறான். இது நியாயமா ஸார்?"

ராஜேந்திரன் திரும்பி மான்விழியைப் பார்த்தான். சுடிதாரின் முன்பக்கம் டிசைனில் கண்ணாடி வைத்துத் தைக்கப்பட்டிருந்ததைப் பார்த்தான்.

மான்விழி அவசரமாய் தனது துப்பட்டாவை எடுத்துப் போர்த்திக் கொண்டாள்.

"அட! ஏன்பாப்பா மறைக்கிற? நாங்க கண்ணாடியப் பார்த்து தலை சீவிட்டுப் போயிடுறோம். காட்டும்மா!" - என்றதும் உடம்பைக் குறுக்கிக்கொண்டு கஜேந்திரனின் பின்னால் மறைந்தாள்.

இப்போதும் ராஜேந்திரனிடம் பதட்டம் வரவில்லை. "இப்போ என்ன? உங்களுக்கு தலை சீவணும். அவ்வளவு தானே?"

"ஆமா... ஆமா!"

"அதுக்கென்ன, சீவிட்டாப் போச்சு. கஜா!"

"அண்ணே!"

"அந்த அரிவாளை எடு." – என கை நீட்டினான்.

"இதோண்ணே!" – என்றவாறு கஜேந்திரன் தன் முதுகுக்குப் பின்னால் கையைக் கொண்டு போக நால்வரும் பதறினர்.

"ஸார்! என்ன இது? அ... அருவா எதுக்கு?"

"உங்க தலையை சீவணுமில்ல... அதுக்குத்தான்."

"ஸார்... ஸார்... வேண்டாம் ஸார்." – முதலில் பேசியவனது உடம்பு ஆட்டம் கண்டது. அவனது காலரைப் பற்றி தன்புறமாய் இழுத்து முகத்தில் ஒரு குத்து விட்டான்.

"ஏன்டா! தொடை நடுங்கிப் பயலே! ஒரு அடிக்கு உன் உடம்பு தாங்குமா? உனக்குத் தலை சீவணுமா? அதுவும் கண்ணாடியைப் பார்த்து..."

"அண்ணே! இல்லண்ணே... விட்டுடுங்கண்ணே!"

"கொஞ்சம் தண்ணி போட்டா உங்களுக்கெல்லாம் வீரம் வந்திடுதோ? தனியா ஒரு பொண்ணைப் பார்த்தா உரசணும்னு தோணுதோ?"

"இல்லண்ணே! இனிமே செய்ய மாட்டோம். விட்டுடுங்கண்ணே. போறவங்க எல்லாம் பார்க்கிறாங் கண்ணே!"



"பார்க்கட்டுமே... ஓ! தலை கலைஞ்சிருக்கேன்னு வருத்தப்படுறியா? நான் வேணும்னா தலை சீவட்டுமா?"

அவன் கைகளைத் தூக்கிக் கும்பிட்டான். "மன்னிச்சிடுங்கண்ணே! தெரியாமப் பண்ணிட்டோம்."

"கஜா! ஆயுதத்தை உள்ளேயே வை. தேவைப்பட்டா எடுத்துக்கலாம்."

"சரிண்ணே!"

"தேவைப்படாதுண்ணே! எங்களை விட்டுட்டா நாங்க ஓடிப் போயிடுவோம்."

"ஓடிப் போங்கடா. இனிமே இந்தப் பக்கமே உங்களை நான் பார்க்கக் கூடாது. ஓடுறா!" – என்றவாறே சட்டையை விட்டான். மூன்று பேர் வேகமாய் ஓடிவிட, ஒருவன் மட்டும் நின்று யோசனை செய்து கொண்டிருந்தான்.

"ஏய்! என்னடா? உனக்குத் தனியாச் சொல்லணுமா?"

"அண்ணே! குத்தாலத்துக்கு குளிக்கத்தானே வருவாக?"

"ஆமாம்!"

"நீங்க குளிக்கும்போதுகூட அருவாளோட தான் வருவீங்களா?"

"கஜா! அதை வெளியே எடு. இவன் இரத்தத்தை பார்க்காமப் போக மாட்டான் போலிருக்கு." – என்றதும் மிரண்டு ஓட்டமாய் ஓடியவனைப் பார்த்து சிரித்தவாறே திரும்பியவனின் முகம் மாறியது.

மான்விழியின் கண்கள் கலங்கிச் சிவந்திருந்தது. "மானு! என்னாச்சு?" – என்றான் பதட்டமாய்.

"அத்தான். நாம வீட்டுக்குப் போயிடலாம்."

"ஏன்? பழத்தோட்ட அருவிக்குப் போக வேண்டாமா?"

"வேண்டாம். முதல்ல வீட்டுக்குப் போயிடலாம்."

"மானு! அவனுங்க ஏதோ குடிகாரப் பசங்க. அவனுங்களைப் பார்த்துப் பயப்படலாமா?"

"இல்ல. எனக்கு... எனக்கு..." - கண்களில் கண்ணீர் சுரக்க, வார்த்தையின்றி நின்றவளின் தோள்பற்றி தன் புறமாய் திருப்பினான்.

"என்னம்மா?"

"வீட்டுக்குப் போகலாம் அத்தான். எனக்குப் பயம்மா இருக்கு."

"இரண்டு வீரர்கள் கூட இருக்கும்போது பயப் படலாமா?"

"அண்ணா! அண்ணிதான் பயப்படுறாங்களே. நாம கிளம்பலாம். இன்னொரு முறை வரலாம்."

"ம்... ஓ.கே. போலாம். ஹேய்! அத்தை எங்கே?" - ராஜேந்திரன் பதற, அப்போதுதான் திரும்பிப் பார்த்தாள் மான்விழி. பார்வதி அமர்ந்திருந்த பாறை வெறுமையாய் இருக்க, பதறிப் போனாள்.

'ஐயோ! அமமாவைக் காணோமே. இங்கதானே இருந்தாங்க.'' - பதட்டமாய் சுற்றும் முற்றும் பார்க்க பார்வதியின் சுவடே தெரியவில்லை. அண்ணன் தம்பி இருவரும் ஆளுக்கொரு புறமாய் தேடி அலைய, கண்ணீரோடு அவர்களின் பின்னே ஓடினாள்.

"அம்மா! அம்மா! எங்கேம்மா போயிட்டே?" - கண்ணீரோடு அவள் கதறிய கோலம் கண்டு எதிரே



வந்தவர்கள் பரிதாபமாய், 'உச்' கொட்டினர். சிலர் விசாரித்தனர். பலர் திட்டிவிட்டுச் சென்றனர்.

"ஏம்மா! மனநிலை சரியில்லாதவங்களைப் பத்திரமா பார்த்துக்க வேண்டாமா? இப்படியா பொறுப்பில்லாம விடுவீங்க?" - என ஆளுக்கொன்றாய் சொல்லிவிட்டுப் போக, வாய்விட்டு அழ ஆரம்பித்தாள் மான்விழி.

"அண்ணி! அழாதீங்க. அத்தை இங்கேதான் எங்கேயாவது நிற்பாங்க."

"இல்ல. எங்க அம்மாவை நான் தொலைச்சிட்டேன். போச்சு. எல்லாம் போச்சு. என் அம்மாவைக் காணோம்."

"கொஞ்ச நேரம் வாயை மூடிட்டு இரு. நீ அழுது எங்களைப் பயமுறுத்தாதே." - வெடித்தான் ராஜேந்திரன். அதில் பயந்து போய் இன்னும் அழுதாள்.

"அண்ணா! இப்ப ஏன் அவங்ககிட்ட கோபப்படுற?"

"பின்னே? வயசானவங்களை இப்படிப் பொறுப்பில்லாம விடலாமா? எங்கே போனாங்களோ? சுத்திலும் அருவி ஓடுதேடா. எதிலயும் விழுந்திருந்தா..." - அவசரமாய் அவனது வாயை மூடினாள்.

"வேண்டாம். அப்படி எதுவும் சொல்லிடாதீங்க. அம்மாவுக்கு எதுவும் ஆகியிருந்தா நான்... நானும் குதிச்சிடுவேன்."

"அறைஞ்சேன்னா பல்லு பேந்திடும். இதுக்கா உன்னைக் கூட்டிட்டு வந்தேன். குதிச்சிடுவாளாம். வாயைத் திறக்காதே நீ..." - சீறியவனைக் கண்டு மிரண்டு வாயை மூடிக்கொண்டாள்.

"இனிமே இந்த மாதிரி ஏதாவது பேசினே நானே தள்ளிவிட்டுடுவேன். எந்த நேரம் என்ன பேசுற? பேசாம வா." – என்றவாறு புதர்களைக் கடந்து முன்னேறினான்.

எதிரே வந்தவர்களிடம் எல்லாம் பார்வதியின் அடையாளத்தைச் சொல்லிக் கேட்க, அனைவருமே தெரியவில்லை என்றார்கள். பார்க்கலியே என உதட்டைப் பிதுக்கினார்கள்.

கிட்டத்தட்ட ஒரு மணி நேரத் தேடலுக்குப் பின் ராஜேந்திரனே கொஞ்சம் பயந்துதான் போனான். சுற்றுப் பகுதி முழுக்கத் தேடியாச்சு. வேறு எங்கும் போயிருக்க முடியாதே.

ஒருவேளை ஏதேனும் பள்ளத்தில் விழுந்திருப் பார்களோ? அருவியின் ஓசையும் சுழற்றி அடித்துச் செல்லும் வேகமும் மிரட்டியது. இதில் விழுந்திருந்தால்? நினைத்தபோது உடல் ஒருமுறை அதிர்ந்தது.

தவிப்பாய் கலக்கமாய் கீழே சீறிப் பாய்ந்து கொண்டிருந்த நீரைப் பார்த்துக் கொண்டிருந்தவனின் கரங்களைத் தன் நடுங்கும் விரல்களால் பற்றிக் கொண்டாள் மான்விழி.

"அ... அத்... தான்..." – குரல்கூட நடுங்கிற்று.

"ம்..."

"அது... அது... அம்மா... மாதிரி..." – என ஒருவிரல் நீட்டிக் காட்டினாள். அவள் காட்டிய திசையில் பார்த்தவன் அதிர்ந்து போனான்.

கூர்மையாய் நீண்டு கொண்டிருந்த பாறையின் மீது ஒரு உருவம் ஏறி நின்று கொண்டிருந்தது. வீசிய காற்றில்



அது அணிந்திருந்த ஆடை காற்றில் பறக்க வீறிட்டாள் மான்விழி.

"ஐயோ! அது அம்மாதான்! அம்மா! அம்மா! நில்லும்மா." – என ஓடியவளை இறுகப் பற்றிக் கொண்டான்.

"என்னை விடுங்க. நான் அம்மாகிட்ட போகணும். விடுங்க அத்தான். ஐயோ! அம்மா விழுந்திடப் போறாங்க." – கிரீச்சிட்டாள்.

இறுகப் பற்றியிருந்த கரத்தை கஜேந்திரன் கையில் கொடுத்தான்.

"கஜா! அங்கே என்ன நடந்தாலும் சரி. இவளை விட்டுடாதே. நான் போய் அத்தையை அழைச்சிட்டு வர்றேன்."

"அண்ணா! பாறையெல்லாம் நீர்க்கசிவா இருக்குமே. நானும் வர்றேன். சேர்ந்து போவோம்."

"வேண்டாம். இவளைப் பார்த்துக் கொள். நான் போறேன்."

"ஐயோ! என் அம்மா...!" – மான்விழி கதற, விறுவிறுவென வேகமாய் சரிவுப் பாதையில் இறங்கி, பார்வதி நின்ற இடத்தை நோக்கி ஓட்டமும் நடையுமாய்ச் சென்றான் ராஜேந்திரன்.

மான்விழியின் கதறல் அவனைத் தொடர்ந்து வந்தது. திரும்பியும் பாராமல் கவனமாய் சிறு சிறு பாறைகளின் மீது ஏறி சில இடங்களில் வழுக்கி விழுந்து, எழுந்து பார்வதியை நெருங்கியபோது, பார்வதி மலையின் உச்சியில் நின்று கொண்டிருந்தாள்.

பலத்த ஓசையுடன் ஓடிய நீரைக் குனிந்து பார்த்துக் கொண்டிருந்த விழிகளில் பலவித உணர்வுகள். வரிசையாய் இருந்த பாறைகளின் மீது முட்டி மோதி நுரையோடு இனிய சங்கீதத்தோடு ஓடிய நீரைப் பார்க்கையில் அவளது நினைவுகள் சுழன்றன.

நீரோடை அவளது ஊரின் ஆறாய் தோன்ற, தண்ணீரை உற்றுப் பார்த்தாள். நினைவுகள் வேகமாய் பின்னோக்கிச் செல்ல, மூளையைக் கசக்கி யோசித்தாள்.

அதற்குள் அவளை நெருங்கிவிட்ட ராஜேந்திரன், "அத்தே! குனிஞ்சு பார்க்காதீங்க. தலைசுத்தி கீழே விழுந்திடுவீங்க. இங்கே வந்திடுங்க." – என குரல் கொடுத்துக் கொண்டே ஏறி வர, பார்வதியின் முகம் மாறியது.

'இவனா? ஐயோ இவன் ஏன் இங்கு வந்தான்?' கண்கள் கலவரமாக அவனைக் கண்டு மிரண்டாள். 'இது... இது சதாசிவம்தானே...!'

"நீ ஏன்டா இங்கே வந்தே? போ... போயிடு...!" கத்தினாள்.

"அத்தே... சொன்னாக் கேளுங்க அத்தே! அசையாம நில்லுங்க... நான் மேலே வர்றேன்..."

"வராதே... போ... போயிடு! நான் எங்க அண்ணன்கிட்ட இப்பவே சொல்லி உன்னை என்ன செய்யறேன் பாரு...?"

"அத்தே! எதுவா இருந்தாலும் வீட்ல போய் பேசிக்கலாம். இப்ப வந்துடுங்க அத்தே...! ப்ளீஸ் அத்தே! மானு உங்களைத் தேடி அழறா அத்தே... வாங்க அத்தே!" – பேசிக் கொண்டே நெருங்கியவன் பார்வதியின் கண்களுக்கு சதாசிவமாகத்தான் தோன்றினான்.



"இதோ பாரு... என்கிட்ட வராதே... வராதே... வந்தா குதிச்சிடுவேன்!"

"ஐயோ அத்தே... நான் சொல்றதைக் கேளுங்க அத்தே! அசையாதீங்க... சறுக்கிடும்... அத்தே! உங்க அண்ணன்களுக்கு நான் என்ன பதில் சொல்வேன்? உங்க மகளை... மகனை நினைச்சுப் பாருங்க அத்தே!

மானு துடிக்கிறாளே... அவ துடிக்கிறதை என்னால பார்க்க முடியலை அத்தே! உங்களுக்கு ஒண்ணுன்னா அவளால தாங்க முடியுமா? அவ அழறதை என்னால சகிக்க முடியுமா? அத்தே... வந்திடுங்க அத்தே...!"

எதையாவது பேசி அவளது கவனத்தைத் திருப்ப வேண்டும் என்ற முனைப்புடன் பார்வதியை மட்டுமே பார்த்துக் கொண்டு அந்தக் கரடுமுரடான பாதையில் ஏற, பாறையின் ஈரக்கசிவு அவனை வழுக்கியது.

நிலை தடுமாறி விழுமுன் சட்டென நீட்டிக் கொண்டிருந்த மற்றொரு பாறையின் முகப்பைப் பற்றிக் கொள்ள, வழுக்கி விழுந்ததில் முழங்கை முழுவதும் பாறையில் உரசித் தீயாய்க் காந்தியது.

தூரத்தில் தெரிந்த காட்சியைக் கண்டு உடலும் உள்ளமும் பதறிப் போனாள் மான்விழி.

"ஐயோ! கஜா! உங்கள் அண்ணன் விழுந்திட்டாரே... வாங்க... அவரைக் காப்பாற்றுவோம். வாங்க கஜா...!" – பதறினாள்.

கஜேந்திரன் அவளை விடவும் பதறி இருந்தான்.

"அண்ணி! அங்கே போனா நீங்க அமைதியா இருப்பீங்களா?"

"நான் எதுவும் செய்து கொள்ள மாட்டேன். என்னைப் பற்றிய கவலையை விடுங்கள் கஜா! முதலில் அவர்களைக் காப்பாற்றுங்க..."

"சரி வாங்க..." – என்றவாறே அண்ணன் சென்ற பாதையில் இறங்கி நடக்க, கண்ணீரும் கதறலுமாய் அவனைப் பின் தொடர்ந்தாள்.

மான்விழியின் கதறலைக் கண்டு போவோர் வருவோர் நின்று விசாரிக்க... கஜா தந்தி பாஷையில் நிலையை விவரித்தான்.

"ஐயோ! அந்தப் பாறையா? அது அபாயமான தாச்சே...!" – என சிலர் பயந்து விலகிவிட, நாலைந்து வாலிபர்கள் தைரியமாய் முன்வந்தனர்.

"பயப்படாதீங்க... நாம போறதுக்குள்ள கீழே விழுந்திட்டாலும் நாம நீந்திக் காப்பாத்திடலாம். ஏன்னா கீழே பாறைகள் இருக்காது. தண்ணி ஓடிட்டே இருக்கிறதால ஆழமும் கம்மிதான்.

நாங்க இருக்கோம் வாங்க... எங்களுக்கு நீச்சல் தெரியும்!" – என தைரியம் சொன்னதும்...

சற்றே ஏற்பட்ட நிம்மதியோடு அவர்களோடு நடந்த வளின் பார்வை, தாய் நின்ற இடத்திற்குச் செல்ல, பயத்தில் உறைந்து போனாள்.

தாயை நெருங்கிவிட்ட ராஜேந்திரன் அவளது கைபற்றி இழுக்க, பார்வதி கையை உதைத்துப் போராடிக் கொண்டிருந்தாள். இருவரும் எந்த நேரத்திலும் விழுந்து விடலாம் என்ற அச்சம் தோன்ற மேலே நடக்க இயலாமல் நின்றாள்.



பாறையின் மேல் நின்று கொண்டிருந்த ராஜேந்திரன் எத்தனை முறை அழைத்தும் வர மறுத்தாள் பார்வதி.

"நான் வரமாட்டேன்... உன்னைப் பார்க்கவே பிடிக்கலை... என்னை விடு... நான் எங்க அண்ணன்கிட்ட போகணும்... விடு... விடு..." – எனக் கதறினாள்.

"அத்தே! ஏன் இப்படிப் பண்றீங்க? நான் உங்க அண்ணன் மகன்தான். என்கூட வாங்க அத்தே!" – என அவளது தோளைப் பற்றி தன்னோடு சேர்த்தவாறு கீழிறங்க முயற்சிக்க... பார்வதி அவனை வேகமாய் உதறித் தள்ளினாள்.

காலடியில் பாறை நழுவிவிட எத்தனை முயற்சித்தும் முடியாமல் கீழே தடுமாறி விழுந்தான் ராஜேந்திரன். அவன் கையில் பற்றியிருந்த பார்வதியும் கூடவே சேர்ந்து விழும் காட்சி துல்லியமாய்த் தெரிய, காடே அதிரும்படி வீறிட்டாள் மான்விழி.

முன்னே சென்றவர்கள் பதறித் திரும்ப... கஜேந்திரன் பதட்டமாய் அவளிடம் வர, மான்விழி மயங்கிச் சரிந்தாள்.

## 16

நன்றி சொல்ல உனக்கு வார்த்தை
இல்லை எனக்கு நான்தான் மயங்குறேன்
காலம் உள்ள வரையில் காலடியில்
கிடக்க நான் தான் ஏங்குறேன்!

அழுது அழுது முகம் சிவந்து போயிருந்தாள் மான்விழி. பார்வதி அரை மயக்கமாய் கட்டிலில் படுத்திருக்க... கையிலும் நெற்றியிலும் போடப்பட்டிருந்த கட்டோடு அமைதியாய் அமர்ந்திருந்தான் ராஜேந்திரன்.

கஜேந்திரன் சொன்ன சம்பவத்தை வீட்டில் உள்ள அனைவரும் கேட்டுக் கொண்டிருக்க, மான்விழி மீண்டும் மீண்டும் அழுது கொண்டே இருந்தாள்.

"இப்போ என்ன நடந்து போச்சுன்னு இப்படி பொங்கிப் பொங்கி அழறே... அதான் உன் அம்மா முழுசா இருக்காளே... அழ வேண்டியவ நான்தான்..." - என்றாள் வசுந்தரா தேவி.

"அம்மா!" - அதட்டினான் ராஜேந்திரன்.

"என்னடா அம்மா? இப்போ எதுக்காக இப்படி மூளை கலங்கிப் போனவளை அவ்வளவு தூரம் அழைச்சிட்டுப் போனே...?"

"நான்தான் அழைச்சிட்டுப் போகச் சொன்னேன்...!" - என்றார் கணேசன்.

"ம்... நல்லா இருக்கு. அப்பாவும் பிள்ளையுமாச் சேர்ந்து இன்னும் என்ன காரியமெல்லாம் செய்திருக் கீங்க...?"

"வசு! இப்ப ஏன் இப்படிக் கத்துற?"

"நான்தான் கத்தணும்... எம்புள்ளையைப் பார்த்தீங்களா? எப்படி அடிபட்டு வந்து நிற்கிறான் பார்த்தீங்களா...? எவ்வளவு ரத்தம் போச்சோ?"

"அம்மா! சும்மா லேசான அடிதாம்மா... டாக்டர்தான் பெரிய கட்டாப் போட்டு பில்லைத் தீட்டிட்டார்..." - என்றான் சாதாரணமாய்.

மான்விழி கண்ணீரோடு அவனை நிமிர்ந்து பார்த்தாள். தாயைச் சமாதானம் செய்வதற்காகச் சொல்கிறான் என்று புரிந்தது.



தலையிலும் கையிலும் அடிபட்டு ரத்தம் வழிந்ததை அவளும்தானே பார்த்தாள்.

இந்த மடியில் கிடத்திக் கொண்டுதானே மருத்துவ மனைக்குக் கொண்டு சென்றார்கள்.

அப்போது தொடங்கிய கண்ணீர் இன்னும் நிற்காமல் வழிந்து கொண்டே இருந்தது.

அண்ணனுக்கு ஒத்தாசையாய் கஜேந்திரனும் சொன்னான்.

"ஆமாம்மா... அடி ஒண்ணும் அதிகமில்லை. பாறையிலிருந்து விழும்போது லேசாய் அடிபட்டிருக்கு... அத்தை நேராய் தண்ணியில விழுந்ததால அவங்களுக்கு அடி எதுவும் படலை...!"

"எம் புள்ளையை இந்தக் கதிக்கு ஆளாக்கவா அண்ணன் - தம்பி எல்லாருமா சேர்ந்து இவளைச் சென்னையில இருந்து கூட்டிட்டு வந்தீங்க?"

"அம்மா! மொதல்ல புலம்பறதை நிறுத்துங்க. நான் கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுக்கணும். நீங்க போடுற சத்தத்துல அத்தை விழிச்சுடப் போறாங்க..."

"ஏன்டா! உன் அம்மாவோட தவிப்பு உனக்கு பெரிசாத் தெரியலை... உன் அத்தையோட தூக்கம் கெட்டுப் போயிடுமேன்னுதான் பதறுறே...!"

"ம்மா...! எது சொன்னாலும் இப்படியே பேசினா எப்படி?"

"அக்கா! நம்ம புள்ளை பத்திரமா வீடு வந்தாச்சே அது போதும் நமக்கு. இப்ப ஏன் வருத்தப்படுறீங்க?" என்றவாறே சூடான பாலோடு வந்தாள் சீதாலக்ஷ்மி.

"ராஜா! இந்தா... இதைக் குடிச்சிட்டுப் படுத்து ஓய்வெடு."

"தேங்க்பூ சித்தி!"

"வசு! இவ்வளவு நேரமா கத்தினியே... புள்ளைக்கு ஏதாவது சாப்பிடக் கொடுக்கணும்னு தோணிச்சா உனக்கு?"

"நீங்க பேசாதீங்க. எம் புள்ளை இப்படி ஆனதுக்கு முழுக் காரணம் நீங்கதான். செய்யுறதெல்லாம் செய்துட்டு என்கிட்ட கேள்வி கேட்க வந்திட்டீங்க..."

"அக்கா! விடுங்க... நடந்தது நடந்து போச்சு... இனிமே அதைப் பத்தியே பேசி சண்டை போடுறதால என்ன ஆகப் போகுது?"

"இல்லை சீதா... நாளை மறுநாள் லதாவைப் பொண்ணு பார்க்க வர்றாங்க... இந்த நேரம் வீட்டுக்கு மூத்த புள்ளை இப்படிப் படுத்திருந்தா எவ்வளவு கஷ்டமா இருக்கு?"

"அம்மா! எனக்குக் கால்ல எந்த அடியும் படலை... நான் நல்லா நடமாடுவேன். நீங்க பயப்படாதீங்க!"

"இவ்வளவு காயத்தோட எப்படிடா நடமாடுவே? உன்னைப் பார்த்தாலே மனசு கொதிக்குதே..."

"சித்தி! அம்மாவைக் கூட்டிட்டுப் போங்க சித்தி!" – என்றான் சோர்வாய்.

"அக்கா வாங்க... அவன் கொஞ்ச நேரம் தூங்கி எழுந்துக்கட்டும். எல்லாரும் வெளியே வாங்க..." – என்றவாறே பாமாவும் சீதாலக்ஷ்மியும் வசுந்தராவை அழைத்துக் கொண்டு அறையை விட்டு வெளியேற, மற்றவர்களும் வெளியேறினர்.



கணேசன் மகனை நெருங்கினார். "ஏய்யா... ராஜா! நீ எனக்கு சாமிய்யா...!" – என்றார் கண்கள் கசிய.

"ஐயோ... அப்பா! என்ன இது?"

"இத்தனை வருஷமா நாங்க தொலைச்ச வைரம் இப்பத்தான் எங்க கையில கிடைச்சது. திரும்பவும் அது தொலைஞ்சிடாம உசுரைக் கொடுத்துக் காப்பாத்தி இருக்கியேப்பா..."

"இது என் கடமைப்பா... அத்தை எங்களுக்கு வைரம்தாம்ப்பா..." – என்றவனை மனம் துடிக்கப் பார்த்தாள் மான்விழி.

"டாக்டர் அத்தையை பார்த்துட்டு என்னய்யா சொன்னார்?"

"பயப்பட ஒண்ணுமில்லை.. தண்ணியில விழுந்த அதிர்ச்சியிலதான் மயங்கிட்டாங்க... மத்தபடி வேற அடி எதுவும் படலைன்னு சொன்னார். நல்லாத் தூங்கி எழட்டும்னு சொன்னார்..."

"தூங்கட்டும்... தூங்கட்டும்... எய்யா! உனக்கு வலி அதிகமா இருக்கா?"

"இல்லப்பா... ஊசி போட்டதால வலி குறைஞ்சிருக்கு!"

"சரிப்பா... நிறைய பேச வேண்டாம். அமைதியாத் தூங்கு..."

"சரிப்பா! அப்பா...!"

"என்னய்யா?"

"பாறையில இருந்து விழுறதுக்கு முன்னால அத்தையோட பேச்சு வேற மாதிரி இருந்ததுப்பா...!" – சட்டென அழுகையை நிறுத்தினாள் மான்விழி.

கணேசன் புருவங்களை சுருக்கினார். "வேற மாதிரின்னா எப்படி?"

"அதை எனக்குச் சரியாச் சொல்லத் தெரியலை... ஆனா அத்தையோட முகமே ரொம்ப மாறியிருந்தது.. என்னை யாரையோ பார்க்கிற மாதிரி பார்த்தாங்க..."

"என்ன?" - லேசாய் அதிர்ந்தார்.

"ஆமாம்ப்பா... பேச்சுகூட வித்தியாசமா இருந்தது. என்னை விட்டுடு... நான் என் அண்ணன்கிட்ட போகணும்... கிட்ட வந்தா குதிச்சிடுவேன்னு... என்னவெல்லாமோ பேசினாங்கப்பா...!"

கணேசன் யோசனையாய் தங்கையைப் பார்த்தார். பார்வதி எந்தவிதமான அசைவும் இன்றி உறங்கிக் கொண்டிருக்க, நீளமான பெருமூச்சை விட்டார்.

"சரிப்பா... எதுவா இருந்தாலும் அத்தை கண் விழிச்ச பிறகு பேசிக்கலாம். படுத்துக்கப்பா...!"

"அப்பா! மானு எதுவுமே சாப்பிடாம இருக்கா... அவளைக் கூட்டிட்டுப் போயி ஏதாவது சாப்பிட வையுங்கப்பா...!" - என்றதும் சுத்தமாய் உடைந்து போனாள் மான்விழி.

'என்னையும் என் தாயையும் இப்படிக் கவனித்துக் கொள்கிறாயே... நீ யார் எனக்கு? உன்னிடம் கனிவாய் ஒரு வார்த்தைகூடப் பேசியதில்லையே...! நீ என்ன வென்றால் எனக்காக உருகுகிறாய்! என் தாயைக் காப்பதற்கு உன் உயிரையே பணயம் வைக்கிறாய்...

நமக்குள் என்ன பந்தம் இருக்கிறது? உனக்கு நான் என்ன பிரதி உபகாரம் செய்யப் போகிறேன்... இந்த நன்றிக்



கடனை எப்படித் தீர்க்கப் போகிறேன்...?' விழிகளில் நிறைந்த நீரோடு தன்னையே பார்த்துக் கொண்டிருந்தவளை அசைத்தான்.

"மானு! அத்தையை நான் பார்த்துக் கொள்கிறேன். நீ போய் சாப்பிடு."

"இப்போ எனக்கு எதுவும் வேண்டாம். நான் இங்கேயே இருக்கேன்..." - என்றாள் அமைதியாய்.

"நான் சாப்பாடை இங்கே எடுத்துட்டு வரட்டுமாம்மா..."

"வேண்டாம் மாமா... பசிக்கும்போது நானே வர்றேன். நீங்க போங்க மாமா!"

"சரிம்மா... அம்மாவை நினைச்சுக் கலங்காதேம்மா... எல்லாம் சரியாகிடும்..."

"சரி மாமா!" - என்றதும் வெளியேறினார் கணேசன்.

சட்டென அந்த இடம் அமைதியாகி விட, கண்களைத் துடைத்தவாறே ராஜேந்திரனை நெருங்கினாள்.

கட்டிலில் போர்வையைச் சீராக்கி விட்டு நிமிர்ந்தாள். "அத்தான்! வந்து படுத்துக் கொள்ளுங்கள்..." - என்றாள் மென்மையாய்.

உற்சாகமாய் எழுந்தான். "ஹேய்! இப்போ... நீ எப்படிக் கூப்பிட்டே?"

"நான் குற்றாலத்தில இருந்தே இப்படித்தான் கூப்பிட்டேன்..."

"என்ன? எப்போ?" - என்றான் வியப்பாய்.

"அம்மா காணாம போன நிமிஷத்தில இருந்து..."

"பார்த்தியா! நான் சொன்னேன்ல... நீ எப்படியும் கூப்பிடுவேன்னு..." – சத்தமாய்ச் சிரித்தான்.

"அத்தான்! உங்களுக்கு நிஜமாகவே வலிக்கலையா?"

"வலிச்சது... இப்போ இந்த நிமிஷம் வலிக்கல்ல..."

"ஏன்?"

"நீ கூப்பிட்ட அன்பான வார்த்தையில எல்லா வலியும் போயே போச்சு....!"

"உண்மைதான். இந்த வார்த்தையில் ரொம்ப உரிமையும் பிரியமும் இருக்கத்தான் செய்கிறது."

"நீ பழைய சினிமால்லாம் பார்க்கிறதில்லையா?"

"பார்ப்பேனே...!"

"அதுல வர்ற ஹீரோயின்ஸ் எல்லாம் இப்படித்தான் கூப்பிடுவாங்க..."

"அச்சோ! அப்போ இதுல வேற அர்த்தமும் இருக்கா?"

"ஏய்! பதறாதே... எல்லாம் ஒரே அர்த்தம்தான். அன்பானவங்களை மனசுக்குப் பிடிச்சவரைத் தன் வாழ்க்கைத் துணையை அழைக்கிற வார்த்தை இது..."

"அத்தான்...!" – உதடு துடிக்க அழைத்தாள்.

"என்னம்மா?" – பரிவாய்க் கேட்டவனின் கைகளைப் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொண்டாள். சூடான கண்ணீர் பட்டதும் அதிர்ந்தான்.

"மானு! என்னடா... ஏன் இப்போ அழறே?"

"அத்தான்! நீங்க மட்டும் இல்லேன்னா... நான் அம்மாவையும் இழந்திருப்பேன். அனாதையா நின்னிருப்பேன்..."



"சேச்சே! அப்படியெல்லாம் பேசாதே!"

"இல்லை அத்தான்... நீங்க ரெண்டு பேரும் விழுந்ததைப் பார்த்தபோது அந்த நிமிஷமே எனக்கு உயிரே போயிடுச்சு... உங்களுக்கு ஏதாவது ஒண்ணு ஆகியிருந்தா அந்த நிமிஷமே நானும் உயிரை விட்டிருப்பேன் தெரியுமா?" – விசும்பியவளை அதட்டினான்.

"மானு! இப்படியெல்லாம் பேசக்கூடாதுன்னு சொன்னேனே...?"

"அத்தான்... நான்... இதுக்கெல்லாம் என்ன கைம்மாறு செய்யப் போறேன்?"

"மானு! யாராவது கடமையைச் செய்ய கைம்மாறு எதிர்பார்ப்பாங்களா? அத்தை உனக்கு மட்டுமில்லை... எங்க எல்லாருக்குமே வேணும்..."

"அத்தான்..."

"மானு! இதுவரை நீ அழுதது போதும். இனிமே நீ எதுக்கும் அழக்கூடாது. உனக்கு நான் இருக்கேன். நம்ம குடும்பம் இருக்கு. எல்லோருமே இருக்கோம். நீ இழந்த சந்தோஷமெல்லாம் இனி உனக்குக் கிடைக்கும்."

"இல்லை அத்தான்! நாங்க..."

"கேளு மானு! அப்பா என்கிட்ட ஒண்ணு கேட்டாங்க. நான் உன்கிட்ட கேட்டுட்டுப் பதில் சொல்றேன்னு சொன்னேன்."

"என்னது?"

"மானு! நீ என்கூடவே இருந்திடுறியா?" – கண்களில் நேசம் மின்னக் கேட்டவனை நம்ப முடியாமல் நிமிர்ந்து பார்த்தாள்.

"ஏ... என்ன? நானா...?"

"ஆமாம். எனக்கு மனைவியா... என் அப்பாவின் மருமகளா... இந்த வீட்லயே இருந்துடு மானு..."

"இல்லை... வேண்டாம்... வேண்டாம்!"

"ஏம்மா? என்னைப் பிடிக்கலையா?"

"உங்க அம்மாவுக்கு என்னைப் பிடிக்காதே அத்தான்!"

"அதெல்லாம் தற்காலிகக் கோபம்தாம்மா... அத்தைக்கு குணமாகிப் பேசிட்டா எல்லாம் சரியாகிடும்..."

"எனக்கு அந்த நம்பிக்கை இல்லை..."

"எது? அத்தைக்கு குணமாகிறதா?"

"இல்லை... அத்தையோட கோபம் குறையும்கிற நம்பிக்கை இல்லை. உங்களுக்காகவும் மாமாவுக்காகவும் தான் எங்களை இங்கே விட்டு வைச்சிருக்காங்க... இல்லேன்னா எப்போதோ விரட்டி அடிச்சிருப்பாங்க..."

"அப்படியெல்லாம் எதுவும் நடக்காதுடா...!"

"அப்படி எதுவும் நடந்திடக்கூடாதுன்னுதான் நான் பயப்படுறேன் அத்தான்... அதனாலதான் உங்களை எல்லாம் விட்டு ஒதுங்கியே இருந்தேன்."

"மானு?"

"என் அம்மாவால ஏற்பட்ட வருத்தம், கோபம் எல்லாம் என்னால அதிகமாகிடக் கூடாது. அம்மாவைக் குணமாக்கணும்னுதான் நான் இங்கே வந்தேன்... வந்த இடத்தில எந்தப் பிரச்சனைகளும் உருவாக நான் காரணமாக இருக்க மாட்டேன் அத்தான்..."



"மானு! அப்போ நான்... உன்னைக் கொஞ்சம்கூடப் பாதிக்கலையா?"

"என்னால யாருக்கும் எந்தப் பாதிப்பும் வரக்கூடாதுன்னுதான் சொல்றேன்..."

"ம்ப்ச்! சுத்தி வளைச்சுப் பேசாதே... என்னை உனக்குப் பிடிக்குமா பிடிக்காதா...?" - அவளது தோளைப் பற்றி நிமிர்த்தியவாறே கேட்டவனிடம் என்ன பதில் சொல்வதென்று புரியாமல் தடுமாறினாள்.

என்னதான் வார்த்தைக்கு வார்த்தை வெறுப்பதைப் போல் காட்டிக் கொண்டாலும் தினமும் இவன் முகத்தில் விழிக்கத்தானே ஆசைப்படுகிறேன். இவனது அன்பை, பரிவை, அக்கறையை... எப்படி வெறுக்க முடியும்?

அதுவும் தன் அன்னைக்காக எத்தனை துணிச்சலாய் மலை ஏறினான். எத்தனை முறை விழுந்து அடிபட்டு அதுவும் பாறை உச்சியிலிருந்து கீழே விழுந்த போதும் அந்த வலியைத் துளியும் முகத்தில் காட்டாத கம்பீரம்.

தனக்காக... தன் அன்னைக்காக... பெற்றவளிடம் கோபப்படும் பரிவு... ஒவ்வொரு பேச்சிலும் பார்வையிலும் செய்கையிலும் தனது எண்ணத்தை பிரதிபலிப்பவனை எப்படிப் பிடிக்காமல் போகும்? எப்படி மறுக்கத் தோன்றும்?

அவளது மௌனத்தைக் கண்டு பெருமூச்சு விட்டான்.

"சரி விடு... உனக்கு விருப்பமில்லை என்றால் விட்டுவிடலாம். போய் சாப்பிடு..." - என்றான் இயல்பாய்.

மறுப்பாய்த் தலையசைத்தவளின் தலையைப் பரிவாய் வருடினான்.

"மானு! நீ வேண்டாம்னு சொன்னாலும் உன்னையும் அத்தையையும் எப்போதுமே விட்டுக் கொடுக்க மாட்டேன்."

கண்ணீரோடு அவனைக் கட்டிக் கொண்டாள். "தேங்க் யூ அத்தான்! தேங்க் யூ ஸோ மச்!"

"எனக்கு உன் சந்தோஷம்தான் முக்கியம். அதனால அத்தைக்கு குணமாகட்டும். அதுவரை எதைப் பற்றியும் பேசி உன் மனசைக் காயப்படுத்த மாட்டேன் சரியா?" – பதிலின்றி அமர்ந்திருந்தாள்.

"அத்தைக்குக் குணமான பின்னாலும் உன்னை அனுப்ப எனக்கு மனம் வராது மானு!" – அவனது குரலில் இருந்த தவிப்பை உணர்ந்து நிமிர்ந்தாள்.

"நான்... நானும் போக மாட்டேன் அத்தான்!"

"மானு?"

"நீங்களே போகச் சொன்னாலும் போக மாட்டேன்."

"மானு! நீ என்ன சொல்றே?" – முகம் பிரகாசிக்க கேட்டவனைப் பார்த்து மெலிதாய்ப் புன்னகைத்தாள்.

"உங்க கூடவே இருந்திடுறேன் அத்தான்...!" – என்றாள் மெல்ல.

அவளது முகத்தைப் பற்றி மெல்ல நிமிர்த்தினான். "மானு! இப்போ நீ என்ன சொன்னே? திரும்பச் சொல்லு..."

"உங்க கூடவே இருந்திடுறேன் அத்தான்... எனக்கு நீங்க வேணும் அத்தான்...

உங்க அன்பு, பிரியம் கடைசி வரைக்கும் எனக்கு வேணும்..." – என்றவளை நெஞ்சோடு அணைத்துக் கொண்டான்.



"கண்டிப்பா கிடைக்கும் மானு! என் உயிர் இருக்கிற வரைக்கும் உன்னை என் கண்ணுக்குள்ள வைச்சுப் பார்த்துப்பேன்..." – என்றான் கிசுகிசுப்பாய்.

மகனைச் சாப்பிட வைக்கலாம் என்ற எண்ணத்தோடு சாப்பாடோடு வந்த வசுந்தரா தேவியின் கண்களில் இந்தக் காட்சி பட... கையிலிருந்த தட்டை நழுவ விட்டாள்.

பாத்திரங்கள் சிதறி விழ, திடுக்கிட்டு விலகினர் இருவரும்...

மான்விழியின் முகம் பயத்தில் வெளிறியது.

## 17

பொன்னான மனம் ஒன்று
தந்தாய் கண்ணா அதில் பூப்போன்ற
நினைவு ஒன்று வைத்தாய் கண்ணா!
கண்பார்க்க முடியாமல் மறைத்தாய் கண்ணா!

**பா**த்திரங்கள் சிதறிய சத்தத்தில் பார்வதியின் உறக்கம் சத்தமாய்க் கலைந்தது. திடுக்கிட்டுக் கண்களைத் திறந்தவளின் பார்வையில் பட்ட இடம் புதிதாய் இருக்க, விழிகளை மலர்த்தினாள்.

'இது எந்த இடம்? தன் வீடு இல்லையே...' குழப்பமாய் எழுந்து அமர்ந்தவள் வீட்டைச் சுற்றிப் பார்க்க, மனம் குதூகலித்தது.

'இது... இது... என் அப்பாவின் வீடு. இது என்னுடைய அறை. இங்கே எப்படி வந்தேன்? எப்போது வந்தேன்?

அப்பா எங்கே... அம்மா எங்கே? அண்ணனையும் காணோமே...!' யோசனையோடு எழுந்து அமர்ந்தவள்

கட்டிலை விட்டு இறங்க... காலில் சோற்றுப் பருக்கைகள் மிதிபட்டதும் சட்டெனக் குனிந்து பார்த்தாள்.

சோறும் குழம்பும் பொரியலுமாய்க் கலந்து... சாப்பாடு தரையில் சிதறிக் கிடக்க... அதனருகே நின்று உக்கிரமாய் முறைத்துக் கொண்டு நின்ற வசுந்தரா தேவியைப் பார்த்து முகம் சுருக்கினாள்.

'யார் இந்தப் பெண்? தன் அறையில் நின்று ஏன் இத்தனைக் கோபமாய் முறைக்கிறாள்? யாரை முறைக்கிறாள் என்றவாறே பார்வையை நகர்த்த...

அப்போதுதான் ராஜேந்திரனின் பிடியிலிருந்து விலகிய மான்விழி உடல் நடுங்க... பதட்டமாய் தாயை நெருங்கினாள்.

அட! மான்குட்டி என்னமாய் வளர்ந்து விட்டாள்? இவன் யார்? இவன் எதற்காக இங்கு இருக்கிறான்? அதுவும் கையில்... தலையில் கட்டோடு...

லேசாய் திணறிய மூளையைக் கண்மூடி தன் நினைவுகளைத் தட்டி எழுப்ப முயன்றபோது...

வசுந்தராதேவியின் கடினமான குரல் கேட்டு சட்டெனக் கண்களைத் திறந்தாள்.

"என்னடா இதெல்லாம்?" - மகனை நெருங்கி நேராய்க் கேட்டாள்.

"அம்மா! அது வந்து... நான் மான்விழியை விரும்புறேன்ம்மா..." - என்றதும் லேசாய் தள்ளாடினாள்.

"என்ன... என்னடா சொன்னே?"

"ஆமாம்மா... அத்தைக்குக் குணமானதும் சொல்லலாம்னு இருந்தேன். அது இப்பவே சொல்ல



வேண்டியதாப் போச்சு..." - சற்றும் தயங்காமல் தடுமாறாமல் ராஜேந்திரன் சொல்ல வாயடைத்துப் போனாள்.

பார்வதிக்கோ இது பேரதிர்ச்சியாக இருந்தது. என்ன...? என் மகள் இவனை விரும்புகிறாளா? நான் குணமில்லாமல் இருந்தேனா? என்னை அத்தை என்கிறானே... கடவுளே! என்னைச் சுற்றி என்ன நடக்கிறது?

எல்லாமே குழப்பமாய் இருக்கிறதே... என் மூளையே தூங்கி விட்டதா? எத்தனைக் காலமாய் தூங்கிக் கொண்டிருக்கிறேன்... என்ன நடந்தது எனக்கு? பலவிதமான சிந்தனையோடு போராடிக் கொண்டிருந்தவளின் பார்வை மலர்ந்தது.

கணேசனும் மற்றவர்களும் அவசரமாய் அறைக்குள் நுழைய... "அண்ணன் வந்திடுச்சு..." என்றவாறே நகர முயன்றவளை இறுகப் பற்றிக் கொண்டாள் மான்விழி.

மகளின் நடுக்கத்தை உணர்ந்து அதற்கான காரணம் புரியாமல் மகளை ஏறிட்டாள்.

மான்விழியின் கண்களில் நீர் நிற்காமல் வழிந்தோட தாயுள்ளம் பதறியது. அவசரமாய்த் தன் முந்தானையால் மகளின் கண்ணீரைத் துடைத்தாள். தாயின் நினைவுகள் தெளிந்து விட்டதை உணராத மகள் தாயின் தோளில் சாய்ந்து அழ, கணேசன் பதறிப் போனார்.

"அம்மாடி! ஏம்மா அழறே? வசு... என்னாச்சு? ஏன் இப்படிச் சாப்பாட்டைக் கொட்டியிருக்கே... வசு! உன்னைத் தான் கேட்கிறேன்..."

"ம்... என்ன கேட்டீங்க?"

"ஏன் இப்படிச் சாப்பாட்டைப் பாழாக்கினே?"

"ஆமா! பாழாப் போச்சு... எல்லாமே பாழாப் போச்சு...!"

"என்னாச்சு வசு?"

"தங்கை... தங்கைன்னு இவளை என்னிக்கு வீட்டுக்குள்ள கொண்டு வந்தீங்களோ அப்பவே என் நிம்மதி போச்சு. இப்ப இவ பெத்து வெச்சிருக்காளே... ஒரு ரத்தினம்... அவளால எல்லாமே போச்சு...

என் கனவு நம்பிக்கை ஆசை எல்லாத்தையும் நாசமாக்கிட்டா... எம் புள்ளையை மொத்தமா மயக்கிட்டா... எப்பவுமே என்னை எதிர்த்து ஒரு வார்த்தை பேசாத எம் புள்ளை என்னை எதிர்த்தப்பவே எனக்குச் சந்தேகம்தான்... அது உண்மையாகிப் போச்சு..."

"என்ன உளர்ற...? எது பேசுறதா இருந்தாலும் தெளிவாப் பேசு..."

"உங்க தங்கையோட சேர்ந்து உங்களுக்கும் மூளை கலங்கிப் போச்சா...? நான் சொல்றது புரியலையா? நம்ம புள்ளையை இவ கைக்குள்ள போட்டுட்டா... என் பிள்ளை இனிமே நமக்கு இல்ல..." - சத்தமாய் அவள் அழ ஆரம்பிக்க... மற்றவர் ஸ்தம்பித்துப் போயினர்.

பார்வதியோ நிலைகுலைந்து போனாள். 'என்ன? என் மூளை கலங்கிப் போயிருந்ததா? இவன் என் அண்ணன் மகனா? அப்படியென்றால் அண்ணனுக்குத் திருமணமாகி விட்டதா? எப்போது? நான் இல்லாமலா எல்லாம் நடந்தது...?'

கண்களை இறுக மூடியவாறே மூளையைத் தட்டி எழுப்பினாள். மனதின் ஆழத்திற்குள் சென்று தேடினாள். இத்தனை ஆண்டுகளாய் புதைந்து போயிருந்த



நினைவுகளைத் தோண்டி எடுத்தாள். மீண்டும் மீண்டும் தோண்ட நினைவுகள் மெல்ல மெல்ல கண்களுக்குள் நிழலாடியது.

"**ஸ்ரீ**வைகுண்டத்தில இருந்து மாப்பிள்ளை பார்த்திருக்கேன். அருமையான மாப்பிள்ளை... பையன் பேரு சதாசிவம்..." - அப்பா மீசையை முறுக்கிக் கொண்டே சொன்னது கண்முன் வந்து போனது.

"மாப்பிள்ளையோட தங்கச்சி கண்ணுக்கு லட்சணமா இருந்தா... அதனால அவளையே மூத்தவனுக்குப் பேசி முடிச்சிட்டேன். பெண் கொடுத்து... பெண் எடுக்கப் போறோம்..."

"அப்பா! எனக்கென்ன அவசரம்? முதல்ல தங்கச்சி கல்யாணத்தை ஜாம் ஜாம்ன்னு நடத்தணும்... பிறகுதான் மத்ததெல்லாம்..." - அண்ணன் உறுதியாய் கூறியது செவியில் மோதியது.

"மாப்பிள்ளை தங்கம்மா... ராஜாவாட்டம் இருக்கார். உனக்கு ரொம்பப் பொருத்தமா இருப்பார்..." - இது ராகவனின் குரல்.

"இல்ல... அவர் நல்லவர் இல்லை... என்னை ஏமாத்திட்டு இப்போ உன்னைக் கட்டிக்கப் போறார்... அவர் மட்டும் உன் கழுத்தில தாலி கட்டினா அந்த நிமிஷமே நானும் வயித்துல இருக்கிற எம்பிள்ளையும் உயிரை விட்டுடுவோம்..." - கண்ணீரோடு கெஞ்சினாளே அந்தப் பெண்.

அவள் பெயரென்ன? ஏதோ சொன்னாளே... என்ன பெயர்? ஆங்... மலர்க்கொடி. அவள் என்ன ஆனாள்? அவன் கொன்றிருப்பானோ?

"இதோ பாரு... நீதான் என் பெண்டாட்டின்னு ஊர் முழுக்கச் சொல்லியாச்சு. வெத்திலைப் பாக்கு மாத்தியாச்சு... இந்த நேரத்தில நம்ம கல்யாணத்தைக் கலைக்க இப்படி எவளாவது ஏதாவது சொன்னா நம்பிடுவியா?" - சதாசிவத்தின் கர்ணகொடூரமான குரல் அச்சமூட்டியது.

"நான் சொல்றது சத்தியம். என்னை நம்பு பார்வதி... இவர் ஒரு ஏமாற்றுப் பேர்வழி... என்னை நம்ப வைத்து மோசம் செய்தவர்."

"ஏய்! இதுக்கு மேல ஏதாவது பேசினே குரல்வளையை நெறிச்சி இந்த ஆத்தில தூக்கிப் போட்டுடுவேன்..."

"அதைச் செய். வயத்தில களங்கத்தைச் சுமந்திட்டு வாழுறதைவிட நான் செத்துப் போயிடுறேன்.. அதுக்கப் புறமா நீ யாரை வேணா கட்டிக்க..."

"நீ செத்துப் போனாத்தான் இவ எனக்குக் கிடைப்பான்னா... உன்னைக் கொல்லவும் தயங்க மாட்டேன்டி... என்னைப் பத்தி உனக்குத் தெரியுமில்ல...?"

"என்னை விடு. நான் இப்பவே என் அண்ணன்கிட்ட போய் சொல்லிடுறேன்...

மலர்க்கொடி! நீ பயப்படாதே... இந்த ஆளை உனக்கே கட்டி வைச்சிடுவாக என் அண்ணனுங்க..." - தைரியம் சொன்ன பார்வதியைப் பிடித்துக் கொண்டான் சதாசிவம்.

"லட்டு மாதிரி இருக்கிற உன்னை விட்டுட்டு கெட்டுப் போன இவளையா கட்டுவேன்... யார் குறுக்கே வந்தாலும் நீதான்டி என் பெண்டாட்டி...!"



"அது ஒரு நாளும் நடக்காது. என் அண்ணன்களுக்கு உன் வண்டவாளம் தெரிஞ்சா உன்னை வெட்டிப் போட்டுடுவாங்க... விடுடா என்னை...!"

"அவ்வளவு சீக்கிரம் விடுவேனா? தாலி கட்டிட்டு குடும்பம் நடத்தலாம்னு பார்த்தேன். இப்போ குடும்பம் நடத்திட்டு அப்புறமா தாலி கட்டுறேன்..." - வெறிவந்தவனாய் பார்வதியின் புடவையை உருவினான்.

உடம்பும் உள்ளமும் கூசிவிட, துடித்துப் போனாள். "என்னை விடு... தொடாதே... தொட்டா செத்திடுவேன்... விடு!"

மலர்க்கொடி சதாசிவத்தை இறுகப் பிடித்துக் கொண்டாள். "பார்வதி! நீ ஓடு. ஓடிடு... இவனை நான் பார்த்துக்கிறேன்... ஓடு...!" - கத்தினாள்.

பதட்டமாய் ஓடத் திரும்பியவளின் காலை சதாசிவம் பற்றிக் கொள்ள, தலைகீழாய் ஆற்றில் விழுந்தாள் பார்வதி.

மதகு திறந்து விடப்பட்ட சிறிது நேரத்தில் சுழலில் மாட்டி சிக்கி எங்கோ அடித்துச் செல்லப்படுவதை உணர்ந்த பார்வதி மூர்ச்சையாகிப் போனாள்.

**நா**ன்கு நாட்கள் கழித்து கண்விழிக்கையில் உடல் முழுக்கக் காயத்தோடு ஓலை வீட்டில் கயிற்றுக் கட்டிலில் படுத்திருந்தாள். தன் நிலை புரிந்து எழ முயன்றபோது ஆதரவாய்ப் பற்றியது ஒரு கரம்.

"என் பேர் நீலகண்டன். இது என் வீடுதான். ஆத்தோரமா கரை ஒதுங்கிக் கிடந்தீங்க... யாரு எவருன்னு சொன்னா வீட்ல கொண்டு போய் சேர்த்திடுவேன்..." - மென்மையான குரலில் அவன் சொல்ல, காலை அசைக்க முடியாமல் வலியில் முனகினாள்.

"கால்ல பெரிய அடி பட்டிருக்கு... எலும்பு முறிவுன்னு வைத்தியர் சொன்னார். மட்டை வைச்சுக் கட்டியிருக்கு... எழுந்து நடக்க முடியாது."

"ஐயோ! நான் வீட்டுக்குப் போகணுமே... எங்க அப்பா தேடுவாங்க..."

"எந்த ஊருன்னு சொன்னாக் கூட்டிட்டுப் போயிடுவேன்..."

"எங்க ஊரு வாழைத்தோட்டம்."

"வாழைத் தோட்டத்தில யாரு வீட்டுப் புள்ளை நீங்க?"

"தட்சிணாமூர்த்தி எங்க அப்பா பேரு...!"

"அட! எங்க அப்பாகூட அங்கதானே வேலை செய்தாக..."

"யா... யாரு?"

"அதான்மா... ராசய்யா... வில்வண்டி ஓட்டுவாக. ஆறு மாசம் முந்தி இறந்தாகளே... அவுகதான் என் அப்பா!"

"இது யார் வீடு?"

"என் பாட்டி வீடு. பாட்டி விறகு பொறுக்கப் போயிருக்காக..."

"நான் வீட்டுக்குப் போகணும்..."

"இது பள்ளக்குறிச்சி. உங்க வீட்டுக்குப் போக ரெண்டு மணிநேரம் ஆகுமேம்மா... ஊருக்குள்ள பஸ்கூட வராதே... இந்தக் காலோட எப்படிப் போவீங்கம்மா?"

"ஐயோ! வீட்ல என்னைத் தேடுவாங்க... அண்ணன் துடிச்சிப் போயிடும். நான் போகணும்..."



"சரிங்கம்மா... வீட்டு அட்ரஸ் சொல்லுங்க... நான் போய் விபரம் சொல்லிக் கூட்டிட்டு வர்றேன்."

"சரி..." – என்றவாறே வீட்டு அடையாளம் சொல்லி அனுப்பினாள். இருட்டிய பிறகே விடு திரும்பியவனின் முகம் இருண்டு போயிருந்தது.

"என்னாச்சு? வீட்ல இருந்து யாரும் வரலையா?" – ஆவலாய் வாசலைப் பார்த்தாள்.

"அம்மா! உங்க வீட்ல நீங்க செத்துப் போயிட்டதா நினைச்சு உங்க படத்தில மாலை போட்டு காரியம் செய்யுறாங்கம்மா...!"

"என்ன?" – அதிர்ந்து போனாள்.

"ஊர்ல உள்ள எல்லாரும் கூடி இருக்காங்கம்மா... உங்க அம்மாவும் இறந்துட்டாங்களாம்..."

"ஐயோ!" – வீறிட்டுக் கதறினாள் பார்வதி.

"ஏய்யா! நீ போய் நடந்ததைச் சொன்னியா?"

"பாட்டி! பெரிய ஐயாகிட்டத்தான் சொல்லப் போனேன். அவுக பிரம்மை பிடிச்ச மாதிரி அசையாம இருந்தாக... அதனால அவுக பக்கத்துல நின்ன ஒருத்தர்கிட்ட சொன்னேன்..."

"யாருகிட்ட?"

"இவுக அண்ணன்னு நினைக்கிறேன். எல்லாத்தையும் கேட்டுட்டு என்னைத் தனியா அழைச்சிட்டுப் போனாரு..." – என நிறுத்தினான் நீலகண்டன்.

கண்ணீரோடு நிமிர்ந்தாள். "அண்ணன் என்ன சொல்லிச்சு?"

"அதை என் வாயால எப்படிம்மா சொல்லுவேன்?"

"சும்மா சொல்லுங்க..."

"மாப்பிள்ளையைப் பிடிக்காம அவ ஓடிப் போனதாலதான் இங்கு ஒரு இழவு விழுந்து போச்சு...

இவ திரும்பி வர்றதால போன மானமும் போன உசுரும் திரும்பாது. செத்தவ செத்தவளாவே இருக்கட்டும்னு சொல்லி என்னை வெளியே தள்ளிட்டாரும்மா...

இனிமே அவளைப் பத்தி பேசிட்டு இந்த ஊருக்குள்ள வந்தே... உசுரோட ஊர் போய்ச் சேர மாட்டேன்னு சொல்லிட்டாரும்மா...!"

"ஐயோ...!" – தலையில் அடித்துக் கொண்டு கதறினாள் பார்வதி. அவள் அழுவதைப் பொறுக்க மாட்டாமல் பதறினான் நீலகண்டன்.

"அழாதீங்கம்மா... உடம்பெல்லாம் காயம் பட்டிருக்கு... அழுதா ஏதாவது ஆகிடப் போகுது..."

"அப்படியாவது என் உசிரு போகட்டும். இனி நான் யாருக்காக உயிர் வாழணும்... என் அம்மாவோட உயிரைக் குடிச்சு... என் குடும்பத்தோட மானம் மரியாதையைக் காவு வாங்கிட்டு நான் ஏன் உயிரோட இருக்கணும்?"

"அப்படிச் சொல்லாதே தாயீ! நாங்கள்லாம் இருக்கோமில்ல... நாங்க கூட உனக்குத் தூரத்து உறவுதாம்மா... எங்க கூட எம்பேத்தியா இருந்துக்கம்மா...!" – என்ற பாட்டியை அதட்டினான் நீலகண்டன்.

"பாட்டி! அவுக எவ்வளவு பெரிய இடத்துப் பொண்ணு. இந்த ஓலைக் குடிசையில எப்படி இருக்க முடியும்? இன்னும்



ஒரு பத்து நாள் போகட்டும்... அவங்க கோபமெல்லாம் குறைஞ்ச பிறகு ஒரு நாள் போய் பேசிப் பார்க்கிறேன்..."

"வேணாம்யா... உன்னை ஏதாவது பண்ணிடப் போறாங்க?"

"அதுக்கெல்லாம் பயந்தா முடியுமா? முதல்ல இவுக கால் சரியாகட்டும்... இவுகளையும் கையோட கூட்டிட்டுப் போனா இவுக முகத்தைப் பார்த்துட்டுக் கோபப்பட முடியாது. சேர்த்துக்கிடுவாக..." – என்றான் நம்பிக்கையாய்.

பார்வதிக்கே கொஞ்சம் நம்பிக்கை வந்தது.

நேரில் பார்த்துச் சொன்னால் அண்ணன்கள் புரிந்து கொள்வார்கள். அவர்களின் தங்கையைப் பற்றி அவர்களுக்குத் தெரியாதா என்று தன்னையே திடப்படுத்திக் கொண்டு நம்பிக்கையோடு காத்திருந்தாள்.

வைத்தியரின் தீவிரமான கவனிப்பிலும் நீலகண்டனின் அக்கறையான பரிவான கவனிப்பிலும் கால் குணமாக ஆரம்பித்தபோது கையில் அரிவாளோடு வந்து நின்றான் சதாசிவம்.

அவனைக் கண்டதும் திகிலாய் உறைந்து போனாள் பார்வதி.

கொஞ்சம் பயமாய் அருகே இருந்த நீலகண்டனின் கரத்தை அவள் நடுக்கமாய்ப் பற்றிக் கொள்ள, ஆத்திரமாய் வெறித்தான் சதாசிவம்.

"என்னைக் காட்டிக் கொடுக்க நினைச்சியே... உன் நிலையைப் பார்த்தியா? ஓலைக் குடிசையில உன் வீட்டு வேலைக்காரப் பயகூட வாழ வேண்டியதாகிப் போச்சு..."

"ச்சீ! வாயை மூடு. இவர் ஒன்றும் உன்னைப் போல பொம்பளைப் பொறுக்கி இல்லை... என்னைக் குணமாக்கி என் வீட்டில் கொண்டு போய் சேர்க்கத்தான் பாடுபடுகிறார்."

"என்ன? வீட்டுக்குப் போவியா?" – நக்கலாய்க் கேட்டான்.

"ஆமா! போய் என் அண்ணனிடம் நடந்ததை எல்லாம் சொல்வேன். உன் வண்டவாளத்தைச் சொல்லாமல் விடமாட்டேன்..."

"போடி பைத்தியக்காரி! நீ மட்டும் ஊருக்குள்ள காலை எடுத்து வெச்சேன்னு வை... உன் அண்ணன்களே உன்னைக் கண்டந்துண்டமா வெட்டி வீசிடுவாங்க..." என்றான் எக்காளமாய்.

பார்வதியும் நீலகண்டனும் திகைப்பாய்ப் பார்க்க வெறி வந்தாற்போல் அவளை நெருங்கினான்.

"என்னடி முழிக்கிற? என்னைக் காட்டிக் கொடுத்திட்டு நீ நல்லவளா மாறிடலாம்னு பார்க்கிறியா? விட்டுடுவேனா நான்?"

"நீ... நீ என்ன சொல்றே?"

"உன் அண்ணன்களும் அப்பனும் கையில அரிவாளோட உன்னையும் இவனையும்தான் தேடிட்டு இருக்காங்க... அது தெரியுமா உனக்கு?"

"எ... எதுக்காக?"

"எதுக்காகவா? உனக்காகப் பார்த்து வெச்சிருந்த மாப்பிள்ளை என்னை விட்டுட்டு வீட்டுல வேலை செய்தவன் மகனோட ஓடிப் போனவளைப் பார்த்தா பார்த்த இடத்துலயே வெட்டிப் போடுறதுக்கு...



இதோ... எனக்குக் கூட இந்த அரிவாளை உன் அண்ணன்தான் தந்தான். ஒருவேளை என் கண்ணில பட்டா நான் வெட்டணுமாம். என்ன சொல்றே? வெட்டிப் போட்டுடவா?" – கண்களில் ஏளனம் தொனிக்க அவன் கேட்க, சிலையாகிப் போனாள் பார்வதி.

பார்வை உறைந்து போய் நின்றவளை அசைத்தான் நீலகண்டன்.

"அம்மா! இது... இது உங்கள் அண்ணன் இல்லையா?" – பதட்டமாய் அவன் கேட்க... 'இல்லை' என்பதாய் தலையை மட்டும் ஆட்டினாள்.

"ஐயோ... அம்மா! அன்னிக்கு உங்க வீட்டுக்குப் போய் உங்களைப் பத்தி நான் சொன்னதே இவர்கிட்டதாம்மா... இவரைத்தான் உங்க அண்ணன்னு நினைச்சு எல்லாத்தையும் சொன்னேன்..." – நீலகண்டன் பதட்டமாய்ச் சொல்ல, நொறுங்கிப் போனாள் பார்வதி.

## 18

உருகியதே எனது உள்ளம்
பெருகியதே விழி வெள்ளம்
விண்ணோடும் நீதான் மண்ணோடும்
நீதான் கண்ணோடும் நீதான்!

இடிந்து போய் நின்றவளைத் தன் கையிலிருந்த அரிவாளால் தொட்டு முகத்தை நிமிர்த்தினான் சதாசிவம்.

"பார்த்தியா! எப்பவுமே என் பக்கம்தான் நல்ல நேரம் இருக்கு. வந்தவன் நேரே என்கிட்ட வந்து எல்லாத்தையும் சொல்லிட்டான். எனக்கு அது போதாதா?

உனக்கு ஒன்று தெரியுமா? குளிக்கப் போனவ தண்ணியோட போயிட்டான்னுதான் உன்னைத் தேடி அலைஞ்சாங்க. நீ கிடைக்கலைன்னதும் செத்துட்டேன்னு முடிவும் பண்ணிட்டோம்.

நீ செத்துட்டது தெரிஞ்சதும் உன் அம்மாவும் பொசுக்குன்னு போயிடுச்சு. ரெண்டு பேருக்கும் சேர்த்துக் காரியம் பண்ணிட்டு இருந்தா... இவன் வந்து நிற்கிறான். நல்லவேளை என்கிட்ட உளறினான். நான் என்ன பண்ணினேன் தெரியுமா?"

அவன் நிறுத்த... அதே உறைந்த நிலையில் அவனைப் பார்த்தாள் பார்வதி.

"இவனை இப்படி அனுப்பிட்டு... ஊர் முன்னாலயே உன் பேரை நாறடிச்சிட்டேன் தெரியுமா?"

"எ.... என்ன சொல்றே?"

"ஆமா! நீ சாகல. சும்மா ஆத்துல குதிக்கிற மாதிரி குதிச்சிட்டு இவன்கூட ஓடிப்போயிட்டேன்னு... இப்போ கல்யாணம்கூட பண்ணிட்டேன்னு சொல்லிப் பிரச்சனையைத் திருப்பிட்டேன்..."

"அடப்பாவி! இதுக்கு நான் செத்ததாவே இருந்திருக்கலாமே..."

"அய்...! நான் அப்படியே விட்டிருந்தா நீ சும்மா இருப்பியா? நேர்ல வந்து உன் அண்ணன்கிட்ட எல்லாத்தையும் ஒப்பித்து இருப்பியே... அப்புறம் என் கதி என்னாகிறது? உன் அண்ணனுக்குன்னு நிச்சயம் பண்ணின என் தங்கையின் கதி?"

"எ... என்ன?"



"ஆமா! இதெல்லாம் யோசிச்சுத்தான் பிரச்சனையைப் பெரிசாக்கினேன். இப்போ நீ ஓடுகாலி ஆயிட்டே... நான் உன்னையே நினைச்சி இருக்கிற உத்தமனா ஆகிட்டேன். என் தங்கையோட கல்யாணமும் நல்லபடியா நடந்திடும்..."

"இதோ பாருங்கய்யா!. இந்த அரிவாளைக் காட்டி மிரட்டுற வேலை எல்லாம் எங்கிட்ட வேண்டாம். நான் நாளைக்கே இவங்களைக் கூட்டிட்டுப் போய் வீட்ல கொண்டு..."

"ஏய் நிறுத்து...! என்ன துள்ளுற? எம்பேச்சை மீறி அந்த ஊர்ப்பக்கம் வந்திடுவியா? உனக்கென்ன உயிர்மேல ஆசையில்லையா?"

"குரைக்கிற நாய் கடிக்காதுன்னு எனக்கும் தெரியும்..."

"டேய்! யாரை நாய்ங்கிற. என்னைப் பத்தி உனக்குத் தெரியாது. ஏய்! பார்வதி... இவன்கிட்ட சொல்லி வை. ரொம்பத் துள்ளினா ஒரேயடியாப் போயிடுவான்..."

"என்ன பயமுறுத்துறியா?"

"அடே முட்டாப்பயலே! இது பயமுறுத்தல் இல்லடா... உண்மை. இப்பக்கூட உங்க ரெண்டு பேரையும் இதே இடத்துல வெட்டிப் போட்டுட்டு இவ அண்ணன்கிட்ட போய் என்னால சொல்ல முடியும்?

ஆனா அதனால எனக்கு என்ன லாபம்? இவ அண்ணன் எவ்ளோ பெரிய சொத்துக்காரன்னு தெரியுமா? அந்தச் சொத்தை அவன் மனைவியா என் தங்கை போய் ஆளவேண்டாமா? உங்களைக் கொன்னுட்டு கோர்ட்டு கேசுன்னு அவனை அலையவிட்டா என் தங்கை வாழ்க்கைதானே பாழாகும்?

அதனாலதான் சொல்றேன். பேசாம இந்த ஊரை விட்டுட்டு எங்காவது கண்காணாத இடமாப் போய் பொழைச்சுக்க. இல்லன்னா... என் கையாலதான் உங்களுக்குச் சாவு. என்ன சொல்றீங்க?"

பார்வதியிடம் துளியும் அசைவில்லை. "பார்வதி! உன் கெட்ட நேரத்தைப் பார்த்தியா? பேசாம என்னைக் கட்டிக்கிட்டு ராணி மாதிரி வாழ்ந்திருக்கலாம். எவளுக்கோ பரிஞ்சிகிட்டு இப்போ இப்படி ஒரு வாழ்க்கை வாழப் போறியே...

இப்பக்கூட உன்னை நான் கட்டிக்கிடலாம்தான். ஆனா இத்தனை நாளா இவன்கூடக் குடும்பம் நடத்தின உன்னை நான் கட்டினா ஊர்ல உள்ளவன் என்னைக் காறித் துப்பமாட்டானா? என் கௌரவம் என்னாகிறது சொல்லு.

வேணும்னா இன்னொன்னு செய்யலாம். இவனை ஒரேயடியா மேலே அனுப்பிட்டு... இதே வீட்ல உன்னை வெச்சுக்கிறேன். அப்பப்போ வந்து போறேன். உனக்கு சம்மதம்னா சொல்லு. இப்பவே இவனைப் போட்டுடறேன்...."

சதாசிவம் பேசிக்கொண்டே போக... பார்வதி உணர்வு பெற்றாள்.

அவன் பேசியதின் பொருள் புரிய கொதித்துப் போனாள்.

சட்டென அவனது சட்டையைக் கொத்தாய்ப் பற்றினாள்.

"என்னடா சொன்னே நாயே? என்னை நீ வெச்சுக்கிறியா? த்தூ... உன்னை மாதிரி ஒரு ஊர் மேயறவனைக் கட்டிக்கிட்டு மாளிகையில ராணி மாதிரி வாழுறதைவிட, இப்படி ஒரு நல்ல மனுஷனைக் கட்டிக்கிட்டு இந்தக் குடிசையில வாழ்றது எவ்வளவோ மேல்...





கௌரவத்தைப் பத்தி நீ பேசுறியா? ஊர்ல உள்ள பெண்ணை எல்லாம் ஏமாத்தின நீ என்னை.. என் ஒழுக்கத்தைக் களங்கப்படுத்துறியா?

இதோ பாருடா... இப்பச் சொல்றேன்... கேட்டுக்கோ. நல்லதோ கெட்டதோ விதி என்னை இவர் கையில் சேர்த்திடுச்சு.

இனி இவர்தான் எனக்கு எல்லாம். இனி நீயோ என் அண்ணன்களோ இருக்கிற பக்கம்கூட நான் வரமாட்டேன்.

ஆனா... எந்தத் தப்பும் செய்யாத என்மேல களங்கத்தைச் சுமத்தின உனக்கு நல்ல சாவே வராது..."

"ஹூம்! பெரிய பத்தினி. சாபம் கொடுக்கிறா எனக்கு..."

"நான் பத்தினிதான்டா. நான் கொடுக்கிற சாபமும் பலிக்கும். நீ என்னை எப்படித் தனியாப் பிரிச்சுத் தவிக்க விட்டியோ இதே மாதிரி நீயும் தனியாக் கிடந்து தவிச்சுத் துடிச்சுத்தான் செத்துப்போவே.

உன் உடம்பு முழுக்கப் புழு புடிச்சுத்தான் நீ சாகப்போற.

அப்போ... அந்தக் கடைசி நிமிடம் உனக்கு நான் பத்தினின்றது புரியும். இது... இது நடக்கும். கண்டிப்பா நடந்தே தீரும்." - வெறி வந்தவளாய் அவள் கத்த, நீலகண்டன் தான் அவளைச் சமாதானப்படுத்தினான்.

அதன் பிறகு பார்வதி அழவே இல்லை. நீலகண்டனின் பாட்டியின் முன்னிலையில் வீட்டிலேயே எளிதாய் திருமணத்தை முடித்துக் கொண்டு, பிழைப்பைத் தேடி சென்னைப் பட்டிணம் வந்தார்கள்.

இரும்பு ஃபாக்டரியில் நீலகண்டனுக்கு வேலை கிடைக்க சின்னதாய் அருமையாய் வீடு பார்த்து எளிமையாய் வாழ்ந்து ஆசைக்கொன்று ஆஸ்திக்கொன்றாய் பிள்ளைகளைப் பெற்று, அவற்றை பொத்திப் பாதுகாத்து வளர்க்கும் வரையில் நீலகண்டன் எதற்குமே மனைவியை அழவிட்டதில்லை.

அவ்வப்போது பெற்றவர்களின் உடன்பிறந்தவர்களின் நினைவில் வருந்தும்போது கூட தாயாய் மடியில் சாய்த்துக் கொள்வான். ஊருக்குப் போய்ப் பார்ப்போமா... என்பான்.

ஆனால் ஒன்றில் மட்டும் உறுதியாய் இருந்தாள் பார்வதி. தன் தங்கையின்மீது நம்பிக்கை இல்லாமல் எவனோ ஒருவன் சொன்னதைக் கேட்டுத் தன்னை அவர்கள் தவறாக நினைத்ததால்... இனி இறுதி மூச்சு வரை அவர்களைத் தேடிச் செல்லக் கூடாது என்பதில் உறுதியாய் இருந்தாள்.

நீலகண்டனும் அதன் பிறகு அதைப் பற்றி பேசுவதில்லைதான்... தன் குடும்பம், தன் மனைவி, தன் பிள்ளைகள்... அவர்களின் எதிர்காலம் என்று அமைதியாய் வாழ்ந்தவன்... தேனீயாய் ஓய்வின்றி உழைத்தவன்....

அந்த நாள்... அந்தக் கொடிய நாள் ஏன் வந்தது?

அன்று அவர்களது திருமண நாள். வழக்கமாய் திருமண நாள் அன்று வேலைக்குச் செல்லாமல் மனைவி யுடனே பொழுதைக் கழிப்பவனை அன்று விடுமுறை தராமல் வேலைக்கு வரவழைத்தது விதிதானோ?

மனமே இன்றிதான் வேலைக்குச் சென்றான். 'மாலையில் அவன் வருவதற்கு முன் அவனுக்குப் பிடித்த



பலகாரம் செய்யலாம் என்று கையில் கூடையோடு கடைக்குக் கிளம்பினாள் பார்வதி.

கிளம்புகையிலேயே மனதிற்குள் இனம்புரியாத பயஉணர்வு எழ, கூடவே வருகிறேன் என்ற மகளை வீட்டில் விட்டுச் சென்றாள்.

சாலையில் இருபுறங்களையும் பார்த்துவிட்டு, கடந்து செல்வதற்காகக் காத்து நிற்கையில்தான் எதிர்ப் பக்கமாய் தன் கணவன் வருவதைப் பார்த்தாள்.

அவனும் அதே சமயம் மனைவியைப் பார்த்துவிட்டு புன்னகையோடு கையசைத்துவிட்டு... சாலையைக் கடக்க, வேகமாய் வந்த லாரி அவனது உடம்பை நசுக்கிவிட... தன் கண்முன்னே... கணவனின் துடிப்பு அடங்க....

பார்வதியின் உடல் உதறிக்கொண்டது. கனவிலிருந்து விழித்ததுபோல் கண்களைத் திறந்தாள்.

'ஐயோ! அவருக்கு என்ன ஆயிற்று? நான் மயங்கி விழுந்துவிட்டேனே. அதன் பிறகு அவரை யாராவது காப்பாற்றினார்களா?

இப்போது அவர் எங்கே? இங்கே எதற்காக வந்தோம்? யார் அழைத்து வந்தது?'

யோசனையாய் தவிப்பாய் கழுத்தை வருடியவள் திக்கென அதிர்ந்தாள். தாலியைக் காணவில்லை. மெலிதான செயின் மட்டுமே கழுத்தில் கிடந்தது.

"ஐயோ! என் தாலி எங்கே? மானு! என் தாலியைக் காணோமே மானு. அப்பா எங்கேம்மா?" பரிதவிப்பாய் மகளைப் பற்றி உலுக்கினாள் பார்வதி.

தாயைக் கட்டிக்கொண்டு மான்விழி கதற, காட்டுக்கத்தல் கத்திக் கொண்டிருந்த வசுந்தராதேவி சடக்கென திரும்பினாள்.

"பாருங்க! நான் எம்புள்ளையோட வாழ்க்கை போனதைப் பத்தி, நம்ம குடும்ப மானமே இந்த நாயால காத்துல பறந்து போனதை பத்திப் பேசிட்டு இருக்கேன். அவ என்ன கேட்கிறான்னு பார்த்தீங்களா?"

"அம்மா! இப்ப ஏன் நீங்க இப்படிச் சொன்னதையே சொல்லிட்டு இருக்கீங்க? அப்படி என்ன உங்க மானம் போயிடுச்சு? இவ என் சொந்த அத்தை மக. இவளைக் கட்டுறதால என்ன குறைஞ்சு போயிடும்னு இப்படியெல்லாம் பேசுறீங்க?" – வெடித்தான் ராஜேந்திரன்.

"அடேய்! தாயைப் போல பிள்ளைன்னு நீ கேள்விப் பட்டதில்லையா? என்னத்தைப் படிச்ச நீ?"

"அம்மா!"

"இவ அம்மா இப்படித்தான்டா என் அண்ணனுக் குன்னு பேசி முடிச்ச பிறகு ஓடினா... நாளைக்கு இவளும் அதேமாதிரி போயிட்டான்னா நம்ம குடும்ப மானம் சந்தி சிரிக்காதா?"

"வசு! இப்போ நீதான் பைத்தியக்காரி மாதிரி உளறுற..."

"யாரு? நானா? நானா... பைத்தியம்?"

"ஆமா! என் தங்கை ஒண்ணும் ஓடிப் போகல்ல. ஆத்துல குதிச்சு உயிரை விட்டுட்டா." – கணேசன் சொல்ல, பார்வதியின் முகம் மலர்ந்தது.

"அப்போ எப்படி உசுரோட வந்தா?"



"யாரோ ஒரு புண்ணியவான் கையில கிடைச்சிருக்கா. உயிர் பிழைச்சிருக்கா. அது மட்டும் புரியுது. அதுக்கப்புறம் என்ன நடந்ததுன்னு அவளே சொன்னாத்தான் தெரியும்..."

"ம்... இப்படியே சொல்லிட்டு இருங்க. இவ நம்மை எல்லாம் பைத்தியமாக்கிட்டு எம்புள்ளையையும் இழுத்திட்டு ஓடப்போறா!"

"வாயை மூடு... அவ ஏன் இழுத்திட்டுப் போகணும்? அவ என் தங்கை மக. அவளுக்கு விருப்பம்னா எம்மகனை நானே கட்டி வைப்பேன்."

"ஓஹோ! இப்படி வேற ஒரு எண்ணம் இருக்கா உங்களுக்கு? அப்போ இந்த எண்ணத்தோடதான் உங்க தங்கையைத் தேடிக் கண்டுபிடிச்சு இங்க கூட்டிட்டு வந்தீங்களா?" வசுந்தரா ஆவேசமாய்க் கேட்க, பார்வதிக்கு லேசாய் புரிய ஆரம்பித்தது.

கணேசன் தைரியமாய் ஆமோதித்தார். "என் தங்கையை என் கண்ல காட்டினது என்னவோ கடவுளோட சித்தம்தான். ஆனா இவங்களைக் கூட்டிட்டு வந்ததுக்கு இந்த எண்ணமும் ஒரு காரணம் தான்.

இது என் தங்கை பிறந்து வளர்ந்த வீடு. இந்த வீட்டில் அவள் மகளும் வாழ வேண்டும் என்று ஆசைப்பட்டேன். என் பிள்ளை என் ஆசையை நிறைவேற்றுகிறான். இதில் நீ கோபப்பட அவசியமே இல்லை..."

"உங்கள் இருவரின் ஆசையும் ஒருபோதும் நடக்காது."

"ஏன் நடக்காது?"

"என் பிள்ளைக்கு இவள் மகளைக் கல்யாணம் செய்து வைப்பேன் என்று எப்படி நினைத்தீர்கள்?"

"ஏன்? இந்தப் பெண்ணிடம் என்ன குறையைக் கண்டாய்?"

"இவ தாய் என் அண்ணனை வேண்டாம் என்று தூக்கியெறிந்தவள். இவள் மகளை நான் மருமகளா ஏத்துக்கணுமா?" - ஆவேசமாய் அவள் கேட்க, பார்வதி பொறி கலங்கிப் போனாள்.

இவள் என்ன சொல்கிறாள்? இவள் அண்ணனை நான் வேண்டாம் என்று தூக்கியெறிந்தேனா? அப்படி யென்றால்... இவள்... அந்த சதாசிவத்தின் தங்கையா? அவளையே அண்ணனுக்குக் கட்டி வைத்துவிட்டானா?

அப்படின்னா... இவதான்... இல்ல... இவர்கள்தான் என் மதினியா? இவர்கள் மகனுக்கு என் பெண்ணை மணமுடிக்க நான்தான்... என்னுடைய கடந்தகாலம்தான் தடையாக இருக்கிறதா?

இல்லை... நான் சுத்தமானவள். களங்கமற்றவள்... நானாக எங்கும் ஓடிப் போய்விடவில்லை. என் அண்ணனும் அதை நம்புகிறாரே... பிறகென்ன நடந்ததைச் சொல்லி விடலாம். அதற்கு என் கணவரும் உடன் இருக்க வேண்டுமே. அவர்தானே எல்லாவற்றுக்கும் ஒரே சாட்சி.

சாட்சியோடு சொன்னால்தான் மதினிக்கு நம்பிக்கை வரும். இவர் எங்கே போனார்? குழந்தையை இத்தனைபேர் முன்னிலையில் கண்ணீர் வடிக்கவிட்டு அப்படி எங்கேதான் போனார்?

மகளின் கண்ணீரை துடைத்தாள்.

"மானும்மா! இங்கே இவ்வளவு பிரச்சனை நடக்குது. அப்பா எங்கே? அண்ணனையும் காணோமே? ரெண்டு



பேரும் எங்கே போயிட்டாங்க?" பார்வதியின் தெளிவான கேள்வியில்... சட்டென அந்த இடம் அமைதியானது.

அனைவரும் வியப்பாய் பார்வதியைப் பார்க்க, மான்விழி தாயை பிரமிப்பாய் பார்த்தாள். "அம்மா?"

"மானும்மா! அப்பாவுக்கு ஒண்ணும் ஆகலியே... அப்பாவைக் காப்பாத்தியாச்சா? அப்பா எங்கேம்மா?"

"அம்மா! அம்மா... உங்களுக்கு எல்லாம் நினைவுல வந்திடுச்சா. என்னைத் தெரியுதா?" - நம்ப முடியாமல் கேட்டாள்.

"என்ன கண்ணம்மா நீ? பெற்றவளுக்கு பிள்ளையைத் தெரியாமல் போகுமா? அப்பா எங்கேடா? நாம எதுக்காக இங்கே வந்திருக்கோம்?"

சகோதரர்கள் மூவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். அவர்களது கண்களின் வியப்பு அதிர்வு... ஆனந்தம்.

ராகவன் தங்கையை நெருங்கினார்.

"பாரு கண்ணா! உனக்கு... எங்களை எல்லாம் தெரியுதா?"

"என்ன அண்ணா! எல்லாருமே இப்படியே கேட்கிறீங்க? எனக்கு ஒண்ணும் இல்ல. நான் நல்லா இருக்கேன். அவர்... அவர் எங்கே போயிட்டார்? " - என அங்கும் இங்கும் தேட ஆரம்பிக்க, மான்விழி தாயைக் கட்டிக் கொண்டாள்.

"அம்மா! அப்பா... இல்லம்மா..."

"இல்லையா? எங்கே போயிட்டார்?"

"நம்மை எல்லாம் விட்டுட்டுப் போயிட்டாரும்மா. அப்பா இறந்து எட்டு வருஷம் ஆச்சும்மா..." என்றவாறே மகள் கதற, பார்வதி ஸ்தம்பித்துப் போனாள்.

இடியை நேரிடையாய் தலையில் வாங்கியதுபோல் அசைவற்று நின்றவளைக் கட்டிக்கொண்டு கதறினாள் மான்விழி.

"அம்மா! ப்ளீஸ்மா, ஏதாவது பேசும்மா... திரும்பவும் பழையபடி ஆகிடாதேம்மா. என்னால தாங்க முடியாதும்மா. அம்மா பேசும்மா..."

பார்வதியின் கண்கள் கலங்கின. மகளைப் பரிதாபமாய் பார்த்தாள்.

"அ.... அவர் போயிட்டாரா? என்னை விட்டுட்டு உங்களை யெல்லாம் விட்டுட்டுப் போயிட்டாரா?"

"ஆமாம்மா. உங்களை நடைப்பிணமாக்கிட்டு எங்களைத் தவிக்கவிட்டுப் போயிட்டாங்கம்மா." – மகளின் கண்ணீரைக் கண்டு தானும் கண்ணீர் சிந்தினாள்.

"அவர் எப்படி என்னை விட்டுட்டுப் போகலாம் மானு? கடைசிவரை என் கூடவே இருப்பேன்னு சொன்னாரே...

இப்போ... இப்போ எப்படி அவர் மட்டும் தனியே போனார்? நான் மட்டும் தனியே இருந்து என்ன செய்யப் போகிறேன்?"

"அம்மா!"

"நானும் போயிடுறேன். நான் இல்லாம அவர் கஷ்டப்படுவார்."

"அம்மா என்ன சொல்றே?"



"உன் அப்பா பாவம் மானு. நானில்லாம அவர் தனியே என்ன பண்ணுவார்? நான் போக வேண்டாமா? விடு என்னை...!"

"என்னையும் கூட்டிட்டுப் போம்மா..."

"மானு?"

"உனக்காகத்தாம்மா இங்கே வந்தேன். வந்ததுல இருந்து நிறைய நல்ல பேரை சம்பாதிச்சுட்டேன்... இனிமே யாருக்காக எதுக்காக நான் வாழணும். வாம்மா... நானும் உங்ககூட வந்திடுறேன். என்னையும் கூட்டிட்டுப் போயிடும்மா.

இந்த உலகம் பிடிக்கல்ல. இதில் வாழுற மனுஷங்களைப் பிடிக்கலை. வாம்மா நாம போயிடலாம்..."

தன் கையைப் பற்றிக் கொண்டு கெஞ்சிய மகளைக் கண்டு விம்மி வெடித்துக் கதறத் துவங்கினாள் பார்வதி.

## 19

பாலிலும் வெண்மை பனியிலும் வெண்மை
பச்சை இளங்கிளி மொழி நீ சொல்வது
உண்மை பாவிகள் நெஞ்சம் உரைத்திடும்
வஞ்சம் உண்மையென்று சொல்வதற்கு
தெய்வமும் அஞ்சும்!

பார்வதியின் கண்ணீர் நிற்க வெகு நேரமாயிற்று. கண்ணீரின் ஊடே தனக்கு நடந்தவைகளை ஒவ்வொன்றாய்ச் சொல்ல, உடன் பிறந்தோர் கொதித்துப் போயினர். கேட்டுக்கொண்டிருந்த இளையவர்களின் கண்களில் ஈரம்.

மான்விழி துளியும் அசையாமல் அனைத்தையும் கேட்டுக் கொண்டு நின்றிருந்தாள். கண்களில் கண்ணீர்

சுத்தமாய் நின்றுபோயிருந்தது. தன் அன்னையை இறுதி வரை ஒரு சொல் சொல்லாமல் கண்ணாய் பார்த்துக் கொண்ட தந்தை தெய்வமாகவே தோன்றினார்.

வசுந்தரா தேவிக்கோ ஆத்திரம் தலைக்கேறியது. தன் சகோதரனைப் பற்றி இத்தனை பேர் முன்னிலையில் விமர்சிக்கிறாளே... என்ற ஆத்திரம் கண்ணை மறைக்க, கோபமாய் பார்வதியைப் பற்றி தன்புறமாய் திருப்பினாள்.

"ஏய்! எல்லாத் தப்பையும் நீ செய்துட்டு... இப்போ என் அண்ணன் இல்லன்னு தெரிஞ்சதும் அவர் மேல பழியைப் போடுறியா?"

"இல்லை மதினி.... நான் சொன்னது முழுக்க சத்தியம். உங்களுக்குச் சந்தேகமா இருந்தா உங்க அண்ணனிடமே கேளுங்க..."

"அவன்கிட்ட போய் கேட்கிறதுன்னா நானும் மேலேதான் போகணும்..."

"மதினி! நீங்க... என்ன சொல்றீங்க?"

"ஆமான்டி. நீ போய்த் தொலைஞ்சதுல இருந்தே அவன் நடைபிணமாத்தான் திரிஞ்சான். தேடாத இடமெல்லாம் தேடி அலைஞ்சான். உன் பேரைச் சொல்லிட்டே தான் இருந்தான்.

நாங்கதான் வற்புறுத்தி இன்னொரு கல்யாணம் பண்ணி வெச்சோம். அவ கூட அவன் சந்தோஷமா வாழ்ந்து நான் பார்க்கலை. உன் நினைப்புல யாரையுமே பார்க்க முடியாம தனியாவே கிடந்துதான் செத்தான்."

"என்ன?" – பார்வதியால் இதை நம்பமுடியவில்லை.



'இல்லை... இதில் பொய்தான் இருக்கிறது. கண்டிப்பாய் அவன் என் நினைவில் மருகி இருக்க மாட்டான். இது பொய்!'

பார்வதிக்குச் சட்டென அந்தப் பெண்ணின் நினைவு வந்தது. சதாசிவத்துடன் பழகி தன் வயிற்றில் குழந்தை உண்டாகி இருக்கிறது என்றாளே... அவள் என்ன ஆனாள்? சதாசிவம் அவளை மணம் முடிக்கவில்லையா?

"மதினி? அப்போ அந்தப் பொண்ணு என்ன ஆனா? அவதான் எங்கிட்ட வந்து சொன்னா... உங்க அண்ணனைப் பத்தி..."

"வாயை மூடு. அப்படி ஒரு பொண்ணே கிடையாது. நீயா எதையாவது கற்பனை பண்ணிட்டு உளறினா அதை நான் நம்பணுமா?"

"இல்ல மதினி... இதெல்லாம் கற்பனை இல்ல. நடந்த நிஜம்"

"இது நிஜமா இருந்தா... நீ ஏன் வெளியூருக்கு ஓடிப் போன? நேரில வந்து உண்மையைச் சொல்ல வேண்டியதுதானே..."

"ஐயோ! அதான் சொன்னேனே மதினி... உங்க அண்ணன் நேர்ல வந்து மிரட்டினார்ன்னு..."

"நேரில் உன்னைப் பார்த்திருந்தா பிறகெதுக்குடி என் அண்ணன் உன்னைத் தேடி அலையணும். உன்னையே நினைச்சு உசுரை விடணும்?"

தலையைப் பற்றிக் கொண்டாள் பார்வதி. இந்தச் சம்பவத்திற்கு இரண்டே சாட்சிகள்.

ஒன்று தன் கணவன். இன்று உயிரோடு இல்லை. இன்னொன்று அந்தப் பெண்... பெயரைத் தவிர வேறொன்றுமே தெரியாதே...

அவளது ஊர்கூட எதுவென்று தெரியாது. அவளே நேரில் வந்து நின்றாலும் அடையாளம் தெரியாது. முப்பது வருடத்திற்கு முன் சில கணங்களே பார்த்த முன்பின் அறிமுகமில்லாத ஒரு பெண்ணின் முகம் எப்படி நினைவில் நிற்கும்?

ஒருவரும் சாட்சி சொல்லாமல் இவர்களை எப்படி நம்ப வைக்க முடியும்? கடைசிவரை ஓடிப்போனவள் என்ற களங்கத்தைச் சுமந்து கொண்டுதான் வாழ வேண்டுமா? என் கதை முடிந்த பழங்கதை.

ஆனால் என் பெண்ணின் வாழ்க்கை? வாழ வேண்டிய பெண் ஆயிற்றே... என் மகள் ஏன் பழியைச் சுமக்க வேண்டும். அவளது வாழ்க்கைக்காவது நான் என் மீது எந்தத் தவறும் இல்லை என்று நிரூபிக்க வேண்டாமா?

எப்படி நிரூபிக்கப் போகிறேன்? எப்படிச் சொன்னால் நம்புவார்கள்? மீண்டும் மனம் குழம்ப... தலையை வலித்தது. கணேசன் வந்து தங்கையின் தோளைத் தொட்டார்.

"அம்மாடி! இ... இதெல்லாம் நிசமா? அந்தப் பயலுக்காகவா நீ ஓடின?"

"அண்ணே! நீங்க கூட என்னை நம்பலியா?" - பரிதாபமாய்க் கேட்டாள்.

"நம்புறோம்மா. நாங்க நம்பாம வேறு யாரு நம்புவாங்க... எனக்கும் அவன்மேல லேசா சந்தேகம்



இருந்தது. ஆனா அடுத்தத்து ஏற்பட்ட சங்கடத்தில அவனைக் கவனிச்சுப் பார்க்க முடியாமப் போயிட்டது."

"அண்ணே!"

"ஆமா கண்ணு. ஒரு பக்கம் உன்னோட இழப்பு. உடனே அம்மாவோட இழப்பு. அப்பாவோ சுத்தமா இடிஞ்சு போயிட்டாங்க. எங்களுக்கு வேற யாரையும் ஆராய முடியல்லம்மா. உன்னைத் தேடி அலையும் போதெல்லாம் அவனும் கூடவே வந்தானே...

உன்மேல உள்ள பிரியத்தாலதான் வர்றான்னு நினைச்சிட்டோம். இப்பத்தான் புரியுது... அவன் மேல எந்தச் சந்தேகமும் வரக்கூடாதுன்னுதான் எங்ககூடவே சுத்தியிருக்கான். ச்சே! கவனிக்காம விட்டுட்டோமே.

மன்னிச்சிடும்மா. நீ பட்ட துயரத்துக்கெல்லாம் முழுக் காரணம் நாங்கதான். எங்களை மன்னிச்சிடு தாயீ...!" - பார்வதியின் கைகளைப் பற்றிக்கொண்டு தழுதழுத்தார்.

"அண்ணே! நீங்க ஒரு தப்பும் செய்யலையே"

"இல்லம்மா. தப்பு பண்ணியிருக்கோம். பொண்ணைக் கொடுக்கிறதுக்கு முன்னால அவனைப் பத்தி ஊருக்குள்ள நாலுபேர்கிட்ட விசாரிச்சிருக்கணும். அப்படி விசாரித்திருந்தால் அவன் யோக்யதை தெரிஞ்சிருக்கும். அப்பா பார்த்த மாப்பிள்ளையாச்சேன்னு நாங்க அவனைப் பத்தி விசாரிக்காம விட்டுட்டோமே. இது எவ்வளவு பெரிய தப்பு!"

"என்ன? தங்கை சொன்னதை அப்படியே வேத வாக்கா எடுத்திட்டு என் அண்ணனைப் பொல்லாதவனா ஆக்கிட்டீங்களா?"

"என் தங்கை பொய் சொல்ல மாட்டா..."

"என் அண்ணன் தப்பு செய்ய மாட்டான். அவன் பண்ணின ஒரே தப்பு...

இவ ஓடிப்போன பிறகும் என்னை உங்களுக்குக் கட்டி வெச்சதுதான்..."

"வசு!"

"கத்தாதீங்க. நான் கூட வேண்டாம்னு சொன்னேன். நிச்சயம் முடிஞ்ச கல்யாணம் நிக்கக்கூடாதுன்னு என்னை வற்புறுத்தி சம்மதிக்க வைச்சான். அப்படி எதுவும் நடக்காம இருந்தா இன்னிக்கு செத்தபிறகும் அவன் பழிகாரனா ஆகியிருக்க மாட்டான்..."

"அம்மா! நடந்ததையே பேசுறதால இனி எதுவும் மாறப் போறதில்லை. அதனால இந்தப் பேச்சை விட்டுட்டு இனி நடக்கப்போறதைப் பாருங்க..." – என்றான் கஜேந்திரன் பொறுமை இல்லாமல்.

"இன்னும் என்னடா நடக்கணும்?"

"நிறைய நடக்கணும்மா. அண்ணனோட மனசு இப்போ எல்லாருக்குமே புரிஞ்சுபோச்சி. கடவுள் அருளால அத்தையும் பரிபூரணமா குணமடைஞ்சிட்டாங்க."

"அதுக்கு?"

"என்னம்மா கேள்வி இது? சீக்கிரமா அண்ணனுக்கும் அண்ணிக்கும் கல்யாணம் பண்ணிடவேண்டியது தானே..."

"அண்ணியா? யாருடா அண்ணி?"

"என்னம்மா நீங்க? இதோ நிற்கிறாங்களே இவங்க தான். அண்ணியை எங்க எல்லாருக்கும் பிடிச்சிருக்கும்மா..."



"அப்பனுக்குப் புள்ள தப்பாம பொறந்திருக்கீங்கடா. நான் ஒருத்தி கிடந்து புலம்புறதை எவனாவது மதிக்கிறீங்களா?"

"அம்மா! உங்க கோபத்தில நியாயமே இல்லம்மா..."

"என்னடா சொல்றே?"

"ஆமாம்மா! தான் செய்தது தப்புன்னு சொல்ல உங்க அண்ணனும் இப்ப இல்ல. தன்னோட மனைவி சொல்றது எல்லாமே உண்மைன்னு சொல்றதுக்கு அத்தையோட கணவரும் இல்ல. அதனால இதை இப்படியே விட்டுடறது தான் நம்ம எல்லாருக்குமே நல்லது."

"விட்டுடணுமா? டேய்! அவ வேற எந்தக் காரணத்தைச் சொல்லி இருந்தாலும் நான் விட்டிருப்பேன்டா. அவ என் அண்ணனையில்ல பாவியா ஆக்கிட்டா. இறந்து போன ஆன்மாவைப் பத்தி இப்படிப் பேசுறது எவ்வளவு பெரிய பாவம்?"

"மதினி! நான் பொய் சொல்லல மதினி. நடந்தது எல்லாமே உண்மை..."

"நீ பேசாதே. பொய்யைத் திரும்பத் திரும்ப சொல்றதால உண்மை ஆகிடாது. நீ தான் உன் அண்ணன்களை ஏமாத்திட்டு அவன்கூட ஓடிப் போயிருக்கே. இப்போ அவன் போய்ச் சேர்ந்ததும் சோத்துக்கு வழி இல்லாம திரும்பி வந்திருக்க...

சும்மாவா வந்திருக்க. உன் பொண்ணை இந்த வீட்டு மருமகளா ஆக்கணும்கிற திட்டத்தோடதான் வந்தே. அதுக்காகத்தான் என் அண்ணன் மேல பழியப் போட்டுட்டு நீ உத்தமியா மாறிட்டே...

உன் பொண்ணு உன்னைவிட பத்து மடங்கு சாகசக்காரி. வந்து ஒரு வாரம் கூட ஆகல்ல. எம்புள்ளய அப்படியே சாய்ச்சிட்டாளே. எம்புள்ள... புருஷென் எல்லாரையும் அவபக்கம் இழுத்திட்டாளே."

"மதினி! இப்படியெல்லாம் பேசாதீங்க. அவளுக்கு எதுவுமே தெரியாது..."

"ஆஹா! எதுவுமே தெரியாமத்தான் எம்புள்ளைய கட்டிட்டு நின்னாளா? நீ பைத்தியம் இல்லடி. அந்த வேஷம் போட்டு என் வீட்டுக்குள்ள நுழைஞ்சு எம்புள்ளைய மயக்க நீதான் கத்துக்கொடுத்திருக்க. காரியம் வெற்றியானதும் பைத்தியம் தெளிஞ்ச மாதிரி நடிக்கிற.

உன் நடிப்பைப் பார்த்து இவங்க வேணும்னா ஏமாறலாம். ஆனா நான் ஏமாறமாட்டேன். உன் சாகசத்தைத்தான் உம்மகளும் பண்றா. இவ வந்த அன்னிக்கே அது எனக்குத் தெரிஞ்சு போச்சுடி."

"அத்தே...!" – ஆத்திரமாய் அழைத்தாள் மான்விழி. கண்களில் நெருப்பு பறந்தது. வேகமாய் வசுந்தரா தேவியை நெருங்கினாள்.

"உங்க மனசுல என்ன நினைச்சிட்டு இப்படிப் பேசுறீங்க. மாமாவுக்கு மரியாதை கொடுத்துப் பேசாம நின்னா உங்க இஷ்டத்துக்குப் பேசுவீங்களா?"

"என்னடி? என்ன பேசுவ?"

"உங்க அண்ணன் நல்லவரா கெட்டவரான்னு தெரிஞ்சுக்க வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை. எங்க அம்மா உத்தமி. அது எனக்கும் எங்க அப்பாவுக்கும் தெரியும். நீங்கள் ஒன்றும் அதற்கு சர்டிபிகேட் தர வேண்டாம்..."



"மானு! பெரியவங்களை இப்படியெல்லாம் எதிர்த்துப் பேசக்கூடாதும்மா..." என்ற தாயை அடக்கினாள்.

"சும்மா இரும்மா. இவங்க பெரியவங்க மாதிரியா பேசுறாங்க?"

"பாருடா! நல்லாப் பாரு. ஊமைக் கோட்டான் மாதிரி இருந்திட்டு என்னமாய் பேசுறா பார்த்தியா? இவளா வேணும் உனக்கு?" என மகனைப் பார்த்துக் கேட்டாள்.

"அவ பேசுறதில என்னம்மா தப்பு இருக்கு? பெத்த தாயை இப்படிக் கேவலமாப் பேசினா... யாரு கேட்டிட்டு சும்மா இருப்பா? நல்லவேளை! இங்கே அமுதன் இல்லை. இருந்திருந்தா சும்மா விடுவானா?"

"நீ என் பிள்ளை இல்லையா?"

"உங்க பிள்ளைதாம்மா. அதனாலதான் இவங்க வந்த அன்னிக்கு நீங்க பேசினதை நான் நியாயப்படுத்தினேன். ஆனா இன்னிக்கு நீங்க பேசினது நியாயமா அம்மா?"

வசுந்தரா தேவியின் கண்கள் குளமாகியது. "எம் புள்ளைய இப்படி மாத்திட்டாளே... நேத்து வந்த ஒருத்திக்காக என்னையே நிக்க வச்சுக் கேள்வி கேட்கிறானே..."

"ஏம்மா! நான் கேட்ட ஒரு கேள்விக்கு உங்க கண் கலங்குதே. இவ்வளவு நேரம் அத்தையையும் மானுவையும் என்னவெல்லாம் பேசுனீங்க. அது தப்பில்லையா?"

"தப்பு... சரின்னு நீ பேச வேண்டாம். எல்லாம் எனக்குத் தெரியும். இவளுக ரெண்டு பேரும் இப்பவே இந்த நிமிஷமே வெளியே போகணும். அப்படிப் போகலன்னா இந்த நிமிஷமே என் உயிர் போயிடும்..." – வசுந்தரா தேவி தீர்க்கமாய் சொல்ல, அனைவரும் மிரண்டு போயினர்.

பார்வதி பதறிப் போனாள். "மதினி! என்ன வார்த்தை சொல்லிட்டீக."

"ஏய் ! நீ பேசாதே. இது எனக்கும் என் குடும்பத் தாருக்கும் நடக்கும் போராட்டம். நீ வேணுமா... நான் வேணுமான்னு அவங்க முடிவு பண்ணட்டும்..."

"அம்மா! என்னம்மா இது? அவங்க யாரு? நம்ம அத்தைம்மா..."

"எனக்கு யாரோட உபசரணையும் தேவையில்லை. நான் இருக்கணுமா? இல்ல அவ இருக்கணுமா? ஒரே வார்த்தையில பதில் சொல்லிடுங்க..."

"வசு! இதென்ன வறட்டுப் பிடிவாதம்? அவ இருக்கிறதால உனக்கு என்ன பிரச்சனை?"

"அவளுக்கு குணமாகணும்தானே கூட்டிட்டு வந்தீங்க. குணமாயிடுச்சில்ல. கிளம்பட்டும். போகச் சொல்லுங்க..."

"என்ன வசு இது. கொஞ்சநாள் இருந்துட்டுப் போகட்டுமே. அதோட நம்ம..."

"நீங்க எதை மனசுல வெச்சிட்டு சொல்றீங்களோ அது நடக்கக்கூடாதுன்னு தான் நான் அவசரப்படுறேன். இப்பவே அவங்க போயாகணும்..." – உறுதியாய் நின்றவளிடம் பேச மற்றவர்கள் தயங்க, ராஜேந்திரன் தாயை நெருங்கினான்.

"ஏம்மா! உங்க புள்ளையோட மனசைக் கொல் லணும்னே முடிவு பண்ணிட்டீங்களா?"

"உளர்றாதேடா. இவ என்ன பேரழகியா? உனக்கு நான் பார்க்கிறேன்டா நூறு பொண்ணு..."

"நீங்க ஆயிரம் பொண்ணைப் பார்த்தாலும் அது என் மானு மாதிரி எப்பவுமே ஆகாதும்மா..."



"ராஜா! இந்த வயசுல பார்க்கிறது எல்லாமே அழகாத்தான் தோணும். ஆனா குடும்பம் நடத்த அழகு மட்டும் போதாதுடா.

நல்ல நடத்தை ஒழுக்கம்... குடும்பப் பின்னணி எல்லாம் வேணும். இவகிட்டயோ இவ ஆத்தா கிட்டயோ அது கிடையாதுடா. நமக்கு இவ வேணாம்யா..."

மான்விழி தன் முகத்தை அழுத்தமாய் துடைத்துக் கொண்டாள்.

"அம்மா! வம்மா போகலாம்."

"எங்கம்மா?"

"நம்ம வீட்டுக்கு... நமக்கென்ன வீடு வாசலா இல்ல. இப்படிக் கண்டவங்க கிட்டயும் பேச்சு வாங்கிட்டு இங்க இருக்கணும்னு நமக்கு அவசியமில்லம்மா. வா போகலாம்"

சுவரோரமாய் இருந்த பெட்டியை எடுத்து கொடியில் கிடந்த துணிகளை எடுத்து அடுக்க ஆரம்பித்தாள்.

"மானு! ப்ளீஸ் அவசரப்படாதே. அம்மாகிட்ட நான் பேசறேன்" – ராஜேந்திரன் பதட்டமாய் நெருங்க, சீறினாள் மான்விழி.

"மிஸ்டர் ராஜேந்திரன்! எங்களை என்ன நினைச்சிட்டு இருக்கீங்க. மானம் மரியாதை ரோஷம் எதுவுமே இல்லாத ஜென்மம்னு நினைச்சீங்களா?"

"ஐயோ அப்படியில்லை மானு. நான்..."

"லுக்! நானா ஒண்ணும் உங்க பின்னாடி அலைஞ்[illegible] உங்களை மயக்கல. அந்த அவசியமும் எனக்கு இல்ல."

"மானு ப்ளீஸ்!"

"எனக்கு எப்படிப்பட்ட வாழ்க்கை அமைச்சுத் தரணும்னு எங்க அண்ணனுக்குத் தெரியும். உங்க யார் கிட்டயும் வந்து நாங்க எங்களுக்கு வாழ்க்கை கொடுங்கன்னு பிச்சை எடுக்கல..."

"அண்ணி! ஏன் இப்படிப் பெரிய வார்த்தையெல்லாம் பேசுறீங்க? அண்ணன் உங்கமேல எவ்வளவு ப்ரியம் வெச்சிருக்குன்னு உங்களுக்குத் தெரியாதா?"

"நாலு நாளா வெச்ச பிரியம்தானே கஜா... கொஞ்சநாள்ல மாறிப் போயிடும். அதான் நூறு பொண்ணு பார்க்கப் போறாங்களே. அதில ஏதாவது ஒண்ணைப் பார்த்ததும் இந்த மானுவோட நினைப்பு மறைஞ்சிடும்..."

"உனக்கு இந்த அத்தானோட நினைப்பு மறைஞ்சிடுமா?" நேராய் பார்த்துக் கேட்டவனைப் பாராமல் தன் வேலையைத் தொடர்ந்தாள்.

"உன்னைத்தான் கேட்கிறேன். உன்னால் முடியுமா?" என்றவாறே அவளது தோளைப் பற்றித் திருப்பினான்.

தீர்க்கமாய் அவனைப் பார்த்தாள் மான்விழி. "முடியும்."

"என்ன?" – திகைப்பாய் தனது கரங்களை விலக்கி னான்.

"என்னால முடியும். என்னைப் பெத்தவமேல சாணி வாரியடிச்சிட்டுத்தான் உங்ககூட நான் வாழணும்னா அப்படி ஒரு வாழ்க்கை எனக்குத் தேவையில்ல..."

"அண்ணி"

"கஜா! நீங்கள்லாம் யாரு எனக்கு? இந்த நாலு நாளாத் தானே தெரியும். ஆனா என் அம்மா? இருபத்தி



மூனு வருஷமா என்னைப் பார்த்துப் பார்த்து வளர்த்த என் அம்மாவை... நான் எப்படி விட்டுக் கொடுக்க முடியும்?"

"அது சரிதான் அண்ணி! அதுக்காக என் அண்ணனை எப்படித் தூக்கி எறிய முடிந்தது உங்களால்?"

"உங்க அண்ணனை நான் தூக்கியெறியல கஜா. அவரைப் பெத்தவங்க அவரை எடுத்துக்கிட்டாங்க. நான் நேத்து வந்தவதானே. நான் எப்படி அவரை உரிமை கொண்டாட முடியும்?"

"அண்ணி! நாங்க பேசுறோம் அம்மாகிட்ட..."

"வேண்டாம் கஜா! இதுவரை எல்லாரும் பேசியதே போதும். மேலும் மேலும் சுடும் மொழிகளை எங்களால் கேட்க முடியாது..."

"அண்ணி ப்ளீஸ். அவசரப்படாதீங்க..." – என வந்தாள் உமா.

"இல்ல உமா. வந்த அன்னிக்கே உங்க அம்மா பேசினதைக் கேட்டு நான் கிளம்பினேன். அப்பவே உங்க அண்ணன்தான் விடல்ல. அம்மாவைப் பத்தி ரொம்ப உயர்வாச் சொன்னாரு. நானும் நம்பிட்டேன்.

ஆனா இப்போ அந்த நம்பிக்கை இல்லை. உண்மையிலே அவங்களுக்கு நல்ல மனசு இருந்திருந்தா என் அம்மா சொன்னதுல கொஞ்சமாவது உண்மை இருக்குமோன்னு யோசிச்சிருக்கணும். அவங்க யோசிக்கல.

அதைக் கூட யோசிக்க முடியாத அளவுக்கு எங்க அம்மா மேல அவங்களுக்கு அவ்வளவு வெறுப்பு மண்டிக் கிடக்கு. அது மாறும்னு எனக்குத் தோணல. அதை நான்

எதிர்பார்க்கவும் இல்ல. தயவு செய்து யாரும் எங்களைத் தடுக்க வேண்டாம்."

"அண்ணி ப்ளீஸ்!"

"மன்னிச்சிடு உமா. நாங்களும் எவ்வளவுதான் அவமானப்படுறது. எங்களுக்கும் மானம், தன்மானம் எல்லாம் இருக்கு.

அதை விட்டுட்டு ஒரு பொணமா இங்கே இருக்கச் சொல்றியா?" மான்விழி கலங்கிய குரலில் கேட்க, உமா பேச்சற்றுப் போனாள்.

அனைத்து உடைகளையும் அடுக்கிவிட்டுப் பெட்டியை மூடினாள்.

பேகை தோளில் மாட்டிக்கொண்டு, பெட்டியை வலக்கையில் எடுத்துக்கொண்டு இடக்கையில் தாயைப் பற்றிக் கொண்டாள்.

"அண்ணா! உண்மையாவே அண்ணி கிளம்பிட்டாங்க. என்ன நீ சும்மா நிற்கிறாய்... அண்ணா!" – ராஜேந்திரனை அசைத்தான் கஜேந்திரன்.

"போகட்டும்..." என்றான் இறுகிய குரலில்.

ஒரு கணம் நின்றவள்...

பற்களைக் கடித்து தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு, தாயை அழைத்துக் கொண்டு புறப்பட...

கைகளைக் கட்டிக்கொண்டு அமைதியாய் பார்த்துக் கொண்டிருந்தார் கணேசன்.



## 20

உயிரிலே என் உயிரிலே உறைந்தவள்
நீயடி ஏனடி என்னைக் கொல்கிறாய்
கொடுத்ததாய் சொன்ன இதயத்தை
திருப்பி நான் வாங்கமாட்டேன்!

"அப்பா! என்னப்பா எதுவுமே பேசாம நிற்கிறீங்க? அப்பா..." என தந்தையிடம் சென்றான் கஜேந்திரன்.

"நான் என்னப்பா பேசுறது? என் பேச்சை யார் கேட்பாங்க?" என கலங்கிய குரலில் கணேசன் சொல்ல, நடந்து கொண்டிருந்த பார்வதியின் பாதம் நின்றது.

"என்னம்மா! வா போகலாம்..."

"மானு! நான் என் அண்ணன்கிட்டே சொல்லிட்டு வர்றேம்மா..." மகளிடம் பரிதாபமாய்க் கேட்க... மான்விழியின் கைகள் தளர்ந்தன. மனம் தடுமாறியது.

'மாமாவை எப்படி மறந்து போனேன்?' புத்தியில் உறைக்க குற்ற உணர்வோடு நின்றாள். அதற்குள் அண்ணனை நெருங்கியிருந்தாள் பார்வதி.

"அண்ணே! என்னை மன்னிச்சிடு அண்ணே!"

"நீ எதுக்கும்மா எங்கிட்ட மன்னிப்பு கேட்கிற? நான்தான் உன்கிட்டே உன் காலைப் பிடிச்சு மன்னிப்பு கேட்கணும்..."

"ஐயோ!" பதறிப் போனாள்.

"ஆமா கண்ணு. உன்னைப் பார்த்த சந்தோஷத்தில நாங்க அப்படியே வந்திருக்கலாம். உன்னை எங்கவ... அழைச்சிட்டு வந்தது எவ்ளோ பெரிய தப்பு..."

"அண்ணே!"

"என்னை மன்னிச்சிடும்மா. என் மனைவி மேல நான் வெச்சிருந்த அளவுக்கதிகமான அன்பில, நம்பிக்கையில தான் உன்னைக் கூட்டிட்டு வந்தேன். ஆனா... அது உன்னை இப்படிக் காயப்படுத்தும்னு நினைக்கலம்மா..." கண்கள் பனிக்க, குரல் உடைய கணவர் பேச, வசுந்தரா தேவியின் முகம் இருண்டது.

"மதினி மேல எந்தத் தப்பும் இல்லண்ணே..."

"இல்லம்மா. அவ மேல எந்தத் தப்பும் இல்ல. தப்பெல்லாம் எம்மேலதான். அவளுக்கு அவ அண்ணன் உசத்தி. எனக்கு நீ உசத்தி. இதுல அவளைத் தப்பு சொல்ல முடியாது. ஆனா இத்தனை வருஷமா அவகூட குடும்பம் நடத்தியும் நான் அவளைப் பத்திப் புரிஞ்சுக்கலையே...!"

கணவனின் வேதனை நெஞ்சை அறுத்தது.

வசுந்தராவின் கண்களில் நீர் சுரந்தது. தயக்கமாய் தவிப்பாய் கணவனை ஏறிட்டாள்.

"அண்ணே! மனசு கலங்காதே அண்ணே...!"

"இல்லம்மா. உன்னை எப்போ தொலைச்சோமோ அப்பவே எங்க நிம்மதி, சந்தோஷம் எல்லாமே தொலைஞ்சுப் போச்சு. உன்னைப் பார்த்ததும் அதெல்லாம் திரும்பக் கிடைச்சிடும்னு தான் உன்னைக் கூட்டிட்டு வந்தோம்.

ஆனா என் உடன்பிறந்தவளை... அவ பெத்த கண்மணியை எவ்வளவு அசிங்கமாப் பேசமுடியுமோ அப்படியெல்லாம் பேசிட்டாளே என் மனைவி. இதுக் கெல்லாம் காரணம் யாரு? நான்தானே... இந்தப் பாவி தானே..."



"அண்ணே! இப்படியெல்லாம் பேசாதே. எனக்கு எந்த வருத்தமும் இல்ல. நான் உன் அமைதிக்காகவும் நிம்மதிக்காகவும் தான் போறேன் அண்ணே..."

"என்னம்மா சொல்றே?"

"ஆமாண்ணே! நான் இறந்துபோனவ. அப்படியே இருந்திடுறேன். எனக்காக உன் குடும்பத்துக்குள்ள எந்தப் பிரச்சனையும் வரவேண்டாம். நீ மதினியோட எந்த மனக்கசப்பும் இல்லாம சந்தோஷமா வாழணும்ணே..."

"ஆமா மாமா! அதுக்காகத் தான் நான் அம்மாவைக் கூட்டிட்டுப் போறேன். உங்களுக்கு எப்போ அம்மாவைப் பார்க்கணும்னு தோணுதோ அப்பல்லாம் தாராளமா வரலாம்.

நாங்க சந்தோஷமா உங்களை எதிர்பார்ப்போம் மாமா. இந்த அண்ணன் தங்கை உறவு மட்டும் போதும் மாமா. வேறு எதுவும் வேண்டாம்!" என்றாள் மறைமுகமாய்.

"அம்மாடி! என் தங்கைமேல நீ வெச்சிருக்கிற அன்பைப் பார்க்கும் போது எங்களுக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கும்மா. பெத்தவளுக்காக மத்ததைத் தூக்கிப் போட்டுட்டுப் போறியே... அதை நினைச்சா பெருமையாவும் இருக்கு.

ஆனா எங்ககிட்ட கூட சொல்லாமப் போக எப்படியம்மா உனக்கு மனசு வந்தது? இந்த மாமனுங்க கூட உனக்கு வேண்டாதவங்களா ஆகிட்டோமா கண்ணு?"

"அப்படி இல்ல மாமா. நாங்க வந்ததுல இருந்து உங்களுக்குத்தான் ரொம்பப் பிரச்சனை மாமா. எங்களால இனியும் உங்களுக்கு எந்தக் கஷ்டமும் வரக்கூடாதுன்னு தான் கிளம்புறோம்.

இதுல எங்களுக்கு எந்த வருத்தமும் இல்லை. உண்மையைச் சொல்லணும்னா நாங்க ரொம்ப சந்தோஷமாத்தான் இங்கிருந்து போறோம்."

"என்னம்மா சொல்றே?"

"ஆமா மாமா. இங்கே வந்ததால தான் அம்மாவுக்குக் குணமானது. இல்லன்னா... கடைசிவரை நாங்க அம்மாவை நினைச்சுக் கஷ்டப்பட்டுட்டுத்தான் இருந்திருப்போம்.

உங்களால தான் மாமா எங்க அம்மா எங்களுக்குத் திரும்பக் கிடைச்சாங்க. உங்க புள்ளைதான் எங்க அம்மாவோட உசுரையும் மனநிலையையும் மீட்டுக் கொடுத்தார். இந்த நன்றியை என் உடம்புல கடைசி சொட்டு ரத்தம் நிற்கிறவரை மறக்கமாட்டேன். "

"பிறகு ஏம்மா எம்புள்ளய விட்டுட்டுப் போக முடிவெடுத்தே?"

"கடைசிவரைக்கும் சேரவே முடியாதுன்னு தெரிஞ்ச பிறகு நாசூக்கா விலகிடணும் மாமா. இல்லன்னா அது மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்திடும்."

"ஏம்மா சேர முடியாது?"

"அது உங்களுக்கே தெரியும் மாமா."

"அதை நான் மாத்துறேம்மா..."

"வேண்டாம் மாமா. அது நடக்காத காரியம்."

"ஏம்மா நடக்காது?"

"எங்க அம்மாமேல எந்தத் தப்பும் இல்லன்னு எங்களால நிரூபிக்க முடியாது. அப்படி நிரூபிக்காம



அத்தையோட கோபமோ வெறுப்போ மாறாது. அப்படி மறையாம நீங்க நினைப்பது எதுவுமே நடக்காது."

"ஒருவேளை இதெல்லாம் நடந்துட்டா?"

"நடக்காது மாமா. அதுக்கான சான்ஸே இல்லியே...!"

"நடந்துட்டா... நீ எம்புள்ளையை கட்டிக்குவியாம்மா? " - கணேசன் உறுதியாய்க் கேட்க, தவிப்பாய் ஒருமுறை ராஜேந்திரனைப் பார்த்தாள்.

முகத்தில் எந்த உணர்வையும் காட்டாமல் இறுகிப் போய் நின்றவனைக் கண்டதும் துடித்த மனதை அடக்கிக் கொண்டு பார்வையைத் திருப்பினாள்.

"நடக்கும்போது பார்க்கலாம் மாமா" என்றாள் பெருமூச்சுடன்.

மகளின் முகமே அவளது மனக்காயத்தை வெளிப் படுத்த... பார்வதியின் மனம் வேதனையாய் சுருங்கியது.

"நாங்க கிளம்புறோம் மாமா."

"பொறும்மா. இப்படித் தனியே கிளம்பினால் எப்படி? இன்று ஒருநாள் மட்டும் இரும்மா. நாளைக் காலையே நாங்கள் அழைத்துப் போகிறோம்"

"வேண்டாம் மாமா. எங்களால் உங்களுக்குச் சிரமம் வேண்டாம். நாங்கள் போய்க் கொள்கிறோம்."

"பிடிவாதம் பிடிக்காதே கண்ணு. உங்க அண்ணன் எங்களைப் பற்றி என்ன நினைப்பான்?"

"அண்ணனிடம் நான் பேசிக் கொள்கிறேன் மாமா. அண்ணன் தவறாக எடுத்துக் கொள்ள மாட்டான்."

"கஜா! நீ நம்ம கார்லயே போய் விட்டுட்டு வந்திடு. அத்தை சிரமப்பட வேண்டாம்" என்ற ராஜேந்திரனை மதிப்பாய் பார்த்தார் கணேசன்.

"சரிண்ணா" என்றவாறே அவன் நகர்ந்து வந்து மான்விழியிடம் இருந்து பெட்டியை வாங்கிக் கொள்ள, பார்வதி ராஜேந்திரனை நெருங்கினாள்.

அவனது முகத்தை வருடினாள். கண்கள் கலங்கின.

"அத்தே! ஏன் கண் கலங்குறீங்க?"

"நீதான் என்னைக் காப்பாத்தினியாப்பா? எவ்ளோ காயம்பட்டிருக்கு" - எனப் பரிவாய் அவனது காயத்தை வருடினாள்.

"இந்தக் காயம் ஆறிடும் அத்தே..." என்றான் மான்விழியை பார்த்துக் கொண்டே.

"உன் நல்ல மனசுக்கு ஒரு குறையும் வராதுப்பா. நல்லா வாழ்வ..."

"உங்க ஆசீர்வாதம் பலிக்கட்டும் அத்தே..."

"நாங்கதான் வரமுடியாது. நீங்க என்னைப் பார்க்க வாங்கப்பா. என் பிறந்த வீட்டுச் சொந்தம்னு இருக்கிறது நீங்கதானே."

"அப்பா... சித்தப்பா எல்லாரும் வருவாங்க அத்தை..."

"நீ வரமாட்டியா?" என்ற கேள்விக்கு பதில் சொல்லாமல் மௌனமாய் நின்றவனை மனம் வலிக்கப் பார்த்தாள் மான்விழி.

நின்று போயிருந்த கண்ணீர் மீண்டும் வந்துவிடுமோ என்ற அச்சம் எழ, அன்னையைப் பார்த்தாள்.



"அம்மா! போலாம்."

"இரும்மா. எல்லார்கிட்டயும் சொல்லிட்டு வந்திடுறேன்" என்றவள் சீதாலஷ்மியிடம் வந்தாள்.

"மதினி! போயிட்டு வர்றேன்..."

"சரி அண்ணி!" என்றவள் அதற்கு மேல் என்ன பேசுவது எனப் புரியாமல் தயங்கிப் புன்னகைத்தாள். பார்வதி தனித்தனியாய் அனைவரிடமும் சொல்லிவிட்டு கடைசியாய் தயங்கி நின்றாள்.

தூணருகே ஒதுங்கி நின்ற வசுந்தரா தேவியை சற்று பயமாய் பார்த்தாள். இவளிடம் சொல்லலாமா? என்ன இருந்தாலும் தன் அண்ணன் மனைவி ஆயிற்றே. மனதில் லேசாய் துணிவைத் திரட்டிக்கொண்டு அவளருகே சென்றாள்.

"மதினி" - என்றதும் லேசாய் நிமிர்ந்தாள். கண்கள் கலங்கியிருந்தது.

"மதினி! உங்க மனசை ரொம்பக் கஷ்டப்படுத்திட்டேன். மன்னிச்சிடுங்க மதினி" பார்வதி சொன்னதும் வசுந்தரா தேவியின் முகம் மருண்டது. இவள் என்னிடம் மன்னிப்புக் கேட்கிறாளே! நான்தான் கடுமையாகப் பேசினேன்.

என் கோபத்தை எல்லாம் கொட்டித் தீர்த்தேன். இவள் ஏன் என்னிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும். நானல்லவா கேட்கவேண்டும். உடலும் உள்ளமும் கூசி விட மௌனமாய் நின்றிருந்தாள்.

"நான் போயிட்டு வர்றேன் மதினி."

"ம்..."

"மதினி! இப்பவும் சொல்றேன். நான் எந்தத் தப்பும் செய்யல மதினி. என்னை நம்புங்க மதினி" பரிதாபமாய் சொன்னவளைப் பார்க்கையில் வசுந்தரா தேவிக்குள் எதுவோ பிசைந்தாற் போலிருந்தது.

ஒருவேளை இவள் சொன்னது உண்மையாய் இருக்குமோ. தன் அண்ணன் அத்தனை மோசமானவனா? இல்லை. இல்லவே இல்லை. ஒவ்வொரு முறை தாய்வீடு செல்லும் போதெல்லாம் எத்தனை ஆர்வமாய் விசாரிப்பான்?

பார்வதியைப் பத்தி எதுவும் தகவல் கிடைச்சதா? தபால் எதுவும் போட்டாளா என எத்தனை நாள் கேட்டிருக்கிறான். இன்னொரு பெண்ணைக் கட்டிய பிறகும் இப்படி அவளைப் பற்றி கேட்பதை நிறுத்து என நான் கூடத் திட்டியிருக்கிறேனே...

இவள் சொல்வதுபோல் இவளை மிரட்டி அனுப்பியவன் எதற்காக அத்தனை ஆர்வமாய் விசாரித்தான்? ஆவலாய் தேடி அலைந்தான். என் அண்ணன் நல்லவன். குற்ற மற்றவன்... என உறுதியாய் நம்பினாள்.

எதுவும் பேச இயலாமல் மௌனமாய் நின்றவளின் முகத்தையே ஏக்கமாய் பார்த்துக் கொண்டிருந்த அன்னையைப் பொறுமையின்றி அழைத்தாள் மகள்.

"அம்மா! போலாம். நேரமாகுது"

"ம். போலாம்" அரைமனதாய் அனைவரையும் பார்த்துக் கொண்டே, மகளுடன் சேர்ந்து வெளியே வர, நரேந்திரன் வண்டியை நிறுத்திவிட்டு இறங்கினான். உற்சாகமாய் உள்ளே நுழைந்தவன் அனைவரையும் பார்த்து வியந்தான்.



"என்ன எல்லாரும் மொத்தமாக் கூடி நிற்கிறீங்க? அமுதன் தான் வர்ற விஷயத்தை போன் பண்ணிச் சொல்லிட்டாரா?"

அண்ணனின் பேரைக்கேட்டதும் நின்றாள் மான்விழி. "என்ன? அண்ணன் வர்றாரா எப்போ?"

"வர்றார் இல்ல. வந்திட்டார். மிஸ்டர் அமுதன். ப்ளீஸ் கம்" என குரல் கொடுக்க, கையில் நான்கைந்து பார்சலோடு வந்து நின்றான் அமுதன்.

"அண்ணா! நீ.... நீ எப்படி இங்கே?... " வியப்பாய் கேட்ட தங்கையைப் பார்த்து புன்னகைத்தான் அமுதன்.

"மதுரை வரைக்கும் ஒரு வேலையா வந்தேன். இவ்வளவு தூரம் வந்துட்டு உன்னையும் அம்மாவையும் பார்க்காமப் போக மனசு வரல்ல. அதான் வந்திட்டேன்."

"தென்காசியில நின்னு அட்ரஸ் கேட்டுட்டு இருந்தாருப்பா. நான்தான் கூட்டிட்டு வந்தேன்."

கணேசன் முன்னே வந்தார். "வாப்பா. வா. இப்பத் தான் உன்னை நினைச்சோம். உடனே வந்து நிற்கிறியே. வாப்பா. சீதா! புள்ளைக்கு சாப்பிட ஏதாவது கொண்டு வாம்மா..."

"வேண்டாம் மாமா" மான்விழி கூறியதும் புருவத்தை நெறித்தான் அமுதன். தங்கையின் முகத்தைக் கூர்ந்து கவனித்தான். அழுது சிவந்த முகம் எதையோ உணர்த்த, கையிலிருந்த பார்சல்களை மாமாவிடம் கொடுத்துவிட்டு தங்கையை நெருங்கினான்.

"மானு! என்னம்மா. முகமெல்லாம் ஒரு மாதிரி இருக்கு?"

"அண்ணே! நம்ம வீட்டுக்கு போயிடலாம். வாண்ணா"

"என்னம்மா! அம்மாவுக்கு குணமாக வேண்டாமா? அதுக்குத்தானே உங்களை இவ்வளவு தூரம் அனுப்பினேன்..."

"தம்பி! எனக்கு நல்லா ஆயிடுச்சுப்பா. என் கண்ணா. எவ்வளவு நாளாச்சு எம்புள்ளையைப் பார்த்து..." மகனைக் கட்டிக்கொண்டாள் பார்வதி.

"அம்மா! அம்மா... என்னைத் தெரியுதாம்மா?"

"எல்லாமே தெளிஞ்சிடுச்சுப்பா. உன் அப்பா என்னை விட்டுட்டுப் போகல்லப்பா. இதோ உன் உருவத்துல என் கூடவே தான் இருக்கார்..." கண்ணீர் சிந்திய தாயை அணைத்துக் கொண்டான்.

பேச்சு வராமல் திணறியபடி கண்களில் லேசான ஈரத்தோடு மாமாவைப் பார்த்துக் கை கூப்பினான். "தேங்க்யூ மாமா. என் அம்மாவைக் காப்பாத்திக் கொடுத்திட்டீங்க. ரொம்ப தேங்க்ஸ் மாமா"

கணேசனும் நெகிழ்ந்து அவனைத் தோளில் சாய்த்துக் கொண்டார். மற்றவர்கள் எதுவுமே பேசாமல் நின்ற நிலை உறுத்தியது. மான்விழி மீண்டும் அழைத்தாள்.

"அண்ணே! நாங்க வீட்டுக்குத்தான் கிளம்பிட்டு இருந்தோம். நல்ல வேளை நீயே வந்திட்ட... வாண்ணா போலாம்."

"என்னம்மா அவசரம்? போன முறை வந்தப்போ யாரையும் பார்க்கலையே. எல்லாரையும் பார்த்திட்டுப் போலாம்னு வந்தேன்..."



மான்விழி பதறினாள்.

அண்ணன் முன்னிலையில் அத்தை ஏதேனும் ஒரு வார்த்தை சொல்லிவிட்டால்? அவளது தவிப்பை உணர்ந்தவனின் புன்னகை மறைந்தது.

"மானு! என்னம்மா! எதுவும் பிரச்சனையா?"

"இல்லண்ணா. அப்படியெல்லாம் ஒண்ணுமில்லையே!"

"பிறகேன் உம்முகம் இப்படி இருக்கு? ஏன் பேச்சுகூட சரியில்ல. என்னம்மா என்ன பிரச்சனை?"

"ஒரு பிரச்சனையும் இல்லப்பா. அத்தைக்கு குணமானது தெரிஞ்சதுமே உன் தங்கைக்கு உன் நினைவு வந்திடுச்சி. உடனே அண்ணன் கிட்டே அம்மாவைக் கூட்டிட்டு போகணும்னு ஒரே அடம். நாளைக்கு போகலாம்னு சொன்னோம். உடனே கண்ல தண்ணி வந்திடுச்சு.

ஆனா ஒண்ணு அமுதன்... உன் தங்கைக்கு ரொம்ப சாமார்த்தியம் தான். அழுதே சாதிச்சிடுறாளே.

இதோ இப்பத்தான் கஜாவை அழைச்சிட்டு போகச் சொன்னேன். அதுக்கப்புறம்தான் அழுறதை நிறுத்தியிருக்கா..." வெகு இயல்பாய் ராஜேந்திரன் சொல்ல, அமுதன் புன்னகைத்தான்.

"என்னம்மா நீ? இப்படியா அடம்பிடிப்பே? எனக்கு ஒரு போன் பண்ணியிருந்தா நானே வந்திருப்பேனில்ல?"

"இல்லண்ணா. அம்மா குணமானதை உங்கிட்ட நேரில சொல்லணும்னு ஆசைப்பட்டேன், அதான்..."

"அதுக்காக இப்படி அழலாமா குழந்தை மாதிரி..."

"இன்னும் குழந்தை தான். அதில எந்த சந்தேகம் இல்லை."

"சரிண்ணா.. வா... போலாம்"

"என்னம்மா நீ! இப்படி அவசரப்படுறே?"

"எனக்கு... எனக்கு வீட்டுக்குப் போகணும் போல இருக்குண்ணா."

"கொஞ்சம் இரும்மா. நான் மாமாகிட்ட நிறையப் பேசணும். அம்மாவை எங்கெல்லாம் அழைச்சிட்டுப் போனாங்க. எப்படி குணமாச்சு. குணமானதும் என்னல்லாம் பேசினாங்க எல்லாம் கேட்டுத் தெரிஞ்சுக்க வேண்டாமா?"

"அதையெல்லாம் நானே வீட்ல போய் சொல்றேன் வா."

"மாமா! இவளுக்கு என்ன ஆச்சு? மாமா வீட்டுக்கு போகணும்னு சொன்னதும் சந்தோஷம் தாங்காம அடிக்கடி குதித்தாளே. இப்ப ஏன் இப்படி வீட்டுக்குப் போகணும்னு அவசரப்படுறா?"

"இதுல என்ன டவுட் அமுதன். வந்த வேலை முடிஞ்சதுல்ல. இனிமே நாங்க தேவையில்லையே. அதான் கிளம்புறதுக்கு அவ்வளவு அவசரம்" என்றான் ராஜேந்திரன் ஒரு மாதிரியான குரலில்.

"நோ... நோ... என் தங்கை அப்படிப்பட்டவ இல்ல. எப்பவுமே சொந்தம் பந்தம் கூடி வாழணும்னு ஆசைப் படுறவ. அதுக்காகத்தான் இங்கே வர அவ்வளவு ஆசைப் பட்டா. வந்து முழுசா ஒரு வாரம் கூட ஆகல்லயே.

ஏம்மா! அதுக்குள்ள உனக்கு சொந்தபந்தம் அலுத்துப் போச்சா?"



அமுதன் வேடிக்கையாய் கேட்க, முகம் கடுத்தாள் மான்விழி.

"சொந்தம் பந்தம்ன்றது எல்லாம் சினிமாவில பார்க்கவும் கதைகள்ல படிக்கவும் தான் நல்லா இருக்கு அண்ணா. நிஜத்தில அது ஒரு கானல் நீர் மாதிரி."

"மானு! என்னம்மா சொல்ற?"

"ஆமாண்ணா. எதையுமே தூரத்துல இருந்து பார்க்கும் போது அழகாத்தான் இருக்கு. ஆனா பக்கத்துல போய் பார்த்தா மாயை மாதிரித் தோணுது..."

"என்ன மானு? தத்துவஞானி மாதிரிப் பேசுற. பட்! எனக்கு எதுவுமே புரியல்ல..."

"ஒரு சில விஷயங்கள் புரியாம இருக்கிறதுதான் நல்லதுண்ணா."

"இதுக்கும் புதிரான பதில்தானா?"

"அண்ணா! நம்ம வீடு அம்மா நீ, நான் இந்த சின்ன குருவிக்கூடு போதும் அண்ணா. அதுல உள்ள சந்தோஷம் வேற எதிலயும் இல்லன்னா. வாண்ணா போலாம்" சொல்லும் போதே கண்கள் கசிந்தன.

மனம் பதறினான் அமுதன். சுற்றியிருந்தவர்களை ஒருமுறை பார்த்தான். அனைவரின் முகங்களிலும் ஏதோ ஒரு தடுமாற்றம். இறுக்கம். ஏதோ உணர்ந்து தங்கையிடம் திரும்பினான்.

"சரிம்மா. போகலாம் வா.. அம்மா வாங்க..."

கணேசன் தொண்டையைச் செருமினார். "தம்பி! அது வந்து...."

"பரவாயில்ல மாமா. எதுவா இருந்தாலும் சரி. என் தங்கைக்கு விருப்பம் இல்லாத இடத்தில் எனக்கென்ன வேலை . நாங்க கிளம்புறோம். மறுபடியும் ரொம்ப நன்றி மாமா."

"அண்ணே! போயிட்டு வர்றேண்ணே" பார்வதி சொல்ல, மௌனமாய் தலையாட்டினார் கணேசன்.

"மாமா! இங்கே பஸ் – ஸ்டாண்ட் எங்கே இருக்குன்னு சொன்னாப் போதும். நாங்க பஸ்ல போயிடுறோம்" அமுதன் கேட்டுக் கொண்டிருந்த போது, சற்று வயதான பெண்மணி வாசலில் வந்து நின்றாள்.

"உள்ளே வரலாமா?" என்றவளைப் பார்த்ததும் வசுந்தராதேவியின் முகம் மலர்ந்தது.

## 21

இரவென்றால் மறுநாளே விடியும்
உன் தோட்டத்தில் அப்போது
பூக்கள் மலரும் நீதிமட்டும் உறங்காது
நெஞ்சே நெஞ்சே நீ தூங்கு!

**"அ**டடே! வாங்க மதினி. என்ன இவ்வளவு தூரம் ?" வாயெல்லாம் பல்லாக தேவி வாசல்வரை சென்ற வரவேற்க, அந்த அம்மாள், புன்னகையோடு உள்ளே நுழைந்தாள்.

"என்ன மதினி. புள்ளத்தாச்சி பெண்ணை வீட்ல விட்டுட்டு இவ்வளவு தூரம் வந்திருக்கீக. எதுவும் அவசர காரியமா? முதல்ல உட்காருங்க" தடபுடலாய் வசுந்தரா தேவி உபசரிக்க, மற்றவர்களும் கூடி நலம் விசாரிக்க, அமுதன் தன் தங்கையை ஏறிட்டான்.



"போலாமா?" என்பதாய் தலையசைத்துக் கேட்க, அவளும் சரியென அண்ணனுடன் புறப்பட்டாள். கூடவே வந்த பார்வதியின் கைகளைப் பற்றிக் கொண்டாள் அந்த அம்மாள்.

"என்ன பார்வதி? எங்கேனும் வெளியே கிளம்பிட்டியா? உன்னைப் பார்க்கத்தான் நான் ஓடியாந்தேன்" என்றாள்.

பார்வதி புரியாமல் விழித்தாள். "எ... என்னையா?"

"ஆமாம்மா. என்னை உனக்கு நினைவில்லையா?" அந்தப் பெண் ஆவலாய்க் கேட்க, அவளை உற்றுப் பார்த்தாள் பார்வதி.

"ம்ஹீம்... தெரியவில்லை..." என தலையாட்டினாள்.

"மதினி! என்ன நீங்க? இவகிட்ட போய் பேசிகிட்டு. இவ யார்ன்னு தெரியுமா உங்களுக்கு?" சிடுசிடுத்தாள் வசுந்தரா தேவி.

"இவளை எனக்குத் தெரியும் வசுந்தரா. இவளைப் போய் மறப்பேனா? எனக்கு வாழ்க்கை கொடுத்த தெய்வ மாச்சே...!"

"மதினி ! நீ... நீங்க... என்ன சொல்றீங்க?" கேட்கும் போதே சற்றுத் தடுமாறிப் போனாள்.

"ஆமா வசுந்தரா... இவ எனக்குக் கடவுள்தான். இவளாலதான் நான் உன் அண்ணனுக்கு மனைவி யானேன். இப்போ உன் மதினியா இருக்கேன்..."

"என்ன?" – அதிர்ந்து போனாள் வசுந்தரா.

பார்வதியின் செவிகள் கூர்மையானது.

'இது.... இந்தக் குரல் எங்கேயோ கேட்டிருக்கிறேனே... எங்கே?' அவள் யோசிப்பதை அறிந்த பெண்மணி புன்னகைத்தாள்.

"என்னை மறந்திட்டியா பார்வதி? நான்தான் மலர்க்கொடி"

அந்தப் பெயரைக் கேட்டதும் சட்டென அடையாளம் கண்டு கொண்டாள் பார்வதி. இவள்தான் அந்தப் பெண். சதாசிவத்தால் ஏமாற்றப்பட்டு நியாயம் கேட்ட பெண். இவள் கண் முன்னே தான் அந்த அக்கிரமம் நடந்தது.

இதோ இவள் நேரில் வந்துவிட்டாள். இப்போதே என்மீதுள்ள பழி நீங்கிவிடும். என் மதினியின் கோபம் போய்விடும். என் மகளின் வேதனை போய்விடும். இந்த வீட்டின் மருமகளாகிவிடுவாள் என வரிசையாய் எண்ணம் தோன்றிய போதே இன்னொன்றும் தோன்றியது.

இந்தப் பெண் உண்மையைச் சொல்வாளா? உண்மையைச் சொல்ல வேண்டும் என்றால் இவள் தன்னைப் பற்றியும் சொல்லியாக வேண்டுமே.. திருமணம் செய்யும் முன்னே தாயான விஷயத்தை எப்படிச் சொல்வாள்? அதுவும் பேரன் பேத்தி எடுக்கும் சமயத்தில் சொல்ல முடியுமா?

அப்படிச் சொல்லாமல் போனால் நான் சொன்னது பொய்யாகி விடுமே. அது இன்னும் மோசமாகிவிடுமே. கணநேரம் தோன்றிய இன்பம் உடனே மறைந்துவிட மீண்டும் மௌனமானாள் பார்வதி.

"என்ன பார்வதி. இன்னும் என்னை அடையாளம் தெரியலையா?" அந்தப் பெண் கேட்க, வறட்சியாய் ன்னகைத்தாள்.



"உங்களை எப்படி மறக்கமுடியும்? ஒரே ஒரு நாள் சில நிமிஷமே பார்த்தாலும் அந்த சந்திப்புதானே என் வாழ்க்கையையே புரட்டிப் போட்டது.

என் அண்ணன், என்னைப் பெத்தவங்களை எல்லாம் இழந்து இன்னிக்கு ஊர் முன்னால ஓடிப்போனவங்கிற பட்டத்தோட களங்கப் பட்டுப் போய் நிற்கிறேனே. உங்களை எப்படி மறப்பேன்?"

"மன்னிச்சிடு பார்வதி. இது எல்லாத்துக்கும் காரணம் நான்தான். நான் மட்டும் உன்னைப் பார்க்க வராம இருந்திருந்தா இத்தனை வேதனைகளை நீ அனுபவிச்சிருக்க மாட்டே... என்னை மன்னிச்சிடு பார்வதி!" – மலர்க்கொடி கைகூப்பி அழ, மற்றவர்கள் பதறிப் போயினர்.

மான்விழிக்கு அந்தப்பெண் யாரென்று புரிந்துவிட நிமிர்ந்து நின்றாள். வசுந்தராவிற்கோ தலைசுற்றியது. உடல் நடுங்க ஆரம்பித்தது. உடல் தள்ளாட, சட்டென தூணோரமாய் சரிந்து அமர்ந்தாள்.

"மதினி! நீங்க என்ன சொல்றீங்க? எனக்கு எதுவுமே புரியலை. இவளை.... இவளை எப்படி உங்களுக்குத் தெரியும்?"

"சொல்றேன் வசுந்தரா. எல்லாத்தையும் சொல்லத் தானே இவ்வளவு அவசரமாப் புறப்பட்டு வந்தேன். வா பார்வதி. இப்படி உட்கார்" என தன் அருகே அமர்த்திக் கொண்டாள்.

மற்றவர்கள் இன்னும் திகைத்த நிலையிலேயே நிற்க, கணேசனையும் ராகவனையும் பார்த்துப் புன்னகைத்தாள் மலர்க்கொடி.

"அண்ணாச்சி! நான் உங்களுக்குத்தான் முதல்ல நன்றி சொல்லணும்..."

"என்னம்மா சொல்றீங்க?"

"ஆமா அண்ணாச்சி. அன்னிக்கு வளைகாப்புக்கு வரமுடியல்லன்னு வந்து வருத்தப்பட்டீகளே. அதுக்கான காரணம் என்னன்னு நீங்க சொல்லாமப் போயிருந்தா பார்வதி இங்கே வந்தது எனக்குத் தெரியாமலே போயிருக்கும்.

நடந்த உண்மைகளும் என்னோடயே புதைஞ்சு போயிருக்கும். எனக்கு வாழ்க்கை கொடுத்தவ பார்வதி. இன்னிக்கு சித்தம் கலங்கிப் போய் நிக்கிறான்னு நீங்க சொன்னதும் எனக்கு எதுவுமே ஓடல.

எப்படியாவது பார்வதியைப் பார்த்திடணும்னு எம் மகளை என் தங்கைகிட்ட விட்டுட்டு வந்திருக்கேன். பார்வதி! எப்படி இருக்கே பார்வதி?"

"நல்லா இருக்கேன்."

"இது உன் பொண்ணா? அப்படியே உன்னாட்டமே இருக்காளே..."

வசுந்தரா தேவி பொறுமையிழந்தாள். "மதினி! இதெல்லாம் பிறகு விசாரிங்க. இப்போ நான் கேட்டதுக்கு பதில் சொல்லுங்க..."

"சொல்றேன் வசுந்தரா. அதுக்கு முன்னால உங்கிட்ட ஒன்று சொல்றேன் கேட்டுக்க. நீ நினைக்கிற மாதிரி உன் அண்ணன் ஒண்ணும் உத்தமரோ நல்லவரோ கிடையாது வசுந்தரா. வேளைக்கு ஒரு துணி மாத்துற மாதிரி நாளைக்கு ஒரு பெண் தேடுற பித்தன் உன் அண்ணன்..."



"மதினி!" கோபமாய் கத்தினாள் வசுந்தரா.

"கோபப்படாதேம்மா. நான் சொல்றதுதான் உண்மை."

"யார்கிட்ட யாரைப்பத்தி குறைசொல்றீங்க? உங்க புருஷனை இத்தனை பேர் முன்னால குறை சொல்ல அசிங்கமாயில்ல உங்களுக்கு?"

"எம் புருஷனாவே இருந்தாலும் செத்துப்போன ஒரு கொடியவனுக்காக பாவம் இவ ஏன் பாவத்தை சுமக்கணும்..."

"மதினி... இவ..."

"வசுந்தரா! என்னை உனக்கு எப்போத் தெரியும்?"

"அண்ணனுக்கு உங்களை மணம்பேசி முடித்த போது..."

"ஆனால் அதற்கு முன் நான்கு வருடங்களாக எனக்கு உன் அண்ணனையும் அவருக்கு என்னையும் தெரியும். அது தெரியுமா உனக்கு?"

"என்ன?"

"பக்கத்து ஊர் என்றாலும் நாமெல்லாம் ஒரே சொந்தக் குடும்பம். அந்த முறையில் உங்கள் அண்ணன் அடிக்கடி எங்கள் ஊருக்கு வருவார். வந்த இடத்தில் என்னைப் பார்த்து, பார்த்ததும் பிடித்துப் போனதாகச் சொல்லி... கட்டினால் என்னைத்தான் கட்டுவேன் என்று என் தலையில் அடித்து சத்தியம் செய்தார்."

வசுந்தராவின் முகம் இருண்டு போனது. மலர்க்கொடி சுற்றியிருந்தவர்களைப் பார்த்து, "நாங்க பெரியவங்க பேசுறோம். சின்னப்புள்ளைங்க போய் வேலையைப் பாருங்க..." என்றதும் மற்றவர்கள் விலகினர்.

இது அவர்களது குடும்பவிஷயம் என்பது போல் சீதாலஷ்மியும் பாமாவும் கூட நாகரிகம் கருதி விலகிவிட, மான்விழியும் அமுதனும் அசையாமல் நின்றனர்.

"இது எங்க அம்மா சம்பந்தப்பட்ட விவகாரம். நாங்க இருக்கலாமா?" அமுதன் கேட்க, தலையசைத்தாள் மலர்க்கொடி.

"தாராளமா இருக்கலாம்ப்பா. உங்களுக்காகவும் தான் பேச வந்தேன். ராஜா! நீ ஏம்ப்பா காயத்தோட எழுந்துக்கிற. உட்காருப்பா. இந்த வீட்டின் முத்த பிள்ளை நீ. உன் மாமனைப் பற்றி தெரிந்து கொள்வதில் தவறில்லை"

"சரிங்க அத்தே" என்றவாறு அமர்ந்து கொண்டான் ராஜேந்திரன். வசுந்தராதேவி ஆணி அடித்தாற்போல அசையாமல் அமர்ந்திருக்க, மலர்க்கொடி தொடர்ந்தார்.

"உனக்கு திருமணம் முடிந்த உடன் என்னைத் திருமணம் செய்து கொள்வதாக சத்தியம் செய்தவரை நம்பி இழக்கக் கூடாததை எல்லாம் நான் அவரிடம் இழந்தேன்.

வாரந்தோறும் என்னைப் பார்க்க வருபவர் திடீரென வராமல் நின்றதும் நான் பயந்துபோனேன். பெரியவர் களுக்குத் தெரியாமல் எனக்குத் தெரிந்தவர்கள் மூலம் விசாரித்தபோது உன் கல்யாணப் பேச்சு நடப்பதாக அறிந்தேன்.

அதுவும் பெண்கொடுத்து பெண் எடுப்பதாகக் கூறியதும் என் தலையில் இடி விழுந்ததைப் போல் துடித்துப் போனேன். விபரம் தெரியாமலேயே நான் அப்போது உண்டாகி இருந்தேன்..." சற்றே அவமானமாய்



தலைகுனிந்து அவள் சொல்ல, பார்வதி அவசரமாய்த் தடுத்தாள்.

"மலர்க்கொடி! இப்போ இந்தப் பேச்சு எதற்கு? வேறு பேசுங்களேன்..."

"இல்லை பார்வதி தப்பு செய்தவள் நான். அவமானப் பட்டுத்தானே ஆகணும்..."

"அதற்காக வளர்ந்த பிள்ளைகளை வைத்துக் கொண்டு உன் நாத்தனாரிடம் இதெல்லாம் சொல்லியாக வேண்டுமா? வேண்டாம். போனது போகட்டும். இந்தப் பேச்செல்லாம் வேண்டாம்" என்ற பார்வதியைக் கண்டு குறுகிப் போனாள் வசுந்தராதேவி.

"தவறு செய்தவளிடமே அதைப் பற்றி பேசுவது அவமானம் என நினைப்பவளிடம் என்னவெல்லாம் பேசிவிட்டேன்? எந்தத் தவறும் செய்யாத ஒருத்தியிடம் அதுவும் தன் கணவனின் உடன்பிறந்த தங்கையிடம் என்னென்ன கேள்விகளைக் கேட்டுவிட்டேன்.

அவள் மனம் என்ன பாடு பட்டிருக்கும். ஐயோ! இந்தச் சின்னப் பெண்ணைக்கூட நான் விட்டு வைக்கவில்லையே. எத்தனை கொடுமொழிகள்? எத்தனை வீண்பழிகளைச் சுமத்தினேன். எந்த உரிமையில் இவளை அப்படிப் பேசினேன்?

என் அண்ணனாய் பிறந்த அந்த தறுதலைக்காக பரிந்துகொண்டு ஒரு பாவமும் அறியாத பெண்ணை வதைத்து விட்டேனே. என்னை எதிர்த்து ஒரு வார்த்தை கூடப் பேசவில்லையே இவள்? இனி இவள் முகத்தில் எப்படி விழிப்பேன்?

இவள் முகத்தில் மட்டுமல்ல தன் கணவனின் முகத்தில் தன் பிள்ளைகள் முன்கூட ஒருவார்த்தை பேச முடியாதே என்னால்? கடவுளே! நான் செய்த பாவத்திற்கு விமோசனமே கிடையாது" தனக்குள்ளே குமைந்து குன்றிப் போனாள்.

"எனக்கு என்ன நேர்ந்ததுன்னு எனக்கு புரியுற துக்குள்ள உங்க கல்யாணத்தை வெத்திலை பாக்கு மாத்தி நிச்சயம் பண்ணிட்டாங்க. ரொம்பப் போராடி உன் அண்ணனை ஒருமுறை பார்த்து, என் நிலையைச் சொன்னேன்.

அவர் என்னைக் குப்பையை மாதிரி ஒதுக்கிட்டாரு. சீர் செனத்தியோட தேவலோக கன்னி மாதிரி ஒரு பொண்ணு கிடைக்கும் போது அவளை விட்டுட்டு உன்னைக் கட்டுவேனா? நீ உன் தகுதிக்கு... ஏதாவது ஒருவனைப் பார்த்துக் கட்டிக்கொள்..." என்று சொல்லிட்டுப் போயிட்டார்.

வயித்துல அவமானத்தை சுமந்திட்டு என்னால எப்படி வாழ முடியும்? செத்துப்போயிடலாம்னு முடிவு பண்ணினேன். அப்பத்தான் உன் அண்ணன் தான் கட்டிக்கப் போற பெண்ணைப் பார்க்கிறதுக்காக வாழைத் தோட்டம் போறாங்கிற தகவல் கிடைத்தது.

ஏதோ ஒரு தைரியத்தில நானும் அவருக்குத் தெரியாம அவர் பின்னாலயே போனேன். எப்படியாவது அந்தப் பொண்ணுகிட்ட பேசி அவங்க கல்யாணத்தை தடுத்து நிறுத்திடணும்னு மட்டும் போகல. என்னை ஏமாத்தின மாதிரி அவளையும் ஏமாத்திடக்கூடாதுன்னுதான் போனேன்.

ஆனா உன் அண்ணன் அந்தப் பொண்ணோட வீட்டுக்குப் போகல்ல. ஆத்தோரமா ஒரு பாறைக்கு



பின்னால மறைஞ்சி உட்கார்ந்திருந்தார். ஒன்றும் புரியாமல் நானும் காத்திருந்தேன். அப்பத்தான் பார்வதி வந்தா. ஆத்துல இறங்கிக் குளிச்சா... உன் அண்ணன் அதைத் திருட்டுத்தனமா ரசித்ததை நான் பார்த்தேன்.

அந்த நிமிஷம் தான் நான் எப்பேர்ப்பட்ட அயோக்யனை நம்பி மோசம் போயிட்டேன்னு எனக்குத் தெரிஞ்சது. குளிச்சு முடிச்சிட்டு பார்வதி வெளியே வந்ததும் நேரே அவகிட்ட போய் இவரைப் பத்தி எல்லாத்தையும் சொன்னேன்.

உன் அண்ணனும் வந்திட்டாரு. எங்களுக்குள்ள பெரிய பிரச்சனை ஆயிடுச்சு. உன் அண்ணன் கையில பார்வதியோட புடவை மாட்டிகிட்டது. அவ..."

"போதும்" - கை உயர்த்தித் தடுத்தாள் வசுந்தராதேவி. அவளது முகம் கன்றிச் சிவந்திருந்தது.

"வசுந்தரா ! நான் இன்னும்...."

"போதும்... போதும்... மத்ததை எல்லாம் என் நாத்தனாரே சொல்லிட்டாங்க," என்றாள் கேவலுடன். முகத்தை மூடிக்கொண்டு அழ ஆரம்பித்தாள்.

"பார்வதி! உனக்கு குணமாயிடுச்சா? எப்போ?" வியப்பாய்க் கேட்டாள் மலர்க்கொடி.

"இன்னிக்குத்தான்..."

"ஆண்டவா! உனக்கு நன்றிப்பா! நான் ரொம்பப் பதறிப் போயிட்டேன் பார்வதி. என்னாலதான் இப்படி ஆகிட்டியோன்னு எனக்கு ரெண்டு நாளாத் தூக்கமே இல்ல..."

"இதுல உங்க மேல எந்தத் தப்பும் இல்லையே. உண்மையைச் சொன்னா நீங்கதான் அப்படி ஒரு மனுஷன் கிட்ட இருந்து என்னைக் காப்பாத்தியிருக்கீங்க. அதுக்காக நான்தான் நன்றி சொல்லணும்."

"பார்வதி! உனக்கு எவ்வளவு பெரிய மனசு?"

"எங்க தங்கையாச்சே..." மூவரும் வந்து தங்கையின் உச்சி முகர்ந்தனர்.

"அண்ணா! அந்த நாய் நம்மையே ஏமாத்திட்டானே.. நமக்குத் தெரியாம எவ்வளவு காரியம் பண்ணியிருக்கான்?"

"ஆமாண்ணே! அன்னிக்கு காரியம் நடந்திட்டு இருக்கும் போதுகூட அந்த நீலகண்டன் வந்ததை நான் பார்த்தேன்.

துக்கம் விசாரிக்க வந்திருக்கான்னு சாதாரணமா இருந்துட்டேன். அதோடு அந்த நேரம் நமக்கு வேற எந்த எண்ணமும் இல்லையே..." கேசவன் வருத்தமாய் சொன்னார்.

"நம்ம வருத்தத்தை அவனுக்கு சாதகமாக்கிக் கிட்டான். நம்ம கூடவே இருந்துகிட்டு நம்மளுக்கு தெரியாம பள்ளக்குறிச்சிக்கு போய் மிரட்டியிருக்கானே... அவனுக்கு எவ்வளவு கிரிமினல் மூளை பாரு.. அவனைப் போய் நம்மவீட்டு மாப்பிள்ளையாக்கப் பார்த்தோமே. இந்த அப்பா எப்படி விசாரிச்சாங்க?"

"அதை நினைச்சுத்தானே வருந்தி உசுரை விட்டாக அப்பா"

"நம்ம இழந்த அத்தனைக்கும் அவன் ஒருத்தன் தான்டா காரணம். மவனே! அவன் மட்டும் உயிரோட



இருந்திருந்தான்னு வை. நம்ம கையாலதான் அவனுக்கு சாவு!"

"நல்லவங்க கையால சாகுறது கூட புண்ணியம்தான் அண்ணாச்சி. அது அவருக்கு கிடைக்கக் கூடாதுன்னுதான் அந்த ஆண்டவன் முந்திக்கிட்டான்" என்றாள் மலர்க்கொடி.

கணேசன் அவள் புறமாய்த் திரும்பினான். "ஏம்மா! நாங்கதான் அவனைப் பத்தி எதுவும் தெரியாம கல்யாணம் பேசினோம். உனக்குத்தான் அவன் புத்தி தெரிஞ்சிருக்குதே. பிறகேம்மா அவனைப் போய் கல்யாணம் செய்தே?"

"நல்லவன்னு நினைச்சு ஏமாந்திட்டேன். தெரிஞ்சே இன்னொரு ஆணை எப்படி அண்ணாச்சி நான் ஏமாத் துவேன்?"

"என்னம்மா சொல்ற?"

"நான் எப்படி வேற ஒருவரை மணக்க முடியும்? அது எவ்வளவு பெரிய துரோகம்?"

"அதுக்காக?"

"வீட்ல எனக்கு அடுத்தா ரெண்டு தங்கையும் தம்பியும் இருந்தாங்க. என்னால அவங்க வாழ்க்கையும் வீணாகிடக்கூடாதே. அவங்களுக்காக நான் கல்யாணம் பண்ணித்தான் ஆகணும்.

யாரையோ ஏமாத்துறதைவிட என்னை ஏமாத்தின வனையே கட்டிக்கலாம்னு முடிவு பண்ணினேன்.

அவருக்கும் வேற யாரும் பெண் தர முன் வரல்ல. வேற வழியில்லாம எங்க கல்யாணம் முடிஞ்சது..."

பார்வதி லேசான திடுக்கிடலோடு நிமிர்ந்தாள். "இதெல்லாம் நடந்து ரெண்டு வருஷம் கழிச்சுத்தானே உங்க கல்யாணம் நடந்ததாச் சொன்னாங்க?

"ஆமா..."

"அப்போ... உங்க குழந்தை...?" தயக்கமாய் இழுத்தாள்.

பெருமூச்சு விட்டாள் மலர்க்கொடி.

"என் நிலை தெரிஞ்சோ என்னவோ என் குழந்தை கருவிலேயே கலைஞ்சு போச்சு..."

"என்ன?"

"ஆமா பார்வதி! ஆத்துல விழுந்த நீ என்ன ஆனேன்னே தெரியல்ல. செத்துப் போயிட்டேன்னு சொன்னாங்க. அதை என்னால தாங்க முடியல்ல. என்னாலதான் நீ செத்துப் போயிட்டேன்னு நினைச்சு என்னோட எதிர்காலத்தையும் நினைச்சு பயந்து விஷத்தைக் குடிச்சிட்டேன்."

"ஐயோ!"

"பாழாய்ப்போன விஷம் என்னை விட்டுட்டு கண்ணுக்குத் தெரியாத என் சிசுவைக் கொன்னுடுச்சி. யாருக்கும் தெரியாம உண்டானது யாருக்கும் தெரியாமலே போயிடுச்சு..." கண்களில் நீர் சுரக்க அவள் பேசியதும் மற்றவர்கள் பேச்சற்றுப் போயினர்.

கண்ணீரைத் துடைத்தெறிந்தாள் மலர்க்கொடி.

"அவர் எனக்குச் செய்த பாவத்தால தான் என் சிசு ன்னை விட்டுப் போச்சு. இப்படிப்பட்ட பாவக்காரனோட





வாரிசை என் வயத்தில சுமக்கக்கூடாதுன்னு முடிவெடுத்த பிறகுதான் அவரைக் கல்யாணம் பண்ணினேன்."

"என்ன? அப்படின்னா?"

"ஆமா! கடைசிவரை அவர்கூட நான் வாழவே இல்லை." அவளது பதிலில் அனைவரும் மொத்தமாய் ஆடிப்போனார்கள்.

வசுந்தராவோ மூச்சுவிடவும் மறந்தவளாய் உறைந்து போனாள்.

"அம்மாடி! நீ என்னம்மா சொல்றே?"

"ஆமாம் அண்ணாச்சி. அவர் செய்த பாவத்துக்கு தண்டனை வேண்டாமா? வழி தவறிப்போன எனக்கும் தண்டனை வேணுமே"

"அதுக்காக... இப்படியா தண்டிப்பாய்? இதில் உன் வாழ்க்கையும் தானே பாழாய்ப் போனது..."

"இல்ல அண்ணாச்சி அவர் நல்லவர்ன்னு நினைச்சுத் தான் ஏமாந்து போனேன். அவர் மோசக்காரன்னு தெரிஞ்ச பிறகு அவர்கூட வாழ எனக்கு கூசிப் போச்சி. என் குடும்பத்துக்காக கல்யாணம் செய்தேன்.

ஊருக்காக என் தங்கையின் குழந்தையை தத்தெடுத்து வளர்த்தேன். அதுக்கு கல்யாணம் செய்து பார்த்தாச்சு. இனி அவ வயித்துல பிறக்குற பிள்ளைய பாதுகாத்துக் கொடுத்துட்டு என் காலத்தை முடிச்சிக்க வேண்டியதுதான்..."

"அப்போ உன்னால குழந்தை பெத்துக்க முடியாதுன்னு சொன்னது..."

"'சுத்தப் பொய்.. இப்படிச் சொல்லாமல் எப்படி இன்னொரு குழந்தையைத் தத்தெடுக்க முடியும்?"

"என்னம்மா நீ? இவ்வளவு காரியங்களை இத்தனை நாளாய் உனக்குள்ளே போட்டுப் பூட்டி வைத்திருக்கிறாயே. உன்னால் எப்படியம்மா மூச்சுவிட முடிந்தது?"

வறட்சியாய் புன்னகைத்தாள் மலர்க்கொடி. "மேலே இருக்கிறவன் கூப்பிடுற வரைக்கும் மூச்சைவிட்டுத்தானே ஆகணும்" என்றவளை உள்ளம் கனக்க அணைத்துக் கொண்டாள் பார்வதி.

## 22

கண்கள் கலங்கி கண்ணீர்
நிறைந்து வழிந்தோடும்
போது நெஞ்சம் விம்மிஅழும்
போது சொந்தம் புரியும்!

**அ**னைவரும் பேச்சற்று அமைதியாய் இருக்க. ராஜேந்திரன் எழுந்து மெல்லத் தாயருகே சென்றான். வசுந்தராவைப் பார்க்கவே பரிதாபமாய்த்தான் இருந்தது. சிலகணம் மௌனமாய் நின்றுவிட்டு தாயின் அருகே அமர்ந்துகொண்டான்.

"இப்போ என்னம்மா செய்யப் போறீங்க?" மகனின் கேள்விக்கு துளியும் அசைவின்றி அமர்ந்திருந்தாள். பார்வையில் எந்தவித சலனமும் இல்லை.

"அம்மா! உங்களைத் தான் கேட்கிறேன்" தாயின் தோளைத் தொட்டதும் திடுக்கிட்டுத் திரும்பினாள்.



"ம்?"

"இப்போ என்ன செய்யப் போறீங்க?"

"எ...என்ன செய்யணும்?"

"நீங்க பேசினதெல்லாம் திரும்ப வாங்க முடியுமா உங்களால?"

பரிதாபமாய் விழித்தாள். "முடியாதில்லை. இதுக்குத்தான் ஒரு வார்த்தை பேசும் முன்னால யோசிச்சுப் பேசணும். உங்க அண்ணன் கதையெல்லாம் கேட்டீங்கள்ல?"

"ம்..."

"என்னென்ன காரியம் செய்திருக்கார் பார்த்தீங்களா? ஆனா நீங்க கொஞ்சமும் யோசிக்காம எல்லாப் பழியையும் அத்தைமேல போட்டுட்டீங்க?"

"த... தப்புதான். நான் தப்பு பண்ணிட்டேன்."

"இப்போ அத்தை வந்து உன் அண்ணன் செய்த பாவத்துக்கு நான் பழி ஏற்கணுமா? உன் அண்ணனோட யோக்யதை தெரிஞ்சு போச்சே. இனிமே என்ன செய்யப் போறேன்னு கேட்டா என்னம்மா சொல்வீங்க?

ஒரு பொம்பளை பொறுக்கி அண்ணனுக்காக எங்க அம்மாவை என்னவெல்லாம் சொன்னீங்க? நீங்கல்லாம் ஒரு பெண்ணான்னு மானு கேட்டா என்னம்மா செய்வீங்க?"

வசுந்தராவின் பார்வை மருண்டது. விழிகளில் நீர் கோத்தது.

"உன் குடும்பத்தில இவ்வளவு அசிங்கத்தை வெச்சிகிட்டு என் தங்கையைக் குறை சொல்ல உனக்கு என்ன அருகதை இருக்குன்னு அப்பா கேட்டா உங்க

முகத்தை எங்கே போய் வெச்சுப்பீங்க? சொல்லுங்கம்மா. இவங்கெல்லாம் கேள்வி கேட்டா உங்களால பதில் சொல்ல முடியுமா?" ராஜேந்திரன் குரலை உயர்த்திக் கேட்க, பெருங் குரலெடுத்து அழுதாள் வசுந்தரா.

"தப்பு பண்ணிட்டேன். என் கூடப்பிறந்தவனைப் பத்தி நானே தெரிஞ்சுக்காம இருந்திட்டேனே. ஒரு பாவமும் அறியாத பொண்ணை வாய்க்கு வந்தபடியெல்லாம் பேசிட்டேன். எனக்கு மன்னிப்பே கிடையாது. இந்த ஜென்மம் முழுக்க நான் இந்தப் பாவத்தை அனுபவிச்சித்தான் ஆகணும்.

போங்க. யாரும் எங்கிட்ட வராதீங்க. யாரும் எங்கூடப் பேசாதீங்க. ஒரு மோசக்காரனோட தங்கை நான். நான் ஒரு பாவி. நான்... நான் நல்லவ இல்ல. நான் ஒரு ராட்சஸி. நான் ஒரு பொண்ணே இல்ல..." தலையில் மடேர்மடேர் என அடித்துக் கொண்டு அழுதாள் வசுந்தரா.

அவளின் செய்கையைக் கண்டு அதிர்ந்த கணேசன் வேகமாய் எழுந்து வந்து மனைவியைத் தன்னோடு அணைத்துக் கொண்டார்.

"வசு! என்னம்மா இது? உனக்கு ஏற்கனவே ரத்த அழுத்தம் இருக்கு. இப்படியெல்லாம் அழுதா என்ன ஆகும்?"

"நான் செத்துப்போயிடுறேன்க. எனக்கு உங்க கூட வாழுற தகுதி இல்ல. பூ மாதிரி மனசுள்ள உங்களுக்கு நான் வேண்டாம்..."

"என்ன பேசுகிறாய் நீ? நீ என் மனைவி. என்னைத் திட்டவோ என்னிடம் சண்டை போடவோ உனக்கு உரிமை இருக்கு வசு."



"இல்லைங்க. நான் பாவி. பார்வதி என்னை ஒரு மனுஷியாக்கூட மதிக்கமாட்டாளே... நான் பேசின பேச்செல்லாம் அவளால மறக்க முடியுமா?" வாயிலடித்துக் கொண்டு அழுதவளின் கைகளைப் பற்றிக்கொண்டாள் பார்வதி.

"மதினி! நீங்க பேசினதுல எனக்கு எந்த வருத்தமும் இல்ல மதினி. அதையெல்லாம் நான் எப்பவோ மறந்திட்டேன்..."

"இல்ல மறக்காது. நீ மறக்கிற மாதிரியா பேசினேன் நான்?"

"மதினி! நீங்க ஒண்ணும் வேணும்னே பேசலியே. உங்க அண்ணன் மேலே வெச்சிருந்த அன்பாலதானே பேசினீங்க. உங்க இடத்தில நான் இருந்தாலும் இப்படித்தான் பேசியிருப்பேன்" என்றவளைக் கட்டிக்கொண்டு கதறினாள்.

"இல்ல பார்வதி. என் அண்ணன் சாகுற வரைக்கும் உன் பேரைத் தான் சொல்லிட்டு இருந்தான். உம்மேல உள்ள பிரியத்தில் உன்னை மறக்க முடியாமத்தான் அப்படிப் புலம்பினான்னு நினைச்சேன். அந்த ஆத்திரம் தான் என் மனசில வன்மமா மாறிடுச்சி.

அதான் உன்னை முழுசா நேரில பார்த்ததும் அப்படி ஆத்திரமாப் பேசிட்டேன். ஆனா இன்னிக்கு நீ சொன்ன வார்த்தையைக் கொஞ்சமாவது நான் யோசித்திருக்கணும். அதை விட்டுட்டு உன்னை என்னவெல்லாமோ பேசிட்டேனே."

"பரவாயில்லை மதினி. நீங்கதானே பேசுனீங்க... நான் வருத்தப்படலை மதினி."

"அது உன் பெருந்தன்மை பார்வதி. ஆனா நான் இதுக்கெல்லாம் அருகதை இல்லாதவ..." மீண்டும் அழ ஆரம்பித்தாள். மலர்க்கொடி எழுந்து வந்தாள்.

"வசுந்தரா அழாதே... உன் பக்கம் இருந்து பார்த்தா நீ பேசினது தப்பு இல்ல."

"மதினி! இத்தனை காலமா இவ்வளவு ரகசியத்தை மறைச்சி வெச்சிருக்கீகளே. எங்கிட்ட ஒரு வார்த்தை கூடச் சொல்லலையே நீங்க?"

"வசுந்தரா. பார்வதி இல்லாம போயிட்டான்னதுக்கு நானும் ஒரு காரணம். இதை எப்படிச் சொல்ல முடியும்? இந்த வீட்டுக்கு ஒரே பொண்ணு பார்வதி. அவளை இழந்திட்டு எல்லாரும் எப்படித் தவிச்சிருப்பாங்க.

ஒருவேளை பார்வதி உயிரோட இருக்கிறது தெரிஞ்சிருந்தா நிச்சயமா சொல்லியிருப்பேன். செத்துப் போனவளைப் பத்திப் பேசி எந்தப் பயனும் இல்லைன்னுதான் ஊமையா இருந்துட்டேன். எல்லாரும் என்னை மன்னிக்கணும்..."

ராஜேந்திரன் பெருமூச்சுவிட்டான். "எல்லாருக்குமே ஒவ்வொருவிதமான சூழ்நிலை. உங்க யார் மேலயும் குற்றம் சொல்ல முடியாது. ஆனா இத்தனைக்கும் காரணமான பெரிய மனுஷன் நோகாம போய்ச் சேர்ந்துட்டாரே. அதை நினைக்கும் போதுதான் ஆத்திரமா வருது..."

"என் அண்ணன் மட்டும் உயிரோடு இருந்தால் அவன் செய்த காரியத்திற்கு நானே அவனைக் கொன்னுருப்பேன்."

"வசு! போனவன் போயிட்டான். இனி அவனைப் பத்தி பேசி என் ஆகப் போகிறது... விடு!"



"இல்லங்க! பொம்பளைங்கன்னா கீரைன்னு நினைப்பா? எவ்வளவு திள்ளுக் கீரைன்னு நினைப்பா? அவனுக்கு பண்ணியிருக்கான். அவன் செய்த பாவத்திற்கு எப்படி நோகாமல் போய்ச் சேர்ந்தான்?"

"இல்ல வசுந்தரா. உன் அண்ணன் ஒண்ணும் நோகாமல் போய்ச் சேரவில்லை. கிட்டத்தட்ட மூன்று வருடங்களாய் படுக்கையில் கிடந்து அழுந்தித்தான் உயிரை விட்டார்"

"மதினி! நீங்க... என்ன சொல்றீங்க?" அதிர்ந்து கேட்டார்.

"ஆமா! வயசுத் திமிருல ஆடாத ஆட்டமெல்லாம் போட்டாரே. அதுல ஏதேதோ பேர் தெரியாத வியாதியெல்லாம் வந்திடுச்சி"

"என்ன?"

"உமா! உமாராணி பூப்பு விசேஷத்துக்குக் கூட அவர் வரலியே. அதுக்கு மட்டுமில்ல. உள்ளூரிலயே எந்த விசேஷத்துக்கும் வீட்டைவிட்டு வெளியே கூட போகாமத்தான் இருந்தார்..."

"ஐயோ! இதெல்லாம் எனக்குத் தெரியாதே. நான் வரும்போதெல்லாம் வீட்ல இருக்கமாட்டாரே..."

"அப்படி சொல்லச் சொல்லுவார். நானும் சொல்வேன்."

"என்ன மதினி நீங்க? இன்னும் எதையெல்லாம் மறைத்தீர்கள்?"

"வசுந்தரா! எல்லாரிடமும் சொல்வதற்கு உன் அண்ணன் என்ன புண்ணிய காரியம் செய்து வீரமரணமா

அடைந்தார்? போகாத இடத்திற்கெல்லாம் போய் வந்து கண்ட வியாதியை வாங்கிக்கொண்டு புண்வைத்துத்தான் செத்தார்..."

"கடவுளே !" காதை மூடிக்கொண்டாள் பார்வதி.

"கடவுள் இருக்கிறார் பார்வதி. அவர் ஆடி அடங்கும் போது தான் உன் பெயரை முணுமுணுத்தார். நீ பத்தினி என்றார். நீ சுத்தமானவள் என்றார். உன் சாபம் பலித்து விட்டது என்றார்."

"என்ன?" - அதிர்ந்து போன பார்வதிக்கு அன்று நீலகண்டனின் பாட்டி வீட்ல வைத்து தான் சொன்ன வார்த்தைகள் நினைவு வந்தது.

"நானும் எத்தனையோ முறை கேட்டேன். ஆனால் அழுதாரே தவிர வேறு ஒன்றுமே சொல்லவில்லை. வசுந்தரா வரும்போதெல்லாம் விசாரிப்பார். பார்வதியைப் பற்றி தகவல் கிடைத்ததா என்று... நான் கூட பார்வதி மேல் உள்ள மையல் என்றுதான் நினைத்தேன். இப்போது தான் தெரிகிறது. பார்வதி வந்துவிட்டால் உண்மை எல்லாருக்கும் தெரிந்துவிடுமே என்று பயந்துபோய் விசாரித்திருக்கிறார்."

"வருத்தப்படாதீங்க அத்தே. கெட்டதிலும் ஒரு நல்லது நடந்திருக்கிறது."

"ராஜா! என்னப்பா சொல்கிறாய்?"

"ஆமா அத்தை. நீங்கள் பாட்டுக்கு கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என்ற பாணியில் அவருடன் குடும்பம் நடத்திப் பிள்ளைகள் பெற்றிருந்தால் என்ன ஆகியிருக்கும்?"



"ஆமாம்மா. அவருடைய நோய் உங்களுக்கும் பிள்ளைகளுக்கும் வந்திருக்கும். தப்பு செய்த அவர் தண்டனை அனுபவித்தது நியாயம். எந்தத் தவறும் செய்யாத நீங்கள் ஏன் தண்டனையை அனுபவிக்க வேண்டும்.

பரவாயில்லை. அந்தக் காலத்திலேயே வித்தியாசமான புரட்சி செய்திருக்கீங்க. உங்களை நினைச்சா ரொம்பப் பெருமையா இருக்கு..." - என்றான் அமுதன்.

"அட என்னப்பா நீங்க? என்னைப் போய் புகழ்ந்துகிட்டு"

"அத்தே! இது உண்மையான பாராட்டு. ஏன்னா உங்களை ஏமாத்தினவரா இருந்தாலும் உங்க கணவரா கிட்டார் அவர். அதுக்கப்புறம் அதே மன உறுதியோட வாழ்ந்திருக்கீங்களே. இந்த உறுதிதான் இப்போ உங்களைக் காப்பாத்தி இருக்கு."

"இந்த உறுதி அவர்கிட்ட ஏமாறும் முன்னால இல்லாமப் போச்சேப்பா. எவ்வளவு பெரிய பாவகாரியம் செய்துட்டேன். இன்னிக்கு வரைக்கும் என்னால அதை மறக்க முடியல்ல! முள்ளாக் குத்திட்டே இருக்கு..."

"நீங்க மட்டும் இல்லத்தே. இன்னிக்கு நிறையப்பேர் இப்படித்தான் ஏமாந்து நிற்கிறாங்க. எத்தனை குப்பைத் தொட்டியில குழந்தைங்களை வீசிட்டுப் போறாங்க. இதெல்லாம் பார்த்தாலோ கேட்டாலோ மனசு அப்படியே ரணமாகுது.

இதுக்கெல்லாம் என்ன காரணம்? அந்தந்த வயசுல ஒழுக்கமும் கட்டுப்பாடும் இருந்தா இப்படி ஏமாற

வேண்டாமில்ல. எப்பவுமே பெண்கள்தான் எச்சரிக்கை யோடும் கவனமாவும் இருக்கணும்..."

"அதென்ன பெண்களுக்கு மட்டும் எச்சரிக்கை ஒழுக்கம்? ஏன் உங்க ஆண் இனத்துக்கு அதெல்லாம் இருக்கக் கூடாதா?" அதுவரை அமைதியாய் இருந்த மான்விழி வெடுக்கெனக் கேட்டாள்.

"மானு! இதில நீயா நானான்னு கேள்வி கேட்க வேண்டிய அவசியமே இல்ல. ஆண் எத்தனை தப்பு செய்தாலும் தப்பிடுறான். ஆனா பெண்தான் வயிற்றுச் சுமையோடு பரிதாபமாய் பரிகாசமாய் பேசப்படுகிறாள். இது உனக்குத் தெரியாதா?"

"தப்பு செய்யுறவன் ஒரேயடியாத் தப்ப முடியாது. கடைசியில சதாசிவம் மாதிரி... சரியான கூலி கிடைக்காமப் போகாது."

"ஆமா. எம்மருமக சரியாத்தான் சொல்றா. தப்பு செய்தவங்க யாரா இருந்தாலும் அந்த ஆண்டவனோட தண்டனையிலிருந்து தப்ப முடியாது..." வசுந்தரா உறுதி யாய்க் கூற, பார்வதியின் முகம் பிரகாசித்தது.

"மதினி! இப்போ... நீங்க என்ன சொன்னீங்க?"

"என்ன சொன்னேன்?"

"மானுவை என்னன்னு சொன்னீங்க?"

"என்ன சொன்... அட! மருமகன்னு சொன்னேன்"

"அம்மா! நிஜமாவே நீங்கதான் சொன்னீங்களா?" வியப்பாய் கேட்டான் ராஜேந்திரன். வசுந்தராவின் முகம் வாடியது.



"என்னம்மா?"

"ஏம்பா! பார்வதி என்னை மன்னிச்சுட்டா. ஆனா இந்தப் பொண்ணு என்னை எப்படி மன்னிக்கும்?"

"ஆமா! நீ என்ன கொஞ்சமா பேசினாய் ?" என்றார் கணேசன்.

"ஆமாங்க. தப்புத் தப்பாப் பேசிட்டேன். நான் வேணும்னா மன்னிப்புக் கேட்கட்டுமா?"

"இதென்ன கேள்வி? கண்டிப்பாய் மன்னிப்புக் கேளு. வயசுல சின்னப் பொண்ணா இருந்தாலும் தப்பு செய்தா மன்னிப்புக் கேட்கணும்."

"அண்ணே! சும்மா இருங்க. மதினி எவ்வளவு பெரியவங்க. அவங்க போய் எம்மககிட்ட மன்னிப்புக் கேட்கிறதா? சேச்சே!"

"பார்வதி! நீ அண்ணனோட மனைவின்றதால மன்னிச்சே. மறந்திட்டே... ஆனா உம்பொண்ணு மனசு எவ்வளவு காயப்பட்டிருந்தா அது வீட்டை விட்டு வெளியே போக முடிவெடுத்திருக்கும்"

"என்ன?" அதிர்ந்தான் அமுதன்.

"அமுதன்! என்னை மன்னிச்சிடுப்பா. நான் தான் கொஞ்சம் இல்ல... நிறையவே பேசிட்டேன்" - என்ற வசுந்தரா சுருக்கமாய் நடந்தவைகளைக் கூற, அமுதனின் முகம் மாறியது.

"இவ்வளவு நடந்திருக்கிறதா? மாமா! என் தங்கையை இங்கே வந்து விடும்போது நான் சொன்னது நினை விருக்கிறதா?"

"இருக்கிறதப்பா?"

"அப்படி இருந்தும் என் தங்கையை அழவைத் தீர்களா?"

"இல்ல கண்ணா. ஏதோ தெரியாம நடந்துபோச்சு. இனிமே இப்படி எதுவும் ஆகாது. உன் தங்கையின் கண் கலங்காமல் என் மகன் பார்த்துக் கொள்வான்."

"ஓ! முடிவே பண்ணிட்டீங்களா?"

"உன் தங்கை என் தங்கையின் மகள் என்று தெரிந்ததுமே எடுத்த முடிவுப்பா இது. என் மகனும் முழு மனதாய் அவளை ஏற்றுக்கொண்டான்..."

"ஆனால் எனக்கு என் தங்கையின் விருப்பம் தான் முக்கியம்."

"அவளுக்கும் விருப்பம்தான்'' – என்றான் ராஜேந்திரன்.

"என்ன?"

"யெஸ் அமுதன். அவ மனசில நான் இருக்கேன். அது தெரியும் போதுதான் பிரச்சனை இப்படி திசைதிரும்பி விட்டது."

"ஆமாம்ப்பா! இதுக்கெல்லாம் முழுக்காரணம் நான் தான். நான் மன்னிப்புக் கேட்டா அந்தப் பொண்ணு மனசு இறங்கிடும்."

"வசு! முதல்ல உம்மருமக பேரைத் தெரிஞ்சுக்கிட்டியா?"

"ஐயோ! இல்லீங்க. என்ன பேரு பார்வதி?"

"மான்விழி மதினி. அவுக அப்பா வெச்சபேரு..."



"ஆமா. அழகான கண்ணுதான். என்னால தான் அந்தக் கண்ல தண்ணி வந்திடுச்சி. பார்வதி! இனிமே அந்த மான் கண்ல ஒரு சொட்டுத் தண்ணிவராம நான் பார்த்துக்கிறேன். உம்மகளை எம்புள்ளைக்குக் கொடுப்பியா?"

"மதினி! உங்கபுள்ள எனக்காக உசுரையே கொடுத்துக் காப்பாத்துனவன். அவனுக்குத் தர நான் யோசிப்பேனா? ராஜாதான் எம்மருமகன். இதில எனக்குப் பரிபூரண சம்மதம்."

"அம்மா அவசரப்படவேண்டாம். முதல்ல மானுகிட்ட கேட்கலாம்...'

"சரிப்பா! உன் தங்கைகிட்ட நீயே கேளேன்" – பார்வதி சொல்ல, தங்கையின் புறமாய் திரும்பினான் அமுதன். அங்கே மான்விழி இல்லை.

## 23

நானும் நீயும் நாளைதான்
மாலைசூடலாம் வானம் பூமி
யாவுமே வாழ்த்துக் கூறலாம்
விழியில் ஏன் கோபமோ விரகமோ
தாபமோ நீயில்லையேல் – நான்
இல்லையே எங்கே நீ அங்கே நான்தான்!

**வ**ளர்பிறை முழுநிலவாய் மாறி வானில் ஜொலித்துக் கொண்டிருந்தது. சிறிதும் வளையாமல் அழகான வட்டமாய் மின்னிய நிலவை விழி அசையாமல் பார்த்துக் கொண் டிருந்தாள் மான்விழி.

முற்றத்துப் பன்னீர் பூக்களின் மணம் நாசியை நெருட, மனம் ராஜேந்திரனுடன் நின்று பேசிய இடத்தை நாடியது. இதே இடத்தில் தான் அன்று மணிக்கணக்காய் நின்று வாயாடிக் கொண்டிருந்தோம் என்று எண்ணும் போதே மனக்கூட்டிற்குள் பட்டாம்பூச்சிகள் பறந்தன.

நாளை இங்கு இருக்கமாட்டோம் என்ற எண்ணம் லேசான வலியை உண்டுபண்ணியது. அம்மாவின் ஆசைக்கென இரண்டு நாட்கள் இருந்தாயிற்று... இனி அண்ணனின் பிழைப்பைக் கவனித்தாக வேண்டும். நாளைக் காலை இந்த வீட்டை விட்டுப் பிரியப் போகிறோம் என்ற எண்ணத்தைவிட அத்தானை விட்டுப் பிரியப் போகிறோம் என்பதுதான் வலித்தது.

"என் மகனைக் கட்டிக் கொள்ளம்மா..." என்ற வசுந்தராவிடம் இப்போதைக்கு திருமணம் செய்யும் எண்ணமில்லை என்று தட்டிக் கழித்தபிறகு இதுவரை ராஜேந்திரன் கண்ணில் படவே இல்லை.

மாமாவிற்கு வருத்தம் இருந்தபோதும் காட்டிக் கொள்ளாமல் சிரித்த முகத்தோடு கூடவே இருந்து உபசரித்துக் கொண்டிருந்தார். வசுந்தராதான் இன்னும் குற்ற உணர்விலிருந்து மீளவில்லை.

'இருக்கட்டும். அடுத்தவர்களுக்கு தனது பேச்சு எவ்வளவு வலியைக் கொடுத்திருக்கும் என்று உணர வேண்டாமா?' என்ற எண்ணத்தோடு அவளை நேரிடையாய் பார்ப்பதையோ பேசுவதையோ தவிர்த்தாள் மான்விழி.

இரண்டு நாளாய் ஆடிய கண்ணாமூச்சி இன்றோடு முடிவடைகிறது. இனி சென்னைக்குப் போனபிறகு இந்த



நினைவுகள் வருமா? மறைந்துவிடுமா? நிச்சயமாய் மறையாது என்றது உள்மனம்.

நான்கு நாட்களாய் வந்த பிரியம் தானே என்று அலட்சியமாய் சொன்னோமே. இன்று அதே பிரியம்தானே இப்படி உறக்கமின்றி நடுசாமம் வரை அலைக்கழிக்கின்றது.

**நே**ற்று நம்பிமலைக்கு அழைத்துச் செல்வதாய் மாமா சொன்ன போதே மனம் அத்தானைத் தான் ஆவலாய் எதிர்பார்த்தது. ஆனால் அவனைத் தவிர மற்ற அனைவருமே வந்ததும் ஏனோ வெறுமையாய்த் தோன்றியது.

அருமையான இடம் அது. "மலைமேல் ஐந்துகிலோ மீட்டர் ஏற வேண்டும். கார்ல போனா புழுதிதான் பறக்கும். இயற்கைக் காட்சியை ரசிக்க முடியாது. கார்ல போலாமா? நடந்து போலாமா?" என நரேன் கேட்க,

ஒட்டுமொத்தமாய், 'நடக்கலாம்... அதுதான் ஜாலியா இருக்கும்" என்றனர் மற்றவர்கள்.

காரை வெளியே நிறுத்திவிட்டு வாசலில் இருந்த வனத்துறையினர் கேட்ட தகவல்களைச் சொல்லிவிட்டு பொறுமையாய் நடக்கத் துவங்கினர்.

பிளாஸ்டிக் பொருள் கொண்டு போகக்கூடாது. பீடி, சிகரெட், தண்ணி எதுவும் கூடாது. மாலை ஐந்துமணிக்குள் கீழே இறங்கி வந்துவிட வேண்டும் என்ற நிபந்தனையோடு அனுப்பினர்.

மலைப்பாதை, இருபக்கமும் நெருக்கமான மரங்கள் கொடிகள் புதர்கள். நடுவே குண்டும் குழியுமான

மணல்பாதை. நரேந்திரன் முன்னே செல்ல, பெண்களை நடுவே விட்டு இருபுறமும் மாமாக்கள் வர, பின்னே கஜேந்திரனும் சுரேந்திரனும் காவலர்கள் போல் வர, இனிமையாய்த் தான் இருந்தது பயணம்.

இருந்தும் ஏனோ மான்விழியால் எதையும் ரசிக்க முடியவில்லை.

தன் அருகே ராஜேந்திரன் வந்தால் நன்றாய் இருக்குமே என மனம் ஏங்கியது.

**நி**றைய பாறைகள். அதன் நடுவே சில்லென்ற குளுமையான நம்பி ஆறு சலசலத்துக் கொண்டு ஓடியது.

அதன் அருகே அமர்ந்து வீட்டிலிருந்து கொண்டு வந்த உணவைப் பேச்சும் சிரிப்புமாய் உட்கொண்டு, ஓய்வெடுத்து விட்டு மீண்டும் மலை ஏறத் தொடங்கினர்.

மான்விழியால் அவர்களோடு கலகலப்பாய் பேச முடியவில்லை. அம்மா தன் சகோதரர்களோடு பழைய கதை பேசிக் கொண்டுவர உமாவும் சுதாராணியும் அமுதனிடம் வாயாடிக் கொண்டிருந்தனர்.

பேச்சும் சிரிப்புமாய் மலையேறிய அவர்களுக்கு அலுப்புத் தெரியவில்லை. தனிமையாய் வெறுமையாய் இருந்த மான்விழியால் தொடர்ந்து நடக்க முடியவில்லை. பாதையோரமாய் சோர்ந்து அமர்ந்துவிட்டாள்.

கஜேந்திரன் சிரித்துக் கொண்டே குற்றாலத்தில் நடந்த விவகாரத்தை சொல்ல, மான்விழிக்கு தனது மனம் அப்போதுதான் புரிய ஆரம்பித்தது.



தனது மனம் ராஜேந்திரனைப் பொழுது போக்கிற் காகவோ பேச்சுத் துணையாகவோ தேடவில்லை. மனதிற்குள் அழுத்தமாய் பதிந்து போயிருக்கும் துணை எப்போதும் அருகில் இருப்பதையே மனம் நாடுகிறது என்பது புரிந்து விட, இனம்புரியாத மகிழ்ச்சியும் கலக்கமும் குடிகொண்டது.

இத்தனை நாளாய் நிழலாய் கூடவந்தவனை வெறுப்பாய் சலிப்பாய் பேசி விரட்டிவிட்டு இப்போது அவன் வரமாட்டானா என ஏங்குவது எத்தனை மடத்தனம். தன்னையே கடிந்துகொண்டாலும் விழிகள் அவனைத் தான் தேடின.

எங்கோ மறைந்திருந்து தன்னைப் பார்ப்பதுபோல் ஒரு பிரமை.

வழக்கமாய் சிடுசிடுக்கும் லதாராணிகூட அன்று புதுப் புதுப்பொலிவாய் கவனமாய் அலங்கரித்து நாசூக்காய் சிரித்து மென்மையாய் சிரித்தது புதுமையாய் இருந்தது.

மலையேறி மலை உச்சியில் வீற்றிருந்த நம்பியாண்டவரை தரிசித்து விட்டு கோவில் பிரகாரத்தைச் சுற்றும் போதும் அதே உணர்வு தோன்ற ஓரிடத்தில் நின்று கண்களை நாலாபுறமும் சுழற்றித் தேடினாள்.

ம்ஹும்... எங்குமே அவன் தென்படவில்லை. வீடு திரும்பும் வரை ஏமாற்றத்தோடு அமைதியாய் வந்தாள். இதோ இன்று இரவு மட்டும் தான் இங்கு இருக்கப் போகிறோம். இப்போதுகூட கண்ணில் படாமல் மறைகிறான் என்றால் என்னை விட்டு விலகுகிறான் என்றுதானே அர்த்தம்.

அவன் அம்மாவிடம் நான் சம்மதிக்கவில்லை என்ற கோபமோ? இல்லை அன்று பேசினேனே அந்த வருத்தமா எதுவும் புரியாமல் தலையே வலித்தது.

'அத்தான்! உன் மனதில் நான் இருப்பது தெரியும். என் மனதிற்குள் நீ எப்போது வந்தாய் என்று தெரியவில்லை.

ஆனால் நீதான் இருக்கிறாய் என்பதை இந்த இரண்டுநாள் பிரிவில் உன் விலகலில் புரிந்து கொண்டேன்.

ஆனால் இதை எப்படிச் சொல்வேன்? யாரிடம் சொல்வேன்... உன்னைப் பார்க்க முடியவே இல்லையே. இதே மனநிலையில் நான் ஊருக்குப் போனால் உன் நினைவில் பைத்தியம் பிடித்துவிடும் போலிருக்கே.

ப்ளீஸ் அத்தான்! நீ எங்கே இருந்தாலும் சரி. இப்போ இந்த நிமிஷம் என் முன்னால் வந்திரு அத்தான். எனக்கு உன்னைப் பார்க்கணும். பேசணும். உன்னிடம் என் மனதைச் சொல்ல வேண்டும். ப்ளீஸ் அத்தான். சீக்கிரமாய் வந்துவிடேன்.'

"கூப்பிட்டியா?" தனக்கு வெகு அருகே கேட்ட குரலில் துள்ளித் திரும்பினாள் மான்விழி.

கண்களில் மின்னும் குறும்புடன் வசீகரச் சிரிப்போடு நின்று கொண்டிருந்தான் ராஜேந்திரன்.

திணறிப் போனாள். "நீங்க... இங்கே எப்படி?"

"நீதானே கூப்பிட்டாய்?"

"நானா? இ... இல்லையே."



"பொய் சொல்லாதே. நீ கூப்பிட்டது எனக்குக் கேட்டது."

"நீங்கள் தான் பொய் சொல்றீங்க? நான் ஒண்ணும் கூப்பிடவில்லை."

"வேண்டாம் மானு! மாட்டிக் கொள்ளப் போகிறாய்!"

"எ... என்ன?"

"இப்போ இந்த நிமிஷம் என்னைப் பார்க்கணும்னு நீ ஆசைப்படல?" அதே குறும்போடு அவன் கேட்க, மிரண்டு போனாள். 'எப்படிக் கண்டுபிடித்தான்?'

"பார்த்தியா? உன் கண்லயே தெரியுது..."

"என்ன தெரியுது?"

"நம்ம மனசில நினைச்சதை இவன் எப்படிக் கண்டு பிடிச்சான்னு நீ நினைப்பது தெரிகிறது."

"நோ.. நோ... நான் நம்பமாட்டேன்..."

"ஏன் மானு! உன்னையே நீ ஏமாற்றிக் கொள்கிறாய்?"

"என்ன?"

"இந்த இரண்டு நாளில் நீ என்னை எத்தனை முறை நினைத்தாய் என்று சொல்லட்டுமா?" அவன் கேட்க, அவசரமாய் மறுத்தாள்.

"வேண்டாம். வேண்டாம்..."

முழுநேரமும் இவன் நினைவாகத்தானே திரிந்தோம். அதை இவன் வாயால் கேட்க வேண்டுமா? ஆனால் இதெல்லாம் இவனுக்கு எப்படித் தெரிந்தது? இதற்கும் அவனே பதில் சொன்னான்.

"எல்லாம் ஒரு மேஜிக்தான்."

"என்ன? மேஜிக்கா? அப்படின்னா..."

"அதெல்லாம் சொன்னாப் புரியாது. அனுபவிச்சு உணரணும்..."

"புரியலை..."

"இப்போ நீ என்னை மனசார விரும்புறேன்னு வை. ஒரு பேச்சுக்குத்தான்... அப்படி நீ விரும்பினா உன் மனசுக்குள்ள நீ என்ன நினைக்கிறியோ அது எனக்கு எதிரொலிக்கும்."

"இதெல்லாம் ஏமாற்று வேலை. நான் நம்பமாட்டேன்."

"அதுதான் சொன்னேனே. சொன்னால் புரியாது என்று. சரி! என்னை எதற்காகக் கூப்பிட்டாய்?"

"நானா? நான் கூப்பிடவில்லை."

"சரி. என்னுடன் ஏதாவது பேசவேண்டுமா?"

"ஓ... ஒண்ணுமில்லையே"

"அப்போ.. நான் போகட்டுமா?"

"ஏ...ஏன் ? தூக்கம் வருதா?" ஏமாற்றமாய்க் கேட்டாள்.

"ஆமா! நாளைல இருந்து ஹெவி வொர்க் இருக்கு. தூங்கவே டயம் இருக்காது. அதனால இன்னிக்கு நல்லாத் தூங்கி எழுந்துக்கணும். வரட்டா?"

"போங்க. போய்த் தூங்குங்க. எப்படித்தான் தூக்கம் வருமோ?" கடுகடுவெனச் சொல்ல... பொங்கிய புன்னகையை மென்று கொண்டான்.



"வெரி சிம்பிள்! படுத்து கண்ணை மூடிகிட்டு மனசுக்குப் பிடிச்சவங்களை நினைச்சுக்கிட்டா அருமையான தூக்கம் வரும்"

"வரும் வரும்.. நல்லாத் தூங்கி எழுந்திருங்க. ஆனா நீங்க விழிக்கும்போது நாங்க கிளம்பிப் போயிருப்போம்."

"எங்கே?"

"இதென்ன கேள்வி? எங்க வீட்டுக்குத்தான்..."

"நாளைக்கா? நாளைக்குப் போகமுடியாதே"

"ஏன்?"

"நாளைக்கு வீட்ல விசேஷம் இருக்கே..."

"என்ன விசேஷம்?"

"லதாவுக்குப் பூ வைக்க வர்றாங்க"

"யாரு?"

"மாப்பிள்ளை வீட்டுக்காரங்க..."

"பூ வைக்கிறதுன்னா என்ன?"

"மாப்பிள்ளை வீட்ல இருந்து வந்து பெண்ணுக்கு பூச்சூடி நிச்சயம் பண்ணிட்டுப் போவாங்க..."

"ஓ! நிச்சயதார்த்தமா? ஆமா! பொண்ணு பார்க்க வருவாங்கன்னு அத்தை சொன்னாங்களே. யாரும் வரலையே? ஏன்?"

"பொண்ணெல்லாம் பார்த்தாச்சே... மாப்பிள்ளைக்கு பொண்ணையும் பொண்ணுக்கு மாப்பிள்ளையையும் பிடிச்சதாலதான் பூவைக்க வர்றாங்க..."

"எப்போ பொண்ணு பார்த்தாங்க? நான் வீட்லதானே இருந்தேன்."

"வீட்டுக்கு வந்து பார்க்கல்ல..."

"பின்னே?"

"நேத்து நம்பிமலைக் கோவில்ல வெச்சுப் பார்த் தாங்களே..."

"கோவில்ல வெச்சா?"

"ம். நம்ம ஊர்ல எல்லாம் பொண்ணு பார்க்க உடனே வீட்டுக்கு வர விடமாட்டாங்க. கோவில்லயோ வெளி இடத்திலயோ குடும்பமா சேர்ந்து பார்த்திட்டு பிடிச்சிருந்தா அதுக்கப்புறம்தான் வீட்டுக்கு வந்து நிச்சயம் பண்ணனும்..."

"எதுக்காக இப்படிப் பண்றாங்க?"

"இப்போ ஊரைக் கூட்டிட்டு வந்து பொண்ணைப் பார்க்க வந்தப்புறம் பிடிகல்லன்னுவை. அது எவ்வளவு சங்கடமான விஷயம். அந்தச் சங்கடங்களைத் தவிர்க்கத்தான் நம்ம ஆட்கள் இந்த முறையைக் கண்டுபிடிச்சிருக்காங்க."

"வாவ்! வெரி நைஸ். சூப்பர் ஐடியா!"

"ஆமா! அப்படியே எனக்கும் பொண்ணு பார்த்தாச்சு..."

"என்ன?" வாய் உலர்ந்து போனது.

"ம். எனக்கு ரொம்ப பிடிச்சுப் போச்சு! பொண்ணுக்கும் பிடிச்சிருந்தா லதாவோட கல்யாணம் முடிஞ்சதும் நம்ம கல்யாணம் தான்..."

"என்னது?"



"என்னோட கல்யாணம்"

"உங்களுக்கு எங்கே வெச்சு பொண்ணு பார்த் தீங்க?"

சலிப்பும் லேசான ஏமாற்றமுமாய் அவள் கேட்க... புன்னகைத்தான்.

"அதே நம்பியாண்டவர் கோவில்ல வெச்சுத்தான்..."

"ஓ! அதுதான் உங்க குடும்பக் கோவிலா?"

"அப்படின்னு இல்ல. எதுக்கு தனித்தனியா அவ்வளவு தூரம் மலை ஏறிப்போகணும்னு எனக்கும் நேற்றே பொண்ணு பார்த்திட்டோம்..."

"எ... எப்போ?"

"லதாவைப் பொண்ணு பார்க்கும் போதுதான்..."

"அப்போ நீங்களும் அங்கே வந்திருந்தீங்களா?"

"ஆமா! வந்து எல்லா அற்புதக் காட்சியையும் கண்டேனே. ஆமா! நேற்று நீ எதையாவது தொலைச் சிட்டியா?"

"இ... இல்லையே!"

"நான் பார்க்கும் போதெல்லாம் எதையோ தேடிட்டே இருந்தியே. அதான் கேட்டேன்" கண்களில் குறும்பு மின்ன அவன்பேச, முகத்தைத் திருப்பிக் கொண்டாள் மான்விழி. கண்களில் நீர் சுரந்தது.

நேற்று வந்திருக்கிறான். கூடவே இருந்திருக்கிறான். நான் கண்டது பிரமை அல்ல. ஆனால் ஏன் கண்ணில்

படவில்லை? ஓ! அவன் என்னைப் பார்க்க வரவில்லை. அவருக்கு கல்யாணத்திற்குப் பெண்பார்க்க வந்திருக்கிறார்.

தொண்டையை அடைத்தது. இதற்கு மேல் இங்கு நிற்பது சரியல்ல. யாரோ யாரையோ கட்டிவிட்டுப் போகட்டும். நமக்கென்ன வந்தது?

முகத்தை விறைப்பாய் வைத்துக் கொண்டு நகர முயன்றவளைக் கை நீட்டித் தடுத்தான்.

"என்ன கிளம்பிட்ட?"

"நான் தூங்கப் போறேன்..."

"போ... போ.. உனக்கு எப்படித் தூக்கம் வரும்னு பார்க்கிறேன்..."

"ஏன்? ஏன் வராது?"

"வராதும்மா... நான் கட்டிக்கப் போறவ எப்படியிருப்பான்னு உன் மனசு குடைந்து எடுத்துவிடும்."

"எனக்கொன்றும் அந்த மாதிரி எண்ணம் கிடையாது."

"பொய் சொல்லாத. பொண்ணு எப்படியிருப்பான்னு ஒரு வார்த்தை கூட நீ கேட்கலையே. ஏன் பொறமையா இருக்கா?"

"நான் ஏன் பொறாமைப்படணும்?"

"அப்போ வருத்தமா இருக்கா..."

"எதுக்கு?"

"நம்ம அத்தானை இன்னாருத்திக்குக் கொடுக்கப் போறோமேன்னு..."



"நீங்களா எதையாவது கற்பனை பண்ணிட்டு உளராதீங்க. வழியை விடுங்க. நான் போகணும்."

"எங்கே என்னைப் பார்த்துச் சொல்லு?"

"நான் யாரையும் பார்க்க விரும்பல."

"சரி. நானே சொல்றேன். என் ஆளு நேற்று எப்படி இருந்தா தெரியுமா?"

"ஒண்ணும் சொல்லவேண்டாம். நான் போறேன்." விலகியவளின் கைகளைப் பற்றி நிறுத்தினான்.

"சொல்றதைக் கேட்டுட்டுப் போம்மா. நல்ல தளிர் பச்சை நிறத்தில் சிம்பிளான பட்டு ஸாரி. காதுல குட்டியான தேர் கம்மல். கழுத்தில் பச்சைக் கலர் கல் வைத்த பதக்கம். அப்புறம் தலையில கொஞ்சமாய் மல்லிப்பூ. இவ்வளவு எளிமையா வந்தாலும் பார்த்த உடனே மனசுக்குள்ள ஒட்டிக்கிட்டா." அவன் ரசனையாய் சொல்ல லேசான திடுக்கிடலோடு நிமிர்ந்தாள்.

"பச்சைநிற பட்டு ஸாரியா? நான் தானே அதைக் கட்டியிருந்தேன்..."

"அப்படியா? நான் உன்னைப் பார்க்கவே இல்லையே." மீண்டும் முகம் கடுத்தாள்.

'கோவிலில் எத்தனையோ பேர் அதே நிறத்தில் பட்டுப்புடவை அணிந்து வந்திருக்கலாம். ச்சே! நான் ஏன் முந்திக்கொண்டு சொன்னேன்' - தன்னையே கடிந்து கொண்டு விலகி நடக்கத் துவங்கினாள்.

"அப்படியே பொண்ணோட பேரையும் கேட்டுட்டுப் போயிடு..."

"ஒண்ணும் தேவையில்லை."

"ஐயோ! உங்கிட்ட சொல்லலன்னா என் தலையே வெடிச்சிடும்"

"வெடிக்கட்டுமே. என்னை விட்டுட்டு இன்னொருத்திய பொண்ணு பார்க்கணும்னு தோணிச்சில்ல. நல்லா வெடிக்கட்டும்..."

திட்டிக்கொண்டே சென்றவளை, சிரிப்போடு பின் தொடர்ந்தான்.

"அந்தப் பொண்ணோட பெயர் மான்கண்ணு" என்றான் சத்தமாய்.

நடந்தவள் அப்படியே நின்றாள்.

தயக்கமாய், பூரிப்பாய் மெல்லத் திரும்பினாள்.

"என்ன?"

"ம். நான் பார்த்த ஒரே பொண்ணு அதுதான். அது கிட்டதான் இவ்வளவு நேரமாப் பேசிட்டு இருக்கேன். இந்த ஜென்மத்தில வேற எந்தப் பொண்ணையும் பார்க்க மாட்டேன்..."

"அப்போ அடுத்த ஜென்மத்தில பார்ப்பியா? டேய் இதே டயலாக்கை எத்தனை சினிமாவில பார்த்திருகோம். டயலாக்கை மாத்துங்கப்பா" என பக்கவாட்டு மரத்தின் பின்னால் இருந்து குரல் கேட்டது.

"அப்படிங்கிற? சரி. எத்தனை ஜென்மம் எடுத்தாலும்..."

"ஏய்! இதுவும் ஓல்டு டயலாக்தான். வேற... வேற..." இன்னொரு குரல் மிரட்ட, மிரண்டு போனாள் மான்விழி.



"என்ன நடக்குது இங்கே?"

"எல்லாமே நல்லதாய் நடக்குது. இந்த வீட்டுக்கு அருமையான கல்யாண ராசி வந்திடுச்சு. ரெண்டு கல்யாணம் நடக்கப் போகுது. இந்த நரேந்திரன் சொல்றது பலிக்கப் போகுது" – என்றவாறே நரேனோடு சேர்ந்து மற்றவர்களும் வர, முகம் சிவந்து போனாள் மான்விழி.

"ஐயோ! நீங்களெல்லாம் இங்கேயா இருந்தீங்க?"

"எவ்வளவு நேரமா நிற்கிறது? கடைசிவரை நீ உம்மனசைச் சொல்லவே இல்லையே. இவன் என்னவென்றால்...

உன் மனதைத் தெரியாமல் யாரும் தூங்கக் கூடாது என்று உத்தரவு போட்டுவிட்டான்..." என்றான் அமுதன் கொட்டாவியோடு.

நெற்றியில் அடித்துக் கொண்டாள் மான்விழி. "கடவுளே! என்ன அத்தான் இதெல்லாம்?"

"எல்லாம் உனக்காகத்தான்..."

"என்ன? எனக்காகவா?"

"ஆமா! நீ பாட்டுக்கு புறப்பட்டு ஊருக்குப் போயிட்டு என்னை மறக்க முடியாம அழுதிட்டே இருந்தா அமுதன் மனசு தாங்குமா?"

"ஹலோ! நான் ஏன் அழணும்?"

"அடிப்பாவி! என்னைப் பிரிஞ்சா அழமாட்டியா?"

"ம்ஹும். சான்ஸே இல்ல."

"ராட்சஸி. கல்நெஞ்சக்காரி. உனக்கு இதயமே இல்லையா?"

"உங்களைப் பிரிஞ்சாத்தானே அழணும்? கடைசிவரை உங்க கூடவே இருக்கும் போது நான் ஏன் அழணும்?" என்றாள் வெட்கப் புன்னகையோடு.

"சொன்னா பாரு ஒரு வார்த்தை. இதுவரை எந்த ஹீரோயினும் இப்படி ஒரு வார்த்தை சொல்லலப்பா..."

"அதான் என் தங்கை. ஒரே வார்த்தையில நம்ம எல்லாருக்கும் பதிலைச் சொல்லிட்டா பார்த்தீங்களா?" அமுதன் காலரைத் தூக்கிவிட்டுக் கொண்டே கேட்க...

அனைவரும் மொத்தமாய் குதூகலமாய் சிரிக்க...

மனம் நிறைந்த புன்னகையோடு மருமகளைக் கட்டிக் கொண்டாள் வசுந்தராதேவி.